# அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

T. 22844

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 564

# அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்கள்

மரு. **ஆர். தேவநாதன்,** எம்.டி. (ஆயுர் வேதா)

தஞ்சாவூர்..

மரு. முனைவர் **சு. அரங்கராசன்**, பி.ஐ.எம். பிஎச்.டி.,

தஞ்சை மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் (ஓய்வு),

தஞ்சாவூர்.

*தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்*

**சரசுவதி மகால் நூலகம்**

**மற்றும் ஆய்வு மையம்**

**தஞ்சாவூர்.**

*2015* ] [ விலை ரூ. 400-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம் |
| பதிப்பாசிரியர்கள் | : | மருத்துவர் ஆர். தேவநாதன்<br>மருத்துவர் ச. அரங்கராசன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | *564* |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2015 |
| தாள் | : | **TNPL** *18.6* கி. கி |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 408 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுகோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | ஆயுர்வேத மருத்துவம் |
| ISBN | : | 978-93-85343-00-1 |
| விலை | : | ரூ. 400-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும், பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. அதன்கண் அமைந்துள்ள அரிய சுவடிகளை நூல்களாக சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் **அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்** என்னும் இந்நூல் தற்போது வெளியிடப்படுகின்றது.

அகத்தியரை ஆசிரியராக கொண்டுள்ள இந்நூல் தமிழ்த்துறை மருத்துவப் பிரிவில் சுவடி எண் 741ல் பதிவாகி உள்ளது. இந்நூலில் 398 மருந்துச் செய்முறைகள் உள்ளன. பல்வேறு நோய்களுக்கு மருந்தின் செய்முறைகள் கூறப்பட்டுள்ளன. மருந்துச் சரக்குகளை தூய்மை செய்யும் முறைகள், மாத்திரைகள், தைலம், எண்ணெய், நெய் என்பன செய்யும் முறைகள், குழம்பு, கசாயம்,குடிநீர், கற்பம், சூரணம், பற்பம், லேகியம், இரசாயனம், வடகம் முதலியவை இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம் என்று தலைப்பிட்டிருந்தாலும், நூலில் அகத்தியரைப் பற்றி எதுவும் இல்லை. ஆசிரியரின் பெயரில்லாத நூல்களை அகத்தியர் பெயரால் வழங்குவது அக்கால வழக்கம். பல முறைகளில் தொகுப்பான இந்நூல் அகத்தியரின் பெயரில் எழுதப்பெற்றுள்ளது.

இந்நூலை சிறப்பாகப்பதிப் பத்தளித்த சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்கள் மரு. அர. தேவநாதன் மற்றும் மரு. ச.அரங்கராசன் ஆகியோர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர்(பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர்முனைவர் எஸ்.சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சித்தமருத்துவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

தஞ்சாவூர்
14-07-2015

**டாக்டர் என். சுப்பையன்**, இ.ஆ.ப.,
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

# பதிப்புரை

"அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்" என்ற தலைப்பில் சரசுவதி மகால் நூலகத்தில் அரிய ஓர் சுவடி உள்ளது. சுவடி எண் 741 ஐ அதன் சிறப்பை உணர்ந்துப் பதிப்பிக்க எண்ணினோம். அகத்தியரை ஆசிரியராக உடைய, இதில் 398 மருந்துச் செய்முறைகள் உள்ளன. பல்வேறு நோய்களுக்கு, மருந்தின் செய்முறைகள் கூறப்பட்டுள்ளன. மருந்துச் சரக்குகளைத் தூய்மை செய்யும் முறைகள், மாத்திரைகள், தைலம், எண்ணெய், நெய் என்பன செய்யும் முறைகள், குழம்பு, கசாயம், குடிநீர், கற்பம், சூரணம், பற்பம், லேகியம், இரசாயனம், வடகம், குக்குலு என்பன இடம்பெற்றுள்ளன. யோக ராச குக்குலு பற்றிய செய்முறை மட்டுமே ஆயுர்வேதத்திற்கு உரியதாகும். ஏனையவைகள், சித்த-ஆயுர்வேத முறைகளுக்கானவை. இவைகளைச் செய்வது எளிமையானதாகும். ஏடுகள் இடமாறியதால் மருந்து செய்முறைகள் முன்பின்னாக உள்ளன. சான்றாக, நூலின்முன் வரவேண்டிய சுத்திமுறைகள், சேங்கொட்டை, சங்கு, சோழி சிலாசத்து, கடுகு ரோகிணி, துத்தம், வெங்காரம் பொன், வெள்ளி, நாகம், செம்பு, நிர்விசம், வங்கம் (ஈயம்) ஆகியவற்றுக்கு சுத்தி முறைகள் பக்கம் 200 உள்ளன.

மருந்துகளின் பெயர்களில் சில புராண அடிப்படையிலும், சில நல்ல தமிழ்ப்பெயராகவும், மூலிகைகளின் பெயர்களையும், நோய்களின் பெயர்களை உடையதாகவும் உள்ளது. ஒரு மாத்திரையின் பெயர், தவறாக ஏடு எழுதுவாரால் குறிப்பிடப்பட்டுள்ளது. பதிப்பாசிரியரால் சரி செய்யப்பட்டது. "புரமாதி மாத்திரை"யை புரந்தாதி மாத்திரை என்றுள்ளது. புரம்-உடல்; ஆதி காரணம். உடலில் வரும் நோய்களுக்கானக் காரணத்தைக் கண்டு போக்கும் மாத்திரை, புரமாதி மாத்திரை எனப்பட்டது. புரந்தாதி மாத்திரை என்பதற்கு எவ்விதமான பொருளும் சாவர அமையவில்லை. பல நோய்களுக்கு எளிய முதலுதவி மருத்துவம் கூறப்பட்டதை, மருத்துவர்கள் இல்லாதபொழுது செய்து கொள்ளலாம். பல்வேறு துணை மருந்துகள், பல நோய்களுக்குச் சொல்லப்பட்டுள்ளன. இன்றைய உலகில், தேன், பால் தவிர ஏனையவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில், அகநோயாளிகளுக்கு, மருத்துவமனைகள், ஆய்வுக் கூடங்களிலாவது பயன்படுத்திட வேண்டும். இதுபோல மருந்துகளை ஆய்வு செய்தல் அவசியம். புறமருந்துகளைப் பயன்படுத்துதல் சித்த மருத்துவக் கல்லூரிகள், பட்டமேற்படிப்பு நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் தலையானதாம்.

சுரகேசரி, சர்வ சுரக் குளிகை என்பன நோய்களின் பெயராலும், சர்வ சங்காரன், இராம பாணக் குளிகை என்பவை சமயத் தொடர்பானவைகள். துத்தாஞ்சனக் குழம்பு, இளநீர்க் குழம்பு என்பன பொருள்களின் பெயராலும், நல்ல தமிழ்ப் பெயராக பின்னை என்பார் மன்னன், நாளை என்பார் நாயகன் என்பன அமைந்துள்ளன.

ஆயுர்வேத மருத்துவத்தில் அகத்தியரின் பெயரில் நூல்கள் எதுவும் இல்லை. அகத்தியர் 7 முனிவர்களில் ஒருவர். தென்னாட்டை இறைவன் திருமணத்தின்போது அடைந்தவர். ஆயுர்வேத மருத்துவத்திற்கும், இவருக்கும் தொடர்பில்லை. இவர் பெயரில் எந்த ஆயுர்வேத நூல்களும் இல்லை.

சித்த மருத்துவத்தில் அகத்தியர் என்ற பெயரில் பலர் வாழ்ந்தனர். அகத்தியர் வழிபாடு பல்லவர் காலத்திலேயே தொடங்கியுள்ளது. மேலும், பல்வேறு நாடுகளில் அகத்தியருக்கு கோவில்கள் மற்றும் வழிபாடு நடைபெற்றுவருகின்றது. அகத்தியர் நூல்களை ஒப்புநோக்க இவை விளங்கும். மருத்துவ அகத்தியரைப் பற்றிய ஆய்வுகள் செய்யப்படுதல் வேண்டும்.

“அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம்” என்று தலைப்பிடப்பட்டிருந்தாலும், நூலில் அகத்தியரைப் பற்றி எதுவும் இல்லை. ஆசிரியரின் பெயரில்லாத நூல்களை அகத்தியர் பெயரால் வழங்குவது அக்கால வழக்கம். பல் முறைகளில் தொகுப்பான இந்நூல் அகத்தியரின் பெயரில் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் வெளிவரக் காரணமான மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர். சரசுவதி மகால் நூலகம் டாக்டர் ந. சுப்பையன், இ.ஆ.ப. அவர்களுக்கும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர்(பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B.A. அவர்களுக்கும், சரசுவதி மகால் நூலக நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும் நிதியுதவி நல்கிய மத்திய அரசுக்கும் பதிப்பு செய்த சரசுவதி மகால் நூலக அச்சகத்திற்கும் எங்களின் நன்றியைத் தெரிவிக்கிறோம். மேலும் நுண்ணாய்வு செய்த முனைவர் பேரா. வே. இரா. மாதவன் அவர்களுக்கும், துணை செய்த திருமதி அபர்ணா எம்.எஸ்சி. அவர்களுக்கும் எங்கள் நன்றி. வழக்கம் போல நூலை வாங்க, சித்த மருத்துவர்கள், ஆர்வலர்கள், மருந்து தயாரிப்பாளர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

**மரு அர.தேவநாதன்**
**மரு ச. அரங்கராசன்**
*சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்கள்.*

## நூல் ஆய்வு

அகத்தியரின் பெயரால் வழங்கப்படும் எண்ணற்ற நூல்களில் இந்நூலும் ஒன்று. இதில் பாடல்களும் உரை நடையும் இணைந்துள்ளன. பாடல்களில் "பொதிகை முனி" என்று வருவதால், " அகத்தியர் ஆயுர்வேதம்" என்று தலைப்பிடப்பட்டது. இதே பெயரில் "அகத்தியர் ஆயுர்வேதம்", "ஆயுர்வேதம்", ஆயுள் வேதச்சுருக்கம், ஆயுர்வேதம் 1200, ஆயுர்வேத உபதேசங்கள், ஆயுர்வேதக் களஞ்சியம், ஆயுர்வேத சோதி, ஆயுர்வேத மகத்துவம், ஆயுர்வேத பரிசோதனை, ஆயுர்வேத வைத்தியக் கும்மி என்பன வெளிவந்துள்ளன 1970 இல் மகால் வெளியீடாக ஆயுர்வேத உபதேசங்களும் அருணாசல முதலியார் 1890 இல் அகத்தியர் ஆயுள்வேதச் சுருக்கத்தையும், மறுபதிப்பு 1896 இலும், 1876இல் திருவெண்காடு ஆறுமுகசாமிகளால் அகத்தியர் ஆயுர்வேதம் 1200, 1876 ஆம் ஆண்டிலும், வே. கந்தசாமி முதலியாரால் 1869 இலும், மறுபதிப்பு 1871 இலும் ஆயுர்வேத களஞ்சியம் 1898 இல் 196 பக்கங்களுடன் அங்கமுத்து முதலியாரால் வெளியிடப்படும், கணபதி முதலியார் ஆயுர்வேத மகத்துவம் - 1914ல் வெளியிடப்பட்டும் ஆயுர்வேத பரிசோதனை இராமநாத சாத்திரியால் 1926ல் 57 பக்கங்களுடனும், ஆயுர்வேத வைத்தியர் கும்மி தேவராச நாயக்கரால் 1915 இலும் பதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. [1] இந்நூல் முன்னர் வெளியான நூல்களில் இருந்து வேறுபட்டதாகும். எனவே, பதிப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

### அகத்தியர்

அபிதான சிந்தாமணி அகத்தியர்களின் எண்ணிக்கை 41 ஆகும் எனக் கூறுகின்றது. அகத்தியரின் பெயரில் பல்வேறு மருத்துவ நூல்கள் உள்ளன. ஆயின் மருத்துவ அகத்தியர் பற்றிய

1. சித்த மருத்துவ நூலேதி மரு. முனைவர். பேரா. சே. பிரேமா தபசு 1988.

ஆய்வுகள் அதிகமில்லை. அனைத்து மருத்துவ நூல்களையும் ஒரே அகத்தியரே எழுதினார். என்பது உண்மையில்லை. சான்றாக, அகத்தியர் இரத்தினச் சுருக்கம் 500. "அகத்தியர் குருநாடி 235" என இரு நூல்களைச் சுட்டலாம். பித்தநோய் 48 என்று இரத்தினச் சுருக்கம் கூற, 44 என்று குரு நாடி சொல்லுகிறது. எனவே அகத்தியர் என்றழைக்கப் பட்டவர்கள், வெவ்வேறானவர்கள் என அறியலாம். [2]சங்க இலக்கியத்தில் வால்மீகி, மார்க்கண்டேயர் போன்ற வடமொழிப்பெயர்கள் தேரையர், இடைக்காடர் போன்ற பெயர்களும் உள்ளன. பிற்காலத்தில் சித்தர்கள் இப்பெயர்களை வைத்துள்ளனர். சங்க இலக்கியத்தில் ஒன்றான பரிபாடலில் பொதியின் முனிவன் என வருகின்றது. பின்னர் வந்த சிலம்பிலும், மணிமேகலையிலும் அகத்தியர் பற்றி கூறப்பட்டுள்ளது. பரிபாடல் தவிர வேறு எந்த சங்க இலக்கியத்திலும் அகத்தியர் பற்றி எதுவும் இல்லை.

அகத்தியர் என்ற பெயரில் பலர் இருந்துள்ளனர். வடமொழி அகத்தியர், பொதிகை அகத்தியர், மருத்துவ அகத்தியர் என வகைப்படுத்தலாம். ரிக் வேதத்தில் பல இடங்களில் இவர் பெயர் வருகின்றது. "கேலன் என்ற மன்னரின் ஆசிரியராக இருந்தவர். இம்மன்னரின் உறவினர் விசுவ மலர் என்ற பெண். போரின்போது இவளின் கால் வெட்டப்பட்டது. அப்போது, அகத்தியர் தேவ மருத்துவர்களான அசுவினிகளை வேண்டுகின்றார். இவளுக்கு, இரும்புக்காலைப் பொருத்துகின்றார்கள். இதை ரிக்வேதம் 116:157 இல் கூறுகிறது."[3]

அக்காலத்திலேயே ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் முறை இருந்துள்ளது. கச்சியப்பரின் மகன்கள், வருணன், மித்திரன் ஆவர். தேவலோகப்பெண் ஊர்வசியுடன் தொடர்புகொள்ள பிறந்தவர்கள் வசிட்டரும், அகத்தியருமாவர். அபிதான

---

2. 4448 வியாதிகள் - விளக்கம். மரு. ச. அரங்கராசன், பக்கம் 120. மகால் வெளியீடு - 2006.

சிந்தாமணி, அகத்திய சம்கிதை வடமொழியில் செய்யப்பட்டதாகக் கூறுகின்றது.

சித்த மருத்துவத்தில் அதிக எண்ணிக்கையுள்ள பல நூல்கள் இவர் பெயரிலேயே உள்ளன. பெரும்பாலான நூல்கள், தமிழ் இலக்கணத்தை ஒட்டி அமையவில்லை. பெரும்பான்மையான மக்கள், கல்வியறிவைப் பெறாததால், அவர்களுக்குப் புரியவைக்கவே எளிய முறையில் எழுதப்பட்டன. ஆயின் பொதுவான ஓர் கருத்தையும், மறைமுகமாக வேறு பொருளையும் கொண்டு மறைபொருள் அகராதிகளாலும், நிகண்டுகள் வழியால் மட்டுமே, அறிய முடியும். இலக்கிய நயம் பொருந்தி வரவும். பல பாடல்களில் புராணம், இதிகாசம் பழமொழிகள், வரலாறு என்பனவும் இருக்கும் உரையுடன் உள்ள நூல்களும் உள்ளன.

**மருத்துவம்**

திராவிட மரபை அடிப்படையாகக் கொண்டு, அறிவியல் வழியில் உள்ளதே சித்தமருத்துவமாகும். ஐம்பூத அடிப்படையில், வாத, பித்த, கபம் என்ற குற்றங்கள் மிகினும், குறையினும் நோயாம் மன நோய், உடல் நோய் என பிரிக்கப்பட்டு4448 நோய்கள் மனிதனுக்கு ஏற்படும் எனவும் வகுத்தார்கள். எண்வகைத் தேர்வு, நாடி மூலம் நோய்களை அறிந்தார்கள். "வாதமாய் படைத்து, பித்த வன்னியாய் காத்து, சிலேத்தும சீதத்தால் துடைத்து" என்று மருந்து பாரதம் கூறும். சித்த மருத்துவத்தில் 1. நோயியல், 2. மருந்தியல் என்ற பிரிவுகள் உள்ளன. நோயியல் பற்றிக்கூறும் நூல்கள் குறைவு. மருந்தியல் பற்றியது அதிகம். இரசவாத நூல்கள், சித்த மருத்துவ நூல்களைவிட அதிகமாக உள்ளன. இரசவாதம் பற்றிய விளக்கங்கள் குறைவாக கிடைக்கின்றன. இதை அறிந்தோரும், செய்வோரும் மறைவாகச் செயல்படுகின்றனர். பலவகையான வழக்கொழிந்துவிட்டது. ஆர்வம் கொண்ட அறிவோரும்

3. மகரிசிகள் வரலாறு - சுகவனேசுரன் டபக்கம் 24 இ கலா நிலையம்.

அருகியுள்ளனர். சித்தமருத்துவ நூல்கள் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்னும் பிரிவுகளில் காணப் படுகின்றன. மானிட மருத்துவம், தேவ மருத்துவம், அறுவை மருத்துவம் என்றும் மணி, மருந்து மந்திரம் என்றும் பிரிக்கப்பட்டன. மணி என்பது ஒன்பது மணிகளையும் அதனாலான மருந்துகளையும், 9 உலோகங்கள் அல்லது 11 உலோகங்கள் 64 பாசாணங்கள், ஐந்து இரச வகைகள், 25 வகையான காரசாரங்கள். 120 வகையான உபரசங்கள் என்பவனவைகளால் ஆனது. அகமருந்து 32. புற மருந்துகள் 32 ஆகியவற்றைச் செய்து நோயைத் தீர்த்துள்ளனர். இன்றும் இம்முறைகள் வழங்கி வருகின்றன. பச்சிலை மருந்துகளின் பயன்பாடு குறுகிய காலத்திற்கு மட்டுமே இருக்கும். எனவே நீண்ட காலம் பயன்படுத்த, தாதுக்கள், உலோகங்கள், காரசாரங்களைப் பயன்படுத்தினார்கள். 64 வகை பாசாணங்கள் பற்றிய விபரங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. பெயர் மட்டுமே அறியும் நிலையே நிலவுகிறது.

இயற்கையான பொருள்கள் கிடைக்காதபோது, செயற்கையாக அவற்றைத் தயாரித்தும் பயன்படுத்தினார்கள். அம்பர், கத்தூரி, கோரோசனை, ஆகிய உயிரினப் பொருள்களுக்கு மாற்றாக வைப்புச் சரக்குகளை ஏற்படுத்தினார்கள். குங்குமப்பூ, சாம்பிராணி, பச்சை கற்பூரம் ஆகிய தாவர வகைகளுக்கு மாற்றாக வைப்புச் சரக்குகளை உண்டாக்கினார்கள். உலோக மருந்துகளினால், பக்க விளைவுகள் குறிப்பாக இரசம், செம்பு என்பனவற்றால் ஏற்பட்டன. இதைத்தடுக்க, மண்புழு, கரிசாலை ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட செம்பைப் பயன்படுத்தி னார்கள். மூலிகைகளில் ஈயச்சத்து, செம்புச்சத்து, தங்கச்சத்து உள்ளதை அறிந்து அவற்றைப் பிரித்தெடுத்து உலேகங்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தி வந்தனர். இம்முறைகள் இன்று வழக்கில் பயன்படுத்தப்படவில்லை. பூநீறு, அண்டக்கல், வழலை, சிங்கி, கட்டு, களங்கு, உருக்கு போன்ற முறைகளும்

4. ஆயுர்வேத மருத்துவ வரலாறு - மரு. இல. மகாதேவன், பக்கம்7, இந்திய மருத்துவம், சென்னை.

மருந்துடன் கலக்கப்பயனாகும். குரு மருந்தும் இன்று இல்லை. இடைக்காலத்தில் இரசவாத முறைகள் வலு குன்றின.

உலோகங்களை உருக்கி பற்ப செந்தூரங்களாக மாற்றினார்கள். உருக்கத் தேவையான திராவகங்கள், செயநீர் என்பனவற்றையும் 500 ஆண்டுகள் பயன்படும் கட்டு வகைகளையும் கண்டறிந்தார்கள். இயற்கையான தாவர விதைகளைக் கோர்த்தும், கடலிலிருந்து பெறப்படும் முத்து பவழம் ஆகியவற்றையும் நிலத்திலிருந்துபெறப்படும் கற்களையும் மாலையாக அணிந்தும், மருந்தாக ஆக்கியும் உபயோகப் படுத்தினார்கள். மந்திரம், மணி என்பன மன மருத்துவத்திற்கானது. மூளையின் செயல்கள், மனோ மயக்கோசம் எனப்பட்டது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய 4 வகைச் செயல்களை மூளை செய்யும். முப்பெரும் பற்றுகள், பொருள், புத்திரர் உலகம் ஆகியவற்றில் மக்களுக்கு பெருவிருப்பம் உண்டாகும். இதை 7 வகையாக பிரித்துள்ளார்கள். காம, குரோத, உலோப, மோக, மத, மாச்சரிய, இடும்பை என்றும் பிரித்துள்ளார்கள். இவையே மனநோய்களாக உருவெடுக்கும். மணி மந்திரம் இவற்றால் இதனைப் போக்குவார்கள். பிராணமயமும், அன்னமயமும் உடல் சார்ந்தவை. அதற்கு மருந்துகளைக் கொண்டு நோய்களை நீக்குவார்கள். மூச்சுவிடுதல்-பிராண மயக்கோசம், உணவுச் செரிமானம் - அன்னமயக்கோசம், மனோமயம் - மூளையின் செயல்களையும் மூளையில் வரும் நோய்கள், அதற்குள்ள மருந்துகளைப் பற்றியதாகும்.

வரலாறு: சங்க காலத்திலும், சங்க காலத்திற்கு முன்பும், உள்ள சித்த மருத்துவம் பற்றி நேர் சான்றுகளில்லை. வரலாற்றின் இப்பக்கம் வெற்றிடமாகவே உள்ளது. எனவே, இக்குறையைப் போக்க, சிவபெருமான் அகத்தியருக்குக் கற்றுத் தந்ததாகவும், முருகப்பெருமான் கற்றுத் தந்ததாகவும், பார்வதி தேவியார் வழியாக

5. மேலது - பக்கம் 211

மருத்துவத்தைக் கற்றுக்கொண்டதாகவும், கூறப்பட்டு வெற்றிடம் நிரப்பப்பட்டது. இதுபோன்றே புத்தரின் முற்பிறவியான அவலோகிதர், அகத்தியருக்கு மருத்துவம் கற்றுத் தந்ததாக, வீர சோழியத்தில் வருகின்றது. எனவே, மூன்று வகையான அகத்தியர் இருந்துள்ளார்கள். என்பதை, இப்புனை கதைகளில் உணரலாம். "வடமொழி ஆயுர் வேதத்திலும் பிரதமோ வைதயோ பிஷக்" [4] என்று வருகின்றது. இறைவனே, மருத்துவத்தைக் கற்றுத் தந்ததாகக் கூறப்பட்டதால், அது குறித்து வினாக்கள் எழவில்லை. சங்க காலமான கி.மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. வட நாட்டவர்கள் தமிழகம் வந்தபோது ஆயுர்வேத மருத்துவமும் இங்கு நுழைந்தது.

சமயத்தால் வேறு பட்ட பௌத்தர்களும், சமணர்களும், ஆயுர்வேத மருத்துவத்தை ஆதரித்தார்கள். சித்த மருத்துவக் கருத்துக்கள் பலவற்றை ஆயுர்வேதம் ஏற்றது. சித்தர்களின் இரசவாத முறையை பிற்காலத்தில் ஆயுர்வேதம் ஏற்றது. உலோகங்களைப் பற்பமாக்கும் முறையை சம்கிதை காலத்தில் அறியவில்லை தற்போது கிடைக்கும் விவரங்களின் படி, இரச சாத்திரத்தின் முதல் நூல் " இரச ரத்தினாகரம்" ஆசிரியர் சித்தநாகார்சுனர். காலம் 10 ஆம் நூற்றாண்டு[5] "சதுரகிரி தலபுராணத்தில்" நாகார்ச்சுன முனிவர் பற்றி வருகின்றது. "அகத்தியர் தத்துவம் 300" இல் காந்த மலையில் பௌத்தர்கள் வாழ்ந்தனர் எனக் கூறும் சங்க இலக்கியங்களில் செந்நிற வண்ணம், இக்குலிகத்துக்கு ஒப்பிடப்பட்டது.

இலிங்குலிகம் என்பது சாதி இலிங்கத்தைக் குறிக்கும். ஐந்து வகையான இரசக் கலவையில் இலிங்கமும் ஒன்றாகும். இன்றும், இலிங்கத்தைக் கொண்டு சித்த மருந்துகளைச் செய்து, வழங்கி வருகின்றார்கள். இங்குலிகத்தைக் குறிப்பிட்டதால், இரச, பாசாணங்களைப் பற்றி அறிந்துள்ளார்கள் என அறியலாம். இரச வாத முறை தமிழர்கள் அறிந்ததை உணர்த்தும்.

நிலம் ஐந்தாகப் பிரிக்கப்பட்டதால், திணைக்குரிய முதல் பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்பன கொண்டு தாவர தாது உயிரின வகைகள் கூறப்பட்டன. தாவர இனங்களின் மருத்துவப் பண்புகள் கண்டறிப்பட்டன இவையே பின்னர் மலைவாகடம் போன்ற நூல்களாக மலர்ந்தன. கத்தூரிமான், தேன், புனுகு என்பன கொண்டு சித்த மருந்துகள் செய்யப்படுகின்றன. மலைகளில் கிடைக்கும் தாதுக்களால் இரும்பு, செம்பு போன்றவைகளால் பற்ப செந்தூரங்களைச் செய்து வருகின்றார்கள். எனவே, இயற்கையில் இவை பெறுமிடங்கள் என்பன பற்றிய அறிவு சித்த மருத்துவர்களுக்குத் தேவைப்பட்டது. மருந்துகளை பருவ காலங்களுக்கு ஏற்ப செய்த வந்தனர். 1 நாள் முதல் 500 ஆண்டுகள் வரை இருக்கும் மருந்துகளைச் செய்து தந்தார்கள். இவ்வாறு மருந்தியல் உள்ளது.

**நிறைவுரை:**

இதுவரை கூறியவற்றின் தொகுப்பாக, சித்த மருத்துவம் திராவிட பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அகத்தியர் பலர் நூல்களை இயற்றினார்கள். சித்தர் மருந்தியல் பற்றிய வரலாறு, விளக்கங்கள் வைப்புச் சரக்குகள், நோயியல், கண்டறியும் முறைகள், ஆயுர்வேதம் போன்றவை கூறப்பட்டுள்ளன. இலக்கியம் தொடர்பானவைகளும் இதிலடங்கும். பின் இணைப்பில் அகத்தியர் தொடர்பான செய்திகள், இதில் இணைக்கப்பட்டுள்ளன. இவை சித்த மருத்துவர்களுக்கும் ஏனையோருக்கும் புதிய சிந்தனையைத் தரும்.

---

6.மேலது- 214. 7. சதுரகிரி தல புராணம் - எஸ்.பி. இராமசந்திரன் பக்கம்-18, தாமரை நூலகம்-1994.

## உடல் நோயறிதல்

1. பொறியால் அறிதல்
2. எண்வகைத்தேர்வு

புலனால் அறிதல்

வினாதல்

## 4448 நோய்கள்

## நோய்க்குக் காரணிகள்

1. உணவாதி செயல்
2. இச்சாதி செயல்
3. அண்டபிண்டம்

## மனோ மயக் கோசம்

மனம் | புத்தி | சித்தம் | அகங்காரம்

ஆணவம் | கன்மம் | மாயை

↓ | ↓ | ↓

பற்றுகள் → பொருள் | புத்திரர் | உலகம்

# பொதுவியல்

1. அகத்தியர் தொடர்பானவை
2. சித்த மருந்தியல்
3. நோயியல்
4. மருத்துவ சோதிடம்
5. ஆயுர்வேதம்
6. மன மருத்துவம்
7. மணி மருத்துவம்

# அகத்தியர் தொடர்பானவை

"யக்கிய முனிவர் ஆசிரியர் மாணவர் அகத்தியர்"
அனாதிசைவர் - சிவபெருமான் - சதாசிவர்

அகத்திய பரிபூரணம் 1200 : பாடல் 957

**சதாசிவத்தால் தீட்சை பெற்றவர்கள்**

அகத்தியர், கவுசிகர், காசியபர், பரத்வாசர், கவுதமர். (காரணாகமம்)

**ஏழு சித்தர்கள் :**

தன்வந்திரி, கருவூரார், இராமதேவர், புலத்தியர், காகபுசண்டர், கபிலர், தேரையர்.

வசிட்டரின் உடன்பிறப்பு அகத்தியர். ரிக் வேதம் முதல் மண்டலம் 165 - 191 சூக்தம் மனைவி உலோபா முத்திரை. புராண அகத்தியரின் கதைகள், வேதத்தில் இல்லை.
(ரிக் வேதகால ஆரியர்கள் ராகுல சாங்கிருத்யான் பக்கம் 73, நியூசெஞ்சுரி)

**சிவனின் மாணவர்கள் :** அகத்தியர், புலத்தியர், தட்சன், மார்க்கண்டன். (திருமழிசையாழ்வார் பாசுரங்கள் - ஓர் ஆய்வு சியாமளா, பக்கம் 251, வேங்கடம் பப்ளிகேசன், 1992).

நந்திகள் 4 பேர் : 1. சிவயோகமுனி, 2. பதஞ்சலி 3,4. வியாக்ரபாதர் - 2 பேர், 4 பேர், நந்தி 4 பேர், மூலகுரு நந்திக்குரு - மாணவர் 8 பேர்
திருமூலர் மாணவர்கள் : மால் அலங்கன் கஞ்சமலை சித்தன், பிரமன், இந்திரன் சோமன், காலாங்கி, ருத்திரன் - 7 பேர்.
காலங்கி - 64 மாணவர்கள், போகர் மாணவர்.
கஞ்சமலை சித்தர் - மாணவர்கள் 5 பேர் இந்திரன், சோமன், பிரமன், ருத்திரன் - மாணவர்கள் இல்லை. 4 குபேரும் 4

திசைக்கு அதிபர்கள் பதஞ்சலி, வியாக்கிரர் - தில்லையில் இருந்த சிவயோகி. மேற்கு திசையில் பூரணத்துடன் கலந்தார். மேரு மலையைத் தாண்டி செல்லும் போது வானவர் 9 பேர் மாணவர்களானார்கள். இவர்களுக்கு இந்திரன் நல்லுரை செய்தார். போகரின் மாணவர்கள் 63 பேர்களுக்கு ஏராளமான மாணவர்கள்.

திருமூலவர்க்கம் - 4 ஆம் பரம்பரை - கொங்கணர்

கொங்கணர் - திருமூலர் 500, 1000 பற்றிக் கூறுதல்
திருமூலர் 300 (சிங்கியின் மார்க்கம்)

கொங்கணர் - கடுஞ்சுண்ணம், சிங்கி பற்றியும் 500 நூலில் கூறியுள்ளார்.

நந்தி - திருமூலருக்கு கூறுதல் - போகர் - கொங்கணருக்குக் கூறுதல்.

## சித்த மருந்தியல்

**ஐம்பெருங்குழு** :

1) மாசனம், 2) பார்ப்பார் 3) மருத்துவர் 4) நிமித்தர் 5) அமைச்சர் (அரும்பதவுரையார்)

1) அருகர் 2) சித்தர் 3) ஆச்சாரியார் 4) ஆசிரியர் 5) சாதுக்கள்.

(அடியார்க்கு நல்லார்)

**ஆயுள்வேதர்** : கோவிலார் (அரும்பதவுரையார்) மருத்துவ நூலோர் (அடியார்க்கு நல்லார்)

**அரியாயோகம்** : வியாதிகளுக்கு தரும் மருந்து (அரும்பத உரையார்) வியாதிகளைக் கெடுக்கும் மருந்து அடியார்க்கு நல்லார்)

அகத்தியர் நூல் - 16 இலட்சம்
சுருக்கம் - 3 இலட்சம்

அகத்தியர் ஞானகாவியம் 1000, வே. கந்தசாமி முதலியார்,தாமரை நூலகம், பக்கம் 186: பாடல் 732.

மருத்துவர்களின் இலக்கணம்

1. மருத்துவ நூல்களை அறிந்துகொள்ளல்
2. நாடிபார்த்து நோயறிதல்
3. தீரும், தீராது என்று கணித்தல்
4. எண்வகைத் தேர்வு மூலம் நோயறிதல்
5. மருந்துப் பொருள்களை தூய்மையாக்கல்
6. நோயின் வரலாறு, வரும் வழி, இயல்புகளை அறிதல்
7. 10 வகை வாயுக்கள், உடல் நிலை, முக்குற்றம் என்பன அறிந்து மருத்துவம் செய்ய வேண்டும்.
8. வெறுக்கும்படியாகப் பேசுதல், பெண்களை தாய், தமக்கையாக நினைப்பவன் முதியோரை தந்தையாக மதிப்பவன்.
9. பிணியின் வலிமை, குறி குணங்களை ஆய்ந்து மருந்து, மந்திரம், தெய்வ பலம் கொண்டு நோய்களைப் போக்குதல்.
10. நாடி, அகக்கருவிகள், புறக் கருவிகள் துணைக் கருவிகள், காலத்தின் கூறுகள் மருந்துகளின் பக்குவம், வலிமை, ஒவ்வாத மருந்துகளை நீக்கி, மருந்துகளைச் செய்தல், நல்ல பிடகனின் இலக்கணமாகும்.

## நான்கு வகை மருத்துவர்கள்

1. கமகன், 2. கவி, 3. வாதி, 4. வ-ாக்கி

1.கமகன் : கல்லாத நூலையும், எடுத்துரைக்க வல்லவன்

2.கவி : 4 வகைப் பாடல்களைப் பாடும் புலவன் (ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்)(வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா)

3.வாதி : (இரச) வாதம் செய்வோன்

4.வாக்கி : 4 வகைப்பொருள்களையும் (அறம், பொருள், இன்பம், வீடு என்பன) விருப்பமுடன் விரித்துக் கூறுவோன்.

### மருத்துவர்களின் உடை

வெண்மை நிற ஆடையையே மருத்துவர்கள் அணியவேண்டும்.

நறுமணப் பொருள்களை பூசிக் கொண்டு, நோயாளிகளை ஆய்வு செய்ய வேண்டும்.

**மருந்துண்ணும் நாள்**

செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் நோய் தீர உண்ணவும். ஞாயிற்றுக்கிழமை மருந்து செய்ய வேண்டிய நாளாகும்.

**(தமிழ் மருத்துவர்கள் - யூகி முனிவர் பட்டியல்)**

1. அகத்தியர்
2. புலத்தியர்
3. திருமூலர்
4. போகநாதர்
5. காலங்கி
6. தேரையர்
7. சௌமியர்
8. சட்டைமுனி
9. இராமதேவர்
10. கொங்கணர்

திரேதாயுகம் - 1000 சித்தர்கள்
துவாபரயுகம் - 1500 சித்தர்கள்
கலியுகம் - 3000 சித்தர்கள்
(தன்வந்திரி நிகண்டு 300, வைத்தியம் 200 பாடல் 28)

**போலி மருத்துவர்கள்**

1. மருந்துகளைக் கூறும் நூல்களைப்பற்றிய அறிவு இல்லாதவர்கள்.
2. நாடி பார்க்காதவர்கள்
3. நாடியால் நோயைப் பற்றிக் கூறாதவர்கள்
4. நோய் தீராது என்பவர்கள்
5. நோயை மாற்றி உரைப்பவர்கள்
6. நோயைப் போக்குவதாகக் கூறி, தீர்க்காதவர்கள்.
7. போலி மருத்துவர்கள் வீடுபேறு அடைய மாட்டார்கள். நரகத்தை அடைவார்கள்.

**மருந்துதரக் கூடாதவர்கள்**

பிறர் மனைவியை விரும்புவோர், வஞ்சகன், போதைப் பொருள்களான கஞ்சாகள் உண்போர், சூனியக்காரன்,

சண்டைக்காரன், திருடன், உலோபி, மூளையில்லாதவன், மானமில்லாதவன்.

முன்பணம் பெறக்கூடியவர்கள்

இலஞ்சம் பெறுவோர், திருட்டு செய்வோர், விலைமாதர்கள், மெய்க்கூலி, கல்வியைச் சொல்லிக் கொடுப்போர், ஆசிரியர், வணிகர், மருத்துவர் ஆகியோர் முன்பணம் பெறத்தக்கவர்கள்.

**மருந்து பயனளிக்காதவர்கள்**

1. கள்ள நெஞ்சுள்ளவன் 2. வழிப்பறிசெய்பவன்
3. சினமுள்ளவன் 4. பெண்ணாசை உள்ளவன்
5. மருத்துவர்களிடம் உண்மையைச் சொல்லாதவன்
6. கருமி.

**நோய் தீராதவர்கள்**

1. மாபாவிகள்
2. பழிவாங்குவோர்
3. இடு மருந்து செய்வோர்
4. பழி, பாவம் செய்யப் பயப்படாதவர்கள்
5. கொடியவர்கள்.

**உபவேதங்கள்**

1. அர்த்தவேதம் 2. ஆயுர்வேதம் 3.காந்தர்வேதம்
4. தனுர்வேதம்.

4 யுகங்களில் வாழ்ந்தவர்கள்

1) கிருதயுகம் - மனிதர்கள் நோயில்லாமல் இருத்தல்

2) திரேதாயுகம் - பாதிப்பங்கு பிணியாளர்கள் ஒழுங்கில்லாதவர்கள், மருந்துகளை பயன்படுத்துவோராக இருத்தல்

3) துவாபரயுகம் - பாதிப்பேர் பாவம் செய்வோர், பெண்ணாசை கொண்டோர்.

4) கலியுகம் - வாழ்நாள் குறைந்து, பிணிகள் அதிகமாகும்.

**ஆயுர்வேதம்** : 1. நோய்தடுத்தல்
2. நோய் நீக்குதல்

**ஆயுர்வேதம்** - பிரும்மதேவர் - 8 பிரிவுகள் உள்ளதாக அமைத்தல்

1) சல்லியம் - அறுவை மருத்துவம் - அறுவை

மருத்துவக்கருவிகள், இரண மருத்துவம்
2) சாலக்கியம் : கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புகள், அதில் வரும் நோய்கள், மருந்துகள் என்பன.
3) காய மருத்துவம் : சுரம், அதிசாரக்கழிச்சல், மன நோய்கள், மருத்துவம் என்பன.
4) பூத மருத்துவம் : உளநோய்கள், மணி மந்திரம் என்பவைக் கொண்டு நீக்குதல்
5) கௌமாரப்பிரத்தியம் : குழந்தைகள் மருத்துவம்
6) அகதந்திரம்
7) இரசாயன தந்திரம் : இரசவாதம் பற்றியது
8) வசிகரண தந்திரம் : பிறப்புறுப்புகளில் வரும் நோய்கள், ஆண்மை பெருக்கும் முறைகள் பற்றியும் கூறும் பிரிவு.

**ஆயுர் வேத வரலாறு**

இந்திரன் - தேவ மருத்துவர்
பாரத் வாசர் - இந்திரனின் மாணவர்
1) அக்னிவேசர் 2) பீலர் 3) சாடுகர்ணர் 4) பராசரர் 5) அரிதர் 6) சீரபாணி (பாரத்வாசரின் மாணவர்கள்)
சுசிருதர் - அறுவை மருத்துவர் - படித்தவர்
சரகர் - காய மருத்துவர் - நாடோடி மருத்துவர்

**சித்த மருத்துவ முறைகள்**

1) தெய்வ மருத்துவம் : இரசம், கந்தகம், பாடாணம் என்பன கொண்டு, மருந்துகளைச் செய்து தரும் முறை.
2) மானிட மருத்துவம் : எளிய மருந்துகளால் நோய் நீக்குவது.
3) இராட்சத மருத்துவம் : அறுவை மருத்துவம்
4) மாந்தீரிக மருத்துவம் : மனநோய்கள் தீர செய்யப்படும் மருத்துவம். மணி, மந்திர முறைகளைக் கொண்டது.

**நோய் வராமல் தடுக்க**

ஆண்டுக்கு - 2 முறை வாந்திக்கும்
” - 3 முறை - பேதி அஞ்சனத்திற்கும்
” - 4 முறை - நசியம் செய்யவும்

**விலங்கின் நோய்கள்**

யானைக்கான சுரம் - பாகலம்

மலைக்குண்டான சுரம் - சிலாசத்து
பாம்புக்குண்டான சுரம் - நிர்மோகம்
தண்ணிருக்கு சுரம் - நீலிகா
நிலத்திற்கான சுரம் - ஊசரம்
பசுவின் சுரம் - சீதிகா
நாய்க்கான சுரம் - அளர்க்கம்
புலிக்கான `சுரம் - திருட்டி பிரத்திய ரோதனம்
குதிரைக்கானது - அபசு மிருதி
மயிலுக்கானது - சிகோத்பேதம்
காக்கைக்கானது - பிரவாகதம்
பூனைக் கானது - பிருட்டபேதம் அல்லது உரோமநாசனம்
பெருச்சாளி - தத்துரம்
கிளிக்கானது - பித்தகாயம்
சிறுத்தை - திரம்
அகத்தியர் 12000, பக்கம் 125.
4 யுக சித்தர்கள்
கிரேதாயுகம் - கோடி சித்தர்கள், மனுக்கள்
திரேதாயுகம் - எட்டு இலட்சம்
துவாபர யுகம் - 2 இலட்சம்
கலியுகம் - 90 இலட்சம் - சித்தர்கள், ரிசிகள்
சித்தர் மருந்தியல்
துருசுக் குளிகை - திருமூல வர்க்கம். துருசு குருவால் சூதத்தைக் கட்டி சாரணையைத் தீர்த்துக் குளிகை திருமூலவர்க்கத்தார்கள் செய்வார்கள்.
(கொங்கணர் 3000, I பாகம், பக்கம் 149. பாடல் 317, 318. மேலது பக்கம் 149. பாடல் 317)
தாளகம் கொண்டு இரசத்தைக் கட்டி, சிறிய அளவில் சாரணையைத் தீர்த்துக் குளிகை செய்வது, இடபரிசி வர்க்கம். மேலது, பக்கம் 187 பாடல் 401 - 402)
ஏகமித்திரம் - காரம்
இரு மித்திரம் - காரம், சாரம்
மூன்று மித்திரம் - குன்றிமணி, வெண்கரு, சீனம்.
(சித்தர் மருந்தியல் பாடல் 749: மருந்துவ பரிபாசை பக்கம் 339.

4 இன மித்திரம் - சாரம், வெண்ணெய், இந்துப்பு, மெழுகு.
5 " - குன்றி, நெய், வெல்லம், காரம், தேன்.
10 " - வெண்ணெய், வெங்காரம், குன்றி, வெல்லம், ஆமணக்கு, பழம், தேன், அளி, காடி, புறா எச்சம் (எச்சம் - நறுமணப்பொருள்) (புறா - இம்புறா வேர்)
கொங்கணர் வாதகாவியம் 3000 II ஆம் காண்டம்
பக்கம் 156: பாடல் 388.

**மணிகள் - குளிகைகள்**

சந்தானக் குளிகை - 1. அட்சய மணி, சுரபி
நாதவேதக் குளிகை 2. கவுன மணி, போகம்
3. பாசிவத்திமணி,
4. பரிசமணி.

தேரோட்டம்

சாரம் - தேர்
துருசு - அச்சு
காரம் - வண்டில்
சீனம் - தேர்வளையம்
சவுக்காரம் - குத்துக்கால்
வெடியுப்பு - தேர்வடம்

மேல்சட்டம் - சத்திச் சாரம்
அலங்காரம் - யவச்சாரம்
தேர்த்தடி - சூடன்
வடக்கால் - உபரசம்

(கொங்கணர் வாதகாவியம் 3000, பக்கம் 162
மேலது பக்கம் 181,182) பாசாணம் - தேர்க் கொடுங்கை
வீரம் - தேர்ச்சிகரம்
கௌரி - தேர்ப்பாகம்.
சூதம் - அரசன்
கந்தகம் - இராணி
தங்கம் - ஊஞ்சல்

வங்கம், நாகம், இரும்பு, ஈயம் - பணிப்பெண்கள்
தாளகம் - திரை, நிமிளை - தேரின் மெத்தை
அண்ட ஓடு - வானம், இராசயோகம் - வீதி
உப்புக்கட்டு - திருமூலர் - 500 நூலில் கூறுதல்
திருமூலர் - வாதகாவியம் 1000

சிங்கி வகைகள் :
காலை சிங்கித்தைலம்
பூரண சிங்கித்தைலம் (போதசிங்கி)
ஏமசிங்கி, இரண சிங்கி (இரத்த சிங்கி)
(கொங்கணர் 3000 3 ஆம் பாகம், பக்கம் 75, பாடல் 137-138)

சித்தர் நூல்கள்
கோரக்கர் வெண்பா
மச்சமுனி - கலிப்பா
அகத்தியர் - விருத்தப்பா
வேமனர் - வடுகு, சட்டைமுனி - தாழிசை,
சங்கரர் - கிரந்தம், பதஞ்சலி - கட்டளை கலித்துறை
காசிபர் - வண்ணம், சிவயோகமுனிவர் குறள்
கௌதமர் - சந்தப்பா, நந்தி - சந்தம் , சிவவாக்கியர் - நெட்டுப்பா

குளிகை வகைகள் (மேலது பக்கம் 108 - 109)
சொரூபிக் குளிகை - நாகார்ச்சுனர்
அட்டமா சித்தி.
கமலி, லகிமா
மச்சர் - கொடும் பேதிக்குளிகை
கோரக்கர் - பேதிக்குளிகை
இடபயோனி - சாங்கைவேதி
மூலர் - 5 வகைக் குளிகைகள் 1. சொரூபம், 2. கமலி, 3. அட்டமாசித்தி, 4. சிவதரிசி, 5. கவுனம்
கொங்கணர் - காமி, தீவி. சீவி. பக்கம் 190:

மருந்தியல்
மண்கூறு - அதிகமானால் - புடம் போடமுடியாது. நீர் - அதிகமானால் - சரக்குகள் அழுக்கடையும். தீ - அதிகமானால் மருந்து சாம்பலாகும், வாயு - அதிகரிக்க - மருந்து கறுப்பாகும். (அகத்தியர் பூரண காவியம் 1000, பக்கம் 19-20)
1) சுருப மணி 2) கமலினிமணி 3) அட்டமாசித்தி மணி (மணி+மை)

அட்டகன்மம்:

| ஆசனம் | பலகை | மணி |
|---|---|---|
| 1. புலித்தோலாசனம் - | குன்றி மரம் - | தாமரை மணி 108 |
| 2. மான் தோலாசனம்- | தம்பனம்,மோகனம,மாமரம் - | துளசி 108 |
| 3. ஆண் தோலாசனம்- | மாரணம் - அத்திமரம் - | நாபி 108 |
| 4. பதுமாசனம்(தாமரை)- | உச்சாடனம்,பலாமரம் - | மிளகுமணி |
| 5. புலி தோல் | - வசியம் - வில்வம் | -உருத்திராக்கம் |
| 6. மரை தோல் | ஆக்கிருச்சணம் - தேவதாரம் - | பளிங்குமணி |
| 7. கம்பளி | - பேதனம் - தில்லை | - எட்டி விதை |
| 8. வேங்கைத்தோல் | - வித்வேசணம் - பாதிரி | - சங்குமணி. |

(மேலது பக்கம் 161. பாடல் 55) கைலாச வர்க்கம், வேடம் சோதி மணி, நீர்க்காவி காசாயம், யோக வேசம், யோக தண்டு (சிவமாலை) உருத்திராட்சம், உதயம் சிவபூசை, மாலை சத்தி பூசை.

வல்லமலை - உயிரினங்கள்

1. கவரிமான் 2. யாளி 3. சிங்கம் 4. பச்சை நிறக் குதிரை 5. வெள்ளை யானை

(போகர் சனனசாகரம் பக்கம் 73,75)

கந்தபர்வதம், சிறகுள்ள சித்தர்கள் - கந்தவர்கள் எனப் பெயர் - மூலர் சொல்லுதல். வல்லமலை சித்தர்கள் - வாலுள்ளவர்கள். (மேலது பக்கம் 78) மச்சமுனி - கமண்டல நீர் தரையில் விழ மீனாகும். (மேலது பக்கம் 79) ஏம கூட மலை - காலாங்கி - கமண்டல நீர் - இரத்தமாக, காய்ச்சினால் ஆகும். கமண்டல நீர் - கங்கையாகும். பெருங்காட்டுமலை : காசிபர் - கமண்டல நீர் துங்க பத்திரை.

வயிரமலை - கௌதமர் - கமண்டல நீர் - மகாபதரி.

சவரிமலை - உரோமரிசி - கமண்டல நீர் வெள்ளம்

கருமலை - புலத்தியர் - கமண்டல நீர் பெண்ணையாறு

பாலமலை : மார்க்கண்டர்.

கண்டை நாடு - கோரக்கர்.

சேலம் மலை - கடுவெளி சித்தர்

கொல்லிமலை - கமல முனி

திருமூர்த்திமலை - காலங்கிமுனிவர்

சுருளிமலை : சுந்தரானந்தர்

திரிகூடமலை - திருமூலர்
வெண்சதுர கிரி - உண்ணாக்குச் சித்தர்
திருமண்ணாமலை - சங்கிலிச் சித்தர்
பிள்ளையார் மலை - இராமதேவர்.
(போகர் சனன சாகரம். பக்கம் 100-101)
கருமலை - கருவூரார்.
சூடமலை - வசிட்டர்
நாரதமலை - நாரதர்
பிரான் மலை - பாம்பாட்டி சித்தர்
சிறுமலை - அழுகண்ணி சித்தர்
சித்தர்களிடங்கள் - மேலது பக்கம் 106
சிதம்பரம் - திருமூலர்
காஞ்சிபுரம் - காலங்கி, கடுவெளி சித்தர்
கும்பகோணம் - கும்பமுனி
(மயிலாடுதுறை) மயில் தேசம் - மச்ச முனி
சீர்காழி - சட்டை முனி
நாகப்பட்டினம் - அழுகண்ணி
மதுரை - சுந்தரானந்தர், கமல முனி
திருவிடை மருதூர் - இடைக்காடர்
துவாரகை - பாம்பாட்டி சித்தர்
நாங்கணாச்சேரி - புண்ணாக்கீசர்
திருக்கணங்குடி - கொங்கணர்
வயித்தீசரன் கோவில் - வசிட்டர்
திருவையாறு - வான்மீகர், அகப்பேய்
காளத்திரி - கருவூரார்
ஆவுடையார் கோவில் - புலத்தியர்
கழுக்குன்றம் - கோரக்கர்
சருத்திராத்தலம் - காசிபர்
அருணகிரி - கௌதமர்
கருவை நல்லூர் - மார்க்கண்டர்
(போகர் - சனன சாகரம், பக்கம் 107)
திரிகூடல் - திருமூலர்
பாபநாசம் - புலத்தியர்

திருக்கடவூர் - சுந்தர, காலங்கி
திருப்புவனம், திருக்கோவிலூர் - சுந்தர, காலங்கி
ஆடுதுறை - விசுவாமித்திரர்
திருவாலம் - பாம்பாட்டி சித்தர்
திருப்பனந்தாள் - வரரிசி
திருப்பெருங்காவூர் - கன்னி சித்தர்
திருவாகைக்காவல் - மச்சமுனி சமாதி
தென்மலை - வரதன்
சேத்தூர் - மார்க்கண்டன்
நெடுங்குன்றூர், மேலைச்சிதம்பரம் - திருமூலர்
திருக்கோ கரணம் - கோரக்கர்
திருவாஞ்சியம் - கமலமுனி
தனிக்கோடி - கொங்கணர்.

நந்திகள்
1. சிவயோகமுனி
2. பதஞ்சலி
3. வியாக்ரமாதர் - 2
(கொங்கணர் வாதகாவியம் 3000-பாடல் 401-402)

கைலாச வர்க்கம்
1. புலத்தியர்
2. காசிபர்
3. மார்க்கண்டன்
4. அட்டாங்கி
5. கௌதமர்
6. கலைக்கோட்டு மாமுனிவர்
7. சதானந்தர்

(போகர் - சனன சாகரம். தாமரை நூலகம், பக்கம் 34. 1993)

சித்தர் மருந்தியல் - மருந்து செய்யும் காலம்
பங்குனி, சித்திரை - முப்பு
வைகாசி, ஆனி - சாரணை.
ஆடி, ஆவணி - திராவகம்.
ஐப்பசி, கார்த்திகை - உருக்கினம்
புரட்டாசி, மார்கழி - செந்தூரம்.
தை, மாசி - செயநீர்.
(ஆயுள் வேதச் சுருக்கம், அருணாசல முதலியார், கோல்டன் அச்சு யந்திரசாலை 1904, பக்கம் 7)

| இரச வகைகள் | குளிகைகள் |
|---|---|
| 1. சித்தரசம் | 1. சொருபக்குளிகை |
| 2. நவநீத ரசம் | 2. காமதேனு குளிகை |
| 3. தொடுப்பு ரசம் | 3. போகம் குளிகை |
| 4. சிராவண ரசம் | 4. சந்தானம் குளிகை |
| 5. சுத்த ரசம் | 5. அட்சயம் குளிகை |
| 6. நின்மல ரசம் | 6. கவுனம் குளிகை |
| 7. அட்சய ரசம் | 7. பரசிவத்தி குளிகை |
| 8. இந்திர ரசம் | 8. நாதவேதப்பரிசம் குளிகை |

(சித்தர்களின் இரசமணி - பிரம்ம தண்டி கற்பகம் புத்தக நிலையம் 2007பக்கம் 79)

**மருத்துவரின் ஆய்வு**

1. மருந்தின் வேகம் 2. நாடியின் வலிமை, 3. வயது, 4. மருந்தின் கறுக்கு.

(அகத்தியர் 12000 முதல் காண்டம், பாடல் 159, தாமரை நூலகம், 1994).

**மருந்து செய்யும் காலம் - கொங்கனர்**

அகத்தியர்

பங்குனி, சித்திரை - குரு மருந்துகள்

தை, மாசி - செயநீர்

தை,மாசி,பங்குனி

ஐப்பசி,கார்த்திகை-உருக்கினம்,கட்டுகள்

ஆடி, ஆவணி - திராவகம் ஆடி, ஆவணி

வைகாசி, ஆனி - குளிகைக்குச் சாரணை ஏற்றுதல்

புரட்டாசி, மார்கழி - செந்தூரம்.

(கொங்கணர் வாத காவியம் 3000. பக்கம் 134, பாடல் 286, தாமரை நூலகம் 1992)

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி - உருக்கினம்

தை, மாசி, பங்குனி - செயநீர்

சித்திரை, வைகாசி, ஆனி - குரு மருந்து

ஆடி, ஆவணி, புரட்டாசி - திராவகம், செந்தூரம்

(அகத்தியர் அமுதக் கலை ஞானம் 1200, தாமரை நூலகம்) பக்கம் 225.

## மந்திர மருத்துவம்

| அகத்தியர் பரிபூரணம் 1200 3000 | சித்தர் மருந்தியல் | கொங்கணர் வாதகாவியம் |
|---|---|---|
| 1. களங்கு வகை | 559 | 550 |
| 2. செந்தூர வகை | 1010 | 1010 |
| 3. குரு பற்ப வகை | 705 | 705 |
| 4. நவலோகநீற்று வகை | 51 | 51 |
| 5. சிங்கி வகை | 7 | 7 |
| 6. நீற்றினக்கரு | 9 | மெழுகு - 307 |
| 7. உருக்கினம் | 15 | செயநீர் - 155 |
| 8. செந்தூர இனம் | 7 | திராவகம் - 66 |
| 9. வர்ண்வகை | 6 | குளிகை - 1008 |

(அகத்தியர் பரிபூரணம் 1200, தெய்வ சிகாமணி முதலியார், 1986- சித்தர் மருந்தியல்)

மண்ணின் பயன்கள் எண்வகைச் செயல்கள் (அட்டகர்மம்)

கொல்லன் உலை மண் - தம்பனம்

வஸ் தடுப்பு மண் - மோகனம்

சுண்ணாம்புலை மண் - வித்வேசனம்

குயவன் சூளை மண் - பேதனம்

வெள்ளாவி மண் - உச்சாடனம்

சுடுகாட்டு மண் - மாரணம்

கரும்பாலை மண் - வசியம்

கூவிள மண் - வசியம்

(சங்கரர் நவக்கிரக கக்கிசம் 100. பக்கம் 105) தாமரை நூலகம).

(அட்ட கன்மத் தகடுகள்)எண்வகைத் தகடுகள், மேலது பக்கம் 88

செம்பு - வசியம்

காரீயம் - தம்பனம்

வெள்ளி - மோகனம்
ஈயம் - பேதமை
தரா - வித்வேசனம்
இரும்பு - உச்சாடனம்
(மேலது பக்கம் 109)

**மணிகள்**

உருத்திராக்கம் - வசியம்
மிளகுமணி, படிக மணி - மோகனம்
துளசி மணி - உச்சாடனம்
இலந்தைமணி - வித்வேசனம்
நாபி மணி - மாரணம்
எட்டி மணி - பேதனம்
தாமரை வித்து - தம்பனம்
இரசமணி - ஆக்கரசணம்
(மேலது பக்கம் 110)

**பூக்கள் :**

வசியம் - முல்லை
மோகனம் - செம்பருத்தி
மாரணம் - இலுப்பைப்பூ
உச்சாடனம் - மல்லிகை
பேதனம் - ஆத்தி
தம்பனம் - வெள்ளை அரளி
வித்வேசனம் - செவ்வரளி

**வேள்விக்கான தாவரப் பொருள்கள் :**

1. வசியம் : விலாமிச்சு, கூவிளை, பலா, மாமரம், நாயுருவி.
2. மோகனம் : வெள்ளெருக்கு, வெண்குன்றி, இருவேலி, ஆல், சித்திர மூலி.
3. பேதனம் : அழிஞ்சில், அரசு, சிறுகிளா, கேத்தரி, நெருஞ்சில், கண்டக்காலி, சிறு குறிஞ்சான், மாவிலங்கு தோணிப்பாகல், நாய்பாகல், பொன்னாங்காணி.
4. உச்சாடனம் - காஞ்சோரை, வேம்பு, கவுதும்பை, சீந்தில், பேய் மருட்டி, நாவல் சிற்றகத்தி.
5. தம்பனம் - நத்தை சூரி, பொன் முசுட்டை பால் குரண்டி,

அமுக்கிரா, நீர் முள்ளி, பூனைக்காலி, கட்டுக் கொடி, பிடார மூக்கி.

6. வித்வேடனம் - எலுமிச்சை, நாரத்தை, மல்லி கடு, காணம், நீர்மேல் நெருப்பு, புல்லுருவி.

7. மாரணம் - எருக்கு, தழல்மூலி, கள்ளி, துளசி, பிரண்டை, செவ்வரளி.

(நவக்கிரகக்கக்கிசம் பக்கம் 111 பக்கம் 112)
(ஆகுதிகள்) (வேள்வித் தீயில் இடும் தானியப் பொருள்கள்)
தம்பனம் - வரகு
பேதனம் - கடலை
வித்வேடனம் - எள்
மோகனம் - முதிரை, சாமை, நெல், தினை
உச்சாடனம் - கடுகு, மிளகு
வசியம் - கோலரிசி, குதிரைவாலி, பாசிப்பயறு, கோதுமை.
(மேலது பக்கம் 113)
நெய் வகைகள்:
வசியம் - பசுநெய்
தம்பனம் - எருமை நெய்
உச்சாடனம் - வெள்ளாட்டு நெய்
மோகனம் - எள் நெள் தேங்காய் நெய்
வித்வேசனம் - இலுப்பை நெய்
மாரணம் - வேப்ப நெய்
பேதனம் - ரெண்ட நெய்
(ஆயுள் வேதச் சுருக்கம், அருணாசல முதலியார்,பக்கம் 77-1904)

நோயியல்

| உடல் இலக்கணம் : | ஆய்வு |
|---|---|
| இதயத்தின் இயல்பு | நாடியால் அறியலாம் |
| ஈரலின் இயல்பு | சிறுநீரால் அறியலாம் |
| இரைப்பையின் இயல்பு | மலத்தால் அறியலாம் |

(மேலது பக்கம் 116)

நாடி இலக்கணம்

வாத நாடி : சிறு பிள்ளை தூங்கும் தொட்டில் போல வளைந்து வளைந்து செல்லும். தவளை, ஓணான், பாம்பு, குருவி, ஆமை நடந்து செல்வது போல அமைந்திருக்கும்.

பித்தநாடி: அன்னம், மயில், தாரா, மாடப்புறா, ஊர்க்குருவி போல மெத்தென மீண்டு, மீண்டு கருடன் போல (பெலத்து) வலிமையுடன் எழும்புதல்.

கப நாடி : தயங்கித் தயங்கி தொத்தித் தொத்திக் கோழிநடை, கொக்கு உறக்கம் போல, ஊர்க் குருவி, சிலந்திப் பூச்சி போல, பெண்ணுடன் கலந்தவனின் நாடி போல இருக்கும். (மேலது பக்கம் 120)

அதிக நாள்பட்ட நோயாளிகளுக்குப் பஞ்ச பூத மூலிகைகள்

பொன்மேனி, வெண்துத்தி, சிவதை, நீலி - வாத நோயளிகளுக்கு

பொன்மேனி, வெண்துத்தி, பூடு பித்த நோயாளிகளுக்கு :

கப நோயாளிகளுக்கு : நீலி,சிவதை

**சித்தர்களின் வரலாறு: சங்கப்புலவர்களின் நூல்கள்**

1. கல்லாடம்
2. தேரையர்
3. காக்கைப் பாடினியம்
4. தர்க்க சங்கிரகம்
5. வெண்பா
6. அறநெறிச்சாரம்
7. குவலையானந்தம்
8. மாறலைங்காரம்
9. காரிகை
10. இலக்கணக்கொத்து
12. நன்னூல்
13. இலக்கண விளக்கம்
14. வச்சணந்தி மாலை
15. யாப்பருங்கலம்
16. மணிமேகலை
17. வளையாபதி
18. தொல்காப்பியம்
19. சிதம்பரப்பாட்டிபன்
20. அரும்பதக்கொத்து
21. குமார சாமியம்

11. தண்டியலங்காரம் 22. சிற்றகத்தியம்

(அகத்தியர் 12000, பாடல் 552).

திருமூலரின் வர்க்கம் 21 தலை முறைகள்

| பாட்டன் | மகன் | பேரன் |
|---|---|---|
| 1. வர்ணசித்து | 4 | 6 |
| 2. மௌன சித்து | 1 | 2 |
| 3. உரோம சித்து | 3 | 1 |
| 4. செம்பு ரிசி | 4 | 5 |
| 5. கருட ரிசி | 5 | 2 |
| 6. சுவர்ண ரிசி | 2 | 4 |
| 7. பிரிங்கி மக ரிசி | 6 | 9 |
| 8. சரவண பகவான் | 1 | 6 |
| 9. புசண்டர் மகரிசி | 2 | 6 |
| 10. குருந்த மகரிசி | 2 | 3 |
| 11. பரஞ்சோதிரிசி | 3 | 1 |
| 12. கோவர்த்த ரிசி | 4 | 3 |
| 13. — | | |
| 14. திருமூலர் | 3 | 2 |
| 15. குப்பிரவி | 6 | 2 |
| 16. கௌபாலர் | 2 | 7 |
| 17. சோதிமகரிசி | 4 | 6 |
| 18. பௌட மகரிசி | 5 | - |
| 19. மலையமுனிரிசி | 2 | 6 |
| 20. சர்பூர்ணரிசி | 2 | 3 |
| 21. குண்டலரிசி | 3 | 4 |

(அகத்தியர் 12000. 3-ஆம் காண்டம் பக்கம் 117, பாடல் 430-454)

சோதிட நூல்களின் பட்டியல் பக்கம் 160. பாடல் 604-607

காக்கையர் - 80,000

சுகர் - 1,00,000

வரரிசி - சோசியம்

புலிப்பாணி - பெருநூல் 17000

கௌசிகர் - 1,00,000

சினேந்திர மாலை - 1,00,000

சாதக சிந்தாமணி - 60,000

(அகத்தியர் 12000, 4-ஆம் காண்டம் பக்கம் 10. பாடல்-3)

**அகத்தியரின் நூல்கள்**

அசுவினியார் உபதேசம் 50,000 முதல் நூல்

அகத்தியர் 12000 சுருக்கம் - வழி நூல்

அகத்தியர் - 3 x 12000 = 36,000

3 காண்டம் - 1 காண்டம் - 12,000 - 3 யுக மனிதர்களுக்கு

24,000 பாடல்கள் - பொதிகையடிவாரம்

பெருநூல் 36000 - 3 பாகம். (12000)

பஞ்சகாவியம் - 5 x 1000 = 5000

சதுர் காண்டம் - 4 x 1000 = 4000

காவியம் = 15000

சுருக்கம் = 800

= 500

700

= 600

= 400

கருக்கிடை - 300

சுருக்கம் - 100

காண்டம்

சூத்திரம் - 6

சூட்சாசூட்சம் - 20

குளிகை - 11

சாகரம் - 50,000

பெருநூல் - 12

சுருக்கம்

**ஞான நூல்கள் பட்டியல்**

(மேலது பக்கம் 46. பாடல் 147 - 153)

1. ஞானசாகரம் 500
2. ஞானமணி 4000
3. சிவகுளிகை 2000
4. ஞானசாரம் 12000
5. ஞானம் 800
6. இராசயோகம் 1000
10. அட்டசாரம் 6000
11. தத்துவ சாகரம் 12000
12. பூரண சந்திரோதய ஞானம்
13. தேவிகாலோத்திரம்
14. கலை ஞானம் 64
15. திருமந்திரார்த்தம்

7. திருக்கடல் 1000
8. சிவஞானம் 205
9. சிவஞானம் 500
16. பிரகாச ஞானம் 10
17. வெண்பா ஞானம்
18. வாமப்பால் 14000

மாணவர்கள் பட்டியல்:

1. அசுவினி - 9 பேர்
2. தன்வந்தரி - 4
3. புலிப்பாணி - 6
4. மச்சமுனி - 7
5. சட்டைமுனி - 600
7. சிவவாக்கியர் - 300
8. பிண்ணாக்குசித்தர் - 36
9. குதம்பை சித்தர் - 8
10. கருவூரார் - 9
11. யூகிமுனி - 14

சமாதி I, II, III 800, 1000

6. இராமதேவர் - 200

மாணவர்கள் பட்டியல்

12. கௌபாலர்
13. அசுவினிதேவர் - 8 பேர்
14. உரோமரிசி - 18 பேர்
15. சுந்தரானந்தர் - 8 பேர்
16. டமரகர் - 16 பேர்
17. கொங்கணர் - 16 பேர்
18. புசண்டர் - 100 பேர்

(போகர் சரக்கு வைப்பு 800 - தாமரை நூலகம், 1995.பக்கம் 57)

சித்தர் மருந்தியல்

1. வாதசித்தி
2. குளிகை சித்தி
3. காய சித்தி
4. கவுன சித்தி
5. யோக சித்தி
6. ஞான சித்தி

(மேலது பக்கம் 9)

குளிகை வகைகள்

1. சகடு
2. யோகி
3. பொடி
4. அட்டமா
7. சமதக்கினி
8. கமலினி
9. சந்தானம்
10. சொரூபம்

5. மோசினை
6. அட்டமாசித்தி
11. சொரூப நிலை
12. சிலம்பு

உணவு ஆக்குதல் முறை

1. கைபாகம் - பட்டறிவு கொண்டு ஆக்குதல்
2. செய்பாகம் - நூலில் சொன்னபடிச் செய்தல்
3. உருசி பாகம் - சுவையுள்ளதாகச் சமைத்தல்
4. சாசனபாகம் - வழக்கமானபடிச் செய்தல்

(தொகையகராதி மரு.சே. பிரேமா.தபக)

**துணை வேதங்கள்**

1. மருத்துவநூல் - ஆயுள் வேதம்
2. பொருள் நூல் - அர்த்த வேதம்
3. வில் நூல் - துனூர் வேதம்
4. இசை நூல் - காந்தர்வ வேதம்

ஐவகை மார்க்கம்

1. வெள்ளி, 2. வேதை, 3. முப்பு, 4. குளிகை, 5. குருமருந்து.

நந்தீசர் சர்வக்கலை ஞானம் 1000

(தாமரை நூலகம் - சென்னை, 2006, பக்கம் 26-27. பாடல் 39-41)

**சித்தர் மருந்தியல்**

"நாமப்பா, சுண்ணமொடு செயநீர் போக்கும்
நலமான மந்தரங்கள், சக்கரங்கள்
காமப்பா, சரக்கு வைப்புத் திராவகங்கள்
கண்மணியே, கட்டு வகைசமாதிப் போக்கே"
"போக்கான, செந்தூரம், பற்பத்தோடு
புகழான களங்கோடு பூசை நிட்டை
வாச்சான, கற்பமொடு மெழுகு கோடி
வரிமானத் திசைப்பூடு சொல்வேன் கேளு
மாக்கான, மதியமுர்தம் சவுக்காரம் கோடி
மகத்தானத் தைலமொடு கட்டுக் கோடி
ஆக்கான, சூரணங்கள் லேகியம் கோடி
அப்பனே, இந்திரசால மயேந்திர சாலமாமே"
ஆமப்பா, செகசால வசியம் கோடி
அப்பனே, காரணங்கள், மாரணங்கள் கோடி

அப்பனே, காரணங்கள், மாரணங்கள் கோடி
வாமப்பா, அஞ்சனமு மாற்றம் கோடி
வளமான வாதவதித்தை, சிமிட்டி கோடி
காமப்பா, ஞானோர்க்கு ஞானம் சொல்வேன்
கண்மணியே, வாதமொடு வைத்தியம் போக்கும்
கண்மணியே, வாதமொடு வைத்தியப் போக்கும்
நாமப்பா, நந்திகுரு நான்தான் சொல்வேன்
நலமான, என்சொல்லலைக் கேளு, கேளு

உரை: சுண்ணம், செயநீர், மந்திரங்கள், சக்கரங்கள், வைப்புச் சரக்குகள், திராவகங்கள், கட்டுகள், யோக முறையான சமாதி, செந்தூரம், பற்பங்கள், களங்கு, பூசை, நிட்டை, கற்பம், மெழுகு, சவுக்காரம், தயிலம், சூரணங்கள், லேகியங்கள், இந்திர, மகேந்திர சாலம், வசியம், மாரணம் போன்ற எண்வகை சித்துகள், அஞ்சனம் இரச வாதம், ஞானம், இரசவாதம், மருத்துவம்.

நந்தீசர் சகலக்கலை ஞானம் 1000 பக்கம் 56:

**மருத்துவ மந்திரம்**

அட்டகர்மம் செய்யத் தேவையானவைகள்:

| **பலகை** | **கர்மம்** | **மலர்கள்** |
|---|---|---|
| பலா | தம்பனம் | தாமரை, பூக்கள் |
| மாமரம் | மோகனம் | முல்லை |
| வில்வம் | வசியம் | மல்லிகை |
| எட்டி | பேதனம வித்வேசனம்(பேதனம்) | ஊமத்தை |
| அத்தி | மாரணம் | கடலைப்பூ |
| வெண்நாவல் | ஆக்கருசனம் | தும்பை |

| **துணிகள்** | **தகடுகள்** |
|---|---|
| செம்பட்டு - வசியம் | பொன் |
| மஞ்சள் - மோகனம் | தங்கம் |
| பச்சைப்பட்டு - தம்பனம் | செம்பு |
| வெள்ளை - பேதனம் | வெள்ளி |
| ஆந்தை நிறம் - ஆக்கிருணம் | பஞ்சலோகம் |
| கறுப்பு - மாரணம் | வங்கம் |
| பஞ்ச வர்ணம் | |

(மேலது பக்கம் 57 : வேள்வித்தீக்கான குச்சிகள்)
1)ஆத்தி 2)வெட்டிவேர் 3)விலாமிச்சவேர் 4)ஆல்மரம் 5)முருக்கு 6)நெல்லி 7)அத்தி 8)நாவல் 9)இலுப்பை 10)பேய்யத்தி 11)கடுகு ரோகணி 12)எருக்கு 13) கள்ளி.

| ஆசனம் | | கர்மம் |
|---|---|---|
| 1.மான்தோல் | - | வசியம் |
| 2.புலித்தோல் | - | மோகனம் - |
| 3)கடம்பைதோல | - | தம்பனம் |
| 4)நாய் தோல் | - | உச்சாடணம் |
| 5) கழுதை தோல் | - | பேதனம் |
| 6)7) பூனை,புலித் தோல் | - | ஆக்கிரசனம் |
| 8) கரடி தோல் | - | மாரணம். |

(ஆயுள் வேதச் சுருக்கம். அருணாசல முதலியார்)
பக்கம் 78: எண்வகை ஆய்வு. சிறுநீர்
1. இரத்தக்குறி : சீமை அத்திப்பழ நிறம் - இரத்தக்கொதிப்பு
2. பித்தக்குறி : கொடிமாதுளம் பழ வண்ணம் - அதிக பித்தம்
3. இரசக்குறி : குங்குமப்பூ - வெளிறிய சிவப்பு, அதிக இரசம்,
வெண் நிறம்.
4. வண்டல் குறி: கறுப்பு ஆகாய நிறம் - அதிகவண்டல். (வண்டல்
- சந்தன நிறம்)

நோய் இயல் (மேலது பக்கம் 115)
வாதசுரம் - மாமிசத்தைச்சாரும்.
பித்தசுரம் - தோலில் சாரும்
கபம் சுரம் - என்பில் சாரும்
(மேலது பக்கம் 129,130) தசநாடிகளிருக்குமிடம்:
1)புருவம், 2)தலையச்சி, 3)கழுத்து, 4)நெஞ்சு, 5)கை, 6)காலடி 7)முழங்கை, 8)கணுக்கால், 9)முழங்கால் 10)மணிக்கட்டு
குளியல் எண்ணெய்:
வாத உடல் உள்ளவர்கள் - பசுநெய், எள்எண்ணெய், ஆமணக்கு நெய்

பித்த உடல் உள்ளவர்கள் - விளக்கெண்ணெய், நெய், எள்ளெண்ணெய்

கப உடல் உள்ளவர்கள் - விளக்கெண்ணெய், நெய், எள்ளெண்ணெய்

(சினேந்திரமாலை, மூலமும், உரையும், சாமிநாத சுந்தர விலாச அச்சுக் கூடம், 1891 உபேந்திராச்சாரியார்)

பக்கம் சக : சூரியன் - மரங்கள்

சந்திரன் - கொடிகள்

செவ்வாய் - புன்செய்

புதன், சுக்கிரன் - நன்செய்

குரு - நாணல் உள்ளவை (கரும்பு)

சனி, பாம்பு - முள்செடிகள்

சிம்மம், தனுசு - மரங்கள்

ரிசபம், கடகம், துலாம் - நன்செய் பயிர்கள், கொடிகள்

மேசம், விருச்சிகம் - புன்செய்

மீனம் - நாணல் உள்ள கரும்பு போன்ற பயிர்கள்

மிதுனம், கன்னி - முள் இல்லாத செடிகள்

சூரியன் - மரங்கள்

புதன், சுக்கிரன், சந்திரன் - வாழைமரம்

சனி, பாம்பு - பனைமரம்

அகங்காரன் - செடிகள்

சூரியன் - பட்டை

சந்திரன் - கிழங்கு

அங்காரன் - பூ

புதன் - இலை

குரு - பழம்

சுக்கிரன் - காய்

சனி - வேர்

பாம்பு - கொடி

(சினேந்திரமாலை - உபேந்தராச்சாரியார் பக்கம் ரு)

சூரியன் - அவரை

சந்திரன் - வெள்ளை

அகங்காரன் - கடலை

புதன் - சிறு பயறு
குரு - துவரை
சுக்கிரன் - வெள்ளைத்துவரை
சனி - கறுப்பு எள்
பாம்பு - உளுந்து.

**கோள்கள், ஐம்பூதம்:**

(மேலது பக்கம் ருச

| | |
|---|---|
| குரு - நிலம் | சனி - ஓரறிவு |
| சுக்கிரன் - நீர் | புதன் - இரண்டு அறிவு |
| அங்காரகன் - தீ | அங்காரகன் - மூன்று அறிவு |
| புதன் - காற்று | சுக்கிரன் - நான்கு அறிவு |
| சனி - ஆகாயம் | குரு - ஐந்தறிவு |

சனி - மரம், கொடி, பயிர் - ஓரறிவு
புதன் - சங்கு, பலகறை,சிப்பி - இரண்டறிவு
அகங்காரன் - எறும்பு, பேன், முசுடு, சிதல் - மூன்றறிவு
சுக்கிரன் - வண்டு, தும்பி - நான்கறிவு
குரு - மக்கள், விலங்குகள், பறவைகள் - ஐந்தறிவு

**கோள்கள், உடல் உறுப்புகள்:**

(மேலது பக்கம் அசா)

| | |
|---|---|
| மேடம் - தலை | தனுசு - தொடை |
| இடபம் - முதுகு | மகரம் - முழங்கால் |
| மிதுனம் - தோள் | கும்பம் - கணைக்கால் |
| கடகம் - மார்பு | மீனம் - புறங்கால் |
| சிம்மம் - தனம் | அங்காரகன் - தலை |
| கன்னி - வயிறு | சுக்கிரன் - முகம் |
| துலாம் - கைகீழ் | புதன் - கழுத்து |
| விருச்சிகம் - முதுகு | சந்திரன் - மார்பு |
| (மேலது பக்கம் அஅ) | சூரியன் - வயிறு |
| | குரு - அரை |
| | சனி - தொடை |
| | பாம்பு - கால்கள் |

பிணிகள் - 2

1. வல் பிணி
2. சொற்பப் பிணி

சித்திரை - கழுத்து
சுவாதி - மார்பு
விசாகம் - தனம்
அனுசம் - வயிறு
கேட்டை - வலப்பக்கம்
மூலம் - இடப்பக்கம்
வெதுப்பு
பூராடம் - முதுகு
உத்திராடம் - இடுப்பு
திருவோணம் - குய்யம்
அவிட்டம் - குதம் (மலவாய்)
சதயம் - வலத்தொடை
பூரட்டாதி - இடத்தாடை
உத்திரட்டாதி - முழங்கால்
இரேவதி - கணைக்கால்
அசுவினி - புறங்கால்.

நோய்கள் பட்டியல்

1.அகங்காரன் - தலைநோய் -
2.சந்திரன் - மார்புநோய் சீதளம்
3.புதன் - கைகீழ்க்கழலை
4.சூரியன் - வயிற்று நோய்
5.சனி - வாதம், கால் முடம்.
6.பாம்பு - சோகை விசபீடை
7.சுக்கிரன் - கண்நோய்
8.குரு - மூலநோய்

**உணவு வகைகள்:**

மேடம், ரிசபம் - இலைக்கறி, பால், மோர்
மிதுனம், சிம்மம், தனுசு - மீன், புலால்
கடகம், விருச்சிகம், மகரம் - பழங்கள்
துலாம் - காய்கறிகள்
கன்னி, கும்பம் - காய்கறிகள் ஆகாது. பால், மோர், பழங்கள் உண்ணலாம்.

1.சூரியன் - கசப்பு, புளிப்புச் சுவை
2.புதன் - பழைய சோறு, புழுக்கிய சோறு
3.குரு - சுடுசோறு
4.பாம்பு - தீய்ந்து கருகிய சோறு
5.சனி - இலைக்கறி, எண்ணெய்

**கோள்கள், உணவு வகைகள்**

அங்காரகன் - புலால் உணவு
சந்திரன் - தயிர், சுக்கிரன் - பால், பாம்பு - நெய்
சூரியன், அங்காரகன் சேர்ந்திருக்க - ஊண் புலால் உணவு

சந்திரன், சுக்கிரன், பாம்பு சேர்ந்திருக்க -
சூரியனைப் பார்க்க - பால், தயிர், (நெய்) எண்ணெய் என்பன.
உதயத்தை நோக்கியது.
குருவாகில் - உளுந்து, இலைக்கறி, மீன், கறி, அவரை, துவரை,
காராமணி.
சந்திரன் - காய்கறி கிழங்கு, மீன், கறி
சுக்கிரன் - தேன், பால், புளிக் குழம்பு
சனி - பழம் சோறு.

## அகத்தியர் பற்றிய அறிஞர்களின் கருத்துகள்

நான்குக்கு மேற்பட்ட அகத்தியர்கள் கருநாடகம், தமிழகம், இந்தோனேசியா கம்போடியாவில் உள்ளனர். (அகத்தியர் - கே.என்.சிவராச பிள்ளை, தமிழ்த்துறை, சென்னை பல்கலைக்கழகம்)

**அகத்தியர் பலரே :**

ந.சி. கந்தையாபிள்ளை, மறைமலையடிகள் சோமசுந்தர பாரதியார், கா.நமச்சிவாயமுதலியார், ரா. இராகவய்யங்கார், பி.டி.சீனிவாசய்யங்கார், ஆ. சிவலிங்கனார்.

**அகத்தியர் வாழுமிடம் :**

காசி - வீரசோழியம் பாயிரம், பொதிகை - கம்ப இராமாயணம், வில்லிபாரதம், சிலம்பு மணிமேகலை, புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங்கலக் காரிகை, திருமந்திரம்.

**புராணங்கள் :**

காஞ்சி, தணிகை, கன்னியாகுமரி, விருத்தாசலம், திருத்துருத்தி.

**இலக்கண உரைகள் :**

இறையனார் அகப்பொருள் இளம்பூரணர், சேனா வரையர்,

நச்சினார்க்கினியர், பேராசிரியர் தெய்வச்சிலையார், யாப்பருங்கலம் விருத்தியுரை, மயிலை நாதர், சங்கரநவச்சிவாயர் - நன்னூல் உரை.

சிவஞான முனிவர் - தொல்காப்பிய சூத்திர விருத்தியுரை.

## இலக்கிய உரைகளில் அகத்தியர்

மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், சீவகசிந்தாமணி - நச்சினார்க்கினியர் உரை

சிலப்பதிகாரம் - அரும்பத உரையார் அடியார்க்கு நல்லார்.

## தமிழ் கற்பித்தது, சிவபெருமான்

திருவிளையாடல் புராணம் - பரஞ்சோதி முனிவர், பெரும்பற்றம்புலியூர் நம்பி.

காஞ்சி புராணம் - சிவஞான முனிவர், கம்பர், சேனாவரையர் உரை.

**முருகன் :** சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம்

**அவலோகிதர் :** வீரசோழியம்

**சித்தர்களின் நூல்களில் அகத்தியர் போகர் சனனசாகரம் நந்திகள் 7 பேர்**

புலத்தியர், அகத்தியர், காசிபர், மார்க்கண்டர், அட்டாங்கி, கௌதமன், கலைக்கோட்டு முனிவர் - (பாடல் 91) இவர்கள் கைலாச வர்க்கத்தார் ஆவர்.

**அகத்தியர், பூரண காவியம் 1000**

இரததினகிரி - நந்தி, குரு முனிவர் வாழுமிடம். இவர்கள் மூலவர்க்கம் (மேலது பாடல் 74, 75)

# அகத்தியரின் திருவுருவச்சிலை உள்ள திருமுறைத்திருத்தலங்கள்

1. திருப்பனங்காடு தாலபுரிசுரர் திருக்கோவில் சிற்பம்
2. திருமுல்லைவாசல் சென்னை

விக்கிரகம்

3. திருவேற்காடு வேதபுரிசுரர்கோவில் சென்னை

உற்சவர்,

விக்ரகம்

4. திருக்கூடலையாற்றூர் நர்த்தவல்லபேசுரர் கோவில் காவக்குடி

சிற்பம்

5. திருக்கோவிலூர் வீரட்டேசுரர் கோவில் சிற்பம்
6. திருக்கடவூர் வடகால் சிற்பம்
7. திருப்புன்கூர் சிவலோகநாதர்கோவில் சிலை
8. திருவேள்விகுடி கல்யாண சுந்தரேசர் சிலை
9. திருநரையூர் சௌந்திர சுவாமி கோவில் சிற்பம்
10. நல்லூர் பஞ்சவர்ணேசுரர் பஞ்சலோகம் உற்சவர் மூலவர் - சுதை
11. ஆடுதுறை ஆபத்சகாயேசுரர் கோவில மருத்துவ அகத்தியர் சிலை
12. கோனேரிராசபுரம் பூமிஈசுரர் கோவில் சிற்பம்
13. திருநனிப்பள்ளி நற்றுணையப்பர் கோவில் கற்சிலை
14. தலைச்சங்காடு சங்காரணயேசுரர்கோவில் அகத்தியர்

சன்னதி

15. திருப்புகலூர் அக்கினி புரிச்சுரர்கோவில் சிற்பம்
16. சீயாத்தமங்கை அயவந்தீசுரர் கோவில் சிற்பம்
17. ஆலங்குடி ஆபத்சகாயேசுரர் கோவில் சிற்பம் (இரும்பூளை)

18.அரித்துவாரமங்கலம் சாட்சி நாதர் கோவில் சிற்பம்
19.பூவனூர் புட்பவனநாதர் கோவில் சிற்பம்
20.இடும்பாவனம் சற்குருநாதா கோவில்சன்னதி, சிற்பம்.
21.அகத்தியன்பள்ளி வேதாரணியம் கோவில் சிலை
22.திருக்குற்றாலம் குற்றாலநாதர் கோவில் சிலை

(திருத்தலங்கள் வரலாறு - உ.வே.சா. நூலகம், சென்னை. 2000)

## கருவறையில் அகத்தியர்

"மூல இலிங்கம், பிரம்மபுரிச்சுரர் ஆவர், கர்ப்ப கிரகத்தில் அகத்தியர், கங்காவிசர்சனர் சிலைகள் உள்ளன".

"திருவேற்காடு வேதபுரிசுரர் திருக்கோவில் கருவறையில் அகத்தியர் சிலை உள்ளது".

"சீர்காழி தோணியப்பர் ஆலயத்தில் கருவறையில் அகத்தியர் உள்ளார்".

"நாகை நீலாயதாட்சி கோவில் கருவறையில் அகத்தியர் ஏழு முனிவர்களுடன் இருத்தல்".

"தேவர் மலைக்குடவரைக் கோவில் கருவறையில் வலம்புறம் அகத்தியர், இடப்புறம் புலத்தியர் உள்ளனர்".

"மேலக்கடம்பூர் அமிர்தகடோசுரர் கோவில் கி.பி. 1070 இல் குலோத்துங்கன்-I காலத்தது கருவறை தேவ கோட்டத்தில் அகத்தியர், பதஞ்சலி சிலைகள் உள்ளன".

"திருவனந்தபுரம் - சமாதிச் சேத்திரம் - மூலவர் திருவடி அருகில் அகத்தியரின் சமாதி உள்ளது".

## திருக்கோவில்களில் அகத்தியர்

"கீவளூர், திருவாரூர் மாவட்டம், அட்சய லிங்க சாமி கோவிலில் உள்ள நடராசரின் நடனசபையில், அகத்தியர், பிரும்மா, திருமால் இலட்சுமி, சரசுவதி ஆகியோருடன் உள்ளார் நடராசர் செப்புத்திருமேனியாக உள்ளார்".

## அகத்தியர் உலோபா முத்திரையுடன் உள்ள திருக்கோவில்கள்

திருச்சி - திருவானைக்காவல - சம்புகேசுரம்

திருவெண்காடு - சுவேதாரணியம்

சிதம்பரம் - அகத்தியர் கோவில்

புத்தூர் - அகத்தீசுரசாமி கோவில்

காஞ்சி - கைலாச நாதர் கோவில்

## அகத்தியருக்குத் திருமணக்காட்சி தந்த இடங்கள்

1) நல்லூர்
2) திருமணஞ்சேரி
3) திருவீழிமிழலை
4) உருத்திரகங்கை
5) அம்பல்
6) திருமறைக்காடு
7) இடும்பாவனம்
8) பாபனாசம் (நெல்லைமாவட்டம்)

(திருத்தலங்கள் வரலாறு - உவேசா நூலகம், 2000)

## திருக்கோவில்களில்-அகத்தியர்

| ஊர் | திருக்கோவில் |
|---|---|
| 1. சுவாமி மலை | சுவாமிநாதச்சாமி - சன்னதி |
| 2. விராலிமலை | சன்னதி |
| 3. திருப்போரூர் | சன்னதி |
| 4. திருநாகேச்சுரம் | நாகநாதர்கோவில் - சிற்பம் |
| 221. | ஆணி விழ | 157 |
| 222. | முலை புண்ணுக்கு | 157 |
| 223. | முலை சுரக்க | 157 |
| 224. | முலை பருக்க | 158 |
| 225. | களிம்பு | 159 |
| 226. | மருந்து | 159 |
| 227. | தண்டு பிளவை தீர | 163 |
| 228. | உவனியம் | 163 |
| 229. | எண்ணெய் | 164 |
| 230. | மருந்து | 166 |
| 231. | புகை | 168,169 |
| 232. | மருந்து | 169,170 |

| வ.எண் | மருந்துகளின் பெயர்கள் | பக்க எண் |
|---|---|---|
| 233. | எண்ணெய் | 174 |
| 234. | நெய் | 176 |
| 235. | பூச்சு | 175,183 |
| 236. | விடுதல் | 180 |
| 237. | மருந்து | 180,181 |
| 238. | எண்ணெய் | 185,186 |
| 239. | குளிகை | 202 |
| 240. | பற்பம் | 202 |
| 241. | மை | 213 |
| 242. | பித்துக்குச்சூரணம் | 213 |
| 243. | செந்தூரம் | 214 |
| 244. | மருந்து | 217 |
| 245. | கோடாரிக் குளிகை | 220 |
| 246. | கிராணி கபாடக் குளிகை | 237 |
| 247. | கிராணிக் குளிகை | 238 |

# அகத்தியர் ஆயுர்வேதசாத்திரம்

## சுரகேசரி உண்டை

மஞ்சள் நாவிவெங்காரம்
மதிக்கும் கந்தகம் வாய்விளங்கம்
வஞ்சமில்லாத் திரிகடுகு
வகையோ ஒன்றுக்கு இரண்டாம்
நஞ்சு போக்கி நேர்வாளை
நல்ல பரும்பும் ஒன்றேக்கால்
அஞ்சகசக்கு வேப்பிலையும்
அன்பாய் இருபதுடன் கூட்டே.

ஆகநாள்ப்த்தொன்பது கால்
ஆவிநீர் விட்டிருதாள்
வேகமான கொடுவேலி
வேரில் கசாயத்தில் இரண்டொருநாள்
பாகு சேர நாளேழ் அரைத்து
பருத்திவிதையின் அளவுண்டை
சோகமில்லா சுரகேசரியை
சுரத்துக்கிஞ்சிச் சாற்றிலிடே.

---

49 1/4 என்பது சரியல்ல. 41 1/4 என்பது 49 1/4 எனத் தவறாகக் காட்டப்பட்டுள்ளது.

**உரை:** சுரகேசரியின் செய்முறை.

மஞ்சள், நாபி வெங்காரம், கந்தகம், வாய் விளங்கம், திரிகடுகு - ஆக 8, வகைக்கு 2 1/2 (20) வீதம் எடுக்கவும்.

9. நேர்வாளப் பருப்பு - 1 1/4

10. வேப்பிலை - 20 ஆக 41 1/4

இவைகளை வெந்நீரில் இருநாளும் கொடுவேலி வேர்க் கசாயத்தில் இரண்டொரு நாளும் வைக்கவும். பின் கற்க திரவியத்தை, 7 நாள் கல்வத்தில் அரைக்கவும். பருத்தி விதையளவுக்கு உருண்டை செய்யவும். சுரநோய்க்கு இஞ்சிச் சாற்றில் தரவும்.

### * சர்வ சுரக் கேசரி உண்டை (உருண்டை)

துத்தம் துருசு அரிதாரம் மனோசிலை
இரசம் சரி கூட்டிப் பொடி செய்துச்
சட்டியிலிட்டுச் சாறெடைச் சாறுவிட்டு
வெங்கலக்கிண்ணி கொண்டு மூடி
சீலைமண்செய்து நிறைய மணல்
சொரிந்து அடுப்பேற்றி
ஒருசாமம் சிறுக எரியிட்டாற்றி

எடுத்துத்தக்காளி சாற்றிலும், மணித்தக்காளிச் சாற்றிலும், அரைத்து சிறு பயறளவுக்கு உண்டை செய்து நான்கு நாட்கள், சீரகம் கூடன், கற்பூரம், கத்தூரி சேர்த்துத் தர மாறல் சுரம் நீங்கும். அனைத்து வகை சுரங்களுக்கும் தேனில் தரவும்.

### சுராங்குசம் - குளிகை

இரதமுடன் கந்தகம் நாயுருவியும் ஓரளவாம்
இதனைளவு ஊமத்தைவிதை இயல்பாய்க் கூட்டி

* பாடல் முழுவதுமில்லை

விரதமுடன் கரிப்பான் ஊமத்திலையின் சாறு
விட்டிரண்டு நாளரைத்து குன்றியளவு உருட்டிச்
சாதம் இஞ்சிச் சாறுவிட்டும் விட்டு விடாமலும் காயச்
சுரம்போத்தவர் இனித்தாய் நாலுநாள் மாறில்
தவிரும் புரையறவே, இம்மருந்துண்பது மூன்றே
மூன்றேநாளாம் புளியும் உப்பும் நீக்கு
சுராங்கிச குளிகை தனக்கு.

**உரை:** இரசம், கந்தகம், நாபி – சம அளவு

ஊமத்தை – 3 இன் அளவு.

இவைகளைக் கையான், ஊமத்தை சாற்றால் இரண்டு நாள் அரைக்கவும். குன்றிமணி அளவு மாத்திரையாக உருட்டவும். இஞ்சிச் சாற்றில்தர, நான்குநாள் மாறல் சுரம் நீங்கும். 3 நாட்கள் புளி, உப்பு நீக்கவும். இது சுராங்கிசக் குளிகையாகும்.

## ★ சுராங்குசம்

நாவிசூதம் கந்தகம் ஒவ்வொன்றும் மிளகு
நான்கி தனைமேவு
நிம்பழச் சாற்றிலொரு
நாளரைத்து மிளகளவாய்
காவி விழயாய் திரட்டி நிழல்கண்ணே
உலர்த்திக் கொடுத்தக்கால்
தாவு சுரங்கள் அனைத்தும் போம்
சாற்றுநாமம் சுராங்குசமே.

நாபி, இரசம், கந்தகம் – சம அளவு வகைக்கு

மிளகு – 4 பங்கு. எலுமிச்சம் பழச்சாறு ஒரு நாள்விட்டரைக்கவும். மிளகாளவு மாத்திரையாக உருட்டவும். நிழலில் உலர்த்தித் தரவும். எல்லா சுரங்களும் நீங்கும். இம்மாத்திரையின் பெயர் சுராங்குசம் என்பதாகும்.

---

★ இப்பாடல் நன்கமையவில்லை.

## மிருத்துவாதிக் குளிகை

துத்தமரை, நாபியரை சீரகமும் அரையாம்
துலங்குகின்ற துருசொன்று கந்தகமும் ஒன்று
வைத்து அரிதாரம் ஒன்றுப் பாகலிலைச் சாற்றில்
விரைவாக அரைத்துண்டைப் பயறளவு செய்தே
ஒத்த அனுபானம் அதில் உரைத்துக் கொள்ளி
உடலிலுள்ள சுரவகைகளவை, ஒருங்கத்தீரு
அத்தா சொன்ன மிருத்திராதி ஈதென்றே நாளும்
அறிந்தோர்க்குச் சொன்னபடி, அடைவாகச் செய்யே.

**உரை:** துத்தம், நாபி, சீரகம் - 1/2 பங்கு
துருசு, கந்தகம், அரிதாரம் - 1 பங்கு.

பாகலிலைச் சாற்றில் அரைக்கவும். பயறளவு உருண்டை பிடித்து, தக்கபடி அனுபானத்தில் இழைத்துத் தரவும். சுரங்கள் யாவும் தீரும். மிருத்திராதிக் குளிகை என்று, எல்லோருக்கும் கூறினேன். சிறப்பாகச் செய்யவும்.

## சர்வ சுரக் குளிகை

இரதமுடன் நேர்வாளம் வெங்காரம் கழஞ்சாய்
இத்தை, நிலத்துத்தியின் வேர் எட்டொன்றாய் காய்ச்சும்
விரைகமமும் கசாயத்தால் விருதுபட வரைத்தோர்
மிளகளவாய் குளிகைசெய்து நிழலுலர்த்திப்பின்
உரைசெய்புளி விதையளவு வெல்லத்தில் பொதித்தாங்கு
குளிகை இருசாம முற்றிச் சுரம் தீரும்
பரிவுடைய பத்தியம்கொள் பொரியரிசிக்கஞ்சி
பண்புடைய சர்வ சுரக்குளிகை இவைதான்.

---

*அடை - சொல்லைச் சிறப்பிக்கும் சொல், மிருத் - காலன்.*

உரை: இரசம், நேர் வாளம், வெங்காரம், 1 கழஞ்சு அளவு : இத்தி, நிலத்துத்திவேர் - 8 பங்கு. 1 பங்காகும்வரை காய்ச்சிய கியாழம் கொண்டு அரைக்கவும். மிளகளவு மாத்திரை செய்து, நிழலில் உலர்த்தவும். புளியங் கொட்டையளவு வெல்லத்தில், மூடி உண்ணவும். இரு சாமத்தில் சுரம் தீரும். பத்தியம் : பொரியரசிக் கஞ்சியுணவு. இக்குளிகையின் பெயர், சர்வ சுரக்குளிகையாகும்.

## சர்வ குலாந்தகன் குளிகை

இலவங்கம் சாதிக்காய் பச்சைக் கற்பூரம்
இரதமுடன் கந்தகமும் ஒருநிறையாய்ப் பொடித்து
குலவியதோர் நேர்வாளம் இருகழஞ்சுக் கூட்டி
குமரிச் சாற்றால் அரைத்துக் குளிகை உளுந்தளவாய்
நிலவியதோர் நிழலில் உலர்த்திச் சரீரவகையறிந்து
நிச்சயமாய் அனுபானச் சர்க்கரையில் இட்டார்
சலமுடைய சுரமெட்டு முக்கடிகை தனில்ஓர்
சர்வ குலாந்தகன் இதற்குப் பத்தியமு மிலையே.

உரை: இலவங்கம், சாதிக்காய், பச்சைக்கற்பூரம், இரசம், கந்தகம் - வகைக்கு 1 கழஞ்சு, நேர்வாளம் - 2 கழஞ்சு கற்றாழைச் சாற்றில் அரைக்கவும். உளுந்தளவுக்கு மாத்திரையாக உருட்டவும். நிழலில் உலர்த்தவும். உடல் வன்மைக்கத் தக்க, சர்க்கரையில் உண்ணத் தரவும். கபகுற்றத்தால் உண்டான எட்டுவகை சுரத்திற்கு திரிகடுகுப் பொடியில் சர்வ குலாந்தக மாத்திரையைத் தரவும். இதற்கு பத்தியம் இல்லை.

## அர்த்தநாரிச்சுரன்

சாதி லிங்கம், கௌரி, அப்பிரகம் தாரம்
தாமிரம் வேலி சூதம் வச்சகாவி
கோதில் நேர்வாளமும் அதுமெழுகினோடு
குலப்பிணர்டை பழம் துருசு துத்தம் தானும்

நீதியாய் ஓரொன்று சமன்நிறுத்துப் பின்னர்
நிகமு பன்றிப்பித்து மீன்பித்தும் கூட்டி
தீதகலும் கொடுவேலி வெந்நீரும்
திகழும் கை குமட்டிச் சாறதும் கூட்டே.

கூட்டிடு கார்த்திகைக் கிழங்கின் கசாயத்தோடு
குலவியதன், நேர்வாளக் கசாயம் தானும்
நாட்டு, பித்து முதலாய நேர்வாளம் ஈறாய்
நன்மருந்தோர் ஒன்றினொடு நாளரைத்து பின்னர்
வாள் தடங்கண்ணாய் கடுகளவு உண்டை வகுத்தே
வன்மை பெறநிழல் உலர்த்தாய் வைத்தெடுத்த பின்னர்
ஆட்டுப்பால் தன்னில் ஒரு குளிகை உள்ளே கொடுத்தால்
அகன்று புறஞ்சுரம் போகும் அத்தநீசுரனே.*

**உரை:** சாதிலிங்கம், கௌரி, அப்பிரகம், தாளகம், செம்பு, இருவேலி, இரசம் – 4 பங்கு. காவி, நேர்வாளம், தேன்மெழுகு, பிரண்டை, துத்தம், பழய துருசு – 1 பங்கு. பன்றிப்பித்து, மீன்பித்து – சேர்க்கவும். கொடிவேலி, வெந்நீர் கொமட்டி மாதுளைச் சாறு சேர்த்து, கார்த்திகைக் கிழங்குச்சாறு, நேர்வாளக் கியாழம், இவற்றால் ஒருநாள் அரைத்து, கடுகளவு உண்டை செய்யவும். ஆட்டுப் பாலில் ஒரு குளிகையை இட்டு அருந்தவும். புறவழிச் சுரம் யாவும் நீங்கும். பாலை நிலச் சூரியன் போன்ற சுர நோய்கள் நீங்கும்.

## பின்னை என்பார் மன்னன் குளிகை

| | | |
|---|---|---|
| இரசம் | – | 1 பலம் |
| இலிங்கம் | – | ,, |
| கவுரி | – | ,, |
| தொட்டி பாசாணம் – | ,, | |

---

* அத்த +நீ அத்த – அர்த்த + நீ + ஈசுரனே அத்த + நீ + சுரனே. ஏ–ஏகாரம். அத்தம் – பாதி, பாலை நிலம், நீசு – நீங்குதல், சுரன் – அறிஞன், சூரியன்.

| | | |
|---|---|---|
| துருசு | - | 3 பலம் |
| துத்தம் | - | 2 பலம் |
| கந்தகம் | - | 3 பலம் |

இவைகளைச் சுத்திசெய்யவும். கரிசாலை சாற்றில் அரைத்து, சிறு பயறளவு குளிகையாக்கவும். முலைப்பால், இஞ்சிச் சாறு, சுக்கு கசாயம் ஆகியவற்றில் ஒரு குளிகையைத் தரவும். மதியத்தில் சுரம் நிற்கும்.

பத்தியம் : பொரி முறித்தக் கஞ்சியைக் குடிக்கவும்.

கந்தகம் நேர்வாளமிவை தனக்கோர் கழஞ்சு
கிளர் சாதிலிங்கம் அரைகால் கழஞ்சு இரசம்கால்
முந்தியதோர் திப்பிலி பன்னிரு கழஞ்சு சுக்கு
முதிராமல் நாற்கழஞ்சு, கடுக்காய் எண்கழஞ்சா
இந்தவகை மருந்தெல்லாம் அளவாகக் கூட்டி
இயல்பான நீர்வார்த்து, கல்லூர அரைத்துச்
சிந்து கடுகில், சீரிய குளிகை தனைச் செய்தே
சீராக நிழலுலர்த்திச் செப்பில் வைத்துக்கொள்ளே.

உரை:

| | |
|---|---|
| கந்தகம், நேர்வாளம் | - ஒரு கழஞ்சு |
| சாதிலிங்கம் | - 1/8 கழஞ்சு |
| இரசம் | - 1/4 கழஞ்சு |
| திப்பிலி | - 12 கழஞ்சு |
| சுக்கு | - 4 கழஞ்சு |
| கடுக்காய் | - 8 கழஞ்சு |

நீர்விட்டரைத்துக் கொள்ளவும். சிவப்பு நிற குளிகையை விரைவாகச் செய்து கொள்ளவும். பின் நிழலில் உலர்த்தி, செப்புக் குடுவையில் வைக்கவும்.

*அர்த்தநாரிசனுக்குக் கற்பூராதி என்றும் பெயர். இதற்கு மாத்திரையானச் சரக் குளிகை என்றும் பெயர்.*

"கொண்டதொரு குளிகைப் பச்சைப்பால்

கொடுக்கக் கூரியவன், மாறல்விடா குளிர்வெதுப்பு புத்தி இருமல்

மண்டியதோர் கோசலத்தில் வெதுப்புடன் வீக்கம்போம்

வீறான தயிர்படிந்தநீர் வாதந்துரப்பு

தண்டலிவரத்தலை நோவு போக்குவிக்கும்

இளநீர்தான் வெந்த நீர்தாபசுரம் பரப்புத்தீரும்

பண்டை இஞ்சிச் சாற்றில் இருமல் காமாலை இளைப்பு

பறந்தேகும் பரஞ் சருவசங்காரனுக்கே."

உரை: இக்குளிகையைக் காய்ச்சாத பசும் பாலில் குடிக்க, மாறல் சுரம், வெப்பம், என்பனவும் பசுவின் நீரில் தர, வீக்கமும், தயிரின் தெளிவில் அருந்த, வாதநோய், தலைநோயும், இளநீரிலும் வெந்நீரிலும் தாபசுரமும், இஞ்சிச் சாற்றில் பருக இருமல், இளைப்பும் விலகும்.

## மதனாங்குசம்

நாவிக் கந்தகம் சூதம் வகைக்கொவ்வென்று

மரிசிநான்கு சுக்கு நான்(மண்) நிறை ஊமத்தை

விதை மூன்று எலுமிச்சம்பழச் சாறு அழிஞ்சிச்சாறு

இருநாள் கைவிடாத அரைத்துருட்டிக் குன்றி அளவு

உலர்த்தி

மேவு சன்னிவாத சுரமென்ன நொச்சியிலைச் சாற்றில்

தரவு பித்த சுரத்துக்கு இஞ்சிச் சாற்றிலிட மற்றும் சர்வ

சுரமும் தீருமே மதனாங்குசமே.

உரை: நாபி, கந்தகம், இரசம் - 1 பங்கு

சுக்கு, மிளகு - 4 பங்கு

ஊமத்தம் விதை - 3 எண் இவைகளை எலுமிச்சம் சாறு, அழிஞ்சில் சாறு ஆகியவற்றில் விடாமல் தொடர்ந்து இருநாள் அரைக்கவும். குன்றி யளவு மாத்திரையாக உருட்டவும். நிழலில் உலர்த்தவும். சன்னிவாத சுரம், தீரத்தரவும். இஞ்சிச் சாற்றில் பித்த சுரம் எல்லாம் தீரத் தரவும். இது மதனாங்குச மாகும்.

## புரந்தராதி மாத்திரை

எட்டிவிதை மூன்றுவெள்ளைப் பாசாணம் நாபி
இரண்டுவகைக் கிரண்டு துத்தமிரதம் வகைக்கொன்று
சட்டமுறரோகிணியு மொன்றனைத்த மத்தம்தழைச்
சாற்றினரைத்தொரு நான்மிளகளவு திரட்டி
இட்டுநிழல் வைத்துலர்த்தி வாதபித்தசேத்தும
இவைகளால் வருசுரங்கள் ஓடுங்கள் இதற்கு
வட்டமுலையாய் அனுபானங்கள் அறிந்திடுக
வகத்தநாமம் புரந்தாதி மாத்திரையே.

| | | |
|---|---|---|
| **உரை:** | எட்டி வித்து | – 3 பங்கு |
| | வெள்ளைப் பாசாணம், நாபி | – 2 பங்கு |
| | துத்தம், இரசம் | – 2 பங்கு |
| | கடுகு ரோகிணி | – 1 பங்கு |

**செய்முறை:** ஊமத்தம் சாற்றில் ஒருநாள் அரைக்கவும். 4 மிளகளவு மாத்திரையாக உருட்டவும். நிழலில் உலர்த்தவும். வாதம், பித்தம், கபத்தால் உண்டான சுரங்கள் நீங்கும். இதற்கான அனுபானம் அறிந்து, அளிக்கவும்.

**இலக்கியநயம்:** திரிபுரம்–வாதபித்த கப குற்றங்களால் வரும் நோய்கள்.சிவன்–அழிப்பவன். சட்டம்– திருத்தம், முழுமை. திரிபுரந்தரன் – சிவபெருமான். ஆதி – முதன்மையான.

## உதயமார்த்தாண்டன் மாத்திரை

சூதன் கழஞ்சு இருகழஞ்சு இவை
நெல்லிக்காய் கந்தகமும்
சாதிலிங்கம் நாற்கழஞ்சு சுக்குக்
கசாயம் தனிலரைத்துக்
கோதில் சிறிய பயிற்றறா வின்உருட்டி
உலர்த்திக் கொண்டக்கால்
வாத சுரமே முதலான சுரத்துக்கு
உதய மாத்தாண்டன்.

உரை: இரசம் - 1 கழஞ்சு
கந்தகம் - 2 கழஞ்சு
இலிங்கம் - 4 கழஞ்சு

செய்முறை : சுக்குக் கசாயத்தால் அரைக்கவும். பயறளவு மாத்திரையாக உருட்டவும். வாத சுரம் போன்றவைகளுக்கு இது மருந்தாகும்.

## நாளை என்பார் நாயகன்

வெங்காரம் சீனாக்காரம் வெள்ளைப் பாசாணம்
விதமுடைய இம்மூன்றும் சமனாகக் கூட்டி
பண்பாக மத்துங்காய் விதைபோக்கி உள்ளே
பரிவுடன் வைத்து நன்றாய் கயிறு கொடுகட்டி
எண்பாரு மூன்றுதரம் நெல்லினில் வைத்தவித்தே
எடுத்து நொச்சியிலைச் சாறு வார்த்தரைத்துப் பயறாய்
கண்பாக நிழலுலரத்திப் பாகலிலைச் சாற்றில் நாளை
என்பார் நாயகனிடைச் சுரம்போம், கண்டதுவே.

உரை: வெங்காரம், சீனாக்காரம், வெள்ளைப் பாசாணம் - வகைக்கு சமஅளவு. ஊமத்தைக் காயில் வைத்து, விதைகளை நீக்கிக் கட்டவும். நெல்புடத்தில் 3 தடவை வைத்து, எடுக்கவும். நொச்சி இலைச் சாற்றில் அரைக்கவும். பின் பயறளவுக்கு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தவும். மருத்துவர்களால் கைவிடப்பட்ட, இடைச் சுரத்திற்கு, தரவும். இது கைகண்ட தாகும்.

### வேறு

ஏரண்டவிதைப் பருப்பும், மடல் துத்தத்துடனே
இரசம் பவளம் கால் மனோசிலை ஒருகழஞ்சு
நேர்வாளம் இருகழஞ்ச கடுகுரோகணியும்
நிறுத்து நாற்கழஞ்சு நிம்பப்பழச் சாற்றலரைத்தே

---

இதே பெயரில் வல்லாதி 600 இல் பாடல் உள்ளது. பக்.115 CCRAS சென்னையில் வெளியிடப்பட்டது.
நாயன் - நாயகன் - தலைவன், அரசன்.

ஓரளவாய் சிறு பயறினளவு உருட்டி நிழல்
உலர்த்திவைத்து அனுபானங்கள் அறிந்துதர
வாரணியும் தனத்தாளேகொடும் சுரங்கள் னைத்தும்
மாற்றமிது நாளை என்பார் நாயகன் மாத்திரையே.

**உரை :** ஆமணக்கு விதை, மடல் துத்தம், இரசம் பவளம் - 1/4 கழஞ்சு ; மனோசிலை – கழஞ்சு, நேர்வாளம் – 2 கழஞ்சு, கடுகுரோகணி – 4 கழஞ்சு. எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து பயறளவுக்கு மாத்திரையாக்கவும். நிழலில் உலர்த்தி தக்க அனுபானத்தில் தரவும். கொடிய எல்லாச் சுரங்கள் விலகும்.

வேறு

தாராக் குழல்மடவாய், சாத்திர பேதியுடன்
தோராத பாசாணம் துத்தம் துருசுடனே
ஏராரும் செம்பையிலைச் சாற்றரைத்த உண்டை
....................
நாராணனனுரைத்தார் நாளை என்பார் நாயகன் என்றே.

**உரை:** சாத்திரபேதி, துத்தம், துருசு – சமபங்கு செம்பையிலைச் சாற்றில் அரைத்து உருண்டை செய்யவும். இதை நாராயணன் நாளை என்பார் நாயகன் குளிகை என்று சொன்னார்.

## இராமபாணக் குளிகை

கந்தகம், நாபி, கௌரி, வெள்ளைப் பாசாணம், வெங்காரம் – 3 பலம். வாளப்பருப்பு – 15 எண் கொம்புப் பாகல் சாறு வார்த்தரைத்துப் பின் புரசம் வித்து 3 பலம் விட்டரைக்கவும். கடுகளவு குளிகை செய்யவும். வாத சுரத்துக்குக் கொடுவேலி கசாயத்தில் கொடுக்கவும். சன்னி சுரத்துக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். வாயு சுரத்துக்கு சுக்கு கசாயத்திலிடவும்.

**பத்தியம் :** பருப்புக் கஞ்சி. இது கை கண்டது.

---

*தாரா – விண்மீன். தாரா குழல் மடவாய் – மகடூஉ முன்னிலை.*

### வேறு

இரசம், கந்தகம், துத்தம், துருசு, கோட்டம், மூன்றுவகை பற்பம், அரிதாரம், இலிங்கம், நாபி தாமிரபற்பம் அனைத்தும் சமனாய் ஊமத்தம் சாறுவிட்டரைத்துப் போதுமெனில் சிறுபயறளவுக்கு உருட்டவும். நிழலில் உலர்த்திடில், இராமபாணக் குளிகை. இதனைத்தர வாத சுர முதலான சுரங்கள், பல தோசம் மாறிடும். அனுபான வகையிலுரைத்திடுமே.

### வேறு

சாதி இலிங்கம் இரு கழஞ்சு வெள்ளைப் பாசாணம்தான்
ஒரு முக்கழஞ்சு தனி சுத்தி செய்தே
ஏதுமல்லா கருவூமத்திலைச்சாறு விட்டே இருநாழி
அரைத்துப் பயறளவாயுருட்டி
நீதமுடன் நிழலுலர்த்தி யொருமாதம் சென்றால்
நிச்சயம் சர்க்கரையாதல் நெற்பொறியாதல்
கோதில் இராமன் பாண மூன்றுநாள் கொடுக்கக்
குளிர்சுரம்போம், பால்கஞ்சி பத்தியமாய் கொள்ளே.

**உரை:** சாதி இலிங்கம் - 2 கழஞ்சு

வெள்ளைப் பாசாணம் - 3 கழஞ்சு

இவைகளை சுத்தி செய்து, கரு ஊமத்தையிலையின் சாற்றில் 2 நாழிகை அரைக்கவும். பின் நிழலில் உலர்த்தவும். பயரளவு மாத்திரையாக உருட்டவும். இதைச் சர்க்கரை, நெல் பொறியில் 3 நாள் உண்ண, குளிர் சுரம் தீரும். பால் கஞ்சியை உணவாகக் கொள்ளவும்.

### சுரகோளரி

| | |
|---|---|
| சுத்தி செய்த அரிதாரம் | - வகைக்குச் சமப்பங்கு |
| ,, நாபி | - சமப்பங்கு |

பிரண்டைச் சாறுவிட்டரைத்துக் குகை செய்யவும். இதை உலையிலிட்டு ஊதவும். குகையில்படி, அக்கினிப் பின் ஆற்றி எடுக்கவும். சம அளவு திப்பிலியை மை போலரைக்கவும். மத்தித்து வைத்துக் கொண்டு சுரம் வந்த நேரம் கால் பணவெடை வெற்றிலையில் வைத்துத் தரவும்.

---

*கோளரி – சிங்கம்.*

அந்நேரமே விடாதிருந்தால் 1/2 பணவெடை கொடுக்கவும். சுரம், உடனே நிற்கும்.

குறிப்பு : அரிதாரத்தை பூக்காய்த் தண்ணிரில் இருநாழி தோலாயந்திரமாகக் கட்டி வேகவைத்த பின்பு, சுண்ணாம்பு நீரிலும் அப்படி வேகவைக்கச் சுத்தி.

## அர்த்தநாரிசுர ரகசியம் (நசியம்)

இரசம், கந்தகம், நாபி, வெங்காரம் - வகைக்குச் சமஅளவு. நொச்சி இலைச்சாற்றில் 1 சாமம் அரைக்கவும். மண் குகை செய்து, மூடவும். ஒரு சட்டியில் உப்பிடவும். குகையை வைத்து, குகை மேல் உப்பிடவும். ஒரு மூடி கொண்டு மேற்புறத்தை மூடவும். தீயிலிட்டு 3 சாமம் எரிக்கவும். ஆறிய பின் எடுத்து செங்கழுநீர்ச் சாறு, ஊமத்தை இலைச்சாறு விட்டரைக்கவும். அடுத்த நாள் நொச்சி இலைச் சாற்றில் அரைக்கவும். உலர்த்திக் கொள்ளவும். பொடியை 1 பணவெடை, ஒரு நாசியில் நசியம் பண்ண, ஒருபுறம் ஊதசுரம் விடும். மறு நாசியில்விட, மறுபுற சுரமும் விடும். இதை விருது சொல்லி நிறுத்தலாம்.

## இரணாங்கவைரவன்

கரியமிளகு நேர்வாளம்
கடுக்காய் சுக்குவெங்காரம்
உரியநாபி அரிதாரம்
ஒளிரும் வெண்பாசாணம்
அரிய நொச்சிச் சாற்றதனால்
அரைத்தோருண்டை மிளகளவாய்
இரவும் பகலும் நிழலுலர்த்த
விரண ரணாங்க வயிரவனே.

தக்கக் (சாறுதன்றித்) காரதன் திருவருளை
நன்றாய் மனதில், உட்கொண்டு

---

அர்த்தநாரி – உமைபொருபாகன், பாதியுடன்பெண்ணாக உள்ள சிவபெருமான். இரகசியம் – மறைபொருள்

சுக்கு நீரிலொருக் குளிகை கொண்டால்
குணாங்கள் சொல்லக்கேள்
குக்கிக்கடுக்கும் குளிர் வெதுப்பு
குன்மவாயு விட்டோடும்
புக்கக் குளிகை மூன்றேநாள்
புளியும் உப்பு தவிர்த்திடுமே.

உரை: கறுப்பு மிளகு, கடுக்காய், சுக்கு, வெங்காரம், நாபி, அரிதாரம், வெள்ளைப் பாசாணம், சமஅளவு எடுத்து, நொச்சிச் சாற்றிலரைக்கவும். ஒருநாள் நிழலில் உலர்த்தவும். மிளகளவு உருண்டை செய்யவும். இது விரண இரணாங்க வைரவன் ஆகும். தக்க சாற்றிலும், திருவருளை எண்ணிக் குடிக்கவும். சுக்கு நீரில் 1 குளிகையை உட்கொள்ளவும். குடல் கடுத்துவரும் சுரம், வெப்பு சுரம், குன்மம், வாயு என்பன 3 நாள் உட்கொள்ளத் தீரும். புளி உப்பில்லா உணவு.

## நீலகண்டக் குளிகை

துத்தம்நாலு வெண்பாசணம் மூன்றுடன்
சொல்லும் வாளம் இரண்டொக்கக் கூட்டி
மெத்த மெய்த்த சாத்திரபேதியும் என்றதாய் விரவி
மோரில் அரைத்துப் பயறுபோல் திறத்தில் மோரில் கொடுத்திட
ஏதிடும், குளிரான சுரமெல்லாம் நித்தன் அருளாலே
வேதிடும் விளங்கிய நீலகண்டன் எனும் சொல் குளிகையே.

| | | |
|---|---|---|
| உரை: | துத்தம் | – 4 பங்கு |
| | வெள்ளைப் பாசாணம் | – 3 பங்கு |
| | வாளம் | – 2 பங்கு |
| | சாத்திரபேதி | – 1 பங்கு |

மோரில் அரைத்துப் பயறளவு உருண்டவும். இதை மோரில் தர, குளிர் சுரம் தீரும். இதன் பெயர் நீலகண்டனாகும். நீலவண்ணத்தில் சுரம் போக்கும் கவசம் போன்ற குளிகை. காரணப்பெயர்.

---

*நீலகண்டன் –– சிவன், துத்தம், நீலவண்ணமானது. கண்டம்–கவசம்*

## குளிர் சுரக்குளிகை

சந்தனத்தை அறுத்தபொடி ஒரு மூன்றுகழஞ்சு
தனிவெள்ளை இரு கழஞ்சு கூட்டி
விந்தை பெறு முலைப்பால் வார்த்தரைத்து மிளகளவாய்
மிகாக் குளிகையொன்றும், முருங்கையிலை அரிசி
வெந்தகஞ்சி பத்தியம்கொள் அற்றை இராத்திரிக்கு
விரைகமழும் பசுவின் பால் வார்த்த அசனம் விரும்பே.

**உரை:** சந்தனப்பொடி - 3 கழஞ்சு
வெள்ளைப் பாசாணம் - 2 கழஞ்சு

தாய்ப்பாலில் அரைக்கவும். பின் மிளகளவு மாத்திரையாக உருட்டவும். பசு வெண்ணெய் வெந்நீரில் குடிக்கவும். உணவு சிறு பயறு, முருங்கை, அரிசி, வெந்த கஞ்சி என்பன. இரவு மணமூட்டிய, பசும்பால் விட்ட உணவு சாப்பிடவும்.

## பிரதாப இலங்கேசுரம்

தாரமுடன் கவுரி வெள்ளை வகை தனக்கோர் கழஞ்சு
தனின் இரதம்[1] அரைத்தது கால் துரிசோ அரைக்கால் வீ[2]ருடைய
முலைப்பால் வார்த்தரைத் துருண்டை பிரி[3]யமுடன் நிழலுலர்த்தியப்
பாலில் கொடுக்கத்தீ
வாரிய[4] விடாச்சுரம் தீர்ந்திடும் தாயாருக்கே கொடுக்கத்
திண்ணமுடன் மாறில் குளிர்ச்சுரம் தீரும் இதற்குப்
பாரியபத்திய மூன்றுநாளும் பாகா
பகர்ந்தபிரதாப லங்கேசுர குளிகையிதுவே.

**உரை:** இரசம் 1/4 பங்கு
துருசு 1/8 பங்கு

---

*பிரதாயம் – பெருமை, பிரதாபன் – புகழ் பெற்றவன், இலங்கர்–நங்கூரம், சுரம் – வழி,*
*ஈசுரம் – ஈ+சுரம், ஈ – பார்வதி.*

தாய்ப்பாலில் அரைத்து, நிழலில் உலர்த்தவும். பின் உருண்டை செய்யவும். பாலில் அருந்த தீய இயல்புள்ள தொடர் சுரம் நீங்கும். 3 நாள் உண்ண, குளிர் சுரம் விலகும். இது பிரதாபலங்கேசுரக் குளிகையாகும்.

### வேறு

திரிகடுகு திரிபலை இந்துப்புச் சூதம்
திரள் புளியம் பழக்கூடு சாதிலிங்கம்
ஒருநிரையாய் நேர்வாளம் நாலிரண்டாய்
ஒருநாள் கற்றாழைச் சாற்றரைத்து
வரும், மறுநாளன்ற கையாந்தகரைச் சாறு
வார்த்தரைத்துச் சிறு பயறறிளைவுருட்டி*
பெரிய நிழல்வைத்துலர்த்திக் கொள்ளலாம்
பிரதாபலங்கேசுரன் காணமின்னே.

**உரை:** திரிகடுகு, திரிபலை, இந்துப்பு, இரசம், புளியம் பழத்தோல், இலிங்கம்- வகைக்குச் சமபங்கு. நேர்வாளம் - 8 பங்கு ; ஒருநாள் குமரிச் சாறு, மறுநாள் கையான் சாற்றிலும் அரைக்கவும். சிறு பயறளவு உருண்டையாக்கவும். நிழலில் உலர்த்தவும். இதுவே பிரதாப லங்கேசுக் குளிகையாகும்.

### அரிதாரக் குளிகை

சுத்தி செய்த அரிதாரம் - வகைக்குச் சமஅளவு
சங்கு பற்பம் (நீறு) - „

தண்ணீர்விட்டரைக்கவும். குன்றியளவுக்கு குளிகை செய்யவும். தவிட்டில் குளிகையைப் புரட்டிக் கொள்ளவும். 3 நாள் உண்ண, குளிர், வெதுப்புத் தீரும். நெஞ்சில் நோவு, பித்தமெடுக்கும் விடா வெதுப்பு, ஒன்றுவிட்ட மாறல் சுரம், மூன்றாம் முறை, 4 ஆம் முறை சுரம் தீரும். பேதி மிகுந்தால் மோரும் சோறும் உண்ணவும்.

---

* "பயறஅறின் அளவி உருட்டி" என்றாதல் வேண்டும்.

## வயிரவக் குளிகை

நாவி இரசம் இலிங்கம் மூன்றும், சமன் கொண்டு, எலுமிச்சம் சாறு விட்டரைத்து ஏழு நாழிகை ஆன பின்பு குன்றியளவு குளிகை செய்துலர்த்தவும். நளிர் (குளிர்) சுரத்துக்கு, ஒரு குளிகை தேனிலிட்டு உண்ணவும். ஈளை, இருமலுக்கு ஆடாதோடைக் கசாயத்திலிட்டுக் குடிக்கவும். சிறு பயிறு, அரிசியுள்ள கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

## சங்கார வைரவன்

சாதிலிங்க மிரண்டு, வெள்ளைப் பாசாணந்
தான் தனிக் கழஞ்சு
ஓதுமோர் வண்டலினரைத்துச் சிறிய
பயிறனளவு உலர்த்தி
மாதே, மோரில் கொடுத்துப்பின் பண்
பாற்கஞ்சி பத்தியமேற்
சீதசுரத்தைச் சங்காரம் செய்யும்
சங்கார வயிரவனே.

**உரை:** சாதிலிங்கம் - 2 கழஞ்சு
வெள்ளைப் பாசணம் - 1 கழஞ்சு சந்தனக் குழம்பில்
அரைத்துப் பயறளவு மாத்திரையாக உருட்டவும். உலர்த்திக் கொள்ளவும். பின்மோரில் அருந்த, சீதசுரம் தீரும். உணவு : பால் கஞ்சி தரவும். இது சங்கார வைரவன் எனப்படும் மாத்திரையாகும்.

## மாறல் சுரக் குளிகை

(வேலாயுதம் என்று பெயர்)

எலிப்பகை தன்னை நல்ல
எருக்கம் பால்விட்டே
நலிப்பற நாலு நாளும்
சென்றபின் எடுத்தே நன்றாய்
பலிப்புற, அரைத்தே உண்டைப்
பயறு போல் மோரில்

---

*வண்டல் -- சந்தனக்குழம்பு, சங்காரம் - அடக்குதல், அழித்தல்.*

சலிப்புறக்கொள்ளில் நாலு
நாள்மாறல் சுரம் போமே.

**உரை:** பூனைக் காலியை எருக்கம் பால்விட்டரைக்கவும். நான்கு நாள் சென்று எடுத்து உண்டை, பயறளவு செய்யவும். மோரில் உண்ண, மாறல் சுரம் (நான்கு நாள்) நீங்கும்.

நார் தன்னில் குழைத்துப் பயிறளவாய்
ஓர் குளிகை உட்கொள்ள உட்கொள்ள, உடனே மாறல் ஒழிந்திடுமே.

## அரிதார ரசம்

| | | | |
|---|---|---|---|
| ரசம் | - 1 வராகன் | நாபி | - 1 வராகன் |
| கந்தகம் | - 1 வராகன் | கடுகுரோகணி | - 1 வராகன் |
| வெங்காரம் | - 1 வராகன் | வாளம் | - 10 எண். |

முருங்கிலைச் சாறுவிட்டு 7 1/2 நாழிகை அரைக்கவும். குன்றிமணி அளவு குளிகை செய்யவும்.

| | |
|---|---|
| சுக்கு | - 1 வராகன் |
| கொத்தமல்லி | - 1 வராகன் |

இருநாழி 1/8 இல் ஒன்றாகக் காய்ச்சவும். இதில் ஒரு குளிகை இடவும். இப்படி 3 நாளிட, நாலு நாளைச் சுரம் தீரும்.

+எருக்கினொடு கள்ளி
ஏல முருங்கை நொச்சி
திருத்துழாய் பச்சை
சிறுபாகல் ...........
பெருத்தக் கருவாழை இஞ்சி
கரி முகவையெண்ணெய்
கிருவானை போம் காதில் சீழ்
.................
+எருக்கிலை நொச்சியிலை
அகத்தியிலை நல்வேளையிலை
இஞ்சி ஓர்சாறு ள (100) நல்லெண்ணெய்
திரிகடுகு, வசம்பு, பூண்டு

---

*எலிப்பகை :பூனை – பூனைக்காலி; பலி – சாம்பல். +பாடல் முற்றுப்பெறவில்லை.

உரை: எருக்கு, கள்ளி, ஏலம்,, முருங்கை, நொச்சி, துளசி, மிதிபாகல், கருவாழை, இஞ்சி, மிளகு, அகப்பையளவு நல்லெண்ணெய், எருக்கிலை, நொச்சி இலை, அகத்தியிலை, நல்வேளையிலை, இஞ்சிச்சாறு, நல்லெண்ணெய், திரிகடுகு, வசம்பு, பூண்டு, நற்சீரகம், கருஞ்சீரகம், நண்டு, இவைகளை அரைத்து, எண்ணெயுடன் கலக்கவும். காய்ச்சிப் பதத்தில் இறக்கவும். காதில் வார்த்தடைத்து, தலையிலும் வார்த்து முழுகச் சீழ்ப்பாய்ச்சல் தீரும்.

### எண்ணெய்

முள்ளியும் முருங்கை வேரும்
முருங்குட எருக்கம்வேரும்
கள்ளியும் வசம்பும் சுக்கும்
கலந்துடனே வெந்த எண்ணெய்
துள்ளிமேல் துள்ளி வார்க்க
துர்செவி நோய்களெல்லாம்
எள்ளியான் தன்னைச் சேர்ந்த
தீவினை போலத் தீரும்.

உரை: நெல்லி முள்ளியும், முருங்கைவேர், பலாசு, எருக்க வேர், கள்ளி, வசம்பு, சுக்கு பொடி செய்து, எண்ணெயுடன் காய்ச்சவும். பதத்தில் எடுத்து, வடிகட்டவும். சொட்டு சொட்டாக விடவும்.

தீமை தரும் காது நோய்கள் நீங்கும். வலிமையில்லாதவனுடன் இணைந்த தீவினை அழிவது போல நீங்கும்.

### *மருந்து

முற்றிய, பிரண்டைக் கொடியை ஒரு சாண் அளவுக்கு நறுக்கவும். இரண்டு கணுவுக்கு நடுவாய், பத்தல் போல எடுத்து, அது நிரம்பும் படி, நல்லெண்ணெய் விடவும். விளக்கில் பிடித்து, மூன்று கொதியிட்ட பின், அந்தவாரே முறுக்கிச் சுடச்சுடக் காதில் பிழியவும். இப்படி மூன்று நாள் பிழியவும். புளி நீங்கலாய், மற்றது கூட்டிச் சாப்பிடவும்.

---

*முருக்கு – பலாசு*

★ *இம்முறைகள் யாவும் இன்று மருத்துவ ஆய்வுக்குரியது. பயன்படுத்துதல் வேண்டாம்.*

முருங்கைவேர், இந்துப்பு - வகைக்குச் சம அளவு, வெண்ணெயில் சேர்த்து அடுப்பேற்றி பதத்தில் எடுத்துக் காதில் விடவும். நோயும் விகாரமும் சீயும் நிற்கும்.

### *சீழுக்கும், நோய்க்கும் எண்ணெய்

வகைக்குக் காசெடை முள்ளியின் வேர், முருங்கை எருக்குவேர், இவைகளின் பட்டை, கள்ளிச் சாறு வசம்பு, கடுகு, எண்ணெய் - உழக்கு.

அரைத்துக் கலந்துக் காய்ச்சி வடிக்கவும். காதில் விட்டடைக்க சீழும், நோயும் தீரும். காதிரைச்சல், எழுச்சி, நீர்ப் பாய்ச்சல் தீரும்.

### *உசிதம்

முருங்கிலை, துளசியிலை, எருக்கம் பழுப்பு, நொச்சியிலை, ஆடு தின்னாப் பாளைச் சாறு – 5 பங்கு.

ஈரவெங்காயச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தேங்காய் பால் – 5 பங்கு. எண்ணெய் – 3/4 படி. இதில் புலித்தொடக்கி முருங்கிலை, துளசி, எரக்கு, நொச்சித் தழை, அரைத்து 5 காசெடை, வசம்பு, பலகறை, குக்கில் - காசெடை, இதெல்லாம் அரைத்து எண்ணெய் சாற்றில் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து, இராத்திரி காலம் காதில் விட்டுப் பஞ்சு கொண்டடைத்து, விடிந்த பின்னும் திரியிட்டு, இசைவாகக் குணமாக மட்டும் அடைக்கவும்.

### *காது கேளாமைக்கு

குதிரைலத்தி, இஞ்சிச்சாறு, சேர்த்துக் காதில் பிழியவும். 3 நாள் பிழியக் காது கேட்கும்.

---

எளியன் – எளியவர் – வலிமைஇல்லாதவன். பத்தல் – குழி ; விதானம் – மேல்கட்டு.

குறிப்பு: வெதுவெதுப்பான இளஞ்சூட்டில் விடவும். உசிதம் – சிறந்தது, அறியப்பட்டது.

* இம்முறைகள் யாவும் இன்று மருத்துவ ஆய்வுக்குரியது. பயன்படுத்துதல் வேண்டாம்.

## + செவியடைப்புக் கேளாததுக்கு.

தோலுடன் குன்றிமணி - 3
மிளகு - 6

காடிவார்த்து, விளக்கெண்ணெயில் வேகவைக்கவும். மிளகில் முதிர்ந்த பதத்தில் வடித்தக் காதில் விட்டடைக்க, அடைப்பு விட்டுவிடும்.

## + செவிமந்தத்துக்கு

கடுகுரோகணி - 1 வராகன்
புங்கம் பட்டை, கொன்றைப்பட்டை.

வெவ்வேறாக அரைத்து (நெல்லி) முள்ளிக் காயளவு எடுத்து, நல்லெண்ணெயில் கலக்கவும். காய்ச்சி வடித்து மூன்றுநாள் காதில் விட்டுரைக்க மந்தம் தீரும்.

மஞ்சள், சுக்கு, திப்பிலி -1 வராகன், இதைக் கோடக சாலைச் சாறு வார்த்தரைக்கவும். உழக்கு நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சவும். எடுத்து 3 நாள் இரண்டு காதிலும், குழித்து துணியால் மூன்று துளி குத்தி அடைத்து உச்சம் தலையிலும் அப்பி, 4ஆம் நாள் சிகைக்காயிட்டு முழுகிப் போடவும். கேட்கும்.

## + செவிடு தீர, காதடைப்புக்கு

அறுகன் வேரை நையத் தட்டி, சிறுநீரில் பிசைந்து, வடிகட்டிக் காதில் விடவும். அடைக்கவும். இவ்வாறு 6 நாள் செய்யவும்.

கொடிவேலி வேர்ப் பட்டையை உரித்து, நையத் தட்டவும். நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சவும். பதத்தில் இறக்கவும். காதில் வார்த்தடைக்கச் செவிடு தீரும்.

..............................................................

*கரகம் – புலித் தொடக்கி ; சந்தித்து – சந்திப்பு, இசைவு.*

*+ இக்காலத்துக்கு இம்முறை பயன்படாது.*

*கொழித்தல் – பொழித்தல் "துணிரால்" – துகிலால்*

## + காதில் சீழ்

இலுப்பை இலைச்சாறு, நல்லெண்ணெய் அதிமதுரம் - 4 காசெடை, அரைத்துக் காய்ச்சி எடுக்கவும். பின் காதிலடைக்கவும்.

முற்றின குன்றிவேரின் புறத்தோல் தூதுவளை இலைச்சாறு, நல்லெண்ணெய் சேர்த்து வெய்யலில் வைக்கவும். இதைக் காதில் பிழியவும்.

மாவிலங்கைச் சாற்றைப் பிழியவும்.

நாரத்தை இலையை அரைத்து எண்ணெயில் காய்ச்சி விட்டடைக்கத் தீரும்.

முள்ளம் பன்றி முள்ளைப் புங்கெண்ணெயில் உரைத்துக் காதில் வார்க்கவும். காதில் வார்த்து, 3 நாள் காற்றுப்படாமல் மூடி, இறுகக்கட்டி, இருதிசை முடுமிடமுள்ள வீட்டிலிருந்து, நாலுநாள் மூழ்கிக் போட செவிடு தீர்ந்து, கேட்கும்.

## இரைப்புக்கு

தைவேளை இலைச்சாற்றைப் பிழிந்துண்ண, இரைப்புத் தீரும்.

## + புழுவுக்கு

துளசியிலையுடன் உப்புக் கூட்டிக் கசக்கிக் காதில் 3 நாள் பிழியச் சலமும் மாறிப் புழுவும் போம்.

## + கேளாததுக்கு

காட்டுப் பன்றி எருவைப் பொடித்து, நல்லெண்ணெயில் வெச்செனக் காய்ச்சிக் காதில் விட்டடைக்கக் கேட்கும்.

..............................................................................................

*குறிப்பு: சிறுநீரைப் பயன்படுத்துவது இன்று ஏற்புடையதன்று.*

+ *இம்முறையைக் கையாளவேண்டாம். ஆய்வுக்குரிய ஒன்று.*

தேவதாரம் - 1 பலம்

நல்லெண்ணெய் - நாழியில் அரைத்துக் காய்ச்சித் தேய்த்து முழுகக் கேட்கும்.

| | |
|---|---|
| தேங்காய் | - முக்கூறு (3 பங்கு) |
| நல்லெண்ணெய் | - முக்கூறு |
| எருக்கம்பால் | - ஒரு ,, |
| எருக்கஞ்சாறு | - ஒரு ,, |
| கத்திரிவேர் | - ஒரு ,, |

இவைகளைக் கூட்டி அரைத்துக் கொதிப்பிச்சுக் காதில் விடவும்.

## செவிமந்தம், பாதசன்னிக்கும் மருந்து

மாவிலங்கு வேர், மஞ்சனத்தி பட்டை, இலை, கொடுவேலி வேர், முருங்கை வேர் - இடித்து 4 லிட். நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி, சிறுதேக்கு, சந்தனம், சதகுப்பை, இந்துப்பு, கச்சோலம், சிவதைவேர், இலவங்கம். அரைத்து உலர்த்தி பால் 2, எண்ணெய் 2 கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் காதில் அடைத்து, நாசியிலும் விட்டுத் தலைக்கும் தேய்க்கச் சர்வ வாதம், சன்னி, காதுமந்தமும் தீரும்.

## மண்டை சன்னி, மண்டை சூலை கூடிக் காது கேளாதாருக்கு

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | - படி - ள (100) |
| வெள்ளுள்ளிப்பருப்பு | - 1 படி |
| கருஞ்சீரகம் | - 1 பலம் |
| இலவங்கம் | - 1 பலம் |
| பொன்னரிதாரம் | - 1 பலம் |

*மூலை – கோணம், இருதிசை கூடுமிடம்.*

*குறிப்பு: பன்றி எருவைப்பயன்படுத்துவது இன்று ஏற்புடைய தன்று.*

| | |
|---|---|
| சௌந்தரிக்காய் (வெண்தாமரை) | - 2 எண் |
| திப்பிலி | - 1/2 பலம் |
| உப்பு | - 3/4 படி |

புதுப்பானையில் வேப்பெண்ணெயை விடவும். மருந்தெல்லாம் அதில் போடவும். ஓடு கொண்டு வெளித் தெரியாமல் மூடவும். வேடுகட்டி, நன்றாய் மண் பூசி, அதை ஒரு சட்டி கொண்டு படிக்கமிட்டு, மூடி, சூரியபுடமாக ஒன்பது நாள் வைக்கவும். 10 ஆம் நாள் எடுத்துத் திறந்து, தினம் காலமே, ஒரு கொட்டைப் பாக்களவு, ஒரு நாள் உட்கொள்ளவும். மண்டைச்சூலை, மண்டை சன்னி காது கேளாதல், இசிப்பு, வாயு, முகசன்னி உள்ளவை. அற்புதவாயுவும் போம். பத்தியம் புளி, மிளகு (வச்சிக்கவும்) உண்ணவும்.

## புண்ணுக்கும், வலிக்கும்

| | |
|---|---|
| கருவேலி இலை | - 1 படி |
| சீவிய கொட்டைப் பாக்கு | - 2 எண் |
| தலைமயிர் | - இரண்டு பாக்களவு. |

தனித்தனியாக தீயிலிட்டுக் கறுக்கவும். மூன்றையும் கலந்து, நல்லெண்ணெயில் குழப்பி வேகவைத்து, ஆற்றிடப் புண் மாறும். நோவும் தீரும். தண்டு மூறும். ✦ஓலையை அவ்வெண்ணெயில் தோய்த்திட்டுவரக் காது பெருகி வளர்ந்து வரும்.

## தீப்புண்ணுக்கு

சதுரக்கள்ளி வேர், இந்துப்பு எண்ணெயில் எரித்து, புண்ணில் விட்டு வரவும்.

---

*சௌந்தரி – வெண்தாமரைகாய்*

*குறிப்பு : "காது வளர்த்தல்" முறை பெண்களுக்கானது. காதுகளைத் துளையிட்டு, அதில் பாம்படம், கொப்பு, தண்டட்டி போன்றவைகளை அணிவார்கள். காதுகளிலுள்ள புண் ஆற மருந்து. காது வளர்த்தல் பழம் மரபு ஆகும்.*

## காதுசீழ் தீர

செங்குன்றி இலை, பாம்புத் தோல் நல்லெண்ணெய், கழற்பருப்பு - நல்லெண்ணெயில் காய்ச்சிச் செவியில் வார்க்கச் சீழ் தீரும்.

## நோவுக்கு

வில்வவேர் தோலை அரைத்து, நல்லெண்ணெயில் காய்ச்சி இட நோவு தீரும்.

நயனரோகம் வரும் காரணம், இங்கு கூறப்பட்டுள்ளது

தாங்கிய சுமை மிகுந்தத்
தாம்பூலம் கலுதல் போகம்
ஓங்கிய நோக்கம் காற்றேழ்
நாள் மழைச் சிரம் வறட்சி
தேங்கிய வாத பித்தம்
சேத்துமப் புகையேறுண்டல்
வீங்கிவை பாற் கண்ணோய்
தொண்ணூற்றாமே மெய்யது காணே.

உரை: கனமான சுமைகளை சுமப்பது, அதிகமாக வெற்றிலை போடுதல், பெண் ஆசை, ஆணவம் மழை, நீண்ட கால வறட்சி, உடலில் உண்டான வாத, பித்த, கபக் குற்றங்கள், புகை, இடி, புசித்தல், ஏக்கம் போன்ற காரணங்களால் 96 வகையான கண் நோய்கள், உண்மையாக வரும்.

உன்னிய முப்பத்தேழு மட்டொளி
உண்டாய், விளங்குமன்றி
மன்னிய நாற்பத்தஞ்சும்
மட்டும் (சு)சற்றிருண்டு ஓதுங்கும்

---

கலுதல் – அழுதல்.

துன்னிய ஐம்பத்தேழு மட்டு
அதிகமாய் புகைந்து தோன்றும்
பன்னிய நூறுமட்டும்
ஒளிஇருள் படலமாமே.

**உரை:** நோய்களின் கூட்டுத்தொகை 239 வருகின்றது. 37 வகை கண் நோய்களுக்கு மருந்துவத்தால் பார்வை வரும். 45 வகை நோய்களுக்கு துளியளவு ஒளியுடன், சிறிது நேரமும், பின் இருட்டிலும் இருக்கும். 57 வகையான கண்ணோய்கள், வருத்தத்தை ஏற்படுத்தும். 100 வகையானவை பார்வையற்றுப் புலனிழந்த இருளைத் தரும் கூட்டமாகும்.

வாதமிகுந்தெடுக்குநோய்
நாரத்தஞ்சு, மண்ணுக் கருவிழி
இடமாய் மருவி நிற்கும்
சீதமிகுந் தெடுக்கும் நோயிரண்டு பத்தும்
தேர்ந்த வெள்ளை விழி இடமாய் சேரும் பித்தம்.
தேதமிகுந்தெடுக்கும் நோய், முப்பத் தொன்றில்
இமையில் ஒர்பதினாறும் கடைக்கண், தண்ணீர்
கோது சேர்பதினைஞ்சும் தோன்றி நிற்கும்
கொந்தளக மந்தாப் பொற்கொங்கை மாதே.

**உரை:** வாதம் அதிகமானதால் பயப்படும் வகை நோய் உண்டாகும் என்று நூல் கூறும். கழுவப்படும் கண்களில் உள்ள இடது பக்கம் சேர்ந்திருக்கும். மேகநோய் காரணமாக ஏற்படும் கண்ணோய் இரண்டுவகையாகும். வெள்ளை விழியில் வருவது இருபதுவகையான நோய்கள். இது பித்தத்தின் காரணமாக வரும். இமையில் 36, கடைக்கண்ணில் 16, நரம்பில் வருவது 15 ;

---

*தாழ் – செருக்கு ; சிரம் – நெடுங்காலம். ஏறு – இடிபேறு. உண்டல் – புசித்தல். விங்குதல் – ஏக்கம் கொள்ளல்.*

*துங்கம் – துளி, சற்று – சிறிது நேரம் ; புகை, வருத்தம். ஒளி – கண்புலன் ; படலம் – கூட்டம்; நூல் – நூல். மன் – கழுவுதல். அஞ்சு – பயப்படு, ஒளி.*

*சீதம் – மேகம் ; பத்து – பாதம், பற்று. கோது – நரம்பு. தண்ணீர் தெளி – நொறுக்குதல். இடம் – அகலம். பால் – வெண்மை.*

*பொற்கொங்கை மாது – இல்பொருள் உவமை மகடூஉ முன்னிலை.*

எய்திய, வேல் மருந்தோடால் பூலாக்

கொம்பாலிட, பால் முன்

எய்த்து, வலப்பால் பின்றெய்த்துப்

மொய்ப்புன லிற்கோ பிழிந்து

புலவின் அற்றே முதிர்ந்தப்

பெருங்கல்லிடையே மிகஅழுந்த

செய்யக் கழல் இரண்டு தேய்த்த

தனிநெய்யைத் திமிர் இவை போல்

பலநாள் செய்ய நேத்திரம்

துய்யச் செழுந்தாமரைபோல் குளுமை

எய்தித்தோன்றுமே பகலில் அருந்ததியுந்தானே.

**உரை:** வேலமரப்பட்டை, ஆலமரப்பட்டை, இஞ்சி, பூலாமரக் கிளை, குத்திச்சாறு எடுக்கவும். முற்பட்ட, நன்றாக வலதுபுறம் பெருமையுடன் சாற்றை விடுதல், நெருக்கமாக முருங்கைச் சாற்றை எடுத்து தன்மையுடைய பழைமையான பெரிய கற்களின் நடுவில் அதிகமாக அழுத்தும் பாதங்களில் தைலத்தைப் பூசவும். பலநாள் தடவ, கண்கள், மலர்ந்த தாமரைப் பூபோல பார்க்க இனிமையுடன் காணலாம். பகல் நேரத்திலும், அருந்ததி விண்மீனைப் பார்க்கலாம்.

**இலக்கிய நயம் :** வேல் என்ற கருவியால் வேட்டையாடுவதையும், வேல மரப்பட்டையை சேர்ப்பதாலும் "எய்திய வேல்" என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். பெண்களின் கண்களை வேலாயுதத்துடன் புலவர்கள் ஒப்பிடுவார்கள்.

...............................................................................

*புலவு – இரத்தம், மணம்; அற்று – அத்தன். மொய் – நெருக்கமாக ; புனல் – நீர். வலம் – வலி, வலதுபுறம், வெற்றி ; பின் – பெருமை. முன் – பழைமை, முற்பட்ட ; "எய்த" என்றாதல் வேண்டும். பால் – சாறு ; இடுதல் – குத்துதல். மருந்து – இஞ்சி ; எய்தல் – விடுதல். எய்த – நன்றாக. எய்துதல் – அணுகுதல். "எய்தவேல்" என்றாதல் வேண்டும். வினைத்தொகையாகி முக்காலம் காட்டி நின்றது.*

ஒருபொழுதிடு, மருந்துக்கு
        வந்திடும் மந்திக் காலம்
இருபொழுதிடு மருந்துக்
        இலங்கு காலத்திலிட்டு
வரு மந்திக் காலந்தன்னில்
        மருந்திடாத அயர்ந்திருக்கிற
கருவிய நேத்திர ரோகந்தான்
        அகலாது மாதே.

உரை:- ஒருமுறை கண்களில் மருந்து போட, சூரியனைப் போல ஒளிரும். இருவேளை, மருந்துவிட, கண்கள் ஒளி செய்யும். முதிர்ந்த பருவத்தில், கண்களுக்கு மருந்து போடாமல் களைப்புடன் இருந்தால் (மேகத்தால் ஏற்பட்ட) அல்லது கறுப்பான தன்மையுடைய கண் நோய் தீராது.

பேச்சொடு வெய்யில், காலச் சீதம்
        பிள்ளிய நீர்மோர், இன்ப
வாச்சியாப் புணர்ச்சி, பாதம்
        வருத்திட நடத்தல், அன்றி
பூச்சியமெனும் பாரம்
        பொறுத்திட, வருந்திதலிட்டுக்
காய்ச்சிய பாலும் சோறும்
        உண்டிடக் கண்ணோய் போமே.

உரை: சொற்பொழிவு ஆற்றுதல், வெப்பமான பருவம், குளிர்ச்சி தயிரால், துண்டுபட்ட நீர் மோர், நோயுள்ள பெண்களுடன் சேருதல், கால்கள் துன்பம்

---

*கழல் – பாதம். திமிர்தல் – பூசுதல் ; குளிர்ச்சி – இனிமை.*

*பின்ளுதல் – நொறுக்கப்படும் ; துண்டுபடுதல் ; வாச்சி – குற்றம். கரு – கறுப்பான, இயல் – தன்மை ; பேச்சு – சொற்பொழிவு. பொழுது – ஞாயிறு, மாலை ; மந்தி – சூரியன். இலங்கு – ஒளிசெய்யும் ; கருவி – மேகம். கருவி என்றாதல் வேண்டும்.*

அடையும்படி, நீண்ட தூரம் நடப்பது. மேன்மையான சுமையைத் தாங்குதல், என்பனவான காரணங்கள், கண்ணோய்க்கு உள்ளவைகளாகும். ஆறிய பால், சோறு உண்ண நீங்கும்.

### நெறிக்கும், வலிக்கும்

முருங்கைப்பூ, ஈரவெங்காயம், நற்சீரகம், தட்டிப் பொட்டணம் கட்டி, முலைப்பால் விட்டு நெருடிக் கண்ணில் பிழிய நெறியும், வலியும் தீரும்.

### இன்னம் - வலிக்கு

கற்றாழைச் சோற்றை வழுக்கை போகக் கழுவி, கீர்ந்து பாத்தி போட்டு வெள்ளியச் சீலையிலிட்டு அதுக்குள்ளே, குன்றி மணிப் பிரமாணம் சீனாக்காரம் வைத்து, நெறித்து இரண்டு கண்ணிலும் பிழியவும்.

### இன்னம் - கண்நோவுக்கு

முலைப்பால், எலுமிச்சம் பழச்சாறு - இரண்டும் சமன்கூட்டி, சீனாக்காரத்தைப் பொடித்துக் கிண்டிக் குழம்பாக்கிப் புறவளையம் போட வலி நிற்கும்.

### இன்னம் - வலி, கண்சிவப்புக்கு

கரும்பை சிவக்கக் காய்ச்சி, எலுமிச்சம் பழச்சாறு விட்டு, கடுக்காய், சுக்கும் உரைத்துப் புறவளையமிட வலி, நீர், சிவப்பு மாறும்.

### பூவுக்கு

ஈரவெங்காயம், நற்சீரகம், நொறுக்கிப் பொட்டணம் கட்டி, முலைப் பால் விடவும். நெருடிக் கண்ணில் பிழிந்து, ஊதிப் போடவும். இப்படி மூன்றுநாள் பிழிந்தூதிப் போடப் பூக்கரையும்.

### இன்னம் - பூவுக்கு

கடுக்காய், இந்துப்பு, துத்தம், துருசு, கற்பூரம் (பச்சை) சரியளவு. சந்தனத் தண்ணீர் வார்த்தரைத்து, கயிறு சேர்த்து முலைப்பாலிலிடப் பூ தீரும். (கயிறு செய்து என்றாதல் வேண்டும்.)

..........................................................................................

பூச்சியம் – நன்கு மதிப்பு ; மேன்மை. வருதல் – வருத்து – வரவு, வருகை. பொறுத்தார் – தாங்குதல். நெறி – கட்டி. இன்னம் – மேலும்.

## நாட்பட்ட பூவுக்கு

செப்புப் பொடி, பசும்பல், கழுதைப் பல், கழுதை எலும்பு, கோழிமுட்டைத் தோடு, அதன்மயிர், சோழி, இருப்புப் பொடி, கடல் நுரை, சங்கு வகைக்கு சரியளவு ; வெள்ளாட்டு மொத்தை நீர் வார்த்தரைக்கவும். உண்டை பண்ணி, தேனில் உரைத்திட, நூற்றாண்டு புக்க, பூவும் தீரும்.

## + ஈர்ஆணிப் பூவுக்கு

மாடப்புறா எச்சம், குன்றிவேர் ; காடியில் உரைத்திடவும்.

## பின்னும்

வெள்ளைக் காக்கணவேர், வெள்ளைச்சாரணை வேர், ஆடுதின்னாப் பாளைவேர், ஆனைக் கொம்பு, சேவல் நெஞ்செலும்பு, ஓரிலைதாமரை வேர், பேரண்டம், ஆமையோடு, முருங்கைப்பூ; வகைக்கு - 1 பலம். வெண்மையான துணியில் கட்டவும். கள்ளி மரத்தில் துளையிடவும். அதில் மருந்தை வைக்கவும். 7 ஆம் நாள் ஆனவுடன், எடுக்கவும். பசுவின் பாலில் அவிக்கவும். பின், நந்தியாவட்டைப் பூச்சாற்றிலரைத்து கயிறு செய்யவும். நிழலில் உலர்த்தி, முலைப்பாலில் உரைத்துப் போடவும். ஆணிப்பூ, குந்தம் வெள்ளைப் படலம் இவை தீரும்.

## கண்வலி

சீலை வடிகொண்ட திரு நீறைக் கல், தூரிவிட்டு, நல்லெண்ணெய் வார்த்துச் சங்கு கொண்டு உரைத்திட நிற்கும். கண்ணிலிடவும். உருவமுள்ள காவிக்கல்லை துளை செய்து பொடியாக்கவும். நல்லெண்ணெய்யில் சங்கால் இழைத்து மாத்திரைக் கோலால் கண்களில் போடவும்.

## இன்மை - வலிக்குப் புறவடை

மண்வெட்டியைக் காயப்போட்டு, அதில் வெங்காரத்தை வைக்கப் பொரியும். அத்துடனே, கடுக்காயின் பொடி சுடுசோறு, திருநீறு கூட்டி,

---

*மொத்தை – பருத்த.*

*+ இம்முறை இன்று வழக்கில் பயன்படாது.*

*சிலை என்றாதல் வேண்டும்*

*சிலை – கல், வடி–உருவம், கல் – காவிக்கல் , தூறி – துளை*

எலுமிச்சம் பழச்சாறுவிட்டு, உலக்கைப் பூண்கொல்முறைக்கக் களிம்பு போலாம். கரண்டியிலிட்டு, முலைப்பால் விட்டுக் [illegible] சற்றே சூடாக்கிப் புறவடைப்பூச ; சர்வ கண்ணோவும் தீரும்.

### *அமரம் தீர

எருமுட்டைத் திருநீற்றைச் சீலைவடி கொண்டு கல்தூரியில் போட்டு முலைப்பால் வார்த்துச் சங்குகொண்டரைத்துக் கண்ணிலிட அமரம் (கண்நோய்) தீரும்.

### *இன்னம், புழுக்கடி, அமரத்துக்கு

பழம்புளி, உப்பு, மிளகு, (சுவர்) கரி, இவைகளை தண்ணீர் வார்த்தரைத்து உண்டை செய்து கண்ணிலிடப் புழுக்கடி, அமரம், குந்தம் கண்நோவு போகும்.

### *அமரத்துக்கு

சுக்கு, சாரணைவேர் இரண்டையும் காடி வார்த்தரைத்து உச்சியில், அப்பிவைக்க, அமரம் தீரும்.

### * மாலைக் கண்ணுக்கு

நெல்லிமுள்ளியை உரைத்துப் பத்து நாள் கண்ணுக்கிட, மாலைக்கண் குணமாம்.

மகிழம் விதையை முலைப்பாலில் உரைத்திடத் தீரும்.

### கண்ணிழிவு, மாலைக் கண்ணுக்கு

உழக்கு மிளகை பால் வார்த்தரைக்கவும். நாழியளவு பால், தண்ணீர் தனித் தனியாக விடவும். நாழியளவு வரும் வரை வற்றக் காய்ச்சிப் புரை குத்தவும். மறுநாள் கடைந்து வெண்ணெய் எடுக்கவும். கழி இளம் களிம்புள்ளகலப் புறத்திட்டுரைத்து வழித்து வைத்துக் கண்ணிலிட, முன்சொன்னவை எல்லாம் தீரும்.

---

*கல் – காவிகல், தூரி – எழுதுகோல்.*

** கண்களில் மருந்துகளைப் போடுவது ஆய்வுக்குரியதாகும்.*

### ★ இன்னம், மாலைக் கண்ணுக்கு

எருமைச் சாணச் சாற்றில் திப்பிலியை உரைத்திடத் தீரும். (இதுபோன்ற முறைகளை இன்று யாரும் பின்பற்றுதல் இல்லை) அறிவியல் அடிப்படை இல்லாத முறையாகும்.

### ★ இன்னம்

தும்பைச் சாற்றில், மிளகு பழத்தை அரைத்துக் குளிகை செய்து நிழலில் உலர்த்தி, மேற்படி சாற்றில் உரைத்திடவும்.

### ★ இன்னம்

பேய்ப் பீர்க்கம் விதைப் பருப்பை முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

### ★ வெள்ளெழுத்துக்கு

சீந்திலிலையை ஒரு மிளகிட்டுண்டை பண்ணி நிழலில் உலர்த்தி, செம்பில் உரைத்துக் கண்ணிலிடவும்.

### ★ இரண சுக்கிரனுக்கு

கின்னிக்கோழி பொரித்த முட்டைத்தோடு, வெள்ளைக் காக்கண வடக்குத் திசை ஓடிய வேர், இரண்டையும் தேசிப்பழச் சாற்றில் உரைத்திடவும்.

### ★ இழி கண்ணுக்கு

வெள்ளை நிறமுள்ள சீலையில் கள்ளிப் பாலைத் தோய்த்து உலர்த்தவும். பின் எருக்கம் பாலை தோய்த்துலர்த்தவும். துத்தம், துருசு பொடி செய்யவும். எலுமிச்சம் பழச்சாற்றில் அந்த சீலையைத் தோய்த்து, பொடியைத் தூவவும். திரித்து உலர்த்தவும். வேப்பெண்ணெயில் தோய்த்துக் கொளுத்தவும். வெந்த திரியை, வேப்பெண்ணெயில் தோய்த்துக் குழம்பு செய்து, வைத்து கண்ணிலிட இழிகண் தீரும்.

### இன்னம்

கொம்பு பாகலைக் கீறவும். விதைகளை நீக்கி, துளையிடவும். பின் அந்தாரம் இட்டடைத்து, சானகம் கொண்டு பொதிந்து, சுட்டுப் பொடி செய்து, தேன்விட்டுக் கலப்புறம் செய்த கண்ணிலிட, இழி கண், முடமயிர் தீரும்.

---

*குறிப்பு : கொடுவாளின் தோற்றமுள்ள அதிகக் கடினமான தன்மையில்லாத கல்லின் வெளிப்பகுதியில் உரைத்துப் போடவும்.*

*புள்ளம் – கொடுவாள் ; கல் – வெட்டி எடுத்த. பழுத்தல் – கனிதல்.*

## *நீர்ப்பாய்ச்சலுக்கு

கடு, வளமிளகு - நாழி இதைக் குறுணி நீரில், அவித்து எடுக்கவும். பருத்திப் பிஞ்சு, பனை மட்டைச் சாறு, நந்தியாவட்டைப் பூ, மாதளம் பிஞ்சு, இவைகளை அரைத்து நெய்விட்டுக் காய்ச்சவும். மெழுகு பதத்தில் இறக்கி, ஆறவைத்து கண்ணில் வார்க்கவும்.

நெல்லிப் பருப்பை அரைத்துக் கண்ணை வளைத்து, கண்ணில் நெய்நிறுத்தவும்.

## நிதானம்

வாதகாசம், பித்தகாசம் சருமகாசம், இரத்த லிங்க காசம், சந்திர லிங்கக் காசம், என்றும் சொல்லுவார்கள். இதில் வாத காசமாவது.

கண்ணை தெறியப் பார்த்தால் கறுத்துத் தோன்றி, காற்றினில் உட்பட்ட மேகம் போலக் கறுத்து, நீலம் போலத் தோன்றுமாகில், பார்வை சிவப்புண்டாகிலும், இவை வாத காசம் என்றறியவும்.

கண்ணிலாடுகிற பாவை மஞ்சள் போலே தோன்றுமாகிலும், மயில் கழுத்து நிறமாய் தோன்றுமாகிலும், பொன் வண்டின் கழுத்து போலத் தோன்றுமாகிலும் இவை பித்த காசம் என அறியவும்.

கண்ணில் படுகிற பாவை மினுங்கி, மாணிக்கத்தில் எண்ணெய் தடவினாப் போலத் தோன்றுமாகில், சேத்தும காசம் என அறியவும்.

கண்ணில் ஆடுகிற பாவை இரத்த கட்டி போலச் சிவந்து தோன்றில் இரத்த காசம் ; மற்ற காசம் தீராது. இந்த காசங்கள் தோன்றின உடன், மருந்திடவும். + முதிர்ந்தால் குத்துண்டாம்.

................................................................................................

*தோடு – முட்டையின் மேல் ஓடு.*

*சானக – மரக்கொம்பு ; பொதிதல் – மறைத்தல்.*

*தெறுத்தல் – குவித்தல் ; பரவை – பரப்பு.*

*குறிப்பு : + முதிர்ந்த காசத்தை ஊசியால் குத்தி, இரத்தத்தை எடுப்பார்கள்.*

தான்றிக்காயுடன், அரிசி, அதிமதுரம், நெல்லிப் பருப்பு, வெள்ளி லோத்திரம் வகைக்கு சமஅளவு. நீர் வார்த்தரைத்து, கயிறு செய்யவும். நிழலில் உலர்த்தித் தேனில் உரைத்திட திமிங்கில காசம் தீரும். (திமிர்த்தல்)

சந்தனம், சாத்திரபேதி பிச்சிமொட்டு, பூ, வெட்பூலாவேர், காவிமண், பொன்மெழுகு – இளநீர் வார்த்தரைத்து, கயிறு செய்யவும். நிழலில் உலர்த்தி, கற்பூரம் (பச்சை) கட்டி, முலைப் பாலில் இடப்புகைச்சல் மாறும். (புகைச்சல் – 96 வகை காண்நோய்களிலொன்று)

## இன்னம் - நயனகாசத்துக்கு

சங்கு, திப்பிலி, மிளகு, சுக்கு
அதிதாரமோடதி மதுரமும்
பொங்கு, பீதரோகணி, ............
புதிய துத்தம் நொச்சியிலை
இங்கிதைச் சரிநந்தி பத்திரிச்
சாறு தேனிலரைத்திட
கங்குல் பற்றிய விழியிலேஎழு
காச மானது நாசமே.

உரை : சங்கு, திப்பிலி, சுக்கு, மிளகு அரிதாரம், அதிமதுரம், பீதரோகணி, துத்தம், நொச்சியலை ; இவைகளுக்கு சரியளவு நந்தியாவட்டை இலையின் சாறு. எல்லாவற்றையும், தேனில் அரைத்துப் போட, அனைத்துவகையான கண்களில் வரும் காசங்களும் விலகும்.

## பச்சையுண்டை

| | |
|---|---|
| கடுக்காய் பருப்பு | – 1 பலம் |
| நெல்லிக்காய் விதை | – 1 பலம் |
| தான்றிக்காய் பருப்பு | – 1 பலம் |
| திப்பிலி | – 1 பலம் |
| மிளகு | – 1 பலம் |

சின்ன கற்றாழை உள்ளே வைத்து, எடுக்கவும். பிசைந்து, கழுவி மேல் தோலைப் போக்கவும். மீண்டும் 1/4 கழஞ்சு. சிற்றாமணக்கு விதையை 1 பலம் கரிசாலை சாறுவிட்டரைக்கவும் உண்டை பண்ணிக் கண்ணிலிடக் காசம் மாறும். தீரும்.

## காசம், படலம், சுற்றுப் பிரிவுக்கு

கடல் நுரை, துருசு வகைக்குச் சம அளவு, புளிய இலை, துளசி இலை, முருங்கைப்பூ - நறுக்கிப் பிழியவும். இச்சாற்றில் போட்டு, இரண்டு சாமம் மத்திச்சு, பசு வெண்ணெயில் இளக்கி, சிமிழில் அடைத்து, நீர்ப் பாய்ச்சல் கண்ணுக்கிடவும்.

| | |
|---|---|
| கடுக்காய் | - இருகூறு |
| நற்சீரகம் | - 1 கூறு |

கடல்நுரை, துருசு, வகைக்குச் சமஅளவு, புளிய இலை, துளசி இலை, முருங்கைப்பூ - நறுக்கிப் பிழியவும். இச்சாற்றில் போட்டு, இரண்டு சாமம் மத்திச்சு, பசு வெண்ணெயில் இளக்கி, சிமிழில் அடைத்து, நீர்ப் பாய்ச்சல் தீர கண்ணுக்கிடவும்.

| | |
|---|---|
| கடுக்காய் | - இரு கூறு |
| நற்சீரகம் | - 1 கூறு |

பொடி செய்து, கற்றாழைச் சோற்றுடன் இந்த மருந்தையும் பொட்டணமாகப் பிடித்துக் கட்டி, கண்ணில் நாலாறு நாள் (10 நாள்) பிழியவும்.

சிறுகீரை, பொன்னாங்காணி வேர்கள் - 1 பலம் வகைக்கு

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | - உரி |
| பால் | - உரி |
| மதுரம் | - 1 பலம் |
| வேங்கை வயிரச் சிராய் | - 2 பலம் |

குறுணி நீரில் இடித்துப் போட்டு 1/8 பங்காகக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து முழுக எட்டு வகைக் காசமும் தீரும்.

.............................................................................

*திமர்த்தல் - மரத்துப் போதல். "திமிர்த்தகாசம்" என்றாதல் வேண்டும்.*

*பத்திரி - இலை*

## நயனரோகம் 96 க்கும்
## துத்தாஞ்சனக் குழம்பு

திரளும் வெண்ணெயை எடுத்து அதன் எடைக்கு 1/3 பாகம் துத்தம் துருசு கூட்டிக் கலப்புற வைக்கவும். பின் தேசிப் பழச் சாற்றில் (எலுமிச்சை) காசி செம்பு கொண்டு ஒரு சாமம் அரைக்கவும். பொடுதலைச் சாறுவிட்டு 1 சாமம் அரைக்கவும். வழித்துப் பீங்கான் கிண்ணத்தில் வைத்துக்கொண்டு, நேரத்துக்கு இரண்டு கண்ணுக்கும் ஒரு பணவெடை பகிர்ந்து போடவும். இதற்குத் தைலமும் வைத்து முழுகி வரவும்.

## குழம்பு

| | |
|---|---|
| துத்தம் | – 1 வராகன் |
| துருசு | – 1/2 வராகன் |

கரிப்பான் சாறுவிட்டு பொட்டாய்க் குற்றிக் காசி சொம்பு கொண்டு அரைத்து நல்லெண்ணெய் குற்றியுரைத்துப் பின்பு பெரு எலுமிச்சம் பழச்சாறு கொண்ட மட்டும் அரைத்துப் பசுவெண்ணெயை எலுமிச்சங் காயளவு போடவும். அரைத்துக் களிம்பு போல ஆனதை வழித்துச் சிமிழில் வைத்துக் கொண்டு, கண் வலிக்கு மூன்று நாள் உளுந்தளவு போடவும். இப்படி மூன்று நாள் செய்யவும்.

அமரத்துக்கு பாசிபயறளவு போடவும். மற்றவைகளுக்கு உளுந்தளவு போடவும்.

## இன்னம் குழம்பு

| | |
|---|---|
| வெள்ளாட்டுப் பால் | – உழக்கு |
| புளியிலைத் தண்ணீர் | – |
| துத்தம் | – 1 பலம் |
| துருசு | – 2 பலம் |
| இந்துப்பு | – 1/4 பலம் |
| கறியுப்பு | – 1/4 பலம் |

.................................................................................................

*4 நாழிகை ஆனபி பசும் பாலில் வெண்ணெய்*

நீர்விட்டு வேகவைத்து வடிகட்டவும். வழித்துக் கல்தூரிலில் போட்டு, எலுமிச்சம் பழச்சாறு, பசு வெண்ணெய் சேர்த்து காசி சொம்பு கொண்டரைத்துச் செப்புச் சிமிழில் அடைக்கவும். கண்வலி, புழு வெட்டு, பற்ப ரோகத்துக்கும் இடவும்.

## இன்னம் - குழம்பு

3/4 வராகன் சவுக்காரத்தைக் கரண்டியில் உருக்கவும். வட்டித் தூரில் போட்டு, நெல்லிக் காயளவு பசு வெண்ணெய் சேர்க்கவும். எலுமிச்சம் பழச் சாறு விடவும். காசி சொம்பால் அரைக்கவும். பருத்தி விதையளவு கண்ணில் போட, சவ்வு சவ்வாய் அறுத்து, வாங்கித் தீரும்.

## தளம் (வெண்சாந்து)

| | |
|---|---|
| குளிர் தாமரையின் தனிச்சாறு | - உரி |
| பசும்பால் | - உரி |

தலையில் தளம் போடவும்.

## இன்னம் - குழம்பு

துத்தம், திப்பிலி, கோட்டம், விளாம்பிசின் வகைக்குச் சமஎடை. எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்துப் பின், குப்பைமேனிச் சாறு விட்டரைத்துக் குழம்பு பண்ணவும். தேன் வார்த்துக் கலப்புறம் செய்து, சிமிழில் வைக்கவும். காசம், படலம், புகைச்சல், பற்பல வியாதிகளுக்குக் கண்ணிலிடவும்.

## இன்னம் - குழம்பு

துத்தம், கிராம்பு, இந்துப்பு, மிளகு, புளி வகைக்குச் சமஅளவு ; எலுமிச்சம் பழச் சாறு விட்டரைக்கவும். பின் கரிசாலை சாறு விட்டரைக்கவும். குழம்பாக்கிக் கண்ணில் விடச் சர்வமும் தீரும்.

## மருந்துமை

பொன்னாங்காணி, சிறுகீரை, கீழாநெல்லி இவைகளின் வேர், வகைக்குச் சமஅளவு நறுக்கிச் சாறு கொண்டு புதுப் பானைத் தூரில் தடவி, வழித்து வெள்ளிய சீலையில் ஊட்டவும். நிழலில் உலர்த்தித் திரியாக்கவும். துருசு துத்தம் இவை 1/3 பங்க பொடி செய்யவும். விளக்கில் திரிமையை வைத்துப் பொடியைத் தூவவும். பின் எடுத்து, கல்தூரிலிட்டு, எலுமிச்சம் பழச் சாறுவிடவும். காசி சொம்பால் அரைத்து, பசு வெண்ணெயைப் போட்டு, சிமிழில் வைக்கவும். சிறுபயிறளவு இமைக் கண்ணை நீக்கி, சூட்டித் தடவ, புழு வெட்டுப் பிரிதல் சகலமும் தீரும்.

## வெள்ளைப் பொடி

ஓரிதழ் தாமரை வேர், துத்தம், பீங்கான் (பூ) வகைக்கு சமஅளவு. பனை மட்டைச் சாறு விட்டரைத்து, நிழலில் உலர்த்தவும். நன்றாகப் பொடி செய்து, குழலில் அடைத்து நன்றாகப் பொடி செய்து, குழலில் அடைத்து வைக்கவும். காணப்பருப்பளவு, கண்ணில் போட, அமரம் முதல் சகல கண் நோய்களும் தீரும்.

| | |
|---|---|
| மடல் துத்தம் | - 2 வராகன் |
| ஓரிதழ் தாமரைவேர் | - 2 வராகன் |
| பொன்னாங்காணி | - 2 வராகன் |
| சிறுகீரை | - 2 வராகன் |
| சிறு பூளை | - 2 வராகன் |

தனித்தனியாக எலுமிச்சம் சாறு விட்டரைக்கவும். பின் ஒன்றாக்கவும். நன்றாக அரைத்து, மெழுகு பதத்தில் வழிக்கவும். இதை சிறுக வராட்டி போலத் தட்டவும். வெள்ளைத் துணியை இரண்டாக மடித்து, அதன் மேல் வைக்கவும். சீலையைக் கொண்டு பொதியவும். கீழ்பகுதியில் இரண்டு வராட்டியை வைக்கவும். மேல்பகுதியை எருவாகக் களிமண்ணைத்

........................................................................................

துடைத்துப் போடவும். அதன் மேலே எருவைத்து, மேலும் எருவினால் குக்குடப் புடமிட்டு மூடவும். 30 நாழிகைக் குப்பின் ஆறவிட்டெடுக்கவும். பரணியில் அடைத்துக் கொண்டு ஒரு கண்ணுக்குப் பேன் பிடியளவாய்ப் போட, கண்ணோவு தீரும்.

## இன்னம் - துத்தாஞ்சனப் பொடி

வெள்ளைக் காக்கணவேர்
ஓரிதழ் தாமரை –
சிறுகீரை –
பொன்னாங்காணிவேர்
துருசு, துத்தம், பவளம் 1/4 பலம்
மனோசீலை

எலுமிச்சம் சாறுவிட்டரைக்கவும். வில்லை செய்து, நிழலில் வைத்து உலர்த்தவும். காட்டெருவில் சாமம் புடமிட வெந்து, வெண்மையாய் திருநீறு போலாம். அதை எடுத்தக் கல்தூரில் வைத்துக் காசி சொம்பு கொண்டு தேய்க்க பற்பமாம் சிமிழில் அடைத்துக் கொண்டு அமரம் முதல் சர்வ கண்ணோவுக்கும் பாசி பயறளவு போடவும்.

## சந்தனாதி உண்டை

| | | |
|---|---|---|
| ஓரிதழ் தாமரை வேர் | – | வகைக்குச் சம அளவு. |
| பொன்னாங்காணி வேர் | – | ,, |
| மனோசிலை, துத்தம் | – | வகைக்குச் சம அளவு. |
| நல்ல சந்தனம், அரிதாரம் | | ,, |
| காவிக்கல், பிச்சிப்பூ | | ,, |

............................................................

*தூர் – அடிப்பகுதி ; கல்தூரு – கல்லால் ஆன அரைப்புப் பாத்திரம் ; சூட்டுதல் – பரப்புதல்.*

*காணம் – கொள்.*

*பேன்பிடி – சிறு அளவு ;*

பொடித்துப் பிச்சிப்பூச் சாறுவிட்டுக் கயிறாகத் திரிக்கவும். நிழலில் உலர்த்தி வெப்பம் தணிந்தவுடன் முலைப்பாலில் உரைத்திடவும்.

### பச்சை உண்டை

| | | |
|---|---|---|
| சங்கு | – | 1 பலம் |
| ஓரிதழ்தாமரை வேர் | – | ,, |
| பேரண்டம் | – | ,, |
| துத்தம் | – | ,, |
| சுண்ணாம்புக்கல் – | 1/2 பலம் | |

எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துத் திரியாக்கவும். முலைப்பாலில் உரைத்திடவும்.

### சந்தனாதி உண்டை

சங்கு, கடுக்காய், இந்துப்பு, திப்பிலி, வெங்காரம், கடல்நுரை, வெள்ளி லோத்திரம், துத்தம் – வகைக்குச் சமஎடை முருங்கையிலைச் சாறுவிட்டரைத்து உண்டை பண்ணி, உரைத்திடவும். அனுபானம் அறிந்திடவும்.

### *பச்சையுண்டை

வெள்ளைக்காக்கண வேரொன்று
வினைவெண் குன்றிதான் இரண்டு
பள்ளச் சாரடைவேர் மூன்று
பரவு மஞ்சள் நாலுடனே
உள்ளதமச்சாறு முகந்த
துரிசேழ் பளிங்கு
மெள்ளத்தேசிப்பழச் சாற்றில்
அரைத்த முலைப்பால் உரைத்திடுமே.
மேவும், பற்பலக் கண்ணோவும்
வெருண்டோடும் தேனிலிடப்

---

*"ஏறுமயில்மேறி விளையாடு முகம் ஒன்று" என்ற பாட்டின் தாக்கம் பச்சையுண்டையின் பாட்டில் உள்ளது.

பரவும், படலம், நீர்ப்பாய்ச்சல்
பல முளைவெள்ளை இமைத் தடிப்பும்
தாவும், புழுவெட்டுடன் பிரிச்சல்
அசலமும் புகைச்சல் தானும்மறு
மேவும், பச்சையுண்டை இது
என்றே முனி இயம்பினாரே.

| | | |
|---|---|---|
| உரை: | காக்கணவேர் | - 1 பங்கு |
| | வெள்ளை குன்றிமணி வேர் | - 2 பங்கு |
| | குழிச் சாரணை வேர் | - 3 பங்கு |
| | மஞ்சள் | - 4 பங்கு |
| | அதிவிடையச்சாறு - | |
| | துருசு | - 7 |
| | பளிங்கு | - |

இவைகளைப் பழச் சாற்றில் அரைத்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணிலிடவும்.

பலவகையான கண் நோய்கள் தேனில் உரைத்துப் போட நீங்கும். படலம், நீர்ப்பாய்ச்சல் அனேகவிதமான முளைகளை உடைய இமைத்தடிப்பு, புழுவெட்டு புகைச்சல், என்பன தீரும் என்று முனிவர் கூறுனார். சட்டை முனி, மச்சமுனி, பிரம்மமுனி என்று பலர் உள்ளனர்.

## பச்சை உண்டை

பேரண்டம், ஓரிதழ் தாமரைவேர், பலகறை வேப்பம் பிசின் - வகைக்கு 1 பலம் ; துருசு - 2 பலம். (சுத்தி செய்தது) நந்தியாவட்டைக் கொழுந்து 1 பலம், இந்துப்பு - 1 பலம். நல்லெண்ணெய் வார்த்தரைத்து, கயிறு செய்து, முலைப் பாலில் உரைத்து விடவும்.

## சமலாதி உண்டை

| | |
|---|---|
| பேரண்டம் | - 4 பலம் |
| செம்புப் பொடி | - 3 பலம் |

| | |
|---|---|
| துத்தம் | – 4 பலம் |
| துருசு | – 1 பலம் |
| ஓரிதழ்த் தாமரை வேர் | – 1 பலம் |

இவைகளைப் பனை மட்டை சாற்றால் அட்டமி முதலாக மூன்று நாள் அரைத்து உண்டை பண்ணவும். நிழலில் உலர்த்தி, முலைப் பாலிட, கண்ணோய் எல்லாம் தீரும்.

### குளிகை

பளிங்கு, மஞ்சள் மரமஞ்சள்
பரிய மிளகோடு இந்தப்பு
விளங்கு, மனோசிலையும் சமனாய்
விட்டுக் காடி தனிலரைத்துக்
களங்கறவே, நிழலுர்த்திக்
காடியில் உரைத்துக் கண்ணிலிட
விளங்கா, கண்ணும் விளங்கிடவே
வேண்டாம் சிவப்பும் போய் விடுமே.
இரண்டின், இளநீர்த் தண்ணீரும் அவ்வளவு அம்மட்டை
இடித்து வடிகட்டினசாறும் கலந்தே
ஓரிதழ் தாமரைவேர், சிறுகீரைவேர்
அரைத்துக் கலந்துக் குழம்பாகக் காய்ச்சிப்
பரணியில் வைத்துக் கொண்டு
கண்ணுக்கிட வெப்பம் என்பன தீரும்.

**உரை:** பச்சைக் கற்பூரம், மஞ்சள், மர மஞ்சள், மிளகு, இந்துப்பு, மனோசிலை வகைக்குச் சமஅளவு. காடியில் அரைத்து, நிழலில் உலர்த்தவும். மீண்டும் காடியில் உரைத்துக் கண்ணிலிட சிவப்பு நிறம், பார்வை தெரியாத நிலை நீங்கும்.

.................................................................................................

*பள்ளம் – ஆம் ; குழி, உள்ளத்தம் – அத்தம் – அதிவிடையம்.*

### வெள்ளை முத்துக்கு

சீந்தில் இலையை ஒரு மிளகு அளவு அரைத்துண்டை பண்ணவும். நிழலில் உலர்த்திச், செம்பில் உரைத்துக் கண்ணிலிடவும். கண் நன்றாய்த் தெரியும்.

### இன்னம்

புரசு, இம்பூரல் அரைத்து நாலாறு நாள் (10 நாள்) போட, வெள்ளெழுத்து மாறும்.

### இன்னம்

புளியிலைச் சாற்றில் வெங்காரமுரைத்திடவும்.

### மாலைக் கண்ணுக்கு

எட்டி விதையை முலைப்பாலில் உரைத்திடவும்.

### இன்னம்

மிளகுப் பழத்தை உதய நேரத்தில் நல்லெண்ணெயில் ஊறப் போடவும். அந்தி நேரம் நல்லெண்ணெயில் பாதியுரைத்திடவும்.

### இன்னம்

வெள்ளெருக்கம் வேர் சுக்கு, கருப்புக் கட்டி – வகைக்குச் சம அளவு ; அரைத்து போட மாலைக்கண் முதல் சர்வ வியாதியும் தீரும்.

### இன்னம்

ஆடாதோடையிலையைப் பாலில் அரைத்துக்கொள்ள, மாலை மயக்கம் தீரும்.

### இளநீர்க் குழம்பு

இளநீர் – 4 எண்ணிக்கை

குமிழம் பழம் – 40 எண்ணிக்கை

..............................................................................

*பளிங்கு – கற்பூரம்*

✦ *இப்பாடல் நன்கு அமையவில்லை. ஒரு சீர் குறைவாக உள்ளது.*

அஞ்சனக்கல், துத்தம், (பச்சை) கற்பூரம், பீதரோகணி, துருசு சிவந்த கடல் நுரை இலைகளைப் பொடி செய்யவும். (வகைக்கு 1 பலம்)

இளநீரில் பழங்களைப் போடவும். பிசைந்து வடிகட்டவும். இதைக் காய்ச்சிக் குழம்பாக்கவும். குழம்புக்கு 1 பலம் நிறை கூட்டிச் சேர்த்து பரணியில் வைக்கவும். கண்ணிலிட முன்னர் கூறிய நோய்க் தீரும்.

## இன்னம் - குழம்பு

இளநீர் – நாழி

நறுக்கியப் பேய்க் கரும்பு.

உலையிலிடவும். ஒரு நாள் ஊறவைத்துக் காய்ச்சவும். பீத ரோகணி, கடுகு ரோகணி, பச்சைக் கற்பூரம், துத்தம், துருசு, அஞ்சனக் கல், இலாஞ்சனம், கடல் நுரை – நாழி குழம்புக்கு 1 பலம் நிறை கூட்டிப் பொடித்து குழம்பில் தூவவும். வேதித்து வைத்துக் கொண்டு, கண்ணிலிட எல்லாவகையான குற்றங்களும் தீரும்.

## வருண சுக்கிரன், வாதக் கண்வலி தீர

துத்தம், துருசு, வெண்காரம், மிளகு, இந்துப்பு, திப்பிலி, குறும்பி, பச்சைக் கற்பூரம், கறுப்புக் கொள் ; நெய்யிலரைத்து தேனும் சேர்க்க, வருண சுக்கிரன், படலமுனை, தினவு, சொறி, அக்கரம், திமிரம், நீர்ப்பாய்ச்சல், திமிரம் தீரும்.

## வலிக்கு

தேள் கொடுக்கிலையை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைக்கவும். கொதிக்க வைத்து, ஆறிய பின், கண்ணைச் சுற்றி, வளையம் பூசவும்.

## கண் விழி தெரியாமல் வீங்கினால்

சிப்பித் தசை, நற்சீரகம்; பசுவெண்ணெயிலிட்டுக் காய்ச்சித் தாரை விடவும்.

## வேது

அகத்தியிலையை தண்ணீர்விட்டு அடுப்பிலேற்றி வேகவிட்டு, ஆவி பிடிக்கவும்.

+ கண் சிவப்புக்கு

கோழியின் விரலை அறுத்து, இரத்தத்தைக் கண்ணில் விடவும். (இம்முறை இக்காலத்துக்குக்கு ஏற்றதல்ல.)

## கண்மயிர், புழுவெட்டக்கு

திருகுகள்ளியின் பாலை சீலையில் ஊட்டவும். உலர்ந்தபின் எடுத்துக் கொள்ளவும். தீயிலிட்டுக் கொளுத்தவும். எலுமிச்சம்பழச் சாற்றில், துணிக்கரியைக் குழப்பிக் கண்ணில் பூச புழுவெட்டு மாறும்.

## பூவுக்கு

பேரண்டத்தை (தலையோடு) தேனில் உரைத்துத் தடவவும்.

## புகை

கடுக்காய், மிளகு, பூண்டு – சமஅளவு, அரைத்துச் சீலையில் தடவி, உலர்த்தவும். திரித்து, கொளுத்தி, புகையை மூக்கில் காட்டவும்.

## கண்நோவு தீர

வலக்கண் வலிக்கு, குப்பைமேனி இலையைக் கசக்கி வலது பக்கக் காதிலும், இடது கண் வலிக்கு, இடது பக்கமும், இரண்டு கண்களின் வலிக்கு, இருகாதுகளிலும், பிழியவும்.

## புறவளையம்

மண்வெட்டியால், சிவப்பு நாயுருவி வேரை வெட்டி எடுக்கவும். தீயிட்டுக் காய்ச்சவும். எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துப் புற வளையமாகப் பூசவும்.

சிவப்பு நாயுருவி இலையை அம்மியில் அரைத்துச் சாறு பிழியவும். விரலால் நனைத்துத் தேய்க்க, வலி தீரும்.

## வலி தீர

| | | |
|---|---|---|
| கருவேலம் பிசின் | – | 1 பலம் |
| படிகாரம் | – | 1/2 பலம் |
| அபின் | – | ,, |

எலுமிச்சம் பழச்சாறுவிட்டரைத்து, சீலையில் தடவி உலர்த்தவும் உலர்ந்த துணியில் சிறிதளவு கிழித்து எடுக்கவும். தாய்ப் பாலில் போடவும். கசக்கிக் கரண்டியிலிட்டு, சூடுபடுத்தவும். இளஞ் சூட்டில் எடுத்து முகத்தில் வைத்துக் கண்ணினில் விடவும்.

## திரிப்புகை

கடுகு, கருங் குங்கிலியம், மஞ்சள், மிளகு சமஅளவு. அரைத்துச் சீலையில் தடவவும். நிழலில் உலர்த்தி, தலைச் சுருளிக் கொடியை வைத்துத் திரித்துத் தீயிட்டு கண் நொந்தால், மூக்கில் புகையை நுகரவும்.

## பூவுக்கு

வெள்ளைக் காக்கணவேரை, முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடவும்.

மிளகு, துத்தம், துருசு, இந்துப்பு, கடல் நுரை, வெண்கல் பொடி, செம்புப் பொடி, சந்தனம், கோட்டம், செம்மஞ்சு, மஞ்சள் (முண்டையோடு) பேரண்டம், முட்டையோடு கற்பூரம், சர்க்கரை (வெள்ளை) தாமரைவளையம், நாகவண்டு, நெல்லிப்பருப்பு, கடுக்காய் வகைக்குச் சமஎடை. கையான், பச்சிலை பாகல் இலை, முருங்கை இலை, வேப்பிலை, புளியிலை ; வகைக்கு 1 பிடி, இவைகளை இடித்த சாற்றால் கடைச் சரக்குகளை 1 சாமம் அரைத்துக் கயிறு செய்யவும். நிழலில் உலர்த்தி, தாய்ப் பாலில் உரைத்துப் போடவும். கண் திமிர், கண் நோதல், அழிகண் மாலை, கண் காசம், மாறுவகை, பீளை சேருதல், பூப்பட்டது. திதி, கோபதோசம், நீர்முட்டி. முடமயிர், இரணிய காசம், தினவு, இரத்த படலம், இரத்த ஊன் வற்றி விழுந்த கண், அமரம், வெள்ளெழுத்து, புகைச்சல், இழிகண், இரைக் குற்றம், இரண சுக்கிரன், வருண சுக்கிரன் மற்றது தீரும்.

## இரத்தனாதி உண்டை

தங்கம், வெள்ளி, முத்து, பவழம், பீதரோகணி, துத்தம், சங்கு, திப்பிலி, கடல்நுரை, மிளகு அரிதாரம், பவளக்கால், மனோசிலை, வயிரம், மாணிக்கம், நீலம், வயிடூரியம், புருசராகம், கோமேதகம், மரகதம், ஓரிதழ்

---

✦ இது சரியான கண்நோய்க்கான மருத்துவமில்லை.

தாமரை, பொன்னாங்காணி வேர், பிச்சிப்பழம், இருவாட்சிப் பூ, தாமரைப் பொடி, வெங்கலப் பொடி, கோட்டம், மதுரம், – இவைகளை எலுமிச்சம் பழச் சாறு, நந்தியாவெட்டைச் சாறு விட்டரைத்து, கயிறு பண்ணவும். நிழலில் உலர்த்தித் தண்ணிய அமுதில் உரைத்திட நயன நோய் 96 ம் அகலும்.

வேறு

மாணிக்கம், முத்து, பவழம், நீலம், கோமேதகம், புருசராகம், வயிடூரியம், வச்சிரம், மரகதம், படிகம், வெள்ளி, பொன், செம்பு, வங்கம், கருப்பு, வெண்மை, அரிதாரம், மனிதப்பல், நாய்ப்பல், ஒட்டகப்பல், பசு, எருமை, மரை, குதிரை ஆகியவற்றின் பல், பன்றிக் கொம்பு, மான்கொம்பு, எருமையின் கொம்பு, நொச்சிஇலை, புங்குவிரை, திரிகடுகு, சங்கு, பலகறை, – சம அளவு வகைக்க – தண்ணீர் விட்டரைத்து குளிகை செய்யவும். நிழலில் உலர்த்தவும். நோயறிந்து, அதற்கான சாறு, தேன் தாய்பாலில் உரைத்து இட, 96 வகை நோய்கள் தீரும்.

## பீதரோகிணிக் குளிகை

| | |
|---|---|
| பீத ரோகிணி | – 3 பலம் |
| துருசு | – 2 பலம் |
| பேரண்டம் (தலையோடு) | – 3 பலம் |
| சங்கு | – 2 பலம் |
| வெள்ளைக் காக்கணவேர் | –1 பலம் |
| ஓரிதழ் தாமரைவேர் | – 3 பலம் |
| பச்சை வளையம் | – 2 பலம் |
| பன்றிக் கொம்பு | – 1 பலம் |

எலுமிச்சம் பழச் சாற்றில் மூன்று நாள் அரைத்துக் கயிறு செய்து, நிழலில் உலர்த்தவும். இமைத்தடிப்புக்கு – சிறுபூளைச் சாற்றிலும், அமரத்துக்கு, சாரணை சாற்றிலும் புகைச்சலுக்கு கையான் சாற்றிலும்,

..............................................................................

*தண்ணிய – அமுது – பழய சோற்றுநீர்.*

இழைத்து இடவும். கண்வலி தீர, நாதவன், திட்டிக்கல் களிம்பு வாங்கி முலைப்பால் வார்த்து, செம்பில் உரைத்திடவும்.

**கண் நோய்** : முலைப்பாலிடவும்.

தசை படர்ந்ததற்கு : கோழிக்காரம், [1]ஓடும் நன்றாகப் பொடி செய்யவும். கருப்புக்கட்டி, கடுக்காயின் பொடியைச் சேர்த்து பசுநெய்யில் குழப்பி இடவும்.

படலம் தீர : முருங்கை விதையை எலுமிச்சம் சாறு விட்டரைத்து, சூரிய ஒளியில் வைக்கவும். தைலமாகும். தைலத்தை இடவும்.

## தாம்பிராதி உண்டை

செம்பு, சடாமாஞ்சில், குங்கும்பூ, சந்தனம், அஞ்சனக்கல், சங்கு, கடல்நுரை, இந்துப்பு, அல்லிக் கிழங்கு, மனோசிலை, ஏலம், இலவங்கம், பச்சிலை மஞ்சள், மிளகு, செண்பகமொட்டு, திப்பிலி, வெள்ளி, பளிங்கம், மரமஞ்சள், தேறுவிதை, வெங்காரம், சிறுகீரை வேர், பசுவின் பல் - வகைக்குச் சமஎடை ; பீர்க்கின் இலை, கரிசாலை இலை, வேப்பிலை - இவைகளின் சாற்றில் ஒவ்வொரு நாள் அரைக்கவும். நான்காம் நாள், தேன், நெய்விட்டரைக்கவும். கயிறு செய்யவும். நிழலில் உலர்த்தி முலைப்பாலில் இட, திமிரம், குந்தம், ஆணிப்பூ, அமரம், விழி விழுங்கி, விரண சுக்கிரன், நீர்க்கண், பற்பரோகம் தீரும்.

## கற்பூராதி உண்டை

கற்பூரம், கோரோசனை, கோட்டம், பச்சை கற்பூரம் – சம அளவு, வகைக்கு எடுக்கவும். புங்கம் பட்டைச் சாற்றால் அரைக்கவும். உண்டை செய்து, முலைப் பால் சேர்த்து விட, புகைச்சல், வெப்பம் குளிர்ச்சி தீரும்.

1. பேரண்ட ஓடு, குணம் – இலட்சணம்.

## எண்ணெய்

கரிப்பான், பேய்ப்பீர்க்குப் புளியிலை
　　　　கொடுப்பை நெல்லிக்காய் குணப்பழம்
பசிய மஞ்சள் சாறால் ஒவ்வொன்று
　　　　அரைப்படி வெள்ளாட்டுப்பால்
உரிஇளநீர் படிஒன்று அளத்திரண்டு நாழி
　　　　எண்ணெய் சேரத் தணலில் கிண்டி
மருக்கோள் சந்த மிளகு சுக்கு
　　　　வெட்டிவேர் தாலம்கால், மதுரம்
அரைக்கோட்டம் இரு சீரகம் செண்பக
　　　　அரைக்கும் ஓர்வகை உரைத்தே
அரைக்கால் பலம் ஓர்வகை ஊறிய முன்னேநெய்
　　　　கரைத்து சாற்றினில் கலந்து காய்ச்சே.

**உரை :** பின்னர் மிளகு, சுக்கு, வெட்டிவேர்- 1/4 பங்கு, பனை 1/4 பங்கு, மதுரம் 1/2 பங்கு, கோட்டம், சீரகம் கலந்து காய்ச்சவும். செண்பகமொக்கு, நெல்லிக்காய், எலுமிச்சை, மஞ்சள்சாறு, 1/2 படி வீதம் எடுத்து, வெள்ளாட்டுப்பால் – உரி, இளநீர் 1 படி 2 நாழி எண்ணெயில் கலக்கவும், எரிக்கவும்.

நேத்திரவாயு, உச்சியிடி, தலையிடி, கண் இடி, சூடு, வளர்த்தி, துன் மாங்கிசம், நீர்ப் பாய்ச்சல், பத்துவகை தசைப் படலம் போகும்.

காய்ச்சி உருள் மெழுகு, பதம் கண்டிறக்கி வடித்து
　　　　கருத்தினுடன் பழங்கலசத் தூற்றியதைச் சிரசில்
தேய்த்து முழுகிடின் நேத்திர வாயு உச்சிஇடி
　　　　நீள்சிரசு இழிகண் சூடு வளர்த்தி துன்மாங்கிசநீர்
பாய்ச்சலோடு, பத்துவகை துண்ணி வருதசைப்
　　　　படலம் ஓடும் தும்மல் ஒருதலைவலி நோய் தீரும்
பூச்சொருகு கொந்தழகுச் சந்தமணிக்கும்ப
　　　　புளக முலைத் தவளநகைப் பூங்கமலத் திருவே.

**தைலம் :** வேர்பீர்க்கு, புளி ஈர்க்கு, நாரத்தைப்பிஞ்சு – 1 – ஒன்று பலம் நற்சீரகம், அரத்தை, சதகுப்பை 5 பலம், எருமைப் பால்

வார்த்தரைத்து, கூட்டிக் கிண்டிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து, 4 நாளைக்கு ஒரு முறை முழுக்கு, முழுக, நயன ரோகம் தீரும். இது மகடூஉ முன்னிலையாகும். பெண்ணின் அழகு வர்ணிக்கப்பட்டுள்ளது.

## காசம், நீர் பாய்ச்சல், பரம ரோகத்துக்கும் தைலம்

ஏலம், இலவங்கம், சாதிக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோட்டம், கஸ்தூரி மஞ்சள், கருவாப்பட்டை, செஞ்சந்தனம், கடுகு ரோகணி, சிறு நாகப்பூ, செண்பகப்பூ, மலை பச்சை, குந்திருக்கம் வகைக்கு 3 பலம் குறுந்தொட்டி வேர்த்தோல், பொன்னாங்காணி வேர், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், மிளகு இவையெல்லாம் அரைத்து, எண்ணெய் 3 படி, பால் 3 படி, இளநீர் – 1 படி, கலந்து காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து, முழுக, முன்சொன்ன நயன வியாதி எல்லாம் தீரும்.

### எண்ணெய்

எண்ணெய் கட்டக் கண்ணும் தெரியும்
குறுந்தொட்டி வேரும்கேள்
சந்திநெல்லிக்காய் கசாயமிட்டுத் தட்டி
ஆரைநன்னாரி இலாமிச்சவேர்
தகரமுடன் இருவேலி சாதிக்காயும்
எட்டு முதல் செவ்வல்லி ஏலமிவை
அரைத்தே எண்ணெயில் வெந்திட்டுத் தேய்க்க
கெட்ட கண்ணும் நன்றாம் பித்தம் போகும்
*கேட்கில் இதற்கொப்பில்லை கெட்டிதானே.

### எண்ணெய்

பகர்ந்திடும், கரிப்பானசாறு மேல் வரா
ஆமலகச் சாறு இவைப்படி மிளகுரியாம்
நீல, வேல்விழியாய் சந்தம், நிகழ்த்த
அரைப்பலம் பால்விட்டு
சாலவே, அரைத்துக் காய்ச்சியிட
தலைக்கண்ணோய் ஏகும்.

........................................................................

புளகம் – புடைப்பு. * பாடல்வரிகள் நன்கமையவில்லை

உரை: கரிசாலை, நெல்லிக்காய்ச் சாறு வகைக்கு 1 படி, மிளகு – உரி, பால் – 1/2 பலம் ; அரைத்துக் காய்ச்சி தைலம் செய்து, குளிக்க தலைவலி, கண்ணோய் நீங்கும்.

## தசை வளர்ச்சி புகைச்சலுக்கும் எண்ணெய்

சீந்தில் தண்டை அரைத்து எடுத்தது நெல்லிக்காயளவு.

| | |
|---|---|
| கற்றாழைச் சாறு | – உரி |
| தாமரை வளையச் சாறு | – உரி |
| தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு | – உரி |
| எண்ணெய் | – நாழி |

அதிமதுரம், கோட்டம், ஏலம், இலவங்கம், செண்பகப்பூ, பச்சிலை கற்பூர, செவ்வல்லிக் கொடி, சந்தனம் இரு வேலிவேர், கடுக்காய், மஞ்சட்டி வகைக்கு – 1 பலம். முன்சாறு விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி, பதத்தில் வடித்துத் தலைக்கு இட்டு, உள்ளுக்கும் கொள்ளவும்.

## நயன வியாதிக்குத் தைலம் வைக்க நிதானம்.

1 படி எண்ணெய்க்கு வனமூலி மருந்து 1 பங்கு. கடைச் சரக்கு 1 பங்கு. இப்படிக் கண்டு கூட்டிக் கொள்ளவும். உதிரப்பூவுக்கு, ஏழு துத்திப்பூ, பாதி மிளகு பாதி உப்பும் தட்டிப் போட்டுப் பொட்டணம் கட்டிக் கண்ணில் பிழியத் தீரும்.

## கருடாஞ்சனம்

பீத ரோகிணி, பசுவின் பல், கழுதையின் பல், தேன் மெழுகு, மதுரம், சந்தனம், இவைகளை தாய்ப்பால் விட்டரைத்து, கண்ணிலிட திமிர், படலம், காசம், பில்லம், கூமை (?) என்பன தீரும்.

சிறுகீரை, கொடுப்பை, வெள்ளைச் சாரணை, வெள்ளைக் காக்கணம், – இவற்றின் வேர், வெள்ளைக் காக்கண விதை, பேரண்டம், நாயின் பல், கோழி நெஞ்செலும்பு, முத்து, பவளம், துத்தம், துருசு, பச்சைக் கற்பூரம், திட்டுப்புனுகு, பனைமட்டைச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, வகைக்கு வராகன் எடை, நல்லெண்ணெய் விட்டரைக்கவும். குழம்பாக்கிக் கொண்டு, கண்ணிலிட கண்நோய்கள் தீரும்.

---

வனமா மூலி – தன்னாரி, மருந்து – இஞ்சி.

## பூவுக்கு உண்டை

கொட்டை பாசியிலை, ஊமத்தை, துத்தம், துருசு ; வகைக்குச் சமஅளவு. சிறுநீரில் அரைத்துண்டை செய்யவும். சிறுநீரில் உரைத்திட, பூமாறும்.

## புகைச்சலுக்கு

புனுகைச் சுட்டுக் கொள்ளவும். செம்புக் களிம்புள்ள கலத்தில் நெய்யை ஊற்றவும். உரைத்து கண்ணிலிடப் புகைச்சல் தீரும்.

## இன்னம்

பசுநெய், மனுசர் (மனித) என்பு, பல் – இவைகளை, கையான் சாறு விட்டரைத்து வைக்கவும். சூடாக்கிக் கொண்டு ஆறியபின் கண்ணிலிடப் புகைச்சல் தீரும்.

## அமரம்

ஆயில் மரநார், கோழி இரத்தம், கொழுப்பு, தேங்காய் எண்ணெய் துட்டு, கடுக்காய் பருப்பு – 5 வராகன் இவைகளைக் காய்ச்சி, ஆறவிட்டு கண்ணிலிடவும்.

## புகைச்சல் தீரத் தைலம்

நல்லெண்ணெய், எலுமிச்சைச் சாறு, நெல்லி வேர்ப்பட்டைச் சாறு வாதமடக்கிச் சாறு, வெற்றிலைச் சாறு நீருள்ளிச் சாறு – வகைக்கு உரி அளவு மிளகு – 1 பலம், மஞ்சள் 1 பலம் சவுக்காரம் – 5 பலம். வென்னீர் விட்டரைத்து, கலந்து காய்ச்சி வடித்து முழுகவும்.

சுவரெலும்பினோடேச் சுவர்க்கரியும் சேர்த்தே
குவி, முலைப்பால் விட்டரைத்துக்
கூட்டிய விரிழையாய் உண்மையோர்
கண்ணுக்கு உழுந்தளவு போடுவீரேல்,
அக்கண் வலி எல்லாம் தீரும் காண்.

## வலிகாசத்துக்கு எண்ணெய்

| | |
|---|---|
| வெள்ளாட்டுப்பால் | – உரி |
| வரள் பூலாச் சாறு | – உரி |
| கருக்குவாயிலைச் சாறு | – உரி |
| சீரகம், மிளகு | – 1 1/2 |
| கத்தூரி மஞ்சள் | – 1/2 |
| நல்லெண்ணெய் | – 1 படி |

அரைத்துக் காய்ச்சி வடித்து மூழ்கத் தீரும்.

## குந்தப் புடைப்புக்கு எண்ணெய்

| | |
|---|---|
| ஆயில்பட்டைக் கசாயம் | – |
| அலரிப்பழுப்புச் சாறு | – |
| (கொள்) காணைச்சாறு | – வராகன் |
| சதக்குப்பை | – 5 வராகன் |
| சவுக்காரம் | – 5 வராகன் |
| இந்துப்பு | – 5 வராகன் |

வெள்ளாட்டு நீர்வார்த்தரைத்துக் காய்ச்சி வடித்து, மூழுகத் தீரும்.

## நேத்திர வாய்வுக்கு நெய்

| | |
|---|---|
| சிற்றெலும்பு | |
| முட்டைத்தோடு | – 5 வராகன் |
| நெய் | – |

அரைத்துக் கலந்து காய்ச்சிக் கண்ணுக்கொரு துளியிட, நேத்திர வாயு தீரும்.

பூ / புரை – படர்ந்த கண்ணுக்கு

வெள்ளைச் சாரடைவேர்

ஓட்டில் குளிர்ந்தநீர் .. உரைத்து

சுருக்கென்று நொந்து, புரையற்றுப் பூப் பரியும்.

## உண்டை

சங்கு, சுக்கு, திப்பிலி, வெங்காரம், வெள்ளி லோத்திரம், வகைக்கு சமஅளவு. முருங்கை இலைச்சாறு வார்த்தரைத்து உண்டை செய்து, முலைப்பாலிடத் தசை வளர்ச்சி நீர்ப்பாய்ச்சல், காசம், பூ, படலம், அமுங்கின பற்பரோகம், புகைச்சல் தீரும்.

## எண்ணெய்

சீந்தில், நெல்லிக்காய், கற்றாழை, சதாவரி, தாமரை வளையம், வேர், விலாமிச்ச வேர், கடுக்காய், மஞ்சிட்டி – அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்துத் தலைக்கிட்டு, முழுகி, உள்ளும் கொள்ளத் தசை வளர்ச்சி, பலவும், புகைச்சல், பித்தம் இவை தீரும்.

## கண்ணெரிப்புக்கு

பொன்னாங்காணி வேரை, பால் விட்டரைத்து உண்டை பண்ணி, நிழலில் உலர்த்தவும். பின் தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணிலிடவும். கண்ணெரிப்புத் தீரும்.

வஞ்சனைக் குறையாமல், மருந்தீட்டினால்,

மிஞ்ச வேபுணரவே உடன்கை இன்றெண்ணி பால்
கொஞ்ச பிள்ளை பிறவிக்குக் குறியாய்
துஞ்சி, இரத்தப் பெரும்பாடு தோன்றுமே.

**உரை:** இதில் இரத்தப் பெரும்பாடு தோன்றும் காரணங்கள், கூறப்பட்டுள்ளன. ஏமாற்றுதல், குற்றம், இடு மருந்து வைத்தல், அதிகப் பெண் சேர்க்கை மகப்பேறு, ஆகியவற்றால் பெரும்பாடு பெண்களுக்கு ஏற்படும்.

## குணம்

கர்ப்பிணிக் குணத்தைப்போல
கீழடி வயிற்றி முப்பில்
பற்பட வலித்துச் சற்றே
பாதியே விம்மி, இரத்தம்
விற்பொரு, புருவத்தான், நோய்
மீறிடின் மிகுந்து இரத்தம்
மற்பொரு, குழலாய் வீழும்
அறிந்துகொள் பெரும்பாடென்றே

**உரை:** தாய்மையுள்ள பெண்ணின் வயிறு போல இழுத்து வலியுடன், சிறிது பெருத்திருக்கும். நோய் அதிகமானால், அதிகமாக இரத்தம் வெளியேறும் வில் போன்ற புருவத்தை உடைய பெண்ணே இந்நோய் பெரும்பாடு எனத் தெரிந்து கொள்ளவும். மகடூஉ முன்னிலை.

**மருந்து:** செம்பருத்திப் பூவை, நெய்யில் உணக்கிக் கிறாப் பட்டையை தெளிகாடி தனில், மூதநாளும் போட்டருந்தவும், அப்பை, பருத்தி சலம், பழங்கூரை, வைக்கோல் நறுக்கிப் பழங்காடி தனில் ஊறப்போடவும். இறுத்துப் பருகக் கொம்பில் ஆவாரைச் சமூலம், இடித்த அவ்வகையே ஒன்றாக வேப்பிலை இரண்டு பிடியை, இருநாழி உழக்காக்கி இறுத்து எண்ணெய் கரண்டி இதில் வார்த்து, உள்ளருந்தத் தீரும் பெரும்பாடானதே.

சிறுகீரைவேர், பொன்னாங்காணிவேர் அரைத்து
செழித்த வல்லாரைச்சாறும், பருத்திக்காய் சாறும்
சிறுகவிட்டுக் குழை, குழைத்ததனை வெள்ளரிப்
பிஞ்சுடனே, செலுத்திவைத்து
மறுநாளும் உட்கொளப் பழஞ்சீலையிலே சிறுகீரை
வேரை வைத்துத் திரித்தழலில் சுட்டுச்
சேலையெல்லாம் வெந்தால் வேரையரைத்து
நெய்யிலுண்ணச் சிறுகிடையார், பெரும்பாடுபோம்.

**உரை:** சிறுகீரை, பொன்னாங்காணி வேரை வல்லாரை, பருத்திக்காயின் சாற்றில் குழைக்கவும். வெள்ளரிப்பிஞ்சில் நுழைத்து ஒருநாள் விட்டு மறுநாள் உண்ணவும். பழைய துணியில் சிறு கீரையை வைத்துச் சுற்றவும். தீயில் சுட்டு, சேலை வெந்தபின் எடுக்கவும். இதை நெய்யில் உண்ண, பெரும்பாடு நீங்கும்.

நாரத்தங்காயின் சிறுபிஞ்சு, தோல் இவைகளை அரைத்து, விழுதை வெண்ணெயுடன் உட்கொள்ள நன்றே.

.................................................................................

*வஞ்சனை – ஏமாற்றுதல், குறை – குற்றம். குறி – அடையாளம். துஞ்சுதல் – நிலைபெற்ற*

அத்தி', ஆல், புங்குப்பட்டை அரைத்த எலுமிச்சங்காயின்
களிப்பாக்கு ஒரு கடுக்காய்த்தோடு மிக்கோடு இறுக
அரைத்தே அரைக்கழஞ்சு கருஞ்சீரகமும் கூட்டி
எருமைத்தயிர் நீர்போக்கியதில் பத்தியமாய்க் குழைத்துத்
தள்ளே விழுங்க நாள் மூன்று
அரைப்படி விழுங்கில் சுந்தரம் பொற்பாவை
கேளீர் பித்தமுடன்
பிரமேகமூல ரோகங்கள் பெரும்பாடு
தீர்ந்துவிடும் பேசினன் மருந்தே.

உரை: அத்தி, ஆல், புங்கம்பட்டை, இவைகளை எலுமிச்சங்காயின் சாறு விட்டரைத்தபின், ஒரு கடுக்காயின் தோல் 1/2 கழஞ்சு சீரகம் சேர்க்கவும். எருமைத் தயிரின் தெளிவு நீரில் குழைத்து உண்ணவும். மூன்று நாள் தொடர்ந்து சாப்பிடவும். இரத்த பித்தம், பிரமேகம், மூலம், பெரும்பாடு என்பன தீரும். 4 படி பசும் பாலை 2 படியாக வற்றக் காய்ச்சி, புரை ஊற்றவும். அந்தத் தயிரில் பழைய அடை மாங்காய் விதையை அரைத்து குழப்பிக் கொள்ளவும். இப்படி 3 நாள் உண்ணவும்.

### இன்னம்

முசுட்டை வேர், திரளியின் வேர் – பாக்களவு எடுத்து, அரைத்துக் கொள்ளவும். மோரில் உட்கொள்ள மாறும்.

### இன்னம்

கோவைத் தண்டு, பருத்தியிலை – அரைத்து நெய்யில் உண்ண, மாறும் மருந்தினால் அடிக்கடிக் கழுவிக் கொள்ளவும்.

### இன்னம்

இலந்தையின் தம்பலமும் (இலை) நாவல் பட்டை, முற்றிய கோவைத்தண்டும் சமஅளவு எடுக்கவும். இடித்துப் பிசைந்து, பிழிந்து, காடியில் தரவும். உப்பு, புளிப்புச் சுவையை விலக்கவும். விளாந்தழையை மோரில் கொள்ளத் தீரும்.

## இன்னம்

| | |
|---|---|
| பருத்தி விதையின் பால் | - உரி |
| பசும்பால் | - உரி |
| தேங்காய்ப்பால் | - உரி |

கலந்து காய்ச்சவும். 1/2 படி வரும் வரை, வற்ற வைக்கவும். பின் கலத்தில் இடவும். 1 வராகன் வேலம் பிசினைப் பொடி செய்யவும். தூவி, 3 நாள் உண்ணப் பெரும் பாடு நீங்கும்.

இலந்தைத்தடி - 1 பலம் ; எலுமிச்சங் காயளவுக்கு அரைத்துப் பழந்தண்ணீரில் உள்கொள்ளத் தீரும்.

## இன்னம்

கீழாநெல்லி இலை, நற்சீரகம், கருஞ்சீரகம் ; இவைகளை எருமைத் தயிரால் எலுமிச்சங்காயளவு அரைக்கவும். நீர் உள்ளி (வெங்காயம்) எலுமிச்சங்காயளவு கற்றாழைச் சோற்றை நன்றாய் கழுவிப் போடவும். தேசிக்காயளவு பருத்தியலைக் காயை இடித்து, 1/2 சேர் அளவு சாறு எடுக்கவும். நிலப்பனைக்கிழங்க - 12 பங்கு அண்ட நீர் விட்டுக் காய்ச்சி வடிகட்டவும். பின் பசு நெய் - 2 படி. பசும்பால் - 2 படி ; புளியாரைச் சாறு 2 படி. வள்ளிக் கிழங்கச் சாறு - 2 படி விடவும். விளாம்பழம், கொத்தமல்லி, சிறுகாஞ்சோரி, பொன் முசட்டைவேர், திரிபலை, மாங்கொட்டை, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், பெருங்குமிழம் பழம், அத்தர் சந்தனம், சுக்கு, இலவம்பிசின், தாமரைத் தாது, கீழாநெல்லி, உதியம் பட்டை, முடக்கொற்றான், காட்டாத்திப் பூ, மாதுளையின் தோடு, வில்வப் பிஞ்சு, விளாம்பிஞ்சு, அதிவிடையம், முத்தக் காசு, வெள்ளி லோத்திரம், சாத்திர வேதி, அஞ்சனக்கல், கல்நார், திப்பிலி, அமுக்கிரா வேர், நன்னாரி வேர், இலாமிச்சம் வேர், குங்கலியம், ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, புளியங் கொட்டை தோல், குரோசானி ஓமம் ; 4 பங்கு பாலில் அரைக்கவும். கலந்த கலவையைக் காய்ச்சவும். பதத்தில் எடுத்து, வடித்து,

..........................................................................

*தம்பலம் – இலை*

1 மண்டலம் உண்ணவும். அளவு - காசளவு. நாள்பட்டப் பெரும்பாடு, எலும்புருக்கிச் சுரம், காசம், சயம், நானாவிதமாய் விழுகிறதும் சொற்பமாக விழுகிறதும், சிறுபெண்களுக்கு விழுகின்றதும், சுவாச காசம், இரத்தப் பிரமியம், இரத்த பித்தம், காமாலை, பாண்டு, இது வெல்லாம் தீரும்.

## இராவைக் குடிநீர்

பருத்திவிதை, நிலப்பனைங் கிழங்கு, நீர்வள்ளிக் கிழங்கு, முசுமுசுக்கை வேர், பேரிச்சம் பழம் 2 பலம் வீதம் வகைக்கு எடுக்கவும். தட்டி, நாழிப்பால் விட்டுக் காய்ச்சவும். உழக்களவு வரும்வரை சுண்டவைத்து வடிக்கவும். நெய் - வீசம்படி ; சர்க்கரை 2 வராகன், கலக்கவும். உண்ண, உடல் இளைப்பு, உடல், கால், கை எரிவு முதல் முன் சொன்ன வியாதி எல்லாம் தீரும்.

| | |
|---|---|
| முருங்கைப்பூ | - 3 வராகன் |
| அபின் | - 1/2 வராகன் |
| மதுரம் | - 1/2 வராகன் |

தேங்காயில் கொள்ளவும், உதிரம் நிற்கும்.

பெரும்பாடு முதல் சகலத்துக்கும் நீர் வள்ளி நெய்.

| | |
|---|---|
| நீர் வள்ளிக்கிழங்குச் சாறு | - 4 |
| பசும்பால் | - 2 |
| நெய் | - 2 |

**வேர்:**

நற்பாலை வேர், முசுமுசுக்கை வேர், நன்னாரி, பெருநன்னாரி, துத்தி.

**கிழங்கு:**

மகாளி, பூமிசர்க்கரை, மதுரம், சந்தனம், இலுப்பைப்பூ

பழம் : பேரீச்சை, முந்திரிகை, ஈச்சங்குருத்து, சீந்தில் கொடி, பற்பாடகம்.

பட்டை : நாவல், அத்தி, ஆல் (முகிழ்) அரசம் (முகிழ்). 4 பலம் வீதம் பாலில் அரைக்கவும். 3 நாள் சிறிது கொதிக்கவிட்டு 4ஆம் நாள் வடிக்கவும். தேன் சரி எடை சர்க்கரை - நாழி, திப்பிலிப்பொடி - 1/2 கலக்கவும். காலையில் கழஞ்சளவு உட்கொள்ளவும். நில்லாப் பெரும்பாடு, கட்டி கட்டியாய் விழும் சயம், உடலிளைப்பு, கைகால் எரிவு, சிறுநீர்த் தடை, என்பன தீரும்.

## கதலிநெய்

வாழைக்கிழங்கு, பூ - சமஅளவு எடுக்கவும். இடித்து, உரி நீரில் பிசையவும். வடிகட்டவும். காய்ச்சி, 1/4 பங்காக வற்றியதும் நெய் - 2 பங்கு, பால் - பங்கு சேர்க்கவும். இலவங்கம், திரிபலை, விளாம்பழம், சந்தனம், வாழைக்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, ஆலம் விழுது - 4 வராகன் அரைக்கவும். சதாவேரிச் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, நெல்லிக்காய், கிராம்பு ; 2 பங்கு, கலந்து 5 நாள் சிறு கொதியிட்டுக் காய்ச்சவும். 3 நாள் கலசப் புடமிடவும். 4ஆம் நாள் 2 காசெடை வீதம் இரு நேரம் உண்ண பெரும்பாடு, என்புருக்கி, பிரமேகம், சிறு நீர்த்தடை, நீரிழிவு தீரும்.

## பஞ்ச கவ்விய நெய்

பால், தயிர், நெய், கோமயம், கோமயச் சாறு வகைக்கு 2 படி ; கோட்டம், மதுரம், சிறுதேக்கு, கொத்தமல்லி, வாய்விளங்கம், வாலுளுவை, வெட்பாலையரிசி, உள்ளி, வசம்புப் பொடி, கருஞ்சீரகம், தேவதாரம், அரத்தை, இந்துப்பு, சதகுப்பை, சந்தனம், பூதகரப்பன் பட்டை, நன்னாரி, பூதவிருட்சம், மலைதாங்கி, சிவதை, நிலப்பனை, சாரணைவேர், கீழாநெல்லி, மிளகரணை, துத்திவேர், அதிவிடையம், ரோகணி, துருசு, குரும்பை, கிராம்பு, காந்தம், காயம், பத்திரி, திரிகடுகு, திரிபலை, வில்வவேர் - சா. (6பலம்) வீதம் அரைத்துக் கொள்ளவும். கலந்து 4 நாள் சிறுகொதியாகக் காய்ச்சி, 5ஆம் நாள் வடித்து, எட்டுநாள் கலச புடம் வைக்கவும். ஒன்பதாம் நாள் முதல் காலை பலம் எடை நெய் கொள்ளத் தீரும்.

## தாது வரத்தனைக்கு

பிரமிச்சாறு, பசுநெய், - வகைக்கு நாழி, மஞ்சள், நெல்லிப் பருப்பு, சிவதை வேர், கடுக்காய், திப்பிலி, வாய்விளங்கம், இந்துப்பு, வசம்பு, அரத்தை, சீனி - பிரமிச்சாற்றால் அரைக்கவும். பின்னர் நெய்யிட்டுக்

---

*ஆனைந்து - பஞ்சகவ்யம்*

காய்ச்சவும். பதத்தில் எடுத்து, வடித்துச் சாப்பிடவும். தாது பெருகும், விருப்புருதி, உடல் வெட்டம் தீரும்.

## நெய்

கோழி முட்டையை உடைத்து, கூடு நிறைந்த வெள்ளைக்கரு, கூடு நிறைந்த தேன், கூடு நிறைந்த இஞ்சிச்சாறு, கூடு நிறைந்த நீருள்ளியின் தண்ணீர், கூடு நிறைந்த நல்லெண்ணெய், கூடு நிறைந்த நெய், கூடுநிறைந்த கூகை நீர், முருங்கைப் பட்டையை அரைத்து, ஒரு பாக்களவு கூட்டிக் கொண்டு, 3 நாள் உண்ணவும். தாது விளைந்து, பண்டுபோலாம்.

## இன்னம்

அமுக்கிரா வேர் பொடியைப் பசு நெய்யில் குழைத்துண்ணவும்.

## குய்யச் சோர்வுக்கு

நிலப்பனை கிழங்கு – 1 பலம்.

உன்னாவேர், பிரண்டை வேர் – சம அளவு எடுக்கவும். அரைத்துப் பசும்பாலில் தரவும். 3 நாள் குடிக்கத் தண்டெழும்பும்.

## சூரணம்

ஏலம், இலவங்கம், திரிபலை, தக்கோலம், சிறுநாகப்பூ, கற்பூரம், (பச்சை) சந்தனம், அதிமதுரம், திரிகடுகு, யானைத்திப்பிலி வகைக்குச் சம அளவு. இடித்துப் பொடி செய்யவும். பொடி எடைக்குக் கஞ்சாவுடன் புடமிட்டப் பொடியைச் சேர்க்கவும் – பாதியளவு சீனியைக் கூட்டி, காலமே வெருகடியளவு உட்கொள்ள, சரிபோகம் பண்ணலாம். சுவாச காசம், பாண்டு, இரத்த பித்தம், தாது நட்டம் தீரும்.

..........................................................................................

*முகிழ் – மொட்டு, அரும்பு. கூடு – சிமிழ், அடைப்பு, உறை, பண்டு – பழைமை, குய்யம் – ஆண்குறி வெருகடி – மூவிரலளவு.*

### தண்டு கட்டுவிட

தென்னம் பூவிரியைத் துவைக்கவும். 1/2 படி பசும்பாலில் போட்டுப் பிசைந்து வடி கட்டவும். சங்கம் வேரை அரைத்து எலுமிச்சையளவு கூட்டவும். இதை 3 நாள் உண்ணவும்.

இன்னம்

புதுக்கலசத் தண்ணீரால் கருப்புக் கட்டியை அரைத்து, கரைத்து வடிகட்டவும். கட்டுக் கொடித் தழையை இடித்துப் பிழிந்த சாறைவிட, உறையும். தின்னவும், 3 நாள்.

வெந்தயத்தை ஒரு சேர், நல்லெண்ணெயில் 3 நாள் ஊறவைக்கவும். 4ஆம் நாள் அரித்து, அரைத்துருட்டவும். இவ்விதம் இருமுறை செய்து, சுண்டைக் காயளவு உண்டை செய்யவும். நெய்யில் உண்டையை உண்ண, தண்டுக் கட்டுவிடும்.

### ஆணின் கட்டுக்குப் பூச்சு

உத்தாணிக் கொழுந்து
சிற்றிலைப் பால்,
பின்கொழுந்து – கசக்கித் தடவ, ஆண் குறியில் திமிர்ந்து கொள்ள, ஆண்மை கட்டுவிடும்.

பசுநெய் – 1 படி காயும் போது வெக்காலிப்பிசின் 7 பாக்களவு பொடி செய்து, போட்டுக் கிண்டவும். ஒரு தேசிக் காயளவு தின்று, சாறும், நெய்யும் உண்ணவும். 10 நாள் உண்ண, தாதுவிர்த்திக்கும்.

### அசதி, மறதிக்கு

வல்லாரை, கொட்டை கரந்தை இலை, வசம்பு, சுக்கு, திப்பிலி, நிலப்பனைக் கிழங்கு – வகைக்கு சம அளவு, சூரணம் செய்து, தேனில் கொள்ளவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். அசதி, மறதி தீரும். இளைப்பு, இருமல், மருந்தீடு தீரும்.

**கட்டுக்கு**

வெள்ளைத் தூதுவளை சமூலம், நிழலில் உலர்த்தவும். அரைத்து, பொடி செய்து வெருகடியளவு, உழக்குப் பாலில் 1/2 மண்டலம் உண்ணவும். பால் முருங்கை, துவரை, பாசிப்பயறு, முதல் கரந்தை இலைக்கறி ஆகும். புளிச்சுவையை நீக்கவும்.

பிரமித்தழையை பாலில் அரைத்து, நெல்லிக்காயளவு, உரி பாலில் கொள்ளவும். 3 நாளில் கட்டு விடும்.

**மாறுகால், மாறுகை சூம்பி, முடங்கும் நோய் தீர எண்ணெய்**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | - 2 பங்கு |
| எருமைப் பால் | - 4 பங்கு |
| குறிஞ்சான் வேர் | - 1 பங்கு |

தேங்காயளவு கொடு வில்வவேர் (வில்லை) வேர் - அரைத்து, முன் உள்ள எண்ணெய், பாலில் கலந்து காய்ச்சவும். மெழுகு 1 கரண்டி எண்ணெய் கொடுத்து, உடலுக்குத் தடவி பிடிக்கவும். 7 நாள் செய்யவும். மறுபத்தியம் 7 நாள் காக்கவும். உப்பு, புளி, கசப்பு கூடாது. எருமைப்பால் கூட்டி வரவும். 15 நாளைக்கு மேல் வெறும் நல்லெண்ணெய் அப்பிக் குளிக்க, கை, கால் முடங்கல், சூம்பல் தீரும்.

**இன்னம் - தைலம்**

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | - நாழி |
| இரசம் | - 2 பலம் |
| பெருங்காயம் | - ,, |
| மிளகு | - 300 |
| சிகமண்டலி (சிவப்பு) | - 2 பலம் |
| பூண்டு | - ,, |
| வசம்பு | - ,, |

இவைகளை எல்லாம் தட்டி எண்ணெயில் போடவும். வண்டு கட்டி மூடி, எருகுப்பையில் 1/2 மண்டலம் புதைக்கவும். பின் எடுத்து, எறும்பை

நீக்கவும். 1 காசளவு எண்ணெயைக் கொண்டு தெளித்துவர, பில்லி, சூனியம் போன்ற மந்திரத்தால் உண்டான மனநோய்கள் விலகும். 20 ஆண்டுகள் இருப்பினும், வீரியமுண்டு, அறியவும்.

## துவாலை மருந்து

வேலிப்பருத்தி இலை,
நாய்ப்பாகல் „
வாதமடக்கி „
வெள்ளைக்காக்கணத்தி இலை
பேய்த்தும்மட்டி „
பெருந்தும்பை „
குப்பை மேனி „
இலைகளை வைத்துக் கால் முதல் தலை வரை துவாலை இடவும்.

**வஞ்சனைக்கு:** பேய்த்தும்மட்டி வேரை அரைத்து, எலுமிச்சை யளவு வெள்ளாட்டுப் பாலில் தர, உடல் கடுப்பு, அனைத்து வகைத் துன்பமும் தீரும். மிளகுத் தக்காளி இலையை வாய் பேசாமல் பறிக்கவும். உள்ளங்கையளவு சாற்றை உள்ளே தந்து இலையை பாதம் முதல் தலைவரை 3 நாள் துவாலை இடவும். 4ஆம் நாள் குளிக்கவும். பில்லி, சூனியத்தால் ஏற்பட்ட மனக் கோளாறுகள், உடல் வலி தீரும்.

## குளிகை

வெள்ளருக்கம் வேர்
வெள்ளுருவி வேர்

ஆவரை, பாதிரி, மல்லி, கருவூமத்தை, பொன்னாவரை வேர், கடுமாவேர், வேலிப்பருத்தி வேர், பேய் குமட்டி, கையான் மாவிலங்கம் - வடக்குப் போனதாக வெட்டி, வகைக்குச் சமஎடை, எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்துத் தேற்றான் விதையளவு குளிகை செய்யவும். நிழலில்

---

*வஸ்த் – நூல், துவாலை – தைலம், உடலில் தடவும் பூச்சு.*

உலர்த்தி, இளவென்னீரில் இட, பில்லி, சூனியம், பார்வைக் குணம், வெடிக்குணம் ஆகியவற்றால் ஏற்பட்ட மன நோய்கள் நீங்கும்.

## இன்னம் - தழை மருந்து

முயல் செவியிலை, பொன்னாவரை இலை, தவசி முருங்கை இலை, சம அளவு எடுக்கவும். கசக்கி, 3 துளியை உண்டு, உடலெங்கும் துவாலை இடவும். இப்படி 3 க்கு ஒரு முறை செய்யவும். வெந்நீரும், சாதமும் உண்ணவும்.

## தைலம்

நீர்முள்ளி, கீழாநெல்லி, அம்மான் பச்சரிசி, செருப்படை, சிறுகீரை, அமுக்குரா - வகைக்கு சமஅளவு. பொடி செய்த மூஞ்சூரு (எலி), சோமநாதப் பெருங்காயம் - 10 பலம் வேப்பெண்ணெய் - நாழியில் காய்ச்சவும். மேலுக்கிட, பில்லி, சூனியம் போன்றவைகள் தெறிக்கும்.

### இன்னம் - உள்ளுக்கு

இலிங்கம் - 4 பங்கு.

இரத்த சிங்கி, பாசம், காந்தம், சவுக்காரம், நவச்சாரம், வெங்காரம், யவாச்சாரம், சீனாக்காரம், மிளகு, இந்துப்பு, பொடியுப்பு, இவைகளைப் பொடி செய்யவும். காய்ச்சி பொடி எண்ணெயில் கலந்து அருந்தவும்.

திரிகடுகு, வெள்ளைக் காக்கண வேர் - வகைக்குச் சமஎடை. முலைப்பாலில் அரைத்து உண்டை பண்ணவும். நிழலில் உலர்த்தவும். பேய், பசாசு, நஞ்சு, சன்னி போன்றவைகள் தீர, வெற்றிலைச் சாற்றில் உரைத்திடவும்.

### எண்ணெய்

வேப்பெண்ணெய் - உரி அளவு

மூஞ்சூரு. ஓந்தி, வௌவால் - இவைகளை எண்ணெயில் போடவும். பதத்தில் எடுக்கவும். ஒரு சட்டியை நன்கு காய விடவும். முன்

........................................................................

*துவாலை – வெளித்தடவல், இரத்தம் – பவழம், சிங்கி – மிருதாசிங்கி, பாசம் – சீரகம், அகத்தி, ஓந்தி – அசமதாகம் மூஞ்சூரு – சந்தி, தூதுவிளை, சிறுசெருப்படை.*

சொன்ன எண்ணெயை சட்டியில் தெளிக்கவும். வரும் புகையை முகத்தில் பிடிக்கவும். பேய், பசாசு என்ற மனக் கோளாறுகள் விலகும்.

## வஞ்சனைக்கு

குமிழம் வேர், குமட்டி வேர், இலை, சிறு கீரை வேர், மேனி வேர் - இவைகளை நையத் தட்டிப் பாலில் அவிக்கவும். உள்ளுக்கும், உடலின் எல்லா இடங்களிலும் துவாலையிடவும். 3 நாளில் அரைவாசி பலன் கிடைக்கும். 10 நாள் இப்படிச் செய்ய, வஞ்சனைக் கட்டுக் குணமாகும்.

## எண்ணெய்

செம்போத்து, மீன்கொத்தி, கோழி, கருநாய், கருநாய் உண்ணி - இவைகளின் இரத்தம், எட்டிப் பழத்தசை, மிளகு சாரணை வேர், சீந்தில், சிறு காஞ்சோரி, பெருங்காஞ்சோரி, வெற்றிலை, முடக்கொற்றான் இவைகளின் சாறுகள் - வகைக்குச் சமஎடை - அஞ்செண்ணெய் விட்டுக் காய்ச்சவும். பெருங்காயப் பொடியைப் போட்டு, உடலில் பூச, சூனியம், முடங்கல் தீரும். கட்டு வாங்கும்.

பசரி இலையை எருமை மோரில் அரைத்துக் குடிக்க மாறும்.

மணத்தக்காளியிலை, விளக்கெண்ணெயும் கலந்து குடிக்க இட்ட சூனியம் மாறும்.

ஊனாங்கிழங்க, ஊரைமாவுக் கிழங்கும், பொன்னாங்காணி வேர், சிறுகீரை, செப்பு நெருஞ்சில் இவைகளின் வேர்கள், வெள்ளுருவிப் பட்டை - சமஅளவு வகைக்க எடுக்கவும். அரைத்து எருமை மோரில் போட்டுக் கடையவும். வரும் வெண்ணெயை விழுங்கச் சூனியம் மீளும்.

வெள்ளறுகை எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து, எலுமிச்சப் பழமளவு உள்கொள்ள, நீர்ப்பாடுக் கழிச்சல் தீரும்.

.......................................................

குமலைறுணர் – இயல்பு.

வயிறு பொருமி, மிகுதியும் கழித்தால், வெள்ளாறுகைச் சூரணித்து வெருகடி யளவு வெந்நீரில் உண்ணத் தீரும்.

வேப்பிலையை இடித்ததூள். புழுங்கலரிசி – ஓர் பிடி ; அரிசியைப் பச்சை நிறமாக நன்றாகத் திமிர்ந்து இலை போகப் புடைத்து, அன்னப் பால் வைத்துக் கொண்டு உண்ணவும்.

### இன்னம்

பழஞ்சோற்றைப் பற்பமாக வறுக்கவும். தண்ணீர் விட்டுக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும்.

### கசாயம்

மண்புரண்டி, பொன் முசட்டை, இவைகளின் வேர், கருவேப்பீர்க்கு, சுக்கு – கசாயம் செய்த கொடுக்கவும்.

### + சுக்திக்கு (வாந்தி)

(சிறு) நீரை உழக்குப் போலப் பிடித்து, மறைத்துத் தர நிற்கும்.

### தாகத்துக்கு

3 வெற்றிலையில், சுண்ணாம்பைத் தடவவும். நாழி நீரில் போடவும். உழக்களவு வற்றக் காய்ச்சி, ஒருசங்கு கொண்ட நீராய்த்தர, நீர் வேட்கை தீரும்.

நீர்ப்பாட்டுக்கு: நாயுருவி, திரிகடுகு, மஞ்சள், இலுப்பைப் பிண்ணாக்கு, வெண்காக்கணவேர் – வகைக்கு சம அளவு, முலைப்பாலிட, நீர்ப்பாடு தீரும்.

### இன்னம்

மாம்பட்டை, கடுக்காய், சுக்கு, வசம்பு, சோமநாதப் பெருங்காயம், பருப்பு உள்ளி, கருஞ்சீரகம், மிளகு, கருவேப்பிலை, ஓமம், சங்கிலைச் சாறு வார்த்தரைத்து உண்டை செய்யவும். நிழலில் உலர்த்தவும். இளவெந்நீரில் தரத் தீரும்.

.................................................................

+ *இம்முறை இன்று ஏற்றதல்ல.*

*பற்பம் – வெள்ளை, பருப்பு – மாங்கொட்டையின் பருப்பு.*

## வாந்தி, பிராந்திக்கு

மிளகு, வேப்பீர்க்கு – 12 பங்கு. அரைத்துக் கரைத்துக் காய்ச்சவும். ஆழாக்களவு வற்றியவுடன், எடுக்கவும். புதிய சுண்ணாம்பு சுண்டைக்காயளவு கூட்டிக் கரைத்துக் கொடுக்கவும்.

+சாரடை இலையைக் கசக்கி, கண்ணில் விட, நீர்ப்பாடு நிற்கும்.

புங்கம் விதையை அரைத்து, முள்ளிக் காயளவு, இளவெந்நீரில் தர, நீர்ப்பாடு தீரும்.

இன்னம்

நாயுருவி வேரை, காடியில் அரைத்து, உள்ளுக்கு அருந்தவும். மூக்கில் காட்டி, உள்ளங்காலில் தடவவும். நீர்ப்பாடு நிற்கும்.

கேப்பையை நன்கு கறுக்கி மோர்விட்டு, இறுத்துக் கொடுக்கவும். நீர்ப்பாடு தீரும். மிளகையும் அப்படிச் செய்யலாம்.

## குடற் படுவனுக்கு மருந்து

கோவையிலையை அரைத்துப் பசுவின் வெண்ணெய் சமன் கூட்டி, உள்ளுக்கும் தந்து, வயிற்றிலும் தடவக் குடற் படுவன் தீரும்.

### இன்னம்

கேப்பையில் 1 படியை ஆய்ந்து, குற்றிப்புடைக்கவும். 2 படி நீரில் போட்டு நன்றாய் களியாக வேகவைக்கவும். 3/4 படி கெட்டிமோர் விட்டுப் பிசைந்து, வடிகட்டவும். தர குடல் படுவன், இரத்தக் கழிச்சல் தீரும்.

## வாய், மூக்கில் வழியும் இரத்தம் தீர

கண்டங்கத்தரி, சிற்றாமல்லி, கீழாநெல்லி – வேர்கள், வேப்பந்தட்டை கடுகு ரோகணி, கோட்டம், முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், அத்தி, திப்பிலி, முருக்கம் பூ, விலாமிச்சம் வேர், அதிவிடையம், சிறுதேக்கு – வகைக்கு ஒரு வராகன் அரைத்து நாழிப் பசு நெய்யில் கலந்து, காய்ச்சிக் கொள்ளவும். வாய், மூக்கில் வரும் இரத்தம் இரத்த வெள்ளுடைப்பும் தீரும்.

## வாய்ப் புண், வெந்ததாளிக்கு மருந்து

நற்சீர் வெங்காயம் ...........
　　　　நல்லவெல்லஞ் சிறு பயறு
தற்சமனாக வெதுப்பு அதைச்
　　　　சற்றே, வெதுப்பித்தான், பொடிசெய்
துற்ற, பசு நெய்யி4னில் குழப்பி
　　　　உகந்தே இதனை அருந்திடு
நிச்சயம், வாய்ப்புண் கந்ததாளி
　　　　நில்லாதே ஏகும் நெறி குழலே.

**உரை:** வெங்காயம், வெல்லம், சிறுபயறு – ஆகியவைகளை சிறு தீயில் வதக்கவும். பின் பொடி செய்யவும். பசு நெய்யில் குழப்பி, விருப்பமுடன்* உண்ண, வாயில் உள்ள புண் தீரும்.

**மருந்து :** பூண்டுத் தோலை அகற்றி, சிறு பயறு, சர்க்கரை சம அளவு அரைத்து காலை முக்கழஞ்சு தின்ன மாறும்.

காரெண்ணெயை மெல்ல, மாறும்.

வசம்பு, இந்துப்பு – வகைக்கு சம பங்கு. அரைத்து, நாக்கிலும், பல்லிலும் தேய்க்க மாறும்.

### இன்னம்

அத்திப் பட்டையை இடித்து நான்கு நாழி நீரில் போடவும். 1/8 பங்க வர வற்றக் காய்ச்சவும். இரு கழஞ்சு தேனை, கசாயத்திலிட்டுக் கொப்பளிக்கவும். சிறிது நேரம், வாயை அலம்பிக் கொண்டு, கொப்பளிக்க மாறும். இத சுண்ணாம்பு பட்டு, வெந்ததுக்கு ஆகுமாம்.

## வாய் கசந்து, சோறு வேண்டாததற்கு

குன்றுமணி இலைச்சாறு, பசும்பால் – சம அளவு எடுத்துக்கொண்டு 3 நாள் உட்கொள்ளவும்.

.........................................................................

[illegible]

* மருந்துண்பதை மக்கள் விரும்பமாட்டார்கள். எனவே "உகந்து" என்றார்.

## அமிர்த தோசம்தீர

வாய்நீர் ஊறும். சுக்கைச் சுட்டு பூஞ்சாணத்தைப் பொடி செய்து, கொப்பளித்து விட, வாய்ப்புண் மாறும்.

இன்னம்

நல்ல வெல்லமும், இஞ்சியும் சேரத்தட்சி சாரித்துத் தின்றுச் சாற்றை இறக்க, வாய்நீர் ஊறி வாசிய அமிர்த தோசம் தீரும்.

முருங்கைக்றி, காய், இவை சம அளவில் எடுத்து சம்பீரப் பழச்சாற்றில் கொடுக்க அக்கரம் தீரும்.

## இன்னம்

நீர்ப்பூலா வேர், சிறுகீரைவேர், புளியஞ் சிறுகீரை வேர், பொன்னாங்காணி வேர், தக்காளி வேர், சீரகம், சர்க்கரை – அரைத்துப் பசு வெண்ணெயில் குழப்பி 3 நாள் தின்ன, அக்கரம் தீரும்.

## வெள்ளோக்காளம் எடுக்க

முத்தகாசு, திப்பிலி, வசம்பு – வகைக்குச் சம அளவு. பொடி செய்து நெய் தேன் சம அளவு குழைத்துக் கொள்ள வெள்ளோக்காளம், கத்திரி விக்கல் இவை தீரும்.

## கெந்தாளிக்கு

சிறுகிளாவேர் – இதை எலுமிச்சை அளவு பாதி அரைத்து உட் கொள்ளவும். மாலை உண்ணவும்.

## வாய், மூக்கில் விழும் இரத்தத்துக்கு

கூவிளம்பட்டை, மோர்விட்டரைத்து, துவைத்து, இறுத்துத் தர நிற்கும்.

## வாயால் இரத்தம் விழ

அறுகன் வேர், வில்வத்தழையை அரைத்து முலைப்பாலில் 3 நாள் தர, இரத்தம் விழுவது நிற்கும்.

## குடல் எரிவுக்கு

திரிகடுகைப் பொடி செய்து, மிளகு தக்காளிச் சாற்றில் சற்றே வச வச என வைத்துத் தர குடல் எரிவும், காச சுவாசமும் தீரும்.

## அரி குரலுக்கு

நன்னாரிவேர், மதுரம் - கசாயம் வைத்துத் தேன், சர்க்கரை கலந்து உட்கொள்ளவும். அரி – குறைவான ; குரல் – ஒலி.

## நெஞ்சடைப்புக்கு

திரிகடுகு, கருஞ்சீரகம், வசம்பு, நெய் கொட்டான் பழம் - வகைக்குச் சம அளவு அரைத்துக் கொடுக்க நெஞ்சடைப்பு முதல் எல்லாவித அடைப்பும் தீரும்.

## செரியாமைக்கு

பணியாரம் தின்று பசியாமைக்கு, குளிரத் தண்ணீரைத் தரவும். தேங்காய்த் துண்டு – 1 உடன் புழுங்கலரிசியைச் சேர்த்துத் தின்னவும்.

பலாப்பழத்துக்குச் சுக்குப் பொடியும், வாழைப்பழத்துக்கு மிளகுப் பொடியும் தின்னவும். இது மாற்றாகும்.

புளியம் பழத்துக்கு வசம்புப் பொடியைத் தின்னவும்.

மாமிசத்துக்கு – எலுமிச்சம் பழம் தின்னவும்.

**பாக்குச் செருக்கினால் :** சர்க்கரை தின்னவும்.

கசப்புக்கு குன்று மணியிலைச் சாறு குடிக்க மறுக்கும்.

புளி மறக்க : புளியம்புரோணி சுட்டுச் சாம்பார் தண்ணீரில் கரைத்துத் தெளிய வைத்துக் குடிக்கத் தீரும்.

**சுண்ணாம்பு கழிக்கும் :** மஞ்சளரைத்து கரைத்துக் கடிக்க மறக்கும்.

**உப்புக் கழிக்க :** தாதை விழுதுச் சாறு குடிக்க உப்பு மாறும்.

**எண்ணெய் வெறுக்க :** எள்ளுச் சட்டை சுட்ட சாம்பற் தண்ணீரிற் கலக்கித் தெளிய வைத்துக் குடிக்கத் தீரும்.

**இன்னம் சுண்ணாம்பு கழிக்க :** தாழஞ்சாறு உப்புங் குடிக்கச் சுண்ணாம்பு கழறும்.

**எண்ணெய் கழிய :** புளியஞ் சாம்பல் கரைத்துக் குடிக்க எண்ணெய் கழியும்.

கோவையிலைத் துவைத்துச் சாறு கொண்டு நல்ல வெல்லங் கரைத்து மூன்று நாட்கள் கொடுக்கவும்.

இன்னம்

வில்வச் சாறுங் காடியும் மூன்று நாட் கொடுக்கவும்.
இவை துவாலை யிடவும்.

இன்னம்

இரத்தக் கட்டுக்கு: கத்திரிக்காய் பிஞ்சு 5, அறுகன் வேர், பருவேராய் ஒரு படி உரி நீரிலிட்டு உழக்காய் காய்ச்சி வடித்து, இதில் 5 எலுமிச்சம் பழச்சாறு விட்டுச் சீரகம் அரைத்துச் சிற்றெலுமிச்சங்காயளவு வெல்லமும், அவ்வளவு, நெய்யாழாக்குக் கலந்து கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்க இரத்தக்கட்டு விடும்.

ஊசியிலை – ஒரு பிடி
பருத்தியிலை – ஒரு பிடி
எலுமிச்சை இலை – ஒரு பிடி
பரட்டை யிலை – ஒரு பிடி

..................................................................................

*அரி – குறைவு*

இதுவெல்லாமரைத்து நாழிப் பசும்பாலில் கலக்கி வடிகொண்டு கொடுக்கவும்.

ந ய ட ச ஏழுங 17 பங்கு சுரிய சுண்ணாம்புஞ் சமன் கூட்டிக் காடியிற் குற்றி நீரினால் உண்ணாக்குத் தலத்தில் மூன்றுநாளை வைக்கக் கரைந்து போமிது திட்டம்.

புகை: மனோசிலை 2 படி, எருக்கம் பால் விட்டரைத்துச் சீலையிற்றடவி நிழலுலர்த்திச் சுருட்டித் திரித்து மூன்று நாள் புகைக்கவும்.

### இன்னம்

மேனிச்சாறு பிழிந்து சிறுக்கரண்டியாயிரும்புக் கரண்டி அடிப்பித்து அக்கரண்டியிலே சாறு வார்த்து நேர்ப்பாய்க் கொண்டு போய் உண்ணாக்கடியில் துவைய பிடிக்கத் தீரும்.

### இன்னம்

கரும்பூலாவிலை ஓருள்ளிப் பூடு, வசம்பு, தட்டியிரண்டு காதிலும் விட்டடைத்துச் சாறு நேரஞ்சென்ற பின்பு பஞ்சிட்டடைத்துத் திறக்க உண்ணாக்குக் கரைந்து தீரும்.

## முதுகுக் கடுப்புக்கு

| | |
|---|---|
| பருத்தி விதைப்பால், | - 3 படி |
| பசும்பால் | - 3 படி |

பழம்பாசி ஒரு நாரத்தங்காயளவு அரைத்துக் கரைத்துக் காய்த்து குழம்பாய் வருகையில் வெல்லம் மிகுதியும் போட்டுக் கிண்டி இறக்கித் தின்னவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

## தொண்டைக்குள்ளே வந்த புண், வாய் நாற்றம், வாய்ச் சிலந்தி முதலானவற்றுக்கு

வெட்பாலையரிசி, மஞ்சள், மரமஞ்சள், இந்துப்பு, மிளகு சரி கூட்டி, கழஞ்சியிடை வெந்நீரில் அரைத்துத் தண்ணீரில் கொள்ள தொண்டைக்குப் பட்ட வியாதி தீரும்.

---

*நயடச, ஏழுங் – நயதச ஏஜ – 17*

## வாய்ச் சிலந்திக்கு

புங்கம் பட்டை, மஞ்சள் சரிக் கூட்டித் தேனில் கொள்ள சிலந்தி தீரும்.

## ஆசூரிய ரோகமாவது

வாயிலே புண்ணாக வெடித்து நாலு வருடம், ஆறு வருடம் உப்புப் புளித் தீண்டப்படாமல் கண்டிமாயிருக்கும்.

**இதற்குப் புகை :** உரையைக் காடியிற் கசாயம் இட்டு இந்துப்பைப் பொடி யாகச்செய்து தேனில் குழப்பி இரண்டும் வைத்துக் கொண்டு முன் குழம்பிட்டு நன்றாய்த் தேய்த்துப் பின் கசாயம் அதம்பிக் கொப்பளிக்கவும். இப்படி அடிக்கடி செய்த வரவும். இப்படி பதினாறு நாள் செய்யத் தீரும்.

## வாய் நாற்றத்துக்கு

கடுக்காய், இந்துப்பு, ஏலம், திப்பிலி, கோசலம் விட்டரைத்து வாயிலடக்கி இறுக்கப் புண்ணாறும், வாய் நாற்றமும் தீரும்.

இன்னம்

## வாய் நாற்றத்துக்கு

கோட்டம், கருங்காலிப்பட்டை, சரிக் கூட்டி நிழலுலர்த்திப் பொடி பண்ணி கசாயமிட்டு எட்டு நாள் கொப்பளிக்க வாய் நாற்றந் தீரும்.

இன்னம்

நொச்சிவேர்ப் பட்டை, செங்கழு நீர் கிழங்கு கூட்டித் தின்றுவர வாய்நாற்றம் போம்.

எருக்கு நுனிக் கொம்பொடித்துப் பாலுடன் பற்கொம்பிடத் தீரும். அடிக்கடி எண்ணெய் விட்டு முழுகவும்.

## தொண்டை வீக்கம், வாய்ப்புண்ணுக்கு

கடுக்காய், கெந்தகம், வேப்பம் விதை தேனிலரைத்துக் கொள்ள வீக்கம், புண் தீரும்.

## தொண்டைக்கட்டுக்கு

இந்துப்பு, திரிகடுகு, கொடுவேலி வேர், தோலி, அமுக்குரா வேர் .... இந்து நீங்க மற்றது வெதுப்பி, எல்லாம் பொடித்து தேன் சர்க்கரை 1 படி மேற்படி கொள்ளவும்.

### இன்னம்

சுக்கு, திப்பிலி, வெடியுப்புப் பொடித்து நெய்யில் கொள்ள விடும்.

**துட்டுக்கு :** கருஞ்சீரகம், தூதுளை வேர், காசுநாரி வேர், எண்ணெயில் காய்ச்சி கொள்த் துட்டுத் தீரும்.

பிரமி சமூலமும் துவைத்தச் சாறு நாழி, நெய்நாழி, நெல்லிமுள்ளிச்சாறு, நாளுழக்கு, சிவதைவேர், கடுக்காய் .... கோட்டம், திப்பிலி, விளாலரிசி, இந்துப்புக் கண்ட சர்க்கரை, வசம்பு, ......... அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துக் கொண்டு நாள் தோறும் உண்டுவர கோழைப்பட்ட பேச்சுத் தீரும். பதினைந்து நாள் கொள்ளக் கெட்டவை தெறிக்கும். முப்பது நாள், கொள்ள கவி சொல்லலாம்.

### இன்னம்

பிரமிச்சாறு, நாழி, பசுவின் பால், நாழி, நெய்நாழி, மூன்றும் கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து கொண்டு ஏழு நாள் கொள்ள மிடறு தெளியும். பதினைந்துநாள் கொள்ள மிடறு தெளியும். பதினைந்து நாள் கொள்ள. கெட்டவை யதறிக்கும். ஒரு திங்கள் கொள்ள கவித்துவனாவான்.

### இன்னம்

சீரகம், ஏலம், சர்க்கரை கூட்டி, முலைப்பால் வார்த்தரைத்துக் கரைத்து நாவில் தடவ நாவு புரளும். விக்கலும் தீரும்.

**நாக்கட்டுக்கு :**

கருஞ்சீரகம் –
கருவேலிஇலை –
சலம் –
பனை நொங்கு –

கடுதோன்றிக் கிழங்கு, திப்பிலி, வெள்ளுள்ளி, இம்மருந்துகளைப் பொட்டலங்கட்டிப் பனை நுங்கும் அடியிற் போட்டுக் கரு வேலிலை போட்டு, தான்றிக் காய் போட்டு அறு நாழியாகக் காய்ச்சி அறுபோது கொடுக்கவும்.

வெருகடி நெய்யிற் கொள்ள, மிடறு, பரமே -

**பிரமி கிருதம் :**

பிரமிச் சாறு படி 4
துளசிச் சாறு படி 1/2
துளசி வேர் 1 ப

திரிகடுகு, திரிபலை, சிவதை வேர், ......... வாலுளுவை யரிசி, 1 பலம், நெய் 4 பலம், கலந்து கருங்காலித் துடுப்பினால் கிண்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து ஏழு நாள் கொள்ளக் கண்ட சுத்தி பதினாறு நாட் கொள்ளப் புத்திரனுண்டாம். நாற்பது நாள் கொள்ளப் பிரமேகம் முதலெல்லாம் வியாதியுந் தீரும்.

இன்னம்

பிரமிச்சாறு, நெய், திரிபலை, திப்பிலி, வாலுளுவையரிசி, இந்துப்பு, கண்ட சர்க்கரை, .... பால்படி - 4, கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்ள முன் சொன்னதெல்லாம் தீரும்.

இன்னம்

பிரமிச் சாறு, நெய், மஞ்சள், நெல்லிப்பருப்பு, சிவதை வேர், கடுக்காய், திப்பிலி, வாய்விளங்கம், இந்துப்பு, வசம்பு, அரத்தை, சீனி, ...... பிரமிச்சாறு விட்டரைத்துச் சாறும் நெய்யும், மருந்தும் கலந்து காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு கோரை வேர் அவிபருதி தீரும். தாது வர்தனை உண்டாம். உட்சுரம்.

## துறைகாணாத பெண்ணுக்கு

செம்பருத்திப் பூவைப் பசும்பாலில் அரைத்துக் கொடுக்க துறை காண்பாள்.

### திரளாதப் பெண்ணுக்கு

வேலிப்பருத்திச் சாறும், கரிப்பான் சாறும், நல்லெண்ணெயும் சமன் கூட்டிக் கொள்ளத் தெருட்சியாவாள்.

### வயிற்றுப் புழுவுக்கு மருந்து*

கழற்சிக் கொழுந்து குறுவைப் பச்சரிசியிலிட்டடித்துத் தெள்ளிக் களிகிண்டி நல்லெண்ணெய் விட்டுக் கூட்டித்தின்ன வயிற்றுப் புழுவிழும் பிரமீயமும் தீரும்.

பலாச விதையரைத்துக் காடி மோரில் கொடுக்கப் புழு விழும்.

காயமும் ஓமமும் காடியிற் கொடுக்க வயிற்றிலுண்டான கீரைப் புழு விழும்.

வெங்காயத்துடன் மிளகொருபிடி கூட்டியரைத்து நாரத்தம் பழத்துளிட்டு வைத்துக்கொண்டு எட்டு நாள் தின்னப் புழுவிழும் புழு மலத்துடனே விழும்.

சீந்திலை, பாலைவேர், பாக்களவரைத்து இளவெந்நீரில் கொடுக்கப் புழுவிழும்.

பழையமோரில் எருக்கம் பால் சாறு விட்டுக் கொடுக்கக் கீரை முதல் வயிற்றிலுள்ள புழு விழும்.

கை மசக்கு எலிகடியும் தீரும்.

நொச்சியிலை நிலவாகை, முருகங் கொழுந்து, சிவனார் வேம்பு, வெள்ளறுகு, வேப்பங் கொழுந்து, சமனுலர்த்திப் பொடி செய்து மிளகு பொடியுமிட்டுத் தின்னக் கீரை, சிறுபுழுச் செரியாக் குணம் சூரை, கடி வயிற்று நோய் இவையெல்லாம் தீரும்.

இருபது மிளகும், பாகலிலையும் அரைத்துக் கொள்ளக் கீரைப்புழு விழும்.

---

*கைமசக்கு – வசியம்*

*குடல் புழுக்கள்: 1) கொக்கிப்புழு, 2 நாடாப்புழு, 3) கீரைப்புழு, 4) நாக்குப்பூச்சி*

செம்புளிச்சி இலையைச் சட்டியிலிட்டு தண்ணீர் வார்த்துச் சாதம் போலே வேகவைத்து ரோகதிரி உமிக்காந்தலில் கொடுக்க வைத்துக் காலையில் ஊறிய சாறை இறுத்து, வெள்ளுள்ளிப் பருப்பு ஏழு மிளகு பதினாறு மாவிலங்குக் கொழுந்தரைத்துப் புன்னைக்காயளவு மூன்றுஞ் சாரித்து மூன்றுண்டையாக்கி மூன்று நேரங் கொள்ளக் காற்றுக் கொடுத்துவிடும்.

## சுளுக்குக்கு

கீழ்காய் நெல்லிவேரை எண்ணை தடவி நொந்த இடத்தில் வைத்து அழுத்திப் பிடிக்கச் சுளுக்குத் தீரும்.

## இன்னம்

நத்தச்சூரி வேரும் இப்படிச் செய்யவும். வென்னீர் பிடித்துவிடவும்.

## இன்னம்

முருங்கைப்பூ ஒருசேர், சுக்கு இரண்டு சேர், உள்ளி சேர், மிளகு 2 படி, புழுங்கலரிசி ஒரு சேர், பசும்பாலாதல் வெள்ளாட்டுப் பாலாதல், அரிசிச் சோறாய் வேகக் காய்ச்சி குடிக்கவும்.

## பிரண்டைக்காரம்

பிரண்டையைக் குறுக நறுக்கி உயர்த்தி இடித்து உழக்கு மிளகுங் கூடப் பொடி செய்து வைத்துக் கொண்டு வென்னீரில் நெய்யில் கொள்ள எலி கடி தீரும்.

எண்ணெயில் குழப்பித் தடவ வஞ்சிப்புண் இடத் தீரும். பாலில் கொடுக்க நீரிழிவு தீரும். மென்று மூக்கிலுஞ் செவியிலும் உமிழ விசங் குதித்துப் போம்.

இப்பொடியும் கொன்றைக்காயும் குரு ஆக்கிவிடச் செவி நோவு தீரும்.

## சாரடை துத்திபற்பம்

சாரடைவேர், பெருந்துத்திவேர், சமனுலத்திப் பொடித்து வத்திர காயம் பண்ணி இப்பொடி வெருகடி கொள்ள, மலர் நீங்கும்.

---

மோரிற் கொள்ள வயிற்று வியாதி தீரும். கஞ்சியிற் கொள் மயக்கம் மைதுனம்தோசம், பித்தம், முயலகனுந் தீரும்.

தேனில் தேரை நீங்கும்

நெய்யில் வெள்ளோக்காளம் தீரும்

வெற்றிலையில் சூலை தீரும்

கமுநீரில் பிரமியம் தீரும்

மிளகில் நரை திரை மாறும்.

பசும்பால் நாழியில் ஒன்பது வகைக் குடல் வாதமும் போம்.

இப்பொடியும் விண்பொடியுங் கூட்டி எருமைத்தயிரில் கொள்ளப் பிரமியம் போம்.

**இரசாயன பற்பம் :** முற்றின சாறடைவேர் பாலில் அவித்துலர்த்தி யிடித்து வத்திர காயம் பண்ணிய பொடி 2 சர்க்கரை உரி, நெய் உரி, கூட்டி வேதித்து நெய் கலசத்திலிட்டு ஏழுநாள் தானியப்புடம் வைத்து எடுத்துப் பாக்களவு கொள்ளப் பயித்தியம் வாதம், சேத்துமம், பாண்டுசோகை தீரும். தீபனமுண்டாம்.

## காயகற்பம்

திரிபலை, காரெள்ளு, உள்ளி, அரப்பொடி, சமனரைத்து இரும்புப் பாத்திரத்திற் பூசி ஆறு நாழிகை சென்றால் சுக்குச் சூரணங் கூட்டித் தேனிலாதல், நெய்யிலாதல் கொள்ளவும். இப்படி மூன்றுமாதம் கொண்டால் முந்நூற்றறுபத்து வியாதியும் தீரும். முந்நூறு வருசம் இருப்பான். இறுதி யில்லை, விசமில்லை மிகவும் நன்று.

## இன்னம்

காயகற்பம்: திரிகடுகு, திரிபலை, காரெள்ளு, உள்ளி அரப்பொடி, கிட்டம், மழை வண்ணக் குறிஞ்சி, மஞ்சள், சிவதை வேர், வெள்ளைக்காக் கணவேர், சாரணை வேர், விளாவரிசி,சேங்கொட்டை, கற்கடக சிங்கி, செங்கொடி வேலி, கார்போக அரிசி, காந்தம் இவை இருப்புச் சட்டியிற் பொடிபண்ணி தேன், நெய், பெற்றதே நான்றில் கொள்ளக் குட்டம் மூலம், பாண்டு மாறும். பலப்பல வியாதியும் தீரும். இவை வருடங் கொண்டால் காய சித்தியாம்.

## இலைக்கள்ளிக் கற்பம்

இலைக்கள்ளி வேரை, நிழலுலர்த்தி இடித்துப் பொடி செய்து குளவிந்தம் மஞ்சளுடன் கொள்ளப் பெரும்பாடு தீரும்.

நெய்யிற் கொள்ள ஈளை இருமல் தீரும், நீராமை தீரும். முலைப்பாலிற் கொள்ள காமாலை தீரும்,

வெற்றிலையுடன் கொள்ள, வெள்ளாட்டு நெய்யுடன் கொள்ள,

அகுவை பீலிகை, பித்தப்பாண்டு, கர்ப்ப விப்புருதி தீரும். பாலில் கொள்ள பித்தமும் பிதற்றலும் தீரும்.

## சிவனார் வேம்பு கற்பம்:

வட்டமுலையாள் வசமாவாம்
ஆவின்உண்ணுளிராம்தீரா மேனிப்
பட்டபுண்ணும் கண்ணோவும்
பாதப் பிளவும் இவை தீரும்
குட்டம் பதினெட்டவை வாராக்
கொல்லும் விடமும் மேலேறாச்
சிட்டாரளிர சிறுகாலைச்
சிவனார் வேம்பு தின்பீரேல்.

## நிலவாகைக் கற்பம்

நிலவாகைச் சமூலமும் நிழலுலத்தி
இடித்து வத்திர காயம்
செய்து வைத்துக் கொண்டு
தேனிற்கொள்ள உடம்புமெலியும்

வத்திரகாயம் – துணியிலிட்டு, சலித்தல்

நெய்யிற் கொள்ள உடம்புபருக்கும்
ஆட்டு நீரில்கொள்ளச் சிரங்கு நிற்கும்
எண்ணெயிற் கொள்ள எலிகடி தீரும்
இளவெந்நீரில் கொள்ளக் கீரைப் புழுவிழும்
பாலுடன் கொள்ள மணிப்புழு விழும்
மோருடன் கொள்ளச் செமியாக் குணம்தீரும்
காராட்டுப்பாலிற் கொள்ள செவ்வாய்த்துத் தீரும்.
எருமைமோரில் கொள்ள எலிகடி விசம் தீரும்
எிச்சாசாணகம் பிழிந்த சாற்றில்
கொள்ள பித்த பாண்டு ரோகம் தீரும்
மேதிப்பாலிற் கொள்ள மருந்தீடு தீரும்
பாகலிலைச் சாற்றிற் கொள்ள செய்யான்கடி தீரும்
குப்பை மேனிச்சாற்றில் கொள்ளத் தேடகம் தீரும்
எருக்கம் பழுப்புச் சாற்றிற் கொள்ளச்
செவ்வட்டைக் கடி தீரும்.

## + கடு கற்பம்

குட்டம் குடலெரிவு கூட்ட
இடி வை வற்றச் சூலை
விட்ட பழ வெதப்பு வெக்கையுடன்
வெக்கையுடன்
ஒட்டுந் தலைவலியும் பாண்டு வுடன்
தன்னெஞ்சி னோவும் குலை குலையும்
நீ கடுவை கொள்.

## + சாரணை கற்பம்

சாறணை வேர்ஓர் குழுத்தின் வேராக
நறுக்கிக் கழுவிப் போட்டுச்
செருக்கு வாடலா யுலர்த்தி
எட்டு மரக்கால் பசுப்பாலில்
இது வேகவைத்துலர்த்திப் பொடி
செய்து சீலை வடி கொண்டு.

## இதுக்கு மேல் மருந்து

திரிகடுகு, ஏலம், இலவங்கம், பச்சிலை குறுந்தொட்டி வேர், கொடுவேலிவேர் ஒழுகுரை சீரகம், ஓமம் இவை பொடி செய்து ஒருகூறு முன்னைவேர்ப் பொடி ஒரு கூறுஞ் கலந்து தேனிற் கொள்ளக் காயம் பேதிக்கும்.

பெருவயிறு, கர்பாசயம், மலக்கட்டு, குன்மம், வாதம், சேத்துமம், பித்தத்தினாலுள்ள ரோகங்கள், தீபனங்கெட்டது, வாயுச்சூலை, உட்ணம், குட்டவியாதி, கடிவிசம், இவை யெல்லாந் தீரும். துறையளுக்கு இச்சா போசனம். மற்றப் பேர்க்குக் கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

## தேற்றாம் பிஞ்சு விதைக் கற்பம்

தேற்றாம் பிஞ்சும் பூவும் சமன் கூட்டி நிழலுலத்திப் பொடி செய்துப் பேய்ச் சுரைக்காய்க் குடுக்கையில் அடைத்து வைத்து உண்ண விசவாதம், பாண்டு தீரும்.

அட்ட சித்தி சித்திக்கும். பூத பிசாசுகள் சேவை செய்யும். கலத்திற்ல் கழுஞ்சு இரசம் விட்டு மண் சட்டியிலெரிக்கப் பஞ்ச லோகமும் பழுக்கும். முற்றும் ரோகத்துக்கு மூன்று வெருகடி பசு நெய்யிலிடவும். நீராமைக்குத் தேனிலிடவும். மூலவாய்வுக்கும், பஞ்ச மூலத்துக்கும் இஞ்சிச் சாற்றிலிடவும். பயித்திய வெறிக்குக் காடியில் இடவும்.

## நாறு கரந்தைக் கற்பம்

நாறு கரந்தையை உலர்த்திப் பொடி செய்து வத்திர காயஞ் செய்த பொடி – நாழி, திரிகடு பொடி உழக்கு, நற்சீரகம் பொடி உழக்கு, செங்கழுநீர் கோட்டம் பொடி உழக்கு. வசம்பு பொடி உழக்கு, வாலுளுவை அரிசிப் பொடி உழக்கு, இந்துப்புப் பொடி உழக்கு, சங்கங்காய்ப் பொடி உழக்கு, இதுவெல்லாங் கூட்டி வைத்துக் கொண்டு வெரு கடிப் பிரமாணம் நெய்யிலாதல், எண்ணெயிலாதல் கொள்ளவும்.

பத்தியம் : பாலுஞ் சோறும் உண்ணவும்.

இதற்கு ஏழுநாளையில் பாட வல்லவனாவான். பதினாலு நாளையில் கேட்டவை தரிக்கும். இருபத்தியொரு நாளில் குட்டந் தீரும். இருபது நாளையில் நிலக்கிடை தோன்றும். 40 நாளில் பாடச்சாரீர முண்டாம். 60 நாளில் நரைதிரை மாறும். 90 நாளில் காயா சித்தியுண்டாகும். ஐந்தாம் மாதத்தில் காயசித்தி யுண்டாம்.

### பலாசம் கற்பம்

பலாசம் விதையைப் பொடி செய்து வத்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு பணவிடை பொடி நெய் தேனில் ஒருமாதங் கொள்ள யோக புருடனாவான். பகலே நட்சத்திரம் தெரியும். அனேக காலமிருப்பான். தேவர்களுடனே தேவனாயிருப்பான். இதை நெல்லிக்காய்ச் சாற்றில் தனக்கு வேண்டும் பொடியிட்டுப் புழுக்கி நிழலுலத்திப் பின்பு பச்சைப் பாலில் இராவெல்லாம் ஊறிப் பகலெல்லாம் நிழலில் ஆறவைத்து இப்படி ஏழுநாள் ஊறி ஆறி வைத்துக் கொண்டு தினம் மூன்று கழஞ்சி பொடி, தேன், நெய் கூட்டிக் கொள்ளத் தூரதிருட்டி தெரியும்.

தேகம் சூரியப்பிரபையாம். காலவித்துவானாவன். சந்திராதித்த வரையும் இருப்பன். உப்புப்புளி கைப்புக் கழற்றிக் கொள்ளவும். இந்தவிதையில் தயிலம் வாங்கிச் செம்பிற் குடுக்கப் பேதிக்கும்.

### அங்கோல பற்பம்

மது வார்த்தரைத்துப் பிசைந்து ஒரு கலசத்திற் நிரப்பி வெயிலில் வைக்கத் தயிலம் வரும். இதை ஈயச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

வேறு: புளியிலையைத் தண்ணிரில் போட்டுக் காய்ச்சி இறுத்துக் கொண்டு அழுஞ்சில்ப் பருப்பு இடித்து நன்றாயுலர்ந்த மாவிற் தெளித்துப் பதமிட்டுப் பிசைந்து இலுப்பைமா தவிடால் போலே பிடித்து இலுப்பைப் பருப்பாட்டுகிறாப் போலேயாட்டினால் தண்ணீர் மிஞ்சாமலும் குறையாமலும் வார்த்தாட்டத் தயிலம் வரும். எடுத்து ஈயச்சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

........................................................................................

*மது – தேன்*

## சுக்குக் கற்பம்

நாற்பது சேர் சுக்கைத் தோல் போக்கி இடித்து வத்திர காயஞ் செய்து பசுவின் நெய்யில் பிசறிப் பொறித்து இதில் எண்பது சேரைத் தேன் விட்டுக் குழைத்து லேகியப் படுத்தி வைத்துக் கொண்டு நேரத்துக்கு கொட்டைப் பாக்களவு கொள்ள உட்ணம் ரத்த தோசம் வற்றும். உடல் கணப்பு வீக்கம் சரும வாயுவும் தீரும்.

அன்னஞ் செல்லும். விசம் மேற்படி முதலாகிய சகல வியாதியுந் தீரும். ஒரு மண்டலம் கொள்ளவும்.

விசமுந் தீரும். வெள்ளாட்டு நீரில் கொள்ளக் குளுப்பைத் தீரும். எருமை மோரிற் கொள்ளப் பாண்டு ரூபந் தீரும். விளக்கெண்ணையிற் கொண்டு பூச முதலைச் கடி தீரும். புளியிலை சாற்றில்க் கொள்ளக் குன்மந் தீரும். வெற்றிலைச் சாற்றில் கொள்ள வயிற்று ரோகந் தீரும். உப்பிலிச் சாற்றிலு் கொள்ள ஆண்கட்டுத் தீரும்.

பிராயம் பட்டையை வெட்டி உலர்த்தி யிடித்தப் பொடி நாழி நெய்யிற் காயுலர்த்தி இடித்தப் பொடி, முன்னாழி அழிஞ்சில் விதை, உலர்த்தி இடித்தப் பொடி நாழி, முத்துக்காசு உலர்த்தி யிடித்தப் பொடி நாழி, எல்லாங் கூட்டிப் புதுப்பானையில் வைத்தக் கொண்டு வெருகடிப் பிரமாணம் தேனில் மண்டலங் கொள்ளப் பதினெட்டுக் குட்டமுந் தீரும். நரை திரை மாறும். பத்தியம் பாலும் சோறு உண்ணவும்.

## சீந்தில் கற்பம்

சிந்தில் கொடியைச் சிறுகச் சிறுகக் கத்திரித்து இடித்து ஒரு புது மிடாவிலிட்டுத் தண்ணீர் விட்டு, நன்றாய்ப் பிசைந்தூற்றித் திரும்பவும் திரும்பவும் இப்படி நாலுதரம் ஊற்றிப் பிசைந்து இறுத்து அடியிற் பார்க்க வெள்ளையா யுரைந்திருக்கும்.

அதை எடுத்துலர்த்தின பொடி படி 8, கடுக்காய்த் தோல் பொடி படி 4, தான்றிக்காய்ப் பொடி படி 4, அங்கோலப் பருப்புப் பொடி படி – 4, இம்பூரல் சூரணம் படி –4.

இதுவெல்லாம் கூட்டிக் கையாந்தகரைச் சாற்றிலிட்டுப் பன் உலர்த்திப் பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணிப் புதுப் பானையில் வைத்துக் கொண்டு சரீர சுத்தி பண்ணும் படி உப்பு, கழுவத்தாழை விழுதுச் சாறு, முயழக்கிற் கழஞ்சு சுண்ணாம்பிட்டு மூன்று நாள் குடிக்கவும். அன்றியும் மஞ்சள் சாறு, மூன்று நாட் குடிக்கவும்.

எண்ணெய்க்கு: காரெனத் தண்டைச் சுட்டுச் சாம்பராக்கி நீரிற் கரைத்துத் தெளிய வைத்து இறுத்து மூன்றுநாள் குடிப்பது, பிறகு தனக்குப் பொருந்தின நாளிலே நல்ல முகூர்த்தத்தில் வினாயகர் பூசை, யோகினி பூசை பண்ணி இக்கற்பம் ஒரு கழஞ்சு தேனில் மூன்று பொழுது கொள்ளவும்.

இக்கற்பம் அறுபதுநாள் கொள்ள நரை திரை மாறும்.

குட்டமுதல் ரோகமெல்லாந் தீரும். சரீரம் பச்சை மூங்கில் போலாம். ஆசை ஈராறு மண்டலங் கொண்டான வார்தீகனும் எவ்வர்ணமான காளையாவான். ஆறு மண்டலங் கொண்டால் சிவத்திலே வெள்ளி கறுக்கும், பத்து மண்டலம் கொண்டால்

## மகப்பேறு - குறிகள்

“பொருதித் திரண்டு கீழ்வயிற்றில்
புண்பட்ட முந்தும். செயல்தானும்
மருவிப் பழகி நின்றக்கால்
மச்கிச் செவ்வெய்துமா, ஆறாத்
துருவிப் பிழிதல் போலுடல்
வருந்திரங்கி யோடு வுண்டாங்
கருவை யழிக்கும் பெண்ணமுதே
காண்பாய் கர்ப்ப ரோகமென்றே.”
“சொரனைக் குறி முலையை
நெருடிப் பார்க்கின்
மெல்லிய தாயிருக்கில்
முதுபாக்குப் போலிருக்கில்

---

தூரதிருட்டி – தொலை நோக்கு, ஆசு–பற்று, வர்ணம் – குங்குமம், வார்த்தகன் – என்றாதல் கூடும், சுரனை – உணர்ச்சி, வார்த்தகன் – கிழத்தன்மையுள்ளவன்.

கொப்புள் பூ நிலையு
மிதந்திருக்கில் நற்முலை
யின் வரு பாலினிறம்
பால் போலிருக்கிற்
பிள்ளையுண்டாம்
யீதன்றி முலை மத்ததே
யிருக்கிற் கருத்தரிக்கிற் அந்த
முலை முகத்தில் வருபாலும்
பசித்திருக்கிற் கொப்பூழு நிலையும் மிழுந்திக்
குழியாயிருக்கிற் பிள்ளை யில்லை
நிலவுகலை மதி வதன
நேரிடைப் பெண்ணமுதே.

## மருந்து கொடுத்தறியும்படி

இலைக்கள்ளி வேர்ப் பொடியும் பாகலிலைச் சாறும், கோசலமுங் கூட்டி முழுகின நாள் முதல் மூன்று நாள் கொண்டு குணம் பார்க்கவும்.

## கோப வாயுக் குணம்

பெருகுங் குருதிக் கணைமறிக்கும்
பேதமாக வலியுண்டாய்
வருமே யிடுப்புத் தொடையுளைந்து
மலத்தை மிகவுமிறுக்கு மந்த
குருதில் அழயில் வலி தீரும்.
கொள்ளுங் கருப்பம் குறைக்குமய்யின்
சருவிப் பனைக்கு மாதமதில்
தாயும் கர்ப்ப வாயுவுமே.

**லேகியம் :** கண்டங் கத்திரிச் சாறை வடிகட்டிக் குறுணி அதில்த் திரிகடுகு, பெருங்காயம், உள்ளி ஓமம்,

..............................................................................................

*யோகினி – பெண் கடவுள். இப்பூசையைப் பற்றி சித்தர்களின் பூசாவிதியில் காணலாம்.*

வெதுப்பி பொடி செய்து முன் சாற்றில் போட்டு அடுப்பேற்றிக் கிண்டிக் காய்ச்சிக் கம்பியிலைப் பதத்தில் ஒருபடி நல்லெண்ணெய் விட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு நேரத்துக்குப் புன்னைக் காயளவு கொள்ளவும். இப்படி அரை மண்டலம், ஒரு மண்டலம் வியாதியைக் கண்டு கொள்ளவும்.

**எண்ணெய் :**

உரை: கடுக்காய், மஞ்சள், இந்துப்பு, கடுகு, நெல்லி வற்றல், திப்பிலி, பூண்டு, வீழிவேர், ஆமணக்கு இலை, வகைக்கு 3 பலம் - ஆமணக்கு எண்ணெயிலிட்டு எரித்துத்தர விப்புருதி தீரும்.

கடுக்காய், மஞ்சள், இந்துப்பு,
கடுகு முள்ளி வேருள்ளி
அடுத்த வீழி வேருடன்
ஆமணக்கினிலை தானும்
தொடுத்தே மூன்று பலமாகாச்
சுவர வெரித்தாமணக் கெண்ணெய்
கொடுக்க கா்ப்ப வாயுவிடும்
கொள்ளுங் கா்ப்பம் குறையாதே.

**உள்ளுக்கு மருந்து:**

| | |
|---|---|
| வேப்பிலைச்சாறு | 3/4 |
| பசும்பால் | 3/4 |

கலந்து மூன்று மிளகுமுரைத்துக் கூட்டி முழுகி வந்தவுடனே குடிக்கவும். இப்படி மூன்று முழுக்குக்குக் கொடுக்க கா்ப்ப வாயுக் கொ்ப்ப விப்பிருதிக் கா்ப்ப வயிற்று குணம் தீரும். மலந்திரண்டு விழும்.

+வற்றியே மெலியுந் தேகம் பலம்
குறைந்திடுந் தாகிக்கும்
பன்னொரு செய்தும் வாராத தலம்
தனிற் கையுங் காலும் உளைந்திடும்

........................................................................

*குறிப்பு : பலமக்களை பெற்றதால் கருவை அழிக்கும் பெண்ணைப்பற்றி திருமணமில்லாமல் உறவு கொண்டதால் ஏற்பட்ட கருவை அழிக்கும் பெண்பற்றி கூறியிட்டுள்ளது.*

தடிக்குங் கர்ப்பக் குலந்
தனை யகற்றும் கோபக்
கொடிய விப்புருதி யாமே.

**மருந்து :**

இலாமிச்சம் புல்லைச் சுட்ட சாம்பலும் மிளகுப் பொடியும் கலந்து வெள்ளாட்டுப் பாலிற் கொடுக்க கர்ப்ப விப்பிருதியும் புண்ணுந் தீரும்.

**எண்ணெய்:**

புளியாரைக் கிழங்கு, முன்னை வேர், உள்ளி வசம்பு ஆமணக்கு எண்ணெயில் காய்ச்சி வடித்துக் கொடுக்க கர்ப்பவிப்புருதி உடைந்து சீயாய் விழுந்து தீரும்.

பூவரசம் விதை நாளொன்றுக்கு அரை யாழாக்கரைத்துப் பசும்பாலிற் கலக்கி நாலு முழுகினவன்று முதலாய் மூன்று நாட்குடிக்கவும். பசித்த உடனே சுடுசோற்றிற்கான மிளகுப் பொடிப் பச்சை மஞ்சட் பொடி இரண்டுந் தூவிச் சாப்பிடவும். கர்ப்ப விப்புருதியும் தீரும். புழுவும் விழும். பிள்ளை யுமுண்டாம்.

**எண்ணெய்:** உள்ளி, திப்பிலி, காயம், சேங்கொட்டை, .......... புளியம் பிரண்டைக் கிழங்கு சிறு செருப்படி .... ஒருபிடி. நல்லெண்ணெய் அரைப்படி நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சித் தினமொரு கரண்டியாய் மூன்று நாளைக்குக் குடிக்கவும்.
மோரும் சோறுமுண்ணவும்

**இன்னம் மருந்து**

தைவேளை விதை - ஒரு பிடி
வேப்பங் கொழுந்து - ஒரு பிடி
இஞ்சிச் சாற்றிலரைத்துக் கொள்ளவும். இப்படி மூன்று நாள் உச்சியா மட்டும் ஒன்றும் தொடாதிருக்கக் கர்ப்ப விப்பிருதி விழும்.

இன்னம்:

| | |
|---|---|
| பெருங்காயம் | - மிளகளவு |
| சுக்குத் தேறு | - 2 |
| திப்பிலி | - 2 விராகனெடை |

மிளகு வுரையளவு, செண்பகப்பூ - 3, ஓமம், இரைபிடி, உள்ளிப்பூடு - 1. நாழி, உப்பில்லா களிக்கிண்டி, நல்லெண்ணை விட்டுத் தின்னவும்.

**கர்ப்பப் புழுவின் குணம்:**

மருவியே கீழ்வயிறு நொந்தே வலிக்கும்
பொருவு கர்ப்பப்புழுவரோகம்
அடிவயிற்றில் வலிக்கும் மெல்
ஆடவர் தொடிலுஞ் சூதகம்
ஆயினும் முன் கமைந்திடும்
மண்ணில் புனல் போல் விழுந்தே
கரைபடும் மலட்டுக்
கிருமியின் பான்மையே.

மருந்து : எருக்கம் வேர், வெள்ளெருக்கம் வேரிரண்டும், காராவின் பாலில் அரைத்து, மூன்று நீராடி வந்தவுடனே தான் கருப்புகட்டி கலந்து கொண்டு அரைத்துப் பசு நெய்யிற் கலக்கி குளித்து வந்து நாள் முதல் மூன்று நாள் கொள்ளவும்.

மருந்து செரித்தால் பாலுஞ் சோறும் உண்ணவும்.

புருடன் வக்கற் சென்றால் தண்ராதல் கரிகழுவின தண்ணீர் போலாதல் விழும், கறைபடும்.

மருந்து: பத்து முள்ளிப்பழம் உலர்த்தி உழக்கு நெய்யில் வேகவைத்து மூன்று முழுகின நாள் முதல் குடிக்கவும். பாலுஞ் சோறும் பதின்மூன்று நாள் உண்ணவும். உப்புப் புளித் தவிர்க்கவும்.

சேவகன் கிழங்கு தண்ணீர் வார்த்தரைத்துக் கீழ் வயிற்றில் பூசப் பொறுக்கும். பேய்க் கொம்மட்டிக் காயையறுத்து விதை தோண்டிப் போட்டு

---

வக்க – வக்கு – வழி 'வக்கு' என்றாதல் வேண்டும்.

அதில் தேங்காய்ப் பால் வார்த்து மூடி ராத்திரி வைத்து வைத்துக் காலையில் நாலு மூன்று காய் தின்று அந்தப் பால் குடிக்கவும்.

மாதவிடாய் வராமல் கர்ப்பந் தரித்தால் மலடிகளுக்கும்.....

## மலடிகளுக்கு மாதவிடாய் வர

புளியானைக் கிழங்கை இரண்டு துட்டத்தனை நேகவரைத்துப் பசுவின் பாலில் மூன்று நாள் குடிக்க மாதவிடாய் வரும்.

பொங்கும் குருதி மிகச் சாய்த்து
விடும் புவியில்
தங்கும் பெருமலடு தான் மருந்து சத்திச்
சாறடைக் கிழங்கு
முடக்கொழுஞ்சி சமூலமும் குறுவை
நெல்லரிசி யிலிடித்து
களிகிண்டிக் கறுப்புக் கட்டி எண்ணெய்
கூட்டிக் கொள்ளத் தீரும்.

✦ மலட்டு வலிக்கு: உத்தாமணி வேர், எருக்கம் வேர், மிளகு, வசம்பு, .... நறுக்கி இருநாழி நீரிலிட்டு உழக்காக்கிக் கொள்ளவும். இலுப்பைப் பிண்ணாக்கும், நெருஞ்சி வேரும் சிறுநீரிலரைத்துச் சிறு நீரிற் கொள்ள வலிதீரும்.

## வாயுவினால் வந்த மலட்டுக் குணம்:

வாயுவினால் வந்த மலடானால்
நீரிறங்கிச் சாயுங் கரைப் பொழுதிற்
றானே தீயக்கடுப்பதனமாய்
தினமும் காணுமே
மின்னே யிடுக்குங் குணங்கண்டற்
மருந்து பெருங்காயமுமிந்துப்பும்
புளியம் வேருஞ் சமனாய்க் கற்றாழஞ்
சுள், கானக் குறுஞ்சாலினில் பலமும்
அரையானஞ்கிழங்காக யடுப்பேத்தி

..............................................................

✦ ஒருசீர் குறைந்துள்ளது.

சாறு வார்த்தரைத்துக் குடிக்கவும்

பூசணிக்காயிடித்து நீர் பதக்கு

விட்டுக்காய்ச்சிப்

பொன்னே யெட்டொன்றாக்கிப் பிசைந்துப்

பிழிந்ததனில் மாசில் பசும்பாலிரண்டு

நெய்யிரண்டுபடி தாரைவளையம்

கரும்புடனிரலளிக்கிழங்குச் சாறு

பாசிளநீர் வகைவகைக் கோர்படி

வங்கம் ஏலம் பச்சிலை கச்சோலம்

அதிமதுரஞ் சாதிக்காய் தேசனி

சந்தனம் கருஞ்சீரகமோமம்

கோட்டந் திரிகடு இந்துப்பு

நற்சீரகமிருவேலியின் வேர்.

1

வேர் வகையிற் குறுந்தொட்டி அமுக்கரா கொடுப்பை

வேர் முசுட்டை சிறுகீரைலாமிச்சம்

வேர் நன்னாரி வேர் செங்கழுநீர்க் கிழங்கு கொட்டிக்

கிழங் கூவிலாத்திப்பூ வில்வப்பிசின் கொட்டை

ஓரொன்று கழஞ்சி யிரண்டரைத்து விட்டு நா

நாளொன்றுமிக் காந்தம்

ஊறவத்தக் காய்ச்சி வடித்துண்ணத் தீரும் மேலும்

உருக்கியு முட்சுரம் மேகம்

ஆம்சினுக்கிருமல் இளைப் பீளைக்

காயசுவாசமுமே.

## 2.

## அயனவில்லாதி தயிலம்

வில்வவேர் அகில் கட்டை சிறு குமிட்டி
வேர்முதவள்ளித் தண்டுடனமுக்குரா
மூலம் மிளகரிய திரிபலை நன்னாரி இய
லுற்ற வேர் வகைக் கெண்
பலமெடுத்திடித் தேரண்டு குறுணி நீரிலிட்டே
யெட்டி லென்றாயாக்கி யுதிற்
உத்ததிறப்பா லெண்ணை இளநீ
ரொவ்வொரு வகைக்குரிய
னுற்ற நாலுபடி விட்டிலாமிச் சொடு
விளாவரிசி சித்தரத்தை மேவு
மஞ்சிட்டி யிருவேலி மதுரம்பச்சை
வெட்பாலை அரிசி
சந்தநதுயரற்ற திரிகடுகம் காயும்
குக்குல் கச்சோல முயர் தேவ
தாரம் சொல்லரிய நாகப்பூ
செஞ்சந்தன மாஞ்சில்
சிறு முலுகம் மரவு கொட்டம்
மருவு தேக்கொடு கடுக்காய்
கலினி மூலமிவை வகை வகைக்
கிரு கழஞ்சு மன்னுப் பால்
விட்டரைத்துக் கலந்தே
கை மாறாது கிண்டிக் காச்சியே
யுரிய மெழுகின் பதத்தினில்
வடித்துத் தயிலமொரு வென்னீர்
கொடு முழுகி வேரவோங்
இயக்குத்து
வருமீளை யிருமல்கன்னோ
யுன்னதும் பித்தச் சன்னி

விரவு சலதோஷம் மந்தம்
　　　　காய்ச்சல் பீனிசம், மிகச் செவி
யடைப்பு வாயு மீறிய மகா
　　　　வுதரம் வாயிலுண்டான நோய்
மிகுமண்டைச் சூலை மற்றுந்
　　　　சருவ பலரோகமுந் தீரு மென்றே
செழுந்த மிழ்மலைக்குரிய
　　　　முனிவன் சாற்றினனே
அருந்தயன வில்வாதி தயிலம்
　　　　மயங்கிய விழிப் பெண்ணமுதே.

உரை : வில்வாதித்தைலத்தால், ஈளை, இருமல், பித்த சன்னி, நீர்க்கோவை, மந்தம், சுரம், காதடைப்பு, மீனசம், மண்டைச்சூலை, வயிற்று நோய் என்பன தீரும். பொதியமலை அகத்தியர் கூறினார்.

## தயிலம்

சீந்தில் கொடி, வில்வவேர், வேங்கைச் சிராய், சிற்றாமுட்டிவேர், பூச இடித்துக் கூட்டிப் பதக்குத் தண்ணீரிலிட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து இதில் பசுவின்பால், உரநல்லெண்ணெய் 2 விட்டு அமுக்குரா வேர் அரத்தை இலுப்பைப்பூ, தேவதாரம், மஞ்சள், கத்தூரி மஞ்சள், சடாமாஞ்சில், சுக்கு சந்தனம், காரகில், முத்தக்காசு ........அரைத்துக் கரைத்துக் காய்ச்சி மெழுகில் முதிர்ந்த பதத்தில் வடித்து ஒரு பணவிடை கத்தூரிப் பொடி போட்டு மூன்றுநாள் நேர்ப்புடம் வைத்தெடுத்துத் தேய்த்துச் சிறுபயறு அரைத்திட்டு முழுகத் தீர்வன வியாதிகள், அவைகளின் பெயர்களாவன,

ஆம்பல், பித்தம், இரத்தபித்தம், இரத்தபாணம், உள்பித்தம், தலை கிறுகிறுப்புச் சீதப்பித்தம், சர்பம், சிரரோகம், கண்ரோகம், சகலசன்னி, சகல பீனிசம், இவை தீரும்.

தலைகண் காதுக் கிட்டு முழுகவும்.

---

விழிப்பெண் அமுதே – மகடூஉ முன்னிலை
தமிழ் மலை – பொதிகை மலை, பாணி – கை.

## குமாரத் தயிலம்

கரிப்பான்சாறு, பொற்றலைக் கரிப்பான் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, கற்றாழைச்சாறு, பசுவின் பால் இவை ..........இளநீர் .......... தாமரைப்பூ, வளையம், அரைத்துக் தேங்காயளவு பொன்னாங் காணிவேர், சிறுகீரைவேர், சீதேவி செங்கழுநீர் வேர், நன்னாரி வேர், பிரமுட்டி வேர், ஊசிப்பாலைவேர், வில்வவேர், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், ......ஒரு பிடி, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பூ, ஏலம், இலவங்கப்பட்டை, செண்பகப்பூ, கோட்டம், அதிமதுரம், சிறுநாகப்பூ, பெருநாகப்பூ, கச்சோலம், கல்மதம், கோரோசனை, கற்கடக சிங்கி, சிறுதேக்கு, கத்தூரி மஞ்சள், வாய்விளங்கம், வலம்புரிக்காய், இந்துப்பு, அகில் கட்டை, தேவதாரம், கொத்தமல்லி, இருசீரகம், திரிகடுகு, திரிபலை, மலைமஞ்சள், மஞ்சிட்டி, ......கடுக்காய், தான்றிக்காய், வீர 30, சந்தனமும் கோரோசனையும் வேறு பொடி செய்து வைத்துக் கொண்டு, சாற்றை யெல்லாங் குறுணியாய்க் காய்ச்சிக் குறுக்கிக்கொண்டு, மற்ற மருந்தையெல்லாம் அந்தச் சாறுவிட்டரைத்துச் சாற்றில் கலக்கிக் காய்ச்சி இருநாழியாய்க் குறுக்கிப்பின்பு நல்லெண்ணெய் உரி, விட்டு கலக்கி மூன்று நாள் விட்டு நாலாம் நாள் அடுப்பேற்றிக் காய்ந்த வருகிற வேளையில்ச் சந்தனப் பொடி போட்டுக் கிண்டவும். இறுகிற வேளையிலே கோரோசனைப் பொடிபோட்டுக் கிண்டிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துப் பதினைந்து நாள் தலசம்புடம் வைத்தெடுத்துக் கொண்டு தேய்த்த எண்ணெய் மூன்று நாளிருக்கவிட்டு நாலாம் நாள் ஒரு கை எண்ணெய் தேய்த்துப் பாசிப்பயரிட்டு முழுகவும். எண்ணெய் போகாதிருந்தால் உசிரைப்பிட்டு முழுகவும். இப்படி ஒவ்வொருநாள் விட்டு பனிரெண்டு முழுக்கு முழுகவும்.

**முழுகி வர தீரும் வியாதிகள்:** சயரோகம், காசரோகம், வரட்சியால் எடுத்த இருமல், காதுமந்தம் கண்காசம், தலைத்தியக்கம், பித்தக் கிறுகிறுப்புச் சரீர வகைக் காலெரிவு, உட்சுரம், முதல்ச் சுரம் தீரும். நூற்றிருபது வாதம் எண்பதும், உடம்பிளைத்துப் போறதும், சிற்றிளைப்பு, பித்தம், பாண்டு, பீனிசரோகம், எழுவகையும் தீரும். கைகண்டது. கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். உப்பு, துவரைப் பருப்பு, கீரைத்தண்டு, பாசிப்பருப்பு, இவைக் கூட்டவும். வெந்நீர் பருகி வரவும்.

## மதுரசந்தனாதித் தயிலம்

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | – 1 | பலம் |
| சந்தனம் | – 1 | ,, |
| நன்னாரிவேர் | – 1 | ,, |
| இருவேலிவேர் | – 1 | ,, |
| விலாமிச்சம்வேர் | – 1 | ,, |
| குருந்தொட்டி வேர் | – 1 | ,, |
| அமுக்கரா வேர் | – 1 | ,, |
| கோரைக்கிழங்கு | – 1 | ,, |
| கண்டங்கத்திரி | – 1 | ,, |
| சீந்தில்கொடி | – 1 | ,, |
| பற்படாகம் | – 1 | ,, |
| வில்வவேர் | – 1 | ,, |
| கடுக்காய் விதைப் பொக்கு | – 1 | ,, |
| வேங்கைச் சிராய் | – 1 | ,, |
| குமிழம் வேர் | – 1 | ,, |

தண்ணீர் நானாழி விட்டு இரு நாழியாக்கி, எண்ணெய் நாழி, பால் நாழி, கூட்டி அதிமதுரம், கோட்டம் . ஏலம், செவ்வல்லி கொடி பூலாங்கிழங்கு, பச்சை, செண்பகப்பூ, அரத்தை, சந்தனம், இலவங்கப்பட்டை, மஞ்சட்டி, சடாமாஞ்சில் – 10 விராகனெடை, அரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்தக் கொண்டு முழுகி வர உடம்பு சுரம், புதுசுரம், பிறதாகம், தண்ணீர் உழலை, உடம்பில் வெறுப்பு இவைத் தீரும்.

**தைலம்** : சாதிக்காய், சாதிபத்திரி, வாய்விளங்கம், கிராம்பு, அதிமதுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, கோட்டம், சமுத்திராபச்சை, மலர் ஆகாசச் சந்தனம், இலவங்க பத்திரி, வாய்விளங்கம் – வராகனெடை வகைக்கு 1, வெட்பூலா வேர்த் தோலி, சிற்றாமுட்டி வேர்த் தோலி, பேராமுட்டி வேர்த் தொலி, நீர்ப்பூலா வேர்த் தொலி, முத்தெடுக்கின் செவி வேர்த் தோல பொன்னாங்காணி வேர், இவைகளெல்லாம் வெவ்வேறாய் அரைத்து .... எலுமிச்சங்காயளவு, இளநீர் நாழி, பால்நாழி, நல்லெண்ணெய் நாழி,

---

*மலர் – சிறுபீளை, "வனிடங்கா மலர் அம்மொழி" (சித்தவைத்திய திரட்டு)*

நெய்நாழி, கடைமருந்து அரைத்துக் கலந்து காய்ச்சி, சதங்கைக் கொதியிடுகிற பருவத்தில்க் கை வைத்துப் பார்த்தால் வெதுவெதுத்திருக்கும். அந்தப் பதத்திலே இறக்கி வடித்துக் கரண்டி 2, சிலாப்பிட்டு முழுகிவரச் சரீர உட்ணம், கண்ணுட்ணம், வாய் பீனிசம் இவை தீரும்.

## அரக்குத் தைலம்

அமுக்கரா வேர், குறுந்தொட்டிவேர், குளவிஞ்சி வேர், வேங்கைச்சிராய், வில்வவேர், சீந்திக் கொடி, முத்தக்காசு, வெட்டிவேர் 4 பலம், விலாமிச்சம்வேர் 4 பலம், ஆக .. 80 இதை இடித்துப் பத்து மாகாணி நீர் போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து, பொன் மெழுகு பலம் 5, இடித்துப் பொட்டணாங் கட்டிப் பதக்குத் தண்ணீரில் தோளாரமாகக் கட்டி, நாலொன்றாய்க் காய்ச்சி, வடித்துக் கொண்டு, சந்தனம், கோட்டம், சதகுப்பை, செண்பகப்பூ மொட்டு, பெருங்குரும்பை மின்னிப் பயறு, வெள்ளி லோத்திரம், சயிலோகம், குளவிந்தம், தேவதாரம், திரிகடுகு, அரத்தை, அதரரிசி, மஞ்சிட்டி, அதிமதுரம், பொன்மெழுகு, நன்னாரி வேர், கடுகுரோகணி, பச்சிலை, நாகப்பூ, ஏலம், இலவங்கம், வெந்தயம், தகரம், கச்சோலம், முந்திரிகைப்பழம், செஞ்சந்தனம், சாதிக்காய், துத்திவேர், நந்தைச் சூரி வேர், வேப்பந் தோல், அதை அரைத்து, எண்ணெய் படி 11/2, தயிர் தண்ணீர் படி – 2, எல்லாங் கூட்டி வெந்து மெழுகு பதத்தில் வடித்துத் தலையுடம்புக்கிட்டு முழுக, அசத்தியா உலர்ந்த காயம், குளிர் வெதுப்புச் சரீரம் வாதபித்தம் இவை யெல்லாம் தீரும்.

உசிலம் பொடியிட்டு முழுகி எண்ணெய் போகாதிருந்தால் சிறுபயறு அரைத்துத் தேய்த்து முழுகவும். நாலுநாளைக் கொருமுறை முழுகவும். உடம்பு பெருக்கும்.

இன்னம்

## அரக்குத் தைலம்

கோட்டம், நன்னாறி வேர், சிறுதேக்கு
கச்சோலம் அதிமதுரம் மாகாணி தேவதாரம்
வெட்டிவேர் அமுக்கரா வேர், கோரைக்கிழங்கு,
சதகுப்பை எண்ணெநாழிக் கற்கரகப்

பொன் மெழுகு, பலம் 1 நாழி நீரில் இடித்து
முடிந்திட்டுக் காய்ச்சி வடித்துச் சரக்கெல்லாம்
மரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து முகப்
பித்தரோகம் சீதசுரம் சரீர உட்ணம் தீரும்.

இன்னம்

## அரக்குத் தைலம்

அரக்கு துண்டு - 10
அரத்தை துண்டு - 10
வெவ்வேறு கசாயமேற்றி வடித்துக் கொள்வது.

அமுக்கரா வேர், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி வேர், நன்னாரி வேர், சீந்தித் தண்டு, கோரைக் கிழங்கு, தூதுவளை சமூலம், கண்டங்கத்திரி சமூலம், ஆயிலிபட்டை 10 விராகனெடை, இதை 10 படி தண்ணீரில் கசாயமேற்றி, நாலொன்றாய் வடித்து, மூன்று கசாயமும், கூட்டி எண்ணெ ய் 4 கூட்டிவிட்டுத் தயிர் தண்ணீர் படி விட்டுக் கொண்டதில் புகட்டி எரியவிடவும்.

**இதன் மேல் மருந்து:**

மஞ்சிட்டி, வெட்பாலையரிசி, கோட்டம், செவ்வல்லிக் கொடி, சந்தனம், செஞ்சந்தனம், திரிகடுகு, திரிபலை, அரேணுகம், கடுகுரோகணி, ஓமம், சிறுதேக்கு, மதுரம், தேவதாரம், ஏலம், இலவங்கப்பட்டை, வங்காளப் பச்சை, சிறுநாகப்பூ, மஞ்சள், மரமஞ்சள் கோலம், சதகுப்பை, வகைக்கு வராகனெடை 3, கிராம்பு, கோரோசனை, புனுகு சட்டம், வராகனெடை 1/2, இவையெல்லாம் முன் கசாயமும் எண்ணெயும், பதக்கானதின் பேரில் அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்து முழுகி வர வாதரோகம், சேத்மரோகம், சுரம், உட்சுரம், சிரங்கு தலைவலி இவை எல்லாம் தீரும்.

**சுரத்துக்கு எண்ணெய்:**

விளக்கெண்ணை, வெட்பாலை, வாலுளுவை வசம்பு
வெள்ளுள்ளி யரைப்பலமு மிக்கரிதை
மாடையமுக்கானப்பசு மஞ்சள்
சாறிரண்டுகரண்டி

பிட்டு – பொடி, தூள், மாடை–பொன், அமுக்கு – அழுங்கு–குமரி

சுள், கானக் குறுஞ்சாலினில் பலமும்
அரையானஞ்கிழங்காக யடுப்பேத்தி
யெண்ணையுடன் கலந்து கிளறியே
வடித்து மேற்பூசி யுள்ளுங்
கொண்டால் விளக்கான ஒளிபோல
எரியும் பழஞ்சுரமும்
விண்ணோய நடுக்கலுடன்
வெப்பதணத்துப் போமே.

உரை: வெட்பாலை, வாலுளுவை, வசம்பு, பூண்டு 1/2 பலம், அரிதை, கடுக்காய் மாடை, அழுக்கு,பசுமஞ்சள், எண்ணெயுடன் கலந்து எரித்து வடிக்கவும். மேல் தடவி குடிக்க சுரம்,வெப்பம் விலகும்.

## வாதசீத சுரத்துக்குத் தைலம்

கோட்டமொடு சந்தனமுநன்னாரிவேற்
கொத்தமல்லி தக்கோலஞ்சாக்மிந்துதுகரம்
மட்டியுடனே நல்லவேல மிலவங்கம் ஆன
பெருங்குரும்பை யிருவேலி மரமஞ்சள்
இட்டமுள மஞ்சள் சதகுப்பை அமக்கிரா
வேரிலே சமனான் எண்ணெ நாழியுடன் கூட்டி
திட்டமுன்பொன் மெழுகுதயிர் படி..உ;ண்டாய்த்
தயிர் நீர் வாதமொடு சீதசுரம் தீர்க்குமே.

## தைலம்

எண்ணெய் நாழி பொன் மெழுகு ...2 பசுமோர் நான்குநாழி அதிமதுரம் மரமஞ்சள், அமுக்கரா வேர், சந்தனம் சடாமாஞ்சி மஞ்சிட்டி, பேராமுட்டி, செம்மானாத்திவேர், தாமரைக் கிழங்கு, சிறுதேக்கு, எட்டி விலாமிச்சம் வேர், சதகுப்பை கோட்டம் வராகனெடை 10 பொடிசெய்து எண்ணெயில் கலந்து சிற்றாமுட்டி, பேராமுட்டி வேர், விராகனெடை 12, நானாழி நீரிட்டு நாழியாகக் காய்ச்சி வடித்து எண்ணெயிற் கூட்டிவிட்டுக் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்துத் தேய்த்து முழுக சீதசுரம், அத்தி சுரம் சய சுரம், கர்ப்ப சுரம், ஆகாரத்திற் தண்ணீருழலை, சேத்துமசுரம், இதெல்லாம் தீரும்.

---

வகைக்கு 2 கரண்டி, கான் – சிறுமூலம், சாலி– நெல், வேலமரம்– 1/2 பலம் ஆன – ஆனை என்றாதல் வேண்டும். ஆனை – அறுகு, அத்தி, கிழங்கு – மூலம், மணம்.

## அசுவகந்தாதித்தைலம்

அமுக்குரா வேர் மஞ்சள் மரமஞ்சள், கத்தூரி மஞ்சள், மஞ்சிட்டி, அரத்தை, நன்னாரிவேர், கோட்டம், சந்தனம், செஞ்சந்தனம், நீர்வள்ளிக் கிழங்கு, பொன்மெழுகு, பெருங்குரும்பை, தேவதாரம், திப்பிலி மூலம், அதிமதுரம், விலாமிச்சம் வேர், வராகனெடை 1 வீதம், மருந்தெல்லாம் அரைத்து நாழித் தண்ணீரும், நாழி எண்ணெயும் கூட்டிக் கலந்து காய்ச்சி வடித்து உடம்பிலிட்டு நனைக்கச் சர்வ சுரமும் தீர்ந்து உடம்பு பெருக்கும்.

## வெருகுத் தைலம்

வெருகன் கிழங்கு, சிற்றாமுட்டி வேர், சிறுகாஞ்சொறி வேர், அவுரி வேர், பெருங்கரந்தை சீதேவி, செங்கழுநீர், துளசி, நொச்சி, இவை வகைக்கு 1 பலம், கூட்டி யிடித்து ஆறுமரக்கால் நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து, பொன்மெழுகு 1 பலம், இடித்து நாலு படி நீர் விட்டு ஒருபடியாகக் காய்ச்சி வடித்து இரண்டு வகையுங் கலந்து இரண்டு படி எண்ணெயும், பதக்கு மோரும் கற்கம் வெட்பாலை யரிசி 10 ம், முத்தக்காசு, அதிமதுரம், அரத்தை, கோட்டம், கருவேம்பு, வாய்விளங்கம், மஞ்சள், மரமஞ்சள், திரிகடுகு, கொடுவேலி வேர், ஓமம், இலவங்கம், கடுகு ரோகணி, கத்தூரி மஞ்சள், அகில், கந்தகம், மஞ்சிட்டி, சதகுப்பை, தக்கோலம், சிறுதேக்கு, திப்பிலி மூலம், செவ்வியம், வெள்ளுள்ளி, புகையூறல், இவை ஒவ்வொன்று வகைக்கு 1/4 பங்கு கூட்டி மோர் விட்டரைத்துக் கரைத்து நாலு நாட் சிறுகொதியிட்டு அஞ்சாம் நாள் வடித்து வைத்துக் கொண்டு உள்ளும் கொண்டு, தலை உடம்புக்கும் இட்டு முழுகி வர, ஒன்று விட்ட மாறல், நாலா மாறல், பதினஞ்சு நாளை மாறல், வருடத்தும்மல், ஆறுமாதும் விடாச் சுரம், நாட்பட்ட சுரம், விசசுரம், அபிதாக சுரம், அசீரண சுரம், பூத சுரம், மாற சால சுரம், இது முதலான சகல சுரமுந் தீரும்.

## மோரெண்ணை

| | |
|---|---|
| வேங்கை வயிரச்சிராய் | – 10 பலம் |
| வில்வவேர் | – 10 பலம் |
| சிற்றாமுட்டி சமூலம் | – 2 பலம் |
| அமுக்கரா வேர் | – 3 பலம் |

கார்த்திகைக் கிழங்கு - 1/2 பலம்

வெட்டி வேர் - 1 பலம்

விலாமிச்சம் வேர் - 1 பலம்

நன்னாரி வேர் - 1 பலம்

கோரைக்கிழங்கு - 1/4 பலம்

அரத்தை - 3 பலம்

கடுக்காய்த் தோல் - 1 பலம்

நெல்லிப்பருப்பு - 1 பலம்

தான்றிக்காய்த் தோல் - 1 பலம்

அதிமதுரம் - 1/2 பலம்

சிறுநாகப்பூ - 1/4 பலம்

இதில் வேங்கைச் சிராயை இடித்துக் குறுணித் தண்ணீரில் போட்டு, நீர்காய்ந்தவுடன் இரு நாழியாய் வடித்துக் கொண்டு மற்ற மருந்துகளையும் இடித்து 5 படி தண்ணீரில் இட்டுக் காய்ச்சி 2 படியாய் வடித்துக் கொண்டு முன் உள்ள கஷாயத்தில் கூட்டி இதில் தேங்காய் தண்ணீர் படி 1/4, பசும் பால் படி 2, எண்ணைய் படி 2, முத்த தயிர் தண்ணீர் 2 படி இட்டுப் பின்பு

ஏலம் - 1/2 பலம்

கொத்தமல்லி - 1/4 பலம்

வாய்விளங்கம் - 1/4 பலம்

சீரகம் - 1/4 பலம்

கருஞ்சீரகம் - 1/4 பலம்

கற்கடக சிங்கி - 1/4 பலம்

செண்பகப்பூ - 5 பலம்

கத்தூரி மஞ்சள் - 1/4 பலம்

முழிமஞ்சள் - 1/4 பலம்

நற்சாந்துப்பட்டை - 1 பலம்

பூலாங்கிழங்கு - 1/4 பலம்

கிளியூறற் பட்டை - 2 பலம்

கடுகு ரோகணி - 1/4 பலம்

செவ்வல்லிக் கொடி - 1/4 பலம்
கிராம்பு - 2 வராகனெடை
சாதிக்காய் - 3 வராகனெடை
சாதிக்காய் - 3 வராகனெடை
இலவங்கபத்திரி - 3 வராகனெடை
இலவங்கப்பட்டை - 1/4 பலம்

இவையெல்லாம் கசாயம் விட்டரைத்துக் கலந்து மூன்று நாளூரவிட்டு நாலாம் நாள் காய்ச்சிக் கறகம் திரண்டு எண்ணெய் தெளிந்தவுடனே ஒலைப் பூப்பத்து சோறுதள்ளி மடலை எண்ணெயிற் போட்டு பின்பு,

குங்குமப்பூ - 2 வராகனெடை
கோரோசனை - 2 வராகனெடை
பச்சைக் கற்பூரம் -

பொடி செய்த போட்டு பதத்தில் வடித்து முழுகிவர பீனிசம் அத்தி சுரம், உட்காய்ச்சல், மேகவெட்டை இவை தீரும். துட்டிடை உள்ளுங் கொண்டு உடம்புக்கும் இட்டிருந்து மறுநாள் தலைக்கும் உடம்புக்கும் இட்டு சாயங்காலஞ் சீகைக் காயாகிலும், உசிலை அரப்பாகிலும் இட்டு ஒன்றுவிட்டொருநாள் மூன்று நாளைக் கொருக்கால் முழுகி வரவும்.

## பழஞ்சுரத்துக்கு மோரெண்ணை.

பசுமோர் - ப. நல்லெண்ணெய் - 2. சிற்றாமுட்டி இலைச்சாறு. இம்மூன்று வகையும் ஒன்றாய்க் கலந்து நாலுபடியாய் வற்றக் காய்ச்சி, ஏலம் இலவங்கம், அதிமதுரம், சாத்திரபேதி, கிராம்பு, செண்பகப்பூ, கோட்டம், சதகுப்பை, மரமஞ்சள், கொத்தமல்லி, தேவதாரம், செவ்வியம், செவ்வள்ளி, அரத்தை, 2 அரைத்து முன் கசாயத்தில் கலக்கிக் கொண்டு பொன்னாங்காணி வேர், சிறுகீரை வேர், தாமரை வளையம், ஓரிதழ் தாமரை வேர், நன்னாறி வேர், விலாமிச்சம் வேர், அமுக்கிரா வேர், வராகனெடை அரைத்து முன் எண்ணெய்க் கசாயத்தில் கலந்து இரண்டு நாளூறி வடித்து வெந்நீரில் மூழ்கி வர சரீர உட்ணம், தாகம், நாட்பட்ட சுரமெல்லாம் தீரும்.

இன்னம்

## ஓரெண்ணெய்

மோர் படி - 6
எண்ணெய் படி - 1

நன்னாரி வேர், குருந்தொட்டி வேர், இலாமிச்சம் வேர், கோரைக்கிழங்கு, இருவேலி வேர், அமுக்கிரா வேர், ....... அறுநாழி நீரில் வடித்திட்டு நாழியாய்க் காய்ச்சி எண்ணெய் மோரில் விட்டு ஏலம், மதுரம், இலவங்கப்பட்டை, செவ்வல்லிக் கொடி, கோட்டம், பூலாங்கிழங்கு, செண்பகப்பூ, பச்சை, அரத்தை, முத்தக்காசு, அமுக்கிரா வேர், மஞ்சிட்டித் ..... வராகனெடை 1 அரைத்துக் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து முழுகச் சீர உஷ்ணம் யாவும் தீரும்.

## ஏலாதித்தயிலம்

கோரைக் கிழங்கு, வில்வவேர், குறுந்தொட்டி வேர், அவரை வேர்ப்பட்டை, தாமரை வளையம், நிலப் பனைக் கிழங்கு, வெட்டிவேர், இலாமிச்சம் பட்டை, ஆலம்பட்டை, இச்சிப்பட்டை, அரசம்பட்டை, நெல்லிப்பட்டை, கிராம்பு, பட்டை நன்னாரி வேர், சிறுமுன்னை வேர், ..... இடித்தொரு மிடாவிலிட்டு, ஆறு மரக்கால்த் தண்ணீர்விட்டு ஆறுபடியாகக் காய்ச்சி இருத்தொரு தாளியில் விட்டு எண்ணெய் 2.. கூடவிட்டு

கடுக்காய் 50,
தான்றிக்காய் - 50
நெல்லிப்பருப்பு
சந்தனச் சிராய் பலம் 2

இவையெல்லாம் இடித்துக் குறுணி தண்ணீர்விட்டு ஒருபடியாய் வற்ற வைத்திறுத்துக் கூட்டி வல்லாரை, முசுமுசுக்கை, தாழைவிழுது, தண்ணீர் விட்டான் கிழங்கு, பொன்னாங்காணி, தாமரை, அல்லி, வகைக்குச் சாறு நாழி கூட்டி, இளநீர் படி 2, பசும்பால் படி - 2, இவை எண்ணெக் காயும் போது உதவ விடவும். கற்கம், ஏலம் இலவங்கம்பட்டை, கொட்டம், அதிமதுரம், சடாமாஞ்சி, மஞ்சிட்டி, பூலாங்கிழங்கு, கட்டி நுரை, சமுத்திரப் பச்சை, தாளிசபத்திரி, செண்பகப்பூ, சிறுநாகப்பூ, மஞ்சள், மரமஞ்சள், வெந்தயம், கிராம்பு, சிறுதேக்கு, கல்மதம், கச்சோலம், அரத்தை, மிளகு,

கருங்சீரகம், அகிற்கட்டை, இவை ......இடித்தரைத்து நாழித் தண்ணீர்க் கலக்கி முன் சொன்ன கசாயத்துக்கு முன்னுதாக விடவும். விட்டுக் காய்ச்சி மிளகு பதத்தில் வடித்துக் கொண்டு நாலு நாளைக் கொரு நாள் டம்பெல்லாஞ் சாற்றில் இரண்டு நாழிகை ஊற விட்டு வெந்நீரில் முழுகிவரச் சரீரத் திலுண்டாகிய உட்ணரோகம், உட்காய்ச்சல் தலைவலி, கிறுகிறுப்புச் சலக்கழிச்சல், நீர்க்கடுப்பு, இவை யெல்லாம் தீரும்.

## ஏலாதித் தயிலம்

அத்தி, அரசு, ஆல், இச்சி, மா, நாவல், மருது, கடம்பு, நீர்வள்ளி, கொன்றை, அழிஞ்சில், வேம்பு, பூவரசு, வெள்வேலம் இலைகளின் பட்டை, கோவைத் தண்டு, சீந்தில்தண்டு, பேய்ப்புடல், தலைச்சூடி, வள்ளி வேர், இலாமிச்சம் வேர், வெட்டி வேர், கோரைக்கிழங்கு வேர், அமுக்கிரா வேர், ..... இதைத் தறித்திறுத்து வைத்துப் பத்து மரக்கால் நீர்விட்டுக் காய்ச்சி நாலொன்றாய் இறுத்து இதில் பால் 2 படி ஆக வகைச் சாறு ... எண்ணெய்க் கூட்டிக் கற்கம் ஏலம், இலவங்கம், தாளிச பத்திரி, தகரம், நாகப்பூ, கச்சோலம், அடவிக் கச்சோலம், கோட்டம், சடாமாஞ்சில், சதகுப்பை, கல்மதம், புலிநகம், குக்கில், குங்குமப்பூ, பெருங்குரும்பை, அமுக்கரா வேர், பொன்மெழுகு, புன்னைக் கொட்டை, அழஞ்சில் வேர், சணம்புவிதைச், சாதிக்காய், தக்கோலம், சந்தனம், தலைச்சூடு, வள்ளிக் கொடி, மஞ்சள், தேவதாரம், நெய்தற் கிழஞ்கு, வேப்பம் பிசின், நன்னாறி வேர், கோரைக்கிழங்கு, அதிமதுரம், குதிரைச் செவி, ஒடுவடக்கி, லாமிச்ச வேர், செண்பக மொட்டு, புனுகு சட்டம், ........விராகனெடை 1 அரைத்துக் கரைத்து முன்சாறெண்ணையிற் கலந்து முதிர்ந்த பதத்தில் வடித்து முழுகத் தீரும் வியாதி: சயரோகம், மண்டை வியாதி, கல்லெரிப்பு, கைக்காலெரிவு, உள்மாந்தை, வாதபித்த செருமம், இவை தீரும்.

சிற்றாமுட்டி வேர், அதிமதுரம், மிளகு, இவை மூன்றும் வகைக்குத் தேசிக்காயளவு அரைத்து எண்ணெயிற் கலந்து காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து முழுகி வர உடல் காரக் கணைப்புத் தீரும்.

**உள்ளுக்கு விளக்கெண்ணெய்**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | - 2.. |
| நீர்வெங்காயம் | - உரி |
| எலுமிச்சம் பழம் | - 20 |

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, மதுரம், வெந்தயம், நற்சீரகம், கருஞ்சீரகம், இலைவங்கப்பட்டை, கொத்தமல்லி, ....... வராகனெடை - 3 வெதுப்பிப் பொடி செய்து வைத்துக் கொண்டு கடுக்காய் 5, விதைப் போக்கிப் பொடி செய்து கொண்டு, எலுமிச்சம் பழத்தைப் பாக்குப் போலே நறுக்கி எண்ணெயில் போட்டு நீருள்ளியும் அரிந்திட்டுக் காய்ச்சி ஈர வெங்காயம் வெந்து வருகிற போது சிவப்பாம் அப்போதிறக்கிக் கொண்டு ஓரிதட்டாமரையை கசக்கி எலுமிச்சங் காயளவு எண்ணெய் பிழிந்து போட்டுக் கடை மருந்துப் பொடியும் கடுக்காய்ப் பொடியும் போட்டுக் கிண்டி மறு கலசத்தில் விட்டு வைத்துக் கொண்டு ஆள் பலமறிந்து பிள்ளைகள் பருவத்துக்குத் தக்கவாறு ஒரு கரண்டி, அரைக்கரண்டி, கொடுக்க வயிறு பொதியாம் கீரைப்புழுவும் விழுந்து போம். கண்சுரம் விடும், கஞ்சித் தெழு இறுத்திறுத்திக் கொடுக்கப் பேதிக்கும். அதன் மேல் பத்தியம் கொடுக்கவும்.

இப்படி இரண்டு மூன்று நாள் கொள்ள, கண்சுரம், உட்சுரம், உடல் வெக்கை, தீர்ந்து சரீரம் பெருக்கும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

சிற்றாமணக்கு முத்து, ராத்திரியே நனையப் போட்டு காலையில் அரித்து வரப் போட்டு மூன்று நாளுலர்ந்த பின்பு நாலாம் நாள், பின்னும் இராத்திரியே நனையப் போட்டு மூன்று நாள் உலர்த்தி இப்படி மூன்று தரம் நனையப் போட்டு ஒன்பது நாள் உலர்த்தி இடித்தெண்ணை வடித்து நாழி எண்ணெக்கு மூன்று படி இளநீரும் மூன்றுபடி பசும்பாலும் விட்டுக் காய்ந்து வரச்சே, ஆழாக்கு ஏலமும், ஆழாக்கு நற்சீரகமும், ஒருபலம் அதிமதுரப் பட்டையும் பொடி செய்து வத்திர காயம் பண்ணிப் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்தக் கொண்டு இராத்திரி காலம் அசனத்தின் பேரிலேயும், காலையிலும், ஒவ்வொரு கரண்டி எண்ணெய்அவனறிந்து கொடுக்க முன் சொன்ன சுரம் முதல் மேக ரோகமுந் தீரும். மெத்த வயிறு

---

*ஆடவன் - ஆண் மகன். மேகநோய் - ஆண்களுக்கு வருவது. எனவே "ஆடவன்" என்றார்.*

மலம் விடாமல் பிடித்துக் கொண்டால் கடுக்காய் அதக்கிச் சாரமிறக்கப் பேதிக்கும்.

முந்திரிகைப் பழத்து நெய் முந்திரிகைப்பழம், சந்தனம், இலாமிச்சம் வேர், வெட்பாலரிசி, நிலவேம்பு, திப்பிலி, அதிவிடையம், வில்வவேர், நெல்லிப் பருப்பு, ஆனைத்திப்பிலி, ......... கூட்டி அரைத்து நாழிப் பசுநெய்யில் கலந்து, நாழி தண்ணீரும் விட்டு மந்தாக்கினியாகத் தண்ணீர் சுவறின பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு வைகறையிலே மூன்று காசிடை நெய் கொண்டு, வரப் பழஞ்சுரம், இருமல், சரீர உலர்த்தி, நா உலர்தல், கால் கை எரிவு, இவை தீரும். சரீரம் பெருக்கும்.

## கண்சுரம், அத்தி சுரத்துக்குப் பூசணி நெய்

ஆவிநெய்யுமிளநீரும் மணியும்
பூசணி சதாவேரி
மேயும் பசுவின் பாலிவைதான்
வெவ்வேறொவ்வொன்றிருநாழி
தாவுங் கோட்டமீருதி மதுரஞ்
சந்தம் பச்சிலை கச்சோலம்
பாயு மேல மிலவங்கம்
படருங்கழுநீர்ப் பதுமமே.
நல்ல லாமிச்சிருவேலி
நாட்டும் ரோகணீ விளால்சுக்கு
சொல்லுந் திப்பிலிமாங்கொட்டை
துலங்காத்தியின் பூ பொன் முசுட்டை
வில்லுவத்தழை இலவங்கதழை துளசியிலை
விரிசந்தழை சுரைத்தழை மிளகுத்
தக்காளித்தழை பொன்னாங்காணித்தழை
செப்புநெருஞ்சி சமூலம் தகரைத்தழை

.......................................................

தறித்தல் – வெட்டுதல்

சிறுபுள்ளடி சிறுகீரை வேர்

இவையிடித்து ....சாறு.....

கற்றாழைஞ் சோறுப் பிசைந்திறுத்து

சாறு .....மாதளங்காய்த்

தொலியிடித்துச்சாறு ளு

ஈரவெங்காயச் சாறு ளு

எலுமிச்சம் பழச் சாறு ளு

பசுநெய் 2 கூட்டி

கிராம்பு சந்திக்காய், கருட

பச்சைக் கல்லு, அதிமதுரம், அதிவிடையம், மாச்சக்காய், ஏலம், சாதிப்பத்திரி, நற்சீரகம், கொட்டம், வெட்டிவேர், இலாமிச்சம் வேர், சந்தனம், இலவங்கம்பட்டை, இலவங்கப் பத்திரி,.....விராகனெடை 8 அரைத்துக் கசாயமும் நெய்யும் கலந்து காய்ந்து கொதியிடும் போது கறகம் போட்டுக் கிண்டிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு ஆள் பலம் அறிந்து அந்தி சந்தி அரைக்கரண்டி, ஒரு கரண்டி நெய் கொள்ள உள் வெக்கையுடம் பரியும் கந்ததாளிமுதல் முன் சொன்ன ரோகமெல்லாந் தீரும்.

முன்சொன்ன ரோகமெல்லாந் தீரும்.

## எலும்புருக்கிக்கு நெய்

தாழை விழுதுச் சரமொன்று

தக்க பசும்பால் படி யொன்று

நாழி இளநீர் கற்கண்டு சர்க்கரை

நல்ல வெல்லமுங் கூட்டி

யேமுரட்டி தேற்றுவிதை

யிசையுங் கொடுப்பை சிறுகீரைவேர்

நீளும் வெள்ளரி வித்துடனே

நீராய்ப் பொரி காரமுங் கூட்டே.

கூட்டீர் வகைக்கொப் பொருகழஞ்சி

குணமாயரைத்துச் சாறுரியில்

நாட்டமாக நெய்வடித்து
நன்றாயிதனை யிருபொழுதுந்
தேட்டத்துடனே கொள்ளுப்பிசமுந்
தீரும் மேகம் எலும்புருக்கி
வாட்டும் உச்ணம் நீர்க்கடுப்பும்
வயிற்று ளெரிவும் வாராதே.

## எலும்புருக்கிக் கிருதம்

ஏலம் இலவங்கம் கோட்டம், அதிமதுரம், செண்பகப்பூ, அதிவிடையம், சாதிக்காய், பத்திரி, வாய்விளங்கம், நன்னாரி வேர், .....வராகனெடை 2, இடித்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இடிபடாததைப் பால் விட்டரைத்துப் பால் 2, நெய் உழக்கு கூட்டிக் கிண்டி காய்ந்து வரச்சே நாழி நீருள்ளியை அரிந்திட்டுப் பொடி போட்டுக் கிண்டிப் பால் வத்தி நெய் மாத்திர மாம். பதத்திலிறக்கிச் சீனி சர்க்கரை 2 பலம் போட்டுக் கிளறி வைத்துக் கொண்டு நாளொன்றுக்கு ஒரு கரண்டி கொள்ள எலும்புருக்கி தீரும்.

உசிதம்:

| | |
|---|---|
| கருவாழைப்பழம் | - 5 |
| சர்க்கரை | - பலம் 1 |
| திப்பிலி | - பலம் .. |
| சீரகம் | - பலம் .. |

இதில் பாதிப் பச்சையும் பாதி வெதுப்பியும் பொடித்துப் பழம் சர்க்கரைப் பொடி மூன்றும், நெய்யிற் சேர்த்துச் சூரிய புடம் வைத்துத் தினமொரு கரண்டி காலமே கொள்ளவே உடம்பு பருக்கும்.
கைப்புப் புளிப்பு தவிர்க்கவும்.

ஏலம் வராகனெடை5, அதிமதுரம் வராகனெடை 5, காரம் வராகனெடை 3, நற்சீரகம் வராகனெடை 2, கடுகுரோகணி வராகனெடை 1, பரங்கிப்பட்டை பலம் 2, மிளகு பலம் 1, சுக்கு பலம் ...., வாழைக்கிழங்கு ஒன்று, வாழைக்காய் 3, பெரும் பூசணிக்காய், வாழைத்தண்டு, கையாந்தகரை பலம் 1, பிடி இவை யெல்லாம் நிழலுலர்த்தி இடித்து வத்திர

காயம் பண்ணி இரண்டுபடி பசுவின் நெய்யைச் சட்டியில் விட்ட காறுருக்கித் தெளிந்தபின் இந்தப் பொடி யெல்லாம் போட்டுக் கிண்டி தேன் மேல் 20 பலம் சர்க்கரை போட்டுக் கிண்டி நாற்பது வாழைப்பழமும் உரித்துப் போட்டு சூரிய புடமாக மூன்று நாள் வைத்துக் கொண்டு அதிகாலையில் ஒரு வாழைப்பழம் தின்னவும். சாயங்காலம் ஒரு கரண்டி கற்கம் கொள்ளவும். நெய்யசனத்திற் கூட்டவும். இப்படி வியாதியறிந்து மண்டலம் சங்கை பண்ணிக் கொண்டுவந்தால் முன்சொன்ன ரோகமெல்லாந் தீரும். அன்னஞ் செல்லும்.

**பத்தியம் :** பசும்பால், துவரை, பாசிப்பருப்பு, அவரைப்பிஞ்சு கூட்டவும். உப்பு, புளிப்பு, கைப்புத் தவிரவும்.

## சந்தனாதி நெய்

சந்தனம் பன்னிரு பலந்தன்னைத்
தகர்த்துத் தூணி நீரிலிட்டு
வெந்து வடித்து நாலொன்றாய்
வேறே யறைக்கும் மருந்தினைக் கேள்.
கெந்ததங்கமு நன்னாரி
கெடாத மதுரம் குறுந்தொட்டி
செந்தேனுடிக்குச் சர்க்கரையும்
சேர்த்த மருந்தொன்றைங் கழஞ்சே.
மருந்தோ ரொவ் வொன்றைங் கழஞ்சி
வகையா யரைத்து நாழி நெய்யிற்
பொருந்தக் கரைத்து வெந்து கொள்ளப்
போமே யத்தி சுரமென்று
திருந்த முனிவனுரைகண்டு
தோன்றிய வுபாயத் தெரிந் துரைத்தான்
தருந்தேன் மொழியாய்ப் பூவுலகிற்
சந்தனாதி நெய்யிதுவே.

வெய்யமா எலும்புருக்கி

வேதனை செய்யுமாகில்

ஐய்யவே துயர முண்டாய் நாட்டு

உள்ளோர் நடுவர் வேண்டாது

தொய்யில் சேர்முலை பாலில்

பூனையுந் துத்தி வேரும்

பையவே அரைத்து நித்தம்

பருகிடிற் பாலுந்தானே.

இன்னம்

## உள்வெக்கை, உட்ணவெரிவு, தாகத்துக்கு மருந்து

கொத்தமல்லி, இருவேலிவேர், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், திரிபாலை .........., கொத்தமல்லி ........ப, முத்துக்காசு 40 இவை நறுக்கி இளநீரிலிட்டு விரவி இராமுப்பது நாழிகையு மூறிப் பிசைந்து வடிகொண்டு இதிலொரு பிடி சீரகம் போட்டுக் கலக்கிக் கொள்ளவும். இப்படி மூன்றுநாள் கொள்ள உள் வெக்கை தீரும்.

இன்னம்

## உச்ணத்திற்கு

பருத்தி போலிருக்குந் துத்திப்

பண்பினால் பிடுங்கி வேரை

யுரித்ததின் ரோகம் வாங்கி

யொன்றிய பசுவின் பாலில்

கருத்துடன் மகிழ் வினோடும்

கருதியே கொள்வீராகில்

எரிப்பது விட்டுப் பின்னும்

ஏகியுச்ணமும் போமே.

## உள் வெக்கைக்கு

கொட்டிப் பூவைக்குளிரி யிலையுடன்
வட்டிப் பிசைந்து வடித்துணவல்லீரேற்
பட்டினி வைத்தவன் பன்கிளைச் சுற்றம் போல்
விட்டுப் போகுமே வெக்கை வியாதியே.

## எலும்புருக்கி உள்ளுருக்கிக்கு

சிறுகீரைவேர், கொடுப்பைவேர், செப்பு நெருஞ்சி வேர் ... கழற்சிக் காயளவு அரைத்து நாழிப் பசுப்பாலிற் காய்ச்சிப் பிறை குத்திக் கடைந்து வெண்ணெயெடுத்து ஒரு வராகன் தேற்றாம் விதையும் அரைத்து வெண்ணெயிற் கலந்து கொள்ளவும். அந்த மோர் வார்த்து அசனம் பண்ணவும். இப்படி நாலு மூன்று நாள் கொள்ளவும்.

எலும்புருக்கி, உள்ளுருக்கி, கிரிச்சனம், மூத்திரப்பாளம், உள்ளபடத்தீரும். வேறு – கரியொன்றுமாகாது.

இன்னம்

பருத்திச் சாறும், நெய்யும் கலந்து கொள்ள எலும்புருக்கித் தீரும்.

## நோய்வருவழி

மின்னாரிடத்தில் மைந்தர் வேட்கை
மிகும் புணர்ச்சி
தன்னாலுடல் வறண்டு தாது கெட்டுப்
பண்ணாளுங் காலிரு கை கண்கள்
முகம் காந்தி வேட்டை
மினியே சூலையன்றி
நீரிழிவு தோன்றுமே.
சால வருத்து நோய் தீரும்
வானவன் கயிலைவெற்பிற் றெரித்த
நூல் வாகடத்திற் சீராயுரைத்த

---

*கொட்டி – நீர்ப்பூண்டு. குளிரி – வெள்ளிலை, பூ–அலரி, பூவை–காயா.*

தொரு சந்தனாதித்தயிலஞ்

சந்த மகில் கோட்டம் மாந்து

சதாவேரி நன்னாரி

கந்தமிடு வெட்டிவேர்

வில்வம் விலாமிச்சுச் சீரகம்

சிற்றாமுட்டி கொடுப்பை

முத்தக்காசுடனே

திட்டமாயிந்த மிவை வகைக்க மேவு

பல மொவ் வொன்று தந்தஇரு தூணிநீர்

விட்டுக் காய்ச்சி வசனபதுங்களடு

விரைத் தாழைம்பூந்தளிகை மீதிற் வாற்றி

வடித்த வின் கோரோசனைப்பூ மான்மதம் சடம்

கடிக் கெளிது எல்லாம் கலந்து

வழப்பமாய்த் தேய்த்து முழுகித் தீரனான நீரிழிவு

நோய்க்

கொடிய சூலையுடல் நோவு

உளைப்பு வாய்க்குள்ளே நாற்றம்

வழுவழுப்பு நண்ணு பயித்திய

நோயேற்ற வறட்சிகை

கால் கண்ணெரிவு தோற்றும்

மிந்திரக்ணடி மேகங்

கல்லடைப்பு ளற்கையடைப் புண்பண்டு

மூத்திரப்பாளங்கல

வாயுமண்டைவலி காதிற்குத்துப்

பிடர் வலி, கண்காசஞ்

சொலு நேத்திர நோவிரண சுக்கிரன்

நயில வரு மீளை யிருமலிளைப்புத்

துரவ வேத நீள பீனிசம்

கேரிளையார்க்கு மூளும்

யேகும் பாரு நீர்க்கடுப்புப்

பேறு கர்ப்ப சூலை வருங்

கொடிய நோயனைத்துமாறித்
திருந்தி யுடல் தங்கநிற
மாகுமெனச் சந்தனாதித்
தயிலப்புரீ கவருக் கேழு
முனிவர் போதித்தாரிங்கிதனைச்
சட்டமாய் வைத்து முழுகப் பிணிதணியுந்
திட்டமாய்ச் சொன்னோந் தெரிந்து.

கற்றாழை வேர்ச்சாறு – 1/8, பசுநெய் – 1/8 கலந்து கொள்ளவும்.

**கண்சுரத்துக்கு:**

பழம்புளி, ஆவாரம் பூ, குளவி வெல்லம், நீர் வெங்காயம், நற்சீரகம், சமனாகச் சுரைத்தழை, நீர் விட்டரைத்துத் துஞ்சின பசுவின் நெய்யிற் குழப்பிக் கொடுக்கவும். அக்கரம், கெந்ததாளி, கண்சுரம் சர்வமும் தீரும்.

இன்னம்

ஐந்து கடுக்காய்த் தோலியும், கற்றாழைச் சாறு – 1/8, பிரமித்தழை ஒரு பிடி, விளக்கெண்ணெய் 1/8, ஈர வெங்காயம் 10, நறுக்கியிட்டு வெந்து வருகிறபோது கற்றாழைச் சாறு, கடுக்காய், பிரமித்தழையுமிட்டு வெந்து இறக்கிக் கொள்ள விரோசனமாய் சரீரக்கண்டிப்புங் கணமுந் தீரும்.

**எண்ணெய்:** இருவேலி வேர், கத்தூரி மஞ்சள், இலவங்கப்பட்டை, சமுத்திராப் பச்சை, குக்குலு, கருங்குங்கிலியம், நற்சீரகம் வராகனெடை 1,

**எண்ணெய் : 2.**

பசுமஞ்சட் சாறு உரி, முன் மருந்தரைத்து எண்ணெய் சாற்றில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு சர்வங்கமும் இட்டு மூன்றே முக்கால் நாழிகை சென்று உசில அரப்பிட்டு வெந்நீர்

---

குளவி – நல்லிகை.

குளித்துப் போடவும். தீரும் வியாதி அத்தியிற் பற்றின உட்ணம், இளைப்பு உளைப்பு, மலம், பித்தம், பாண்டு ரோகம், வயிற்று வியாதி, வயிற்றுக் கழிச்சல், இரத்தம் விழுகிறதும் நிற்கும்.

**நெய்:**

அறுகஞ்சாறு நானாழி
அதிமதுரந்தா னெண்கழஞ்சி
நறுநெய் நாழிபால் நாழி
நல்லபாலை முகிழரைத்துக்
குறுக வெந்த நெய் கொள்ளக்
கோடா கோடி உட்டிணங்கள்
வெறுமை கண்ட வேசியர் போல்
விட்டுப் போகுங் கண்டீரே.

காரைவேர், புங்கம்வேர், ஆயில்பட்டை, மாளவேர், புளிநரளைக் கிழங்கு, பிரண்டை வேர், நொச்சிவேர், சாரடை வேர், வட்டச்சாரடை வேர், பெருகங் கிழங்கு, பேராமுட்டி வேர், அமுக்கராக்கிழங்கு, பேய்ப்பீர்க்கம் வேர், பேய்ச் சுரைவேர், பேயத்திவேர், ஊமத்தம்வேர் இவையெல்லாம் ஒரு நிறை இருப்புப் பாத்திரத்திலிடித்திட்டு நாலு மரக்கால் தண்ணீர் விட்டுத் தீபாக்கினியா எரித்து நாலில் ஒன்றாக்கி, இதில் எண்ணெய் படி ஒன்று ஏரண்டத் தைலம் படி நாலு, மரக்கால், தண்ணீர் விட்டுத் தீபாக்கினியாய் எரித்து நாலிலொன்றாக்கி இதில் எண்ணெய் படி ஒன்று, ஏரண்டத் தயிலம் படி ஒன்று கூட்டி எருக்கம் பால், சதிரக் கள்ளிப் பால் 10 படி விட்டு மேன் மருந்து கடுகுரோகணி, திப்பிலிமூலம், செவ்வியம், வாய்விளங்கம், அரேணுகம், திரிகடுகு, அரக்கு, ஏலம், தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், அரத்தை, சடாமாஞ்சி, கோட்டம், லோகபற்பம், மாசபற்பம், நாகபற்பம், அப்பிரக பற்பம், காந்தம், இவை வகைக்கு வராகனெடை 2 1/4 இவை இடித்து வத்திரகாயம் செய்து கூட்டி மந்தாக்கினியாய் எரியிட்டுப் பதத்தில் வடித்திடப் பாரிச வாதம், தனுர்வாதம், குரக்கு வாதம், கைகால் சர்வ நடுக்கம், அந்தரவாதம், சந்தி வாதம், சிரோவாதம், அலகு வாதம், திரிதோசம், விரைவாதம், இதுமுதலான வாதம் எண்பதும் தீரும். கச வாதம், எண்பது வாதம், அசுவ வாதம், சன்னி வாதம், சந்தி வாதம், சிரோவாதம், கர்ணவாதம்,

செவிடு, ஆனைச் சொறி, குட்டம், மகோதரம் 8, பசப்புமாரம், சுரம், சயரோகம், இடாகினி, பூத, வேதாளம், இவையெல்லாம் விட்டோடும். இது ஈசுர வாக்கியம்.

## பொன் மெழுகுக் கசாயம்

எண்ணெய் 4, மோர் 1/8, அமுக்கராவேர், மலைமஞ்சள், தேவதாரம், முத்தக்காசு, கோட்டம், சந்தனம், பெருஞ்சீரகம், மதுரம் வராகனெடை 5, அரைத்துக் கலந்து நீர்க்கக் காய்ச்சி வடித்து உடம்பு நனைக்க முன் சொன்ன வியாதியும் தீரும்.

## உடம்பு பருக்க மருந்து

இசங்கம் வேர்ப் பொடி, வெருகடிப் பிரமாணம் தேனிற் கொள்ளப் பருக்கும். தாமரை வளையம் அரைத்து எலுமிச்சங்காயளவு 3/4 பசும் பாலில் ஒருபிடி சீனியுங் கூட்டிக் கொள்ள உடம்பு பருக்கும்.

இன்னம்

இலவம் பூவாதல், கற்றாழம் பூவாதல், உலர்த்திப் பொடி செய்து கொண்டு பசுவின் பால் காய்ந்து வரச் செய்தே, இந்தப் பொடியைப் போட்டால் முறிந்து நெய்யாகும். இதனுடனே வாழைப்பழமாதல் வெல்லமாதல் சீனியாதல் கூட்டிக் கொள்ள உடம்பு பருக்கும்.

### இன்னம்

செங்குன்றிலை, கரிப்பானிலை, கடுக்காய் இலை, மூன்றும் சமனாய் நிழலுலர்த்தி, இடித்து வத்திர காயம் செய்து வைத்துக் கொண்டு, வெருகடிப் பிரமாணம் தேனிற் கொள்ளச் சரீரம் இளைக்கும்.

நெய்யில் கொள்ளப் பருக்கும். உப்புப் புளி கைப்புத் தவிர்க்கவும்.

## சுரம் சன்னிக்கு மதுராதி தைலம்.

மதுரம் வேப்பம் பட்டை அதன் விதை விராலிப்பட்டை திராய் வேர் மேனிவேர் குன்றிவேர் இந்துப்பு வராகனெடை 1 ஆடாதொடை

---

*இடாகினி – பிணம் உண்ணும் பேய்வகையில் ஒன்று. "அகத்தியர் மாந்திரிக காவியம் 1000" பார்க்கவும்.*

இலைச்சாற்றில் விட்டரைத்துச் சாறு எண்ணெய் கலந்து காய்ச்சி வடித்து, உள்ளுங் கொண்டு மேலும் பூசச் சுரமும் சன்னி கூடினதும் தீரும்.

## வெருகந் தைலம்

வெருகந்தண்டு இலையும், வராகனெடை14 இடித்ததில் 12 வராகனெடை காடியும், 12 பங்குத் தண்ணீரும் விட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்ததில், எண்ணெய் எருமைப்பால் விட்டு வெருகன் கிழங்கரைத்துப் பரு நாரங்காயளவு தேவதாரம் அரத்தை கழஞ்சு 20 அரைத்துக் கலந்துக் காய்ச்சி வடித்து அரக்கு உரி அதுவுங் கசாயம் மிட்டுக் காய்ச்சி கூட்டி உள்ளுக்கும் இடை கொண்டு மேலுமிட விக்கலுடனே கூடின சுரந் தீரும்.

## அரக்குத் தைலம்

அமுக்கராவேர், சிற்றாமுட்டி வேர் கழஞ்சு 40, குறுணி நீரில் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து அரக்கு உரியளவு அதுவுங் கசாயமிட்டுக் காய்ச்சிக் கூட்டிக் காடித் தெளிவு 2 அமுக்கிரா வேர், சிற்றாமுட்டி வேர், முத்தக்காசு, அரத்தை, ஏலம், கோட்டம், மஞ்சள், சதகுப்பை, பொன் மெழுகு, பெருங்குரும்பை, தேவதாரம், மஞ்சிட்டி மதுரம், விலாமிச்சம் வேர், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, புனுகுசட்டம் வராகனெடை 1, எண்ணெய் 2, பால் 2, அரைத்துக் கலந்து காய்ச்சி, பிறகு பதத்தில் வடித்து முன்சொன்ன ரோகந் தீர்ந்து உடம்பு ஊறும். தாதுவிருத்தியும் உண்டாகும்.

## பஞ்சகவ்விய நெய்

அதிமதுரம், சிறுதேக்கு, கொத்தமல்லி, வாய்விளங்கம், வாலுளுவை அரிசி, வெட்பாலையரிசி, திப்பிலி, உள்ளி, வசம்பு, அரப்பொடி, கருஞ்சீரகம், தேவதாரம், அரத்தை, இந்துப்பு, சதகுப்பை, சந்தனம், பூதகரப்பான் பட்டையாவது பூதி விருட்சம், நன்னாரி வேர், பொன்முசுட்டை வேர், சிவதை, நிலப்பனைக் கிழங்கு, சாரடைவேர், கீழ்க்காய், நெல்லிவேர், மிளகரணை வேர், துத்தி வேர், அதிவிடையம், கடுகு ரோகணி, துருசு, பெருங்குரும்பை, கிராம்பு, காந்தம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபலை, வில்வவேர், சுட்டசாம்பல் கழஞ்சு 10, அரைத்துக் கரைத்து

---

பூதி விருட்சம் – ஆமைரம்

நாலுநாள் சிறு கொதிப்பிட்டு ஐந்தாம் நாள் வடித்து எட்டு நாள் தானியப்புடம் வைத்து ஒன்பதாம் நாளெடுத்து காலையில் பசு நெய்கொண்டு வாய் பெரும்பாடு, பித்தம், குன்மம், அசலம், பீனிசம், பாண்டு, பித்தகாமாலை, பெருவயிறு தீரும்.

## குட்ட பாண்டுகிருதம்

பூசணிக்காய்ச் சாறு படி, நீர்வள்ளிக் கிழங்குச்சாறு படி, கருப்பஞ்சாறு உழக்கு, நெய் உழக்கு, கலந்து ஏலம், இலவங்கம், விளாவரிசி, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், இந்துப்பு, சாதிக்காய், சதகுப்பை, கூகைநீர், அதிமதுரம், கோட்டம், முந்திரிகைப் பழம், பேரீச்சம்பழம் கழஞ்சு 50, பால்விட்டரைத்துக் கலந்து மூன்று நாள் சிறுகொதியிடக் காய்ச்சி நாலாம்நாள் வடித்து நேரத்துக்கு இரு கழஞ்சு கொள்ளவும். உடம்பிலுள்ள வேட்கை அங்கதாகம், ஈளை, இருமல், நெஞ்சு நோவு, கிரிச்சிரம், உதரபாணம், இரத்தபித்தம், மந்தாரகாசம் தீரும். இளைத்த உடம்பு பருக்கும்.

## அசுவகந்தாதி சூரணம்

அமுக்குரா வசுமதிக்குமிழ் பேய்வாழை
செங்கழுநீர் வள்ளி, கோரை
நிலைப்பனைக் கிழங்கு
வாரமது பூமாதளங்காய்த்
தோலிசாந்த வில்வப்பழத் தசைக்கு
வேப்பிலை சீந்தில் சர்க்கரை செண்பக கிராம்பு
கற்சூரங் கடுக்காய்த் தொலி மதுரந்
தற்கோலந் திராட்டம்
நற்சந்தனம் பச்சைகற்பூரம் நெல்லிப்
பருப்பு லாமிச்சம் வெட்டிவேர்
சாதிக்காய் குங்குமப்பூ சடாமாஞ்சில் கொத்தமல்லி
தங்கு கிரந்தி தகரங்

காவிக்கல் வகைக்கு வகைக்காற்பலஞ்
சூரணமாந்
தொகைக்குநிறை சரிசரக்கைக்
கலந்து நெய் தேனரிகளைநீர்
இவையொன்றில்
வெய்யோனுதயம் வெருகடி கொள்ள
கால்கைகள் சருவாங்கயெரிவு
மேவுரு தாகமேக மிருபது
வெள்ளை விழுகுதல் நீர்த்தாரை
விரணம் மூத்திரக்கடுப்பு
மூத்திரக் கிரிச்ச மூத்திரத்தோசம்
யோனி தோசம் லிங்க தோசம்
உதிரங்கலந்த மூத்திரம்
பித்தவாந்திப் பித்தகிறுகிறுப்பு
பத்திய வபஷ்து மாரம் சயநோய்
இங்கிவை யெல்லாம் நீங்கும்
இச்சூரணம் பாங்குடனருந்தும்
ஆங்கவர் தமக்கே.
இஞ்சிசாறொரு நாலு படியில்
வெல்லம் பலமூன்றி ரண்டுபடி
தண்ணீரிற் கரைத்து விட்டெண்
படியில் மாதளம் பழச்சாறு
பிழிந்துவிட்டு நாள் மூன்றாறி
நெய்யுழக்கு விட்டு
வஞ்சி தரிகடுகு திரிபலை லவங்கம் ஏலம்
வாய்விளங்கம் சீரகங்கள்
பச்சிலை கச்சோலந் துருசு தழாக்
கொடுவிலிவேர் வசம்பு வகை
வகைக்குத் துலைகழஞ்சி பன்னிரெண்டு
தூக்கி வெதுப்புகவே.

1

வெதுப்பு மருந்தினை வெதுப்பிப்
பொடித்தும் மற்றமருந்து
வெதுப்படாதேப் பொடித்துக் கூட்டி
விடி கொண்டு, முதற்பசுநெய்விட்ட
மருந்தினிற் தூவிமுள்ளி மலர்
போலெரித்துக் கிண்டி
லேகியமாம் பதத்தில் இஞ்சிக்
குழம்பை வழித்தெடுத்து
வைத்துக்கொண்டு பரு நெல்லிக்காயளவுக்
இருபொழுதும் பொசித்தாற்
கதித்தவுடல் வீக்கம் அரோசிகம்
ஈளை இருமல் இகைத்த பித்தம்
வயிற்றுவலி சித்தி குன்மம் போமே.

## சவுபாக்கியச் சுண்டி

இரண்டு சிரங்கை தண்ணீர் இரண்டு சிரங்கை பால் ஒன்றாய்க் கலந்து அதில் நாலுபலராய பூச்சர்க்கரை கரைத் திறுத்துக் கொண்டு பாகு போல் காய்ச்சி சுக்கு 84 வராகனெடை ஏலம் வாய்விளங்கம், திப்பிலி மிளகு சீரகம் கிராம்பு இலவங்கப்பட்டை கொத்தமல்லி கழஞ்சு 2, வராகனெடை 3 பச்சையா யிடித்து வடிகொண்டு முன்காயிற்பாகை இறக்கி யதில் தூவித்தூவிக் களிபோலக் கிண்டிக் கொட்டைப் பாக்களவுண்டை செய்து வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் கொள்ளவும்.

## பத்தியம்

உப்பு, மிளகு, சீரகம், வெந்தயம், பால் கொடி, வழுதலங்காய், இளங்கீரைத் தண்டு, துவரைப் பருப்புச் சாறு, சர்க்கரை வெள்ளாட்டு உப்புக்கண்டம், சுறா கருவாடு, புடோலம் பிஞ்சு, பீர்க்கம்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, இவை கூட்டிக் கொண்டு, இருபது நாள் கொள்ளச் சூசிகா

..............................................................

*அரம்பொடி – இரும்புத்தூள்*

வாயு, உதரசல்லியம், சூலை சுரம், பேதி மலபந்தம், பாண்டு, வயிற்றுவலி, அரோசகம் அக்கினி மந்தம் இவையெல்லாம் தீரும்.

## கண்டாத்திரி லேகியம்

இஞ்சி படி 10, நெய்படி 1/2, சர்க்கரை படி 5, தேன்படி 1/4, தாளிசபத்திரி, சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், கொத்தமல்லி, வாய்விளங்கம், ஓமம், நற்சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, திரிபலை, சடாமாஞ்சில், கடுகுரோகணி, அரத்தை, ஆரியன், சிவதை, சிறுதேக்கு, கோட்டம், மதுரம், மகரப்பூ, செவ்வியம், சரள தேவதாரம், கொடுவேலி வேர்ப்பட்டை, வகைக்கு வராகனெடை 3, இஞ்சியை நன்றாய் மேல் தோல் நீக்கி அலம்பிச் சிறுகப்புளியம் விதை போல அரிந்து ஒரு தாலச்சட்டியிற் போட்டு அடுப்பேற்றிப் பசுநெய் சிறுகச் சிறுக விட்டு நீர் சுவற வறுத்திறக்கி எடுத்துவைத்துக் கொண்டுக் கடை மருந்தில் வெதப்புவதை வெதுப்பிக் கூட்டி இடித்துப் பொடி செய்து வத்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு முன் இஞ்சி வறுத்த சட்டியை அடுப்பேத்தி அரைப்படி நெய்விட்டுக் கடை மருந்துப் பொடியைச் சிறுகச் சிறுகத் தூவிக் கிண்டிப் பின் இஞ்சியைப் போட்டுக் கிண்டிச் சாறு இறுகின பதத்தில் சர்க்கரையைத் தூவித் தூவிக் கிண்டி பின்பு, தேன் உழக்கு வார்த்துக் கிண்டி லேகியப் பதத்தில் இறக்கி எடுத்துவைத்துக் கொண்டு சரீர பலத்திற்குத் தக்கவாறு கொள்ளவும்.

மந்தாக்கிணி, பயித்திய வாயு, பயித்திய குன்மம், வாத குன்மம், மலம்பிடிப்பு, அரோசகம், வயிற்றெரிவு, நெஞ்செரிவு எல்லாம் தீரும்.

## மதுரபாகமாய்க் கண்டாத்திரி பண்ணும் விதம்

இஞ்சி, சர்க்கரை, நெய், தேன், காயப்பத்திரி, இலவங்கம், நற்சீரகம், கருஞ்சீரகம், ஏலம், மிளகு, திப்பிலி, மதுரம், இவை கூட்டிக் கொள்ளப் பயித்தியலர், உச்ணவாயு தீரும். அன்னம் செல்லும்.

---

ஆரியன் – அதிவிடையம்.

லேகியம்: வில்வவேர் பலம் 50, குறுந்தொட்டிவேர் பலம் 20, இதைத்தரித்திடித்துப் பதினாறு மரக்கால் தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து இதில் பழ வெல்லம் பலம் 20, போட்டு இஞ்சிச் சாறு குறுணி விட்டு, நெல்லிக்காய்ச் சாறு குறுணி விட்டுக் காய்ச்சிக் குழம்பானால் கறகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், இலவங்கப்பட்டை, பச்சிலை, கொத்தமல்லி, வாய்விளங்கம், நாகப்பூ, குரோசானி ஓமம், ஓமம், முந்திரிகை பழம், பேரீச்சம் பழம், அதிமதுரம், கோஷ்டம், சதகுப்பை, அரிசித்திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், திப்பிலி மூலம், சடாமாஞ்சில், முத்தக்காசு, நன்னாறி வேர், புங்கம் பாளை, வலம்புரிக்காய், சென்னகரைப்பழம், கூகைநீர், மரமஞ்சள், கத்தூரி மஞ்சள், கற்கடகசிங்கி, பரங்கிப்பட்டை, இவை வகைக்கு பலம் 3, திரிகடுகு பலம் 10, இவற்றை இளவறுப்பாக வறுத்து முந்தின மருந்துங் கூட்டி இடித்துப் பொடி செய்து மண்காய்ந்து குழம்பான மருந்திற் தூவித் தூவிக் கிண்டிக் கிண்டிக் காய்ச்சிக் குழம்பாக்கி மூன்றுபடி தேன் விட்டுக் கிண்டி

| | |
|---|---|
| ஊசிக்காந்தம் | - 10 பலம் |
| வெண்காரம் | - 10 பலம் |

பொடி செய்து காய்த்துக்கொள்ளவும். வலியற் பதத்தில் இறக்கி, எண்ணெய், நெய் பழகின கலசத்திலிட்டு வைத்துக் கொண்டு நித்தம் எலுமிச்சங் காயளவு கொள்ளவும்.

கொள்ள, சத்திகுன்மம், வலிமூர்ச்சை, ஈளை, இருமல், எலிகடி, காசம், இரத்தபித்தம், அடிவயிறு வீக்கம், நெஞ்சுநோவு, வெள்ளோக்காளம், அருவருப்பு, விக்கல், கண்டத்துடிப்புப் பிரமேகம், சுரம், உட்சுரம், கால்கை எரிப்பு, சோம ரோகம், தலை கிறுகிறுப்புச் சுழல் பித்தம், கர்ப்பவாயு, வயிற்றிரைச்சல் இவை பலவும் தீரும்.

**லேகியம்:** வில்வ வேர் பலம் 50, பொன்முசுட்டை வேர் பலம் 10, சித்தாமுட்டிவேர் பலம் 10, சித்திர மூலம் பலம் 5, நிலக்குமிழ் வேர் பலம் 5, சங்கம் வேர் பலம் 5, உவாய வேர் பலம் 10

இவையெல்லாம் தறித்திடித்து களைதலும் தண்ணீர் போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து இஞ்சி பலம் 10, வெல்லம் பலம் 10,

இஞ்சியை அரைத்து வெல்லமுங் கூட்டி முன்கசாயத்தில் போட்டுக் காய்ச்சி சாறுக் குழம்பாய் வரும்போது திரிகடுகு பலம் 1, சீரகம் பலம் 1, கோட்டம் பலம் 1/2, அதிமதுரம், கொத்தமல்லி, வாய்விளங்கம் பலம் 1/2, சூகைநீறு, காந்தம், வெட்பாலையரிசி வராகனெடை 10, சடாமாஞ்சில், அரத்தை 34, கடுகுரோகணி 32, தாளிச பத்திரி வராகனெடை 3, சாதிக்காய், தான்றிக்காய் வகைக்கு வராகனெடை 25, நெல்லிப் பருப்பு பலம் 4, வெங்காயம், ஓமம், ஏலம் வகைக்கு வராகனெடை 10, வறுப்பதை வறுத்திடித்து வத்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு, பால் 5 படி விட்டு குழம்பாக்கிப் பிறகு கடை மருந்துப் பொடித்தூவித் தூவிக் கிண்டிக் லேகிய குழம்பாகிற பருவத்தில் நெய், தேன் விட்டுக் கிண்டி இறுகிய லேகியபதத்திலே இறக்கி, வழித்து வைத்துக் கொண்டு, அந்தி சந்தி கொண்டுவர 8 வகைக் குன்மமும் தீரும். மற்றும் பலரோகமும் தீரும்.

## தசமூல லேகியம்

பெருவாகை, பெருங்குமிழ், முன்னை பாதிரி, வில்வம், கண்டங்கத்திரி, சிறுவழுதலை, நெருஞ்சி இது வேர் வகை சிற்றமல்லியாவது, கொடி முன்னையும் பேராமல்லியாவது, காட்டு மல்லிகையும், மீதி இரண்டுஞ் சமூலம், திப்பிலி, திப்பிலி மூலம், சாறடை, தேவதாரம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு இவை ஒவ்வொன்றும் வெவ்வேறாய் பலங்கூட்டி இடித்து 32-18 படி தண்ணீர்விட்டு எட்டிலொன்று பதினாறு படியாய்க் காய்ச்சி வடித்தது இஞ்சிச்சாறு 2 1/2, கடுக்காய் 3, பொடிபண்ணிக் கலந்து எல்லாம் இரண்டு பலம் போட்டுக் காய்ச்சின தருவாயிலே திரிபலை, ஏலம், இலவங்கபத்திரி, சத்திச்சாரம், எவட்சாரம், சரிசமன் கூட்டி, இரண்டு பலம் பொடிக்கு தக்க சூரணம் பண்ணிக் காய்ந்து குழம்பாய் வருகையில் தீயை அழுத்தி சற்று ஆற விட்டுப் பின் மந்தாக்கினியாய்க் கொதியிட்டு வருகையிலே சூரணத்தைத் தூவிக் கிண்டிக் களிப்பதத்திலே இறக்கி, ஆற்றி, உரியத்தனைவிட்டுறவு செய்து பழங்கலசத்தில் அடைத்து வைத்துக் கொண்டு காலமே பாக்களவு தின்றுவர வீக்கம் கனசுரங்கள் குன்ம சூலை, சுவாசகாசம் இருமல் அரோசகம் இதுவெல்லாந் தீரும்.

## சித்திரகலை லேகியம்

கொடுவேலி வேர்ப்பட்டை பூ, 25, பெருங்குமிழ் வேர், பெருவாகை வேர், முன்னை வேர், பாதரைவேர், சித்தமல்லி வேர், பேராமல்லி வேர், முள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், நெருஞ்சி வேர், சாறரிடவேர், ஆத்திவேர், நீர்வள்ளிக் கிழங்கு, வில்வவேர், கிலுகிலுப்பைவேர், முப்புர மெரித்தான் வேர், கொழுஞ்சி வேர், திருகுகள்ளி வேர், தூதுவளை வேர், சங்கம் வேர், காட்டுக் குறிஞ்சி வேர், முத்திருக்கஞ்செவி வேர், செந்தொட்டி வேர், மணக்கம் வேர், இவை வகைக்கு 1/2 பலம், சிவதை வேர் பலம் 2, ஆடாதோடை யிலை, கூந்தற்கமுகம் வேர் வகைக்கு பலம் 2, கொன்றைப்பட்டை பலம் 10, இவை அரைப்பிரயோகம், இந்திரை கூட்டித் தரித்திடித்து இருபரு மரக்கால் தண்ணீர் போட்டுக் காய்ச்சி பாதியாய் வற்றி வருகையிலே, கடுக்காய் தட்டி, விதையெடுத்துப் போட்டுத் தோட்டை இடித்துத்தள்ளி பிறப்போலே எடுத்துக் கசாயத்திற் போட்டுக் காய்ச்சிப் பதக்கானால் வடித்து ஒரு தாழியிலிட்டு, ஏலம் பலம் 4, பனைவெல்லம் பலம் 15, நெல்லிப்பருப்பு, தான்றிக்காய், சுக்கு, மிளகு, அரப்பொடி வகைக்கு 2, இலவங்கப்பச்சிலை, திப்பிலி, அரிசித்திப்பிலி, விளாவரிசி, சிறுமூலகம், சீரகம், அரேணுகம், இந்துப்பு வகைக்கு பலம் 1, வெடியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, பெருங்காயம் வகைக்கு பலம் 1/2 வங்காளச்சீனி பலம் 4, தேன், நெய் உரி, நல்லெண்ணெய் உரி, கடைமருந்தெல்லாம் வறுப்பதை வறுத்துப் பொடி பண்ணிக் கசாய குழம்பான பக்குவத்தில் தூவிக்கிண்டி லேகிய பதத்தில் நெய், தேன் எண்ணெயும் கூட்டி, லேகியம் பண்ணி, இறக்கிற பக்குவத்தில் நீர் வற்றிச் சுறுசுறுப்பில்லாதப் பதத்தில் இறக்கி இருப்புத் தோண்டியில் அடைத்து ஒரு தாழியில் நெல்லிட்டு அதில் வைத்து நாற்பது நாளிருக்கவிட்டு எடுத்து நித்தம் ஒரு கொட்டைப் பாக்களவு கொள்ளவும்.

**தீரும் வியாதி:** குன்மம் 8, பிரநீர்ப்பீலிகை, வாயு, மகாவுதரம், பீனிசம், குட்டம், பீனிசம் 8, வாதரோகம் 84, பாண்டுரோகம், பவுத்திரம், மூலவியாதி, விசவாதம், பித்தரோகம், ஈளை, இளைப்பு, வாயுப் பலவகையும் மாறும். பலப்பல ரோகமும் தீரும். மண்டலங் கொள்ளவும். கைப்புப் புளிப்புத் தவிர்க்கவும்.

சிற்றுப்பு கூட்டவும், பால், நெய், கூட்டவும். பெண் போகம் கூடாது.

## குழம்பு

கூவிளவேர், புறத்தோல் போக்கி வேர், வயிரம் பலம் 45, சுக்கு பலம் 5, மிளகு பலம் 25, செவ்வியம் பலம் 2 1/2, சீரகம் பலம் 2 1/2, நாகப்பூ பலம் 9, சிறுமூலம் பலம் 1/2, கோவிலி வேர் பலம் 2 1/2, ஏலம் பலம் 1, இலவங்கம் பலம் பலம் 1, பச்சிலை பலம் 1, வில்வவேரை தறித்திடித்து எட்டு மரக்கால் தண்ணீரில் போட்டுக் குறுணியாய் வத்தி வடித்துக் காய்ச்சிக் குழம்பாக்கி அதில் கடை மருந்தில் வறுப்பதை வறுத்துச் சூரணம் பண்ணித் தூவித் துழாவி யிறக்கி அதன் பின் ஒருபடி தேன்விட்டுக் கலந்து காலையில் ஒரு கழஞ்சு குழம்பு கொண்டுவரச் சாப்பிட நெஞ்சுவலி, நோவு, ஈளை, இருமல், பயித்திய பாண்டு, பலபித்தம், அரோசிகம், மூக்குநீர்ப்பாச்சல், உடல் வீக்கம், அடிவயிற்று வீக்கமும் மூலரோகம் இவை எல்லாந் தீரும்.

## ஏலாதிச் சூரணம்

ஏலம், சிற்றரைத்தை, செவ்வியம், திரிபலை, கற்கடக சிங்கி, இவை சமன், இந்நீரை திப்பிலி கூட்டிச் சூரணம் பண்ணிச் சூரண நிறை சர்க்கரை கூட்டி ரேகித்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி வெருகடி சூரணத்திற் பாக்களவு வெல்லம் கூட்டிக் கொள்ளச் சயரோகம், சுவாசம், செரிமம், மந்தாக்கினி, பழவெதுப்புப் பாண்டு, கொப்பளிப்பான், பீனிசம், கழல் ரோகம், விக்கல், மூலரோகம், பயித்தியம், மகாவுதரம், இவையெல்லாம் தீரும்.

## தும்பா தூளிச் சூரணம்

காட்டுக்கருணை, புளியம், பிரண்டைவேர், மானவேர், வெருகங்கிழங்கு, அப்பைக் கிழங்கு, கொல்லாங் கோவைக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு, சாறடைக் கிழங்கு, அளிசம் வேர்ப்பட்டை, புங்கம் வேர்ப்பட்டை, மாவிலங்குவேர்ப்பட்டை, நாய்க் கொட்டான் வேர்ப்பட்டை, வீழிப்பட்டை, அவுரிப்பட்டை, பெருமரப்பட்டை, காரைவேர், சங்கம்வேர், பேய்ச்சுரைவேர், பேய்ப்பீர்க்கம் வேர், பேய்க்கும்மட்டி வேர், பேய்ப்புடல், தலைச்சூடி, வள்ளிவேர், சிறுகுறிஞ்சா வேர்,

குளிப்பாலை வேர், வெள்ளறுகு, சிவனார் வேம்பு, குப்பைமேனி வேர், கரிப்பான் வேர், பெருங்குரும்பை வேர், பங்கம் பாளை வேர், முட்காவளை வேர்,இந்தவகை வேர்ப்பட்டையாக எடுத்து, வகைக்கு வராகனெடை 5, நிழலுலர்த்திப் பொடி செய்து திரிகடுகு, கருஞ்சீரகம், ஓமம், கொடுவேலி வேர்ப்பட்டை, வாய்விளங்கம், வசம்பு, கடுக்காய், செவ்வியம், காயம் வகைக்கு வராகனெடை 3, வெதுப்பிப் பொடி செய்த இரண்டு வகைப் பொடியும் ஒன்றாய்ச் சாரித்து, புதுக்கலசத்தில் வைத்துக் கொண்டு, பறங்கிப்பட்டைப் பொடி செய்து, வேரை வைத்துக் கொண்டு முன்பொடியில் வெருகடியும் பட்டைப் பொடியில் பணம் பிடியுங் கலந்து வெந்நீரில் கலக்கிக் கொள்ளவும்.

இப்படி இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ளத்தீரும். வியாதிகள்: காணாக்கடி, வண்டுகடி, செய்யான் கடி, அரணைக்கடி, சிறுபாம்பு விசகடி, தேள்கடி, வெண்குட்டம், கருங்குட்டம், செங்குட்டம், கிராணி, சூலைக்கட்டுக் கடுப்புக் குணம், மகோதரம், பெருவயிறு, விசவாதம், மற்றும் பலவியாதியும் தீரும். உப்புப் புளி, கைப்பு மீன், பச்சை மாங்கிசம், புகையிலை ஆகாது. துவரை, கீரைத்தண்டு, பசும்பால், முருங்கையிலை, காய், பாசிப்பயறு, கூட்டவும்.

## கந்தக வில்லை கூட்டும்படி

கந்தகம் பலம் 3, இருப்புக் கரண்டியிலிட்டு நெய்விட்டு உருக்கிப் பாலில் சாய்க்கவும். இப்படி நாலுதரம் வெவ்வேறு நெய், பாலில் செய்யவும். இது சுத்திக்கும்.

## குக்குல் சுத்தி செய்யும்படி

ஆடாதோடை, சீந்தில்கொடி, கொடுவேலி வேர்ப்பட்டை, கடுக்காய் வகைக்கு பலம் 2, இடித்து பானையிலிட்டு முக்கால் பானைத் தண்ணீர் விட்டுக் குக்குலைப் பொட்டணங்கட்டி தோலா எந்திரமாக முப்பது நாழிகை எரியிட சுத்தியாகும்.

எரித்துக் கந்தகத்தையும், குக்குலையும்கொடுவேலிவேர் மூன்று பலம் நறுக்கி இடித்துப் பானையிலிட்டு நாலுபடி தண்ணீர் விட்டு அரைப்படியாய் வற்றக் காய்ச்சிப் பிழிந்திறுத்துக் கொண்டு இந்தக் கசாயம் விட்டுக் கந்தகத்துக் குலையும் சேர்த்தரைத்துச் சாறு சரிவர அரைத்து வில்லை பிடித்து வர வைக்கவும்.

இதன்மேல் ரசாயனம் பண்ணும்படி பரங்கிப்பட்டை பலம் 5, சுக்கு வராகனெடை 2, மிளகு வராகனெடை 2, திப்பிலி மூலம் வராகனெடை 2, செவ்வியம் 2, அரத்தை வராகனெடை 3, கற்கடகசிங்கி, பெருமரப்பூ, நாய்வேளை விதை, வெந்தயம், நற்சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு வராகனெடை 3, கொத்தமல்லி வராகனெடை 3, வாய்விளங்கம் வராகனெடை 2, மதுரம் வராகனெடை 2, வாமுளுவையரிசி வராகனெடை 2, வெட்பாலையரிசி வராகனெடை 3, கடுகுரோகணி வராகனெடை 3, கடுகு வராகனெடை 1, மஞ்சள் வராகனெடை 5, உள்ளி வராகனெடை 4, சாதிக்காய் வராகனெடை 9, சாதிபத்திரி வராகனெடை 5, கிராம்பு வராகனெடை 3, கடுக்காய் பலம் 10 1/2, தான்றிக்காய் பலம் 1/2, நெல்லிப்பருப்பு வராகனெடை 3, புங்கம்பட்டை பலம் 1, சிவனார் வேம்பு பலம் 1, சிறுகுறிஞ்சா வேர் பலம் 1, மிளகு சாரடைவேர் பலம் 1, வீழிவேர் பலம் 1, சங்கம் வேர் பலம் 1, வெள்ளறுகு பலம் 1, சாரடை வேர் பலம் 1, இவையெல்லாம் சூரணம் செய்து வத்திரகாயம் பண்ணி இதனுடனே முற்றின வில்லையுங் கூட்டிப் பொடி பண்ணி, இரண்டு நேரமும் நெல்லிக்காய்ப் பிரமாணம் நெய்விட்டுக் குழப்பிக் கொள்ளவும். ஒரு மண்டலம் கொள்ளவும்.

பத்தியம் : பால், நெய், கீரைத்தண்டு, துவரைப் பருப்பு கொள்ளவும். சாறுஉரி, முந்திரிகைப்பழம் பலம் 1/2, பேரீச்சம் பழம் பலம் 1/2, செங்கழுநீர்க்கிழங்கு இருப்பைப்பூ, அக்கரகாரம், சந்தனம், வேர்க்கொம்பு, மிளகு, திப்பிலி, தான்றிக்காய், இவை வகைக்க 20, கசாயம் விட்டரைத்து நெய் நாழி, பால்நாழி விட்டுக் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து இதிற் சீனியாதல் கற்கண்டாதல் ஒருபலம் போட்டுக் கலக்கி வைத்துக் கொண்டு

நேரத்துக்க ஒரு கரண்டி நெய் கொண்டு வரச் சோகை, காமாலை, விக்கல், அதிசார சுரம், உட்காய்ச்சல், பித்தம், விறுமை, மயக்கம் தீரும்.

**பத்தியம்:** இளங்கீரைத்தண்டு, துவரைப்பருப்பு, முருங்கைப்பிஞ்சு வாழைக்கச்சல், பசுவின் நெய், பால் கூட்டவும்.

உப்பு புளி கைப்புத் தவிர்க்கவும்.

## வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம் 35, நெல்லிப்பருப்பு, விலாமிச்சம் வேர், சீந்தில் கொடி, நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, சித்தாமுட்டி வேர், வெட்டிவேர், நல்ல சந்தனம், முசுமுசுக்கை, நிலப்பனைக்கிழங்கு, கொத்தமல்லி, நீர்வள்ளிக்கிழங்கு வகைக்கு பலம் 5, முந்திரிகைப் பழம், பேரீச்சம்பழம் வகைக்கு ..பலம் 2, இடித்து அந்த நீரிற் போட்டுக் குறுணியாக்கி இஞ்சிச்சாறு இளநீர், கருப்பஞ்சாறு, கொம்மட்டி, மாதுளம்பழச்சாறு, நீர்வள்ளிக் கிழங்குச் சாறு, பூசணிக்காய் பழச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, நாரத்தம் பழச்சாறு, பசும்பால், வகைக்கு ..படி 1 விட்டுக் காய்ச்சிக் குழம்பு பதத்தில் முந்திரிகைப் பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், ஏலம், கிராம்பூ, இலவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சம் வேர், கத்தூரி, குங்குமப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, கொத்தமல்லி, சடாமாஞ்சி, சந்தனம், வெட்டிவேர், செங்கழுநீர்க் கோட்டம், தாளிசபத்திரி, நற்சீரகம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், நன்னாறி வேர், தேசாவரம், திப்பிலி மூலம், பேயப்புடல், கூகைநீர், சாதிக்காய், சாதிபத்திரி, மகரம்பூ, இவைவகைக்கு வராகனெடை 8, வத்திரகாயம் செய்த வைத்துக்கொண்டு முன் குழம்பான மருந்தில் பழவெல்லம் பலம் 40 தகர்த்து பொடிசெய்த ஒன்றுபடுத்திப் பின்பு கடை மருந்துப் பொடித் தூவிக் கிண்டி ரேகித்து நெய் படி 1/2 விட்டு ரேகித்து லேகியப்பதத்தில் இறக்கித் தேன்படி 1 1/2 விட்டு கிளறி ஒன்றுபடுத்தி நெய் தேன் பழகின கலசத்தில் வழித்து வைத்தக் கொண்டு நேரத்துக்க ஒரு

கொட்டைப் பாக்களவு கொண்டுவர ஆம்பில பித்தம், அக்கினி மந்தம் கைகாலெரிவு, தலைகிறுகிறுப்பு, உடம்பெரிவு, அரோசிகஞ் சத்தி நீர்த்தூங்கம், அசீரண சுரம், சோபை, பாண்டு மற்றும் பலப்பல வியாதியும் தீரும் மண்டலங் கொள்ளவும். சரீரம் புட்டியுண்டாம். இது மகாவில்வாதி தானியபுடம் வைத்துக் கொள்ளவும். கணபதி நைவேத்தியம், பிராமண போசனம், பசுவுக்குத் தீபனம், இதுகள் கொடுத்த பின்பு அவுடதம் பட்சணம் பண்ணவும். மண்டலங் கொண்டால் சர்வ ரோகம் நிவாரணம்.

## இளநீர்க் குழம்பு

தாழியில் இளநீர்க் கண்திறந்திட்டு அமரநீர் வார்த்து ஒவ்வொரு இளநீருக்கும் அரைக்காற்படி நெற்பொரியிட்டு எரியிட்டு நீர்வற்றின பின் எடுத்தரைத்துக் கொண்டு சந்தனம் கலையங் கொம்பு கோட்டம், இலவங்கம், இலாமிச்சம் வேர், இந்துப்பு, மதுரம், இருவேலி வேர், செண்பகப்பூ, தூதுவளை வேர், முசுமுசுக்கை, கீழ்க்காய்நெல்லி, பொன்னாங்காணி, வகைக்கு 1 பலம் கூட்டி தட்டி இருநாழி நீரிலிட்டு உழக்காக்கி முந்தின பொரியை அரைத்து இளநீருங் கூட்டிக் கிண்டி நெய்விட்டு வேதித்துக் குழம்பு பதத்தில் வைத்துக் கொண்டு அந்தி சந்தி கொண்டுவரச் சுரம், தவனம், அத்தி சுரம், பழஞ் சுரம், வரட்சி யிருமல், காமாலை இவை எல்லாம் தீரும். வச்சிரகாயமாம்.

## லேகியம்

சீந்தில்தண்டு, பேயப்புடல், வேப்பம் வேர், சிறுவழுதலைவேர், ஆடாதோடை வேர், வகைக்கு நெய் இடித்து நீரிலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து இதில் நாழி நெய்விட்டு மேன் மருந்து கோட்டம், விளாலரிசி, சிறுமூலம், செவ்வியம், தேவதாரம், அதிவிடையம், சாதிக்காய், வாலுளுவையரிசி, மஞ்சிட்டி, கல்மதம், சீதம், கடுகுரோகணி, நவச்சாரம், ஓமம், கொடுவேலி வேர், முப்பாலை, அரிசித்திப்பிலி, ஆடாதோடை,

---

*ரேசித்து – மூச்சுவிடுதல், தவனம் – தாகம்.*

ஆவாரைத்தொலி, வசம்பு, துத்தந் துரிசு, கல்நார், வெண்குந்திருக்கம், மதுரம், சீரகம் இவை வகைக்கு 10 குக்கில் 15பலம் கூட்டி முன்கசாயம் விட்டரைத்துக் கூட்டிப் பால் நாழிவிட்டு வெந்து கிருத பதத்தில் வைத்துக் கொண்டு காலையில் காசிடை கிருதம். ஒருமண்டலம் கொள்ள 21 பிரமேகமும் 18 குட்டமும், புண்கள், புரையோடுதல், என்புமுறிதல், கிரிச்சரம், மந்தாக்கினி, கிரந்திரோகம், பவுந்திர வியாதி, கண்டமாலை, தேகத்தினவு, ஊர்த்த சுவாசம், அற்புத ரோகம், ஆறாதபுண்கள், இவையெல்லாந் தீரும்.

## குழம்பு

கொடுவேலிவேர் பலம் 26, சிறுமூலம், செவ்வியம், கடுக்காய், இவை வகைக்கு பலம் 12, செம்பாலை வேர், சங்கம் வேர், வகைக்க பலம் 7, மலைதாங்கி வேர், பெருங்குமிழ் வேர், முன்னைவேர், பாதிரிவேர், நானாத்திவேர், புங்கம்பட்டை, கண்டங்கத்திரி, ஆத்திப்பட்டை, சிற்றாமுட்டி வேர், சிறுவழுதலை வேர், தூதுவளை வேர், சிவதை வேர், செந்நாயுருவி வேர், கொன்றைப்பட்டை, விளாலரிசி, நெல்லிப்பட்டை, பெருங்காயம், ..ற்று 2 இவையெல்லாம் தறித்திடித்து நாலு மரக்கால் நீர்விட்டுக் கிட்டப் பொடி பாலம் 2, போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்துப் பனைவெல்லம் பலம் 16, நீரில் கரைத்துக் கற்கண்டு நாழி கூட்டிக் காய்ச்சி எட்டொன்றாய் வடித்து முன்கசாயத்தில் விட்டு மேன்மருந்து சீரகம், வசுவாசி, விளாவரிசி, கருஞ்சீரகம், வசம்பு, கடுகு, சாதிக்காய், கிராம்பு, தேவதாரம், சிறுதேக்கு, சாதிபத்திரி, சுக்கு, மிளகு, கற்கடக சிங்கி, திப்பிலி, ஓமம், இந்துப்பு, அரத்தை, வகைக்கு பலம் 10, கொடுவேலி வேர் 4 பலம், காயம் 3 பலம், எல்லாம் அரைத்துக் கரைத்துக் கைமாறாமல் கிண்டி, 2 சேர் தேன்விட்டுக் குழம்பு பதத்தில் பழகின கலசத்தில் இட்டு வைத்துக் கொண்டு நேர் புடம் வைத்தெடுத்துக் கொண்டுவர, மூலரோகம், சக்தி குன்மம், முதற்குன்மரோகம், பீலிகை, கவிசை, பாண்டு ரோகம், மகோதரம், வாதரோகம், வாயு, விசசுரம், இருமல் ஈளை, குவளை, விப்புருதி, சயரோகம், இவையெல்லாம் தீரும்.

## சுக்காதி லேகியம்

சுக்கு பலம் 4, திப்பிலி பலம் 2, மிளகு பலம் 1, ஓமம் பலம் 4, இந்துப்பு பலம் 1/2, கையாந்தகரைக் காய் பலம் 1/2, வெள்ளைப் போளம் பலம் 1/2, பெருங்காயம் பலம் 1/2, சதகுப்பை பலம் 1/2, கொத்தமல்லி பலம் 1/2, படியாய்க் காய்ச்சி இதில் சூரணப் பொடியிட்டுக் கிண்டிப் பின்பு சீனிபோட்டுக் கிண்டி வடித்து வைத்துக் கொண்டு, தான்றிக்காய்ப் பிரமாணம் கொண்டுவரச் சூசிகாவாயு, அன்னவாயு, எலும்புருக்கி, பெரும்பாடு, வயிற்றுலுள்ள ரத்தக்கட்டு எல்லாம் தீரும்.

## மஞ்சளாதி லேகியம்

| | |
|---|---|
| மஞ்சள் பலம் | 1/2 |
| மிளகு பலம் | 1/8 |

கையாந்தகரைச் சாறு நாழியில் அரைத்துக் கரைத்துக் கைவிடாமற் கிண்டி இதில் சர்க்கரை பலம் 2, போட்டு நெய் படி 1/8 + 1/16 விட்டு லோகபற்பம் பலம் 2 போட்டு லேகியஞ் செய்து வைத்துக் கொண்டு, காலையில் பாக்களவு கொண்டுவர குன்மரோகம், அக்கினி மந்தம், அரோசிகம், பாண்டுரோகம், உதரதோஷம், கிருமிதோசம், இதுமுதலானதும் தீரும்.

சூதிகா வாய்வு முதல் பலவியாதிக்கும்

## சௌபாக்கியச் சுண்டி

சுக்கு தோல்போக்கி தண்ணீரில் ஊறபோட்டு ஓர் இரவு மட்டும் நிழலுலர்த்தி, சாரடைச் சாற்றிலும் 1/4 படி, கச்சைப்பட்டைச் சாற்றில் 1/4 படி, நொச்சியிலைச் சாற்றிலும் 1/4 படி ஆடாதோடைச் சாற்றிலும் 1/4 படி, கண்டங்கத்திரிச் சாற்றிலும் 1/4 படி, பொடுதலைச் சாற்றிலும் 1/4 படி கறிமுள்ளியிலைச் சாற்றிலும் படி கையாந்தகரைச் சாற்றிலும் படி புங்கிலைச்சாற்றிலும் படி, துளசியிலைச்சாற்றிலும் படி, எருக்கம்பால் படி, இவற்றை தனித்தனியாக நனைத்து நிழலுலர்த்தி இடித்து வத்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு தேனிலும் இளவெந்நீரிலும், பசு நெய்யிலும் கொள்ளவும் இதுவே போதும். ஆனாலும் அசமோதம், அரத்தை,

இலவங்கப்பட்டை, பத்திரி, நாககேசுரம், மிளகு, தேசாபுரம், திரிபலை, வாய்விளங்கம், இருஞ்சீரகம், அதிமதுரம், தாளிசபத்திரி இவையெல்லாம் வெதுப்பிச் சூரணம் பண்ணி முன் சூரணமுங் கூட்டி பசும்பாலில் ஒருராத்திரி ஊறவைத்தெடுத்து நிழலுலர்த்தி அடுப்பு மேலே சட்டியில் நெய்விட்டு அதில் போட்டுக் கிளறி பின்பு தேன்விட்டுக் கிளரி லேகியபாகம் பண்ணி வைத்துக் கொண்டு நேரத்துக்குப் புன்னைக் காயளவு கொண்டுவரச் சூசிக வாயுத் தீரும். தீபனம் உண்டாம். நாவுக்கு ருசிகரம். சூலை, சிரோரோகம், சிரசுநடுக்கம், பழஞ்சுரம், சயரோகம், சரீரவிளைப்புக் கிராணி ரோகம், சோபை, அபிதாக சுரம், நேத்திரரோகம், காமாலை, பாண்டு , விசரோகம், இவை முதலான எல்லா வியாதியும் தீரும். முதியோர்களுக்கு சௌபாக்கியம் உண்டாம். இது அசுவினி தேவதைகளால் செய்யப்பட்ட பிரயோகம்.

## சீதேவியார் நெய்

சீதேவி, செங்கழுநீர்ச் சாறு 4 பங்கு, நெய், ஏலம், இலவங்கம், மஞ்சிட்டி, தாமாலபத்திரி, கடுகுரோகணி, முத்தக்காசு, நன்னாரி வேர், கோட்டம், சந்தனம், மதுரம், இவை முறையே வராகனெடை 3, அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்து உள்ளுங்கொண்டு மேலுமிடச் சன்னி வாத சுரமுதலாயச் சகல சுரமுந் தீரும்.

## சகல சுரத்துக்கும் சீதேவியார் நெய்

### இன்னுமொரு வகை

சீதேவியார் சாறு, நெய், மதுரம், கோட்டம், இலவங்கம், மஞ்சிட்டி, கடுகுரோகணி, செண்பகப்பூ, சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், நீர்வள்ளிக்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோரைக் கிழங்கு, வகைக்கு 2 பலம் அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ள சகல சுரம், சன்னிவாத சுரம், வெறுமை, உழுவை, உடம்பெரிவு, பித்தம், இரத்தபித்தம், உளுவையுடன் கூடிய சுரம் ஆகியவை தீரும்.

முலைப்பால் 2 பங்கு
நெல்லிப்பருப்பு 1 பங்கு

பூசணிவிதை, மதுரம், மேற்படி யாவையும் அரைத்துக் கலந்துக் காய்ச்சி வடித்துக் கொள்ள சகல சுரம், சன்னி, உடம்பு வறட்சியும் தீரும்.

## தசமூல கிருதம்

பெருவாகை பெருங்குமிழ முல்லை, பாதிரி, வில்வம் கண்டங்கத்திரி, சிறுவழுதலை, நெரிஞ்சி வகைக்கு பலம் 6, சிற்றாமல்லி, பேராமல்லி, சமூலமும், மேற்படி பலம் 2, இவையெல்லாம் தரித்திடித்து 12 படி நீர்விட்டு 6 பங்காய்க் காய்ச்சி இறுத்து 2 வீசம் நெய் விட்டுத் திரிகடுகு, திரிபலை, ஏலம், கோட்டம், இந்துப்பு, விளாவரிசி, வாலுளுவையரிசி, சைந்தவலவணம், ஓமம், மேற்படி வகைக்கு 20 வராகன் அரைத்துக் கலந்து மூன்று நாள் கொதியிட வைத்து நாலாம்நாள் வடித்து அந்தி சந்தி இரண்டு காசிடை நெய் கொண்டுவரச் சுவாசகாசம், மார்பிலுழைப்பு மார்பிலிடிப்பு, நெஞ்சுக்கட்டு, குன்மங் கிராணி தீரும்.

இதில் ஆனந்த வயிரவன்: இது ஒரு குளிகை கூட்டிவிட மெத்த நல்லது.

## உள்ளி எண்ணெய்

வெள்ளுள்ளி இலை, கொடுவேலிவேர் இலை, ஆயில்பட்டை பலம் 12 1/2 இட்டு புன்முருங்கை முற்றாத வேர், அழிஞ்சில் வேர், நொச்சிவேர், காக்கணவேர், மோர்ச் சாரடை வேர், சாரடைவேர், வாகை வேர், பெருங்குமிழவேர், முன்னைவேர், பாதிரி வேர், வில்வவேர், சிற்றாமல்லி வேர், சிறுவழுதலைவேர், கண்டங்கத்திரி வேர், நெருஞ்சி வேர், நாயுருவி வேர், சிவதை வேர், மாவிலங்கு பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி மூலம், தேவதாரம், குறிஞ்சிவேர், சிற்றாமணக்கம் வேர், வீழிவேர், வசம்பு, கறிவேப்பிலை, கழஞ்சிப் பருப்பு, எருமைத்திரளங் கொடி, பொன்முசுட்டை, பெருங்குமிழம், பெருங்குறும்பை, செந்தொட்டி வேர், வகைக்கு பலம் 2, கூட்டி இடித்து படி, நீர்விட்டு நாலொன்றாய்ப் பன்னிரண்டு நாளுறக் காய்ச்சிப் பிசைந்து வடித்து இதில் 4 பலம் சிற்றாமணக் கெண்ணெய் விட்டுச் செவ்வியம், சித்திரமூலம், சிறுமூலம், சுக்கு, திப்பிலி, நிலவேம்பு, வாய்விளங்கம், கடுக்காய், வெட்பாலையரிசி, ஏலம், தேவதாரம், சாளம், வசம்பு, முருங்கைவிதை, இந்துப்பு, பொட்டிலுப்பு, காருப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, செவ்வுப்பு, திப்பிலி, வெண்காரம், மிளகு மேற்கூறியவற்றை 4 பலம் அரைத்து, மேற்படி எண்ணெயில் கலந்து, 5 நாள் சிறு கொதியிட

6-ம் நாள் கள்ளிப் பால் 1/16 படி வெள்ளாட்டுப் பால் உரிவிட்டப் பின்னர் இரண்டு நாள் கொதியிட வைத்து மூன்றாம் நாள் பதத்தில் வடித்து ஒரு காசிடை எண்ணெய் விடியும் பொழுது கொடுக்க குன்மம், சூலை, வயிறூதல் எழுவகைப்பட்ட ஆனந்த வாயுக் குடல்வாதம், ஆறுவகைப் பிரமீயம், மூலங்கிராணி, கிருசலினம், பீலிகை, பெருவயிறு, வாதரோகம், என்பதெல்லாம் தீரும். வாதத்துக்கு இணங்கிதரியவும். பால், நெய், நீர்மோர், கூட்டவும்.

## உள்ளி எண்ணெய்

வெள்ளுள்ளி பலம் 12, நீரில் கலந்து நாலொன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து வடித்தொரு பாண்டத்தில் விட்டுச் சாணகச்சாறு, கோசலம், தயிர், பசும்பால், கள்ளிப்பால், சிற்றாமணக் கொண்ணெய் கூட விட்டுத் தேவதாரம், வசம்பு, கோட்டம், தகரம், சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி, சிறுமூலம், சவுக்காரம், இந்துப்பு, கல்லுப்பு, இளவுப்பு, மிளகு, காட்டுத்திப்பிலி, நீர்வெட்டிவிதை, சேங்கொட்டை, சிவதை வேர், சித்திரமூலம், அரிசித்திப்பிலி, பெருங்காயம், ஓமம், அரத்தை, சதகுப்பை, மேற்படி 1/2 பங்கு, கடுக்காய் 50, வாளம் 50, அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொண்டுவரப் பெருவயிறு, சோபை, ஆனந்தவாயுவை குடல் வாதம், கழல்வாதம், மூலவாயு, குன்ம வாயு, பக்கசூலை, வாயு இதுமுதலான வாயுவெல்லாம் தீரும்.

## கல்யாணக் கிருதம்

நன்னாரி வேர், மகாளிக் கிழங்கு வகையும் 40 படி நீரிலிட்டு 21 நாள் காய்ந்து ஊறின பின் வடிகட்டி நெய், பால்விட்டு ஏலம், விளாவரிசி, தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், தகரம், கோட்டம், மஞ்சிட்டி, நாகப்பூ, தாளிச பத்திரி, செண்பகமொட்டு, கிருமி சத்துரு, சந்தனம், கார்கோளி, சீராகோளி, மேதை, மகாமேதை, பூனைக்காலி வேர், சிற்றாமல்லிவேர், தும்மட்டி வேர், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி வேர், கார்த்திகைக் கிழங்கு, முள்ளி வேர், தாமரைத்தாது, செங்கழுநீர்க் கிழங்க, வகைக்கு ஒருவீசை அரைத்துக் கரைத்து நாலு நாள் ஊறவைத்து ஐந்தாம் நாள் வடித்து நாளொன்றுக்கு

---

*கிருமிச் சத்துரு – ஆகுதின்னாபியாளை.*

முக்கழஞ்சு நெய் கொள்ள வாய் சுவாசம், பாண்டு ரோகம், சரீரத் தினவு, சலக்கழிச்சல், சுரம், முயல் வலிப்பு இவை தீரும். தாதுவிர்த்தனை, சரீரபலம் உண்டாம். உடல் பருக்கும். பசாசு, மருந்தீடு தீரும். புத்தியுண்டாம். கெட்டவை தெறிக்கும்.

## இன்னம்

நிலப்பனைக் கிழங்கு, நீர்வள்ளிக் கிழங்கு, கொடிவேலி, நெருஞ்சில், நன்னாரி, வழுதலை, சிற்றாமல்லி, பேய்த்தும்மட்டி, சிற்றாமுட்டி, சாரடை, திராய், அமுக்கரா பாதிரி, இதுவேர் வில்வவேர் பட்டை, தாமரைவளையம், கோரைக்கிழங்கு மேற்படி வகைக்கு பலம் 3 1/2 இடித்து நீரிலிட்டு படி 80 விட்டுக் காய்ச்சி வடித்ததில் நெய் 2 உரி பால் கொடுப்பை, தாமரை வளையம், நெல்லிக்காய், முள்ளிலம்பட்டை, கரும்பு, வெள்ளரிக்காய், பூசணிக்காய், இலுப்பை சாறு, ஊறயச் சாறு படி - 1, தோடைவேர், நன்னாரி வேர், சிற்றாமல்லிவேர், அமுக்குரா வேர், சாரடைவேர், நெய்தல், தாமரை வளையம், முந்திரிகைப் பழம், பேரீச்சம்பழம், வெட்டிவேர், கடுகுரோகணி, மதுரம்,கோட்டம், இலுப்பைப்பூ, சந்தனம், சரளி, தேவதாரம், மஞ்சிட்டி, மஞ்சள், மாகாளிக்கிழங்கு, சடாமாஞ்சில், வெட்பாலையரிசி, விடையம், கார்கோளி, செவ்வியம், வகைக்கு 1 படி அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்து நேரத்துக்கு 4 வராகனெடை நெய் கொள்ளப் பிரமேகம் 20 வகையும். அவத்தை, அபசுமாரம், விப்புருதி, கடி, வாதமுந் தீரும்.

## கலியாணக் குழம்பு

நெல்லிக்காய்ச் சாறு - 4 உரி, வெள்ளைச் சர்க்கரை - 25 பலம் போட்டு உழக்கு நல்லெண்ணெயும் விட்டுக் காய்ச்சி, குழம்பாகிற பக்குவத்தில் பின்னும் உழக்கெண்ணெய் விட்டு இரண்டு கொதியிட்டுக் காய்ந்தபின் திரிபலை, திப்பிலி, காட்டுத்திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, கொத்தமல்லி, ஓமம், வெட்பாலையரிசி, விளாவரிசி, மிளகு, சீரகம், மஞ்சிட்டி, பொற்கொன்றைவேர் வகைக்கு பலம் 1, திரிகோபம் பலம் 8, பொடித்து வடி கொண்டு காயில் குழம்பில் தூவித் தூவிக்கிளறி இறக்கிப் பழகின

கலசத்திலிட்டுக் கொண்டு காலையில் கழஞ்சியிடை குழம்பு கொண்டு வரப் பிரமேகம் 20-ம் காமாலை, பாண்டு, மூலம், குட்டம், மூத்திரக் கிரிச்சரம், குன்மந் தீரும். விழுந்து பொந்த சந்தும் பொருந்தும் முறிந்த என்பு கூடும். மிடறு தெளியும். நரைதிரை மாறும். மலடிக்கும் கர்ப்பந் தரிக்கும். வெகுபலமும் புத்தியுமுண்டாம்.

## பாண்ட லேகியம்

திரிகோபமென்பது, கந்தம், சிவதை, வெண்குங்கிலியம், இம்மூன்றென்றும் கொல்லாங்கோவை யென்றும், சந்தேகம் கேட்டறியவும்.

பூசணிக்காய் முகத்திலறுத்து வெல்லம் போட்டுப் பிசைந்து வடித்த நீர் 4 படி, ஆடாதொடையிலைச்சாறு படி, பழவெல்லம் பலம் 25, பனைவெல்லம் பலம் 20, போட்டுக் காய்ச்சிக் குழம்பான வாறே திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, குரோசானியோமம், விடையம், திரிபலை, கருஞ்சீரகம், கடுகு, வெந்தயம், கடுகுரோகணி, கூகைநீர், விளங்கம், கொத்தமல்லி, சதகுப்பை, கத்தூரி மஞ்சள், நாய்க்கடுகு, வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சவுக்காரம், ஓமம், திப்பிலிமூலம், சித்திரமூலம், சிறுமூலம், காட்டுச்சீரகம், ஏலம், இலவங்கம், கிராம்பு, பல்மாணிக்கப் பச்சிலை, கச்சோலம், வெள்ளி லோத்திரம், வகைக்கு பலம் 3, மதுரம் பலம் 3, கோட்டம் வராகனெடை 1, வெண்காரம் பலம் 5, காயம் பலம் 1/2 பொடி செய்துபோட்டுக் கிண்டி இரண்டுபடி தேன்விட்டுக் காய்ச்சிக் கம்பி ஈர பதத்தில் இறக்கிப் பழகின கலசத்திலிட்டுக் கொண்டு தேசிக்காயளவு இரண்டு நேரமும் 21 நாள்கொள்ள உள்மாந்தை, சுரம், மாந்தை, எலும்புருக்கி, அத்தியிற் பற்றினசுரம், அரிகுரல் கசநோவு, கர்ப்பரோகம், எரிகுன்மம், நாபிசூலை, பஞ்சுரம், பழுவெரிப்பு, பிரமியம், தாபம், நாவறட்சி, ஈரலைச் சூழ்ந்த வியாதி, கால்கை, முகம், உச்சி, எரிப்பு, இவை தீரும்.

## குக்குலு நெய்

வேப்பம் பட்டை, பேய்ப்புடல், தோடைவேர், இலை, கண்டங்கத்திரி வேர், தூதுவளை வேர், சீந்தில்கொடி, முள்ளிவேர் இலை, செம்முள்ளியிலை,

முசுமுசுக்கையிலை, வகைக்கு பலம் 1, இடித்து குறுணிநீர்விட்டு 4-ல் 1 ஆகக் காய்ச்சி வடிகட்டி வட்டத்திரிப்பு, மலைதாங்கி வேர், விளாவரிசி அரைத்து தேவதாரம், மஞ்சள், குப்பை, கோட்டம், வாலுளுவையரிசி, மாதளங்காய், கொடுவேலி வேர், சிட்டி, விடையம் வகைக்கு 1 பலம், குக்குலு பலம் 5, அரைத்து நெய்யுடன் கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ளவும். பூசவும். மரணவாதம், இருமல், இளைப்பு, விரணங்கள் மலட்டு வலியும் தீரும்.

## அசுவகந்தாதி நெய்

அமுக்கரா வேர் பலம் 100, சாரடை, சங்கு, பிரண்டை, சிவதை, மிளகரணை, இவைகளின் வேர் வகைக்கு பலம் 10, தசமூலவேர் வகைக்கு பலம் 1, செவ்வியம், நீர்வள்ளிக் கிழங்கு, சீந்தில், உளுந்து, குளச்சென்னல் வகைக்கு பலம் 3, தரித்திடித்து 8 மரக்கால் நீரில் இரண்டொன்றாய்க் காய்ச்சி வடித்து நெய் விட்டு, மதுரம், சூரி, பத்திரி, தேடகிடைக்கி, திரிகடுகு, திரிபலை, அரத்தை, திப்பிலிமூலம், தேவதாரம், மஞ்சள், மரமஞ்சள், மரமடக்கி, கொடிவேலி வேர், தகரம், வெட்பாலையரிசி, அரேணுகம், கடுகு ரோகணி, அட்டசந்தனம், ஆவது சந்தனம், காரகில், கோட்டம், இலவங்கப் பட்டை, கத்தூரி மஞ்சள், கற்பூரம், குங்குமப்பூ, சமுத்திரா பச்சை, இவை அட்ட சந்தனம், விளாவரிசி, சத்திச்சாரம், எவட்சாரம், காச்சுலவணம், இவை வகைக்கு வீசம் 4 கூட்டி யரைத்துக் கலந்து மந்தாக்கினியாய் நாலுநாள் காய்ச்சி ஐந்தாம்நாள் வடித்து அதில் மேன்பொடி, தாம்பிர பற்பம், காந்த பற்பம், வகைக்கு 1 பலம், திப்பிலி பலம் 8, கூட்டிச் சூரணம் பண்ணி நெய்யில் விரவித் தேன் விட்டுத் தானியபுடம் ஒருமாதம் வைத்தெடுத்துக் கொள்ளச் சயம், சுரம், பீலிகை சுவாசம், அரோசகம், குன்மம், சூலை, இரத்தபித்தம், எலும்புருக்கி, மூத்திரக் கிரச்சரம், இவை யெல்லாம் தீரும்.

## உள்ளிநெய்

வெள்ளுள்ளிப் பருப்பு பலம் 7, சாற்றிடித்து 14 நீரிலிட்டு 3 ஆக காய்ச்சி வடித்ததில் பெருவாகை, பெருங்குமிழம், வில்வம், பாதிரி 7 வராகன் தறித்திடித்து 4 முறை நீர்விட்டு பாகாகக் காய்ச்சி வடித்துக் கூட்டி காடி படி 2, தாது மாதுளைப் பழச்சாறு படி 2, கலந்து திரிகடுகு, திரிபலை, காயம், சீரகம், செவ்வியம், ஓமம், இந்துப்பு, தேவதாரம், புளிநடலைக் கிழங்கு மேற்படி வகைக்கு பலம் 4 வெள்ளாட்டுப்பால் விட்டரைத்துக் கலந்து நெய் 2 உரி

---

சூரி – புளிச்சக்கீரை, பத்திரி–சாதிப்பத்திரி இலை.

விட்டுக் காய்ச்சி வடித்துக் காலையில் ஒரு கழஞ்சு இருகழஞ்சு நெய் கொள்ளவும். வியாதி மிடுக்கறிந்து கொள்ளக் குடல் வாதம் ஆறுவகையும் உளமாந்தையும் தீரும்.

## குக்குலு நெய்

முற்றின வேப்பம் பட்டை, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, சீந்தில், சிறுவழுதலை, ஆடாதொடை வகைக்கு பலம் 10, இடித்து 8 மரக்கால், நீரில் எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து நெய்பதக்கு விட்டுப், பொன் முசுட்டைவேர், விளங்கம், செவ்வியம், தேவதாரம், அரிசித் திப்பிலி, சத்திச்சாரம், எவட்சாரம், சுக்கு, மஞ்சள், ஏலம், கோட்டம், வீழி வேர்ப்பட்டை, மிளகு, வெட்பாலையரிசி, ஓமம், கொடிவேலி வேர்ப்பட்டை, வசம்பு, ரோகிணி, திப்பிலி, முதல் மஞ்சிட்டி, விடையம், சீரகம், கடுக்காய் வகைக்கு 20, இரண்டு சுத்தியான குக்குலு பலம் ஒன்று கூட்டித் தண்ணீரி விட்டரைத்துக் கலந்து காய்ச்சி, 5 நாள் சிறுகொதியிட்டு 6ம் நாள் வடித்து நேரத்துக்கு வராகனெடை உள்ளுங் கொண்டு நசியம் செய்த உடம்பிலும் மினுங்கப் பூசிப் பிடிக்கவும்.

வீக்கம், காசம், கண்டமாலை, தாபம், மூலம், விப்புருதி, சுரோணித வாதம், சொதி, பேய்ச் சொதி, முசுட்டைச் சொதி, பீனிசம், மண்டைசூலை, சயம், அருசிபாண்டு, ஈளை, இருமல், வாந்தி ஆறாத புண்கள் இவை தீரும்.

## திரிபலாதி நெய்

திரிபலை, திரிகடுகு, கொடுவேலி வேர்ப்பட்டை, விளாலிரிசி, ஆரியச் சிவதை, நிலவாமணக்கு. வட்டத் திரிப்பி, கடுகு ரோகணி, மஞ்சள், மரமஞ்சள், அதிவிடையம், பொற்கொன்றைக்காய், வகைக்கு வராகனெடை 3, நெய் உரி, கள்ளிப் பால் 3/4 அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்து ஆள்பலம் அறிந்து வராகனெடை கொடுக்க அரோசியமும் 20 நாள் கொள்ளக் குட்டம், பாண்டு, குன்மம், சூலை, விசவாதம், உள்மாந்தம் இவையெல்லாம் தீரும்.

## திப்பிலி நெய்

திப்பிலி, வெட்பாலையரிசி, திரிபலை, கடுகு ரோகணி, நன்னாரிவேர், கீழ்காய் நெல்லி, வில்வவேர், வேப்பம்பட்டை, சந்தனம், சண்பகஇலை, விலாமிச்சம் வேர், முந்திரிகைப்பழம், விடையம், ஆடாதொடை இவை 2 படி தண்ணீர் விட்டரைத்து தண்ணீரும், நெய்யும் கலந்து மந்தாக்கினிவிட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து இரண்டு காசிடை நெய்யும், இரண்டு காசிடை தேனும் கலந்து கொள்ள விடாச்சுரம், விக்கல், உழலை தலை வலி, பிரசியமுந் தீரும்.

## சீந்தில் சர்க்கரை ரசாயனம்

சீந்தில் சர்க்கரை இரண்டுபங்கு, இதில் ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, ஓமம், சீரகம், கோட்டம், நிலப்பனைக் கிழங்கு, அரேணுகம், முந்திரிகைப் பழம், குங்கிலியம், நாகப்பூ, தாமரைத் தாது, அதன்வளையம், கற்பூரம், சந்தனம், செஞ்சந்தனம், திரிகடுகு, நெல்லிப் பருப்பு, மதுரம், நெற்பொறி, அமுக்கராவேர், நீர்வள்ளிக் கிழங்கு, நெருஞ்சிக்காய் சிங்கி, சாதிக்காய், தக்கோலம் – சரிநிறை வெதுப்புவதை வெதுப்பி, சூரணம் ஒருபங்கு இதில் இரண்டுங் கலந்து சர்க்கரை குறிஞ்சித்தேன் கூட்டி ரசாயனம் பண்ணி ஆட்பலம் நோய்ப்பலன் அறிந்து 3 வராகனெடை கொள்ள, உளமாந்தை, இரத்தபித்தம், காச சுவாசம், நெஞ்சிற் குறுகுறுப்பு, நீரிழிவு 20-ம் பிரமேகம் 20-ம் மூத்திரக் கிரிச்சரம், கைகாலுடன் பெரிவு இவை தீரும்.

## கண்டாமலகி லேகியம்

நெல்லிக்காய்ச் சாறு, அடுப்பேற்றிக் கொதிக்கிற போது சீனி பலம் 25, தேன், நெய் உரிவிட்டு, விளங்கம், கொடிவேலி வேர்ப்பட்டை, ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, நாகப்பூ, மதுரம், இந்துப்பு, சீரகம் - வகைக்குப் பலம் 1/2 கூட்டிப் பொடித்து காயிற் குழம்பைக் கீழே இறக்கி அதிற் தூவிக்கிளறி லேகியப்படுத்திக் கொண்டு காலையில் மூன்றுகாசிடை கொள்ள பித்த பாண்டு, சோவை, காமாலை, இரத்தபித்தம், சுவாசம், உச்ணம் தீரும்.

பழைய கிட்டம் சுத்திசெய்து பொடி பண்ணி வராகனெடை 8, முருங்கிலைச் சாறு வார்த்தரைத்து ஊசிக் காந்தம் வராகனெடை 6, ஓரிதழ் தாமரைச்சாறு விட்டொரு சாமம் அரைத்து பின் இரண்டும் கூட்டி கரிப்பான் சாறுவிட்டுப் பாவனை பண்ணி அதனை ஒருநாள் இஞ்சித் சாற்றில் பாவனை பண்ணி உலர்த்திக் கொண்டு, இப்பொடியை நெய்யிற் கொள்ளப் பாண்டு, குன்மம் தீரும்.

## தாளிசபத்திரி வடகம்

தாளிச பத்திரி, கடுகு, செவ்வியம், வகைக்கு இரண்டு பங்கு, திரிபலை, திப்பிலி மூலம், மிளகு, ஏலம், பச்சிலை, நாகப்பூ, வகைக்கு ஒரு பங்கு வெல்லம், நூற்றிருபது பங்கு. இவற்றை தண்ணீரில் கரைத்து வடிகட்டிப் பாகாய் காய்ச்சி அதில் புளியஞ்சிராய் சுட்டசாம்பல் பலம் 10, போட்டுக் கிண்டிக் காய்ச்சி குழம்பான பருவத்தில் முந்தின மருந்தும் பொடித்து வடியிட்டுத் தூவிக் கூழி பருவமாகக் கிண்டி மூன்று காசளவு வடிகஞ் செய்து காலையில் கொண்டுவர காச சுவாசம், பாண்டு காமாலை, மேல்மூச்சு, மருத்தீடும் மந்தாக்கினி, வெப்புப்பாவை, இது நன்றாய்த்தீரும். ஒரு மண்டலங் கொள்ளவும்.

## முந்திரிப்பழச் சூரணம்

முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், அத்திப்பழம், தாமரைப்பூ, ஆலம்விழுது, அதிமதுரம், சந்தனம், கற்பூரம், கோட்டம், விலாமிச்சம் வேர், இருவேலி, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, தாளிச பத்திரி, துளசி, நாறு கரந்தை, பெருங்குமிழ வேப்பிலை, தேட்கடை, சீந்தி நொச்சி, பருத்தி, கரிப்பான், புளியிலை, சிற்றலவணம், சிலந்தி நாயகம், நன்னாரி வேர், அகத்தி, மணத்தக்காளி, குக்குலு, குதிரை வாலி, அமுக்கரா வேர், வெருகங்கிழங்கு, பாகல்வேர், வலம்புரி, வெள்ளறுகு, நீலஞ்சோதி, வில்வப் பிஞ்சு, மஞ்சிட்டி, திப்பிலி, மூலம், திரிபலை சமன் கூட்டிச் சூரணம் பண்ணிச் சரி சர்க்கரை கலந்து தேன், நெய்யிற் கொள்ளவும்.

இம்மருந்த்த எண்ணெயாய் வைக்க வென்றாற் சர்க்கரைத் தள்ளி எண்ணெய் வைத்துள்ளுங் கொண்டு தலைக்கிட்டு மூழ்கி மேலும்

துவாலையிடவும். உள்மாந்தம், இரத்தபித்தம், உள்வாந்தி, அஞ்சு வகைமேகம், தாபசுரம், கைகால் உடம்பு எரிவு, சர்வ பைத்தியம் ஆகியவை தீரும்.

## பூரண அவலேகச் சூரணம்

கடுகுரோகணி, கோட்டம், இலவம்பிசின், உளுத்தம் பருப்பு, எள்ளு, மல்லி, மதுரம், சாதிக்காய், இந்துப்பு, சிறுதேக்கு, திரிகடுகு, சீரகம், வசம்பு, ஏலம், இலவங்கம், பச்சிலை, நாகப்பூ, முந்திரிகைப்பழம், திரிபலை, அமுக்கரா வேர், சீந்தில் கொடி, நிலப்பனைக்கிழங்கு, நெருஞ்சிவேர், வாழைக்கிழங்கு, நீர்வள்ளிக் கிழங்கு, மருங்காரை வேர், சாரடை வேர், ஓமம், வாய்விளங்கம், செவ்வியம், காயம், நற்சீரகம், கருஞ்சீரகம், சித்திர மூலம், முத்தக்காசு, சாதிப்பத்திரி, பூனைக்காலிவிதை, கடலை, சணல் விதை, ஆனைத்திப்பிலி, தோடைவேர், மரமஞ்சள், மஞ்சள், கஞ்சா இலைப்பொடி, வகைக்கு வராகனெடை 5, யாவையும் சூரணம் செய்து, தேன், நெய், வெல்லத்திற் கொள்ளக் கிராணி, குன்மம், குளிர், மூலவாயு, சலகுன்மம், பீக்கிராணி, பித்த பாண்டு, காசநோய், இளைப்பு, செரியாக்குணம், வாதம், திமிர், பிரமியம், பவுத்திரம், சொறிகுட்டம், இதெல்லாம் தீரும். மயிர் வளரும்.

இச்சூரணம், கஞ்சாவிலைச் சூரணம், கரிப்பான் சமூல சூரணம் மூன்றுஞ் சமன் கூட்டினாலும் மெத்த நல்லது.

## தேங்காய்ப் பற்பம்

நன்றாய் முற்றின தேங்காய் உடைத்துக் கீறிக் கீறுகீறாக நறுக்கி உலர்த்தி இடித்துச் சூரணம் பண்ணிப் பழகின கலசத்தில் வைத்துக் கொண்டு வெருகடியளவு, அதில் பாதியானாலும், நெய்யிலோ, வெண்ணெயிலோ அந்திசந்தி கொள்ளத் தலைவலி போம். நெய்யில் அரைமண்டலம் கொள்ளப் பாண்டுருவும், பித்தமும் தீரும்.

வயிற்றிலுள்ள வியாதியும் தீரும். ஒருமண்டலம், வெண்ணெயில் கொள்ளப் பெருவயிறு போம். புழு அரிப்பும் தீரும்.

---

*அவலேகம் – இலேகியம்.*

எருமை மோரில் கொள்ள எல்லா வியாதியும் தீரும். நெய்யிற் போட்டுத் பொட்டணமாய்ப் பிடித்து நாசியில் நசியம் விட விக்கலும், முயலகனும் போம். நாலுபடி பாலில் உழக்கு நெய் விட்டுக் காய்ச்சி வடித்து அந்நெய்யில் இப்பொடியிட்டுக் கொள்ள வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம் தீரும்.

## சிவதைச் சூரணம்

நெல்விமுள்ளி, வாய்விளங்கம், ஏலம் இலவங்கப் பச்சிலை, முத்தக்காசு, கடுக்காய், சமன் சூரணஞ் செய்து, இதற்கு மூன்றிடை ஆரியச் சிவதைச், சூரணம் பண்ணிக் கலந்து, வெருகடியிற் பாதி தேனிற் கொள்ள வாதபித்த சேத்துமம் வாயு நெஞ்சடைப்பு, மூர்ச்சை, பிரமியம், சேத்துமம், பாண்டு இவை தீரும்.

## அரி, தலிப்ப, வஞ்சி

கடுக்காய் - 100

காடியில் மூன்றுதரம் ஊறியபின்பு இரண்டாய்ப் பிளந்து கொட்டைத் தள்ளி, உலர்த்தி, நிறுத்தி நாலுரொன்றில் இந்துப்பு பொடி கூட்டி உரிய மோர் விட்டு வெந்து வருவமிருக்கத் தீ பந்த பருவத்திறக்கி திப்பிலி, திப்பிலி மூலம், சித்திரமூலம், செவ்வியம், வகைக்கு 2 பலம் மிளகு, சீரகம், ஓமம், வகைக்கு பலம் 2, பொடித்துக் தேசிப்படிச் சாறுகலந்து கடுக்காயில் கூட விரவிவிட்டு வைத்துக் கொண்டு தினம் தினம் ஒருகாய் தின்றுவர சத்தி குன்மம், குடற் புரட்டுப் புளித்தேப்பம், வயிற்றெரிவு, வாய் நீருறல், மலக்கட்டு தீரும்.

## சித்திர மூலித் தைலம்

கொடிவேலி வேர், சாரடை வேர், பாவட்டை வேர், குறுந்தொட்டி வேர், மாவுலிங்க வேர், உகாய வேர், முன்னைவேர், குமிழவேர், நெருஞ்சி வேர், முருங்கைவேர், சிற்றாமணக்கு வேர், பேராமணக்கு வேர், வில்வவேர், பாதிரிவேர், ஆயில்பட்டை, வகைக்கு பலம் 1, வெள்ளுள்ளி பலம், 25 இடித்து 4 மரக்கால் நீரிலிட்டு நாலொன்றாய் காய்ச்சி வடித்து இதிற் கொத்தான் கொழிஞ்சி, காதோட்டி, குப்பைமேனி, கழற்சியிலை, மேற்படி சாறு, உரி, வெள்ளாட்டுப்பால் 4 பங்கு, விளக்கெண்ணெய், சுக்கு, திப்பிலி, இந்துப்பு,

---

தேசி – எலுமிச்சை.

சவுக்காரம், நற்சீரகம், வெந்தயம், காயம், சீனாக்காரம், வெங்காரம், இவையாவும் வகைக்கு நேர்வாளக் கொட்டை 50 அலரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துத் தினம் ஒருகாசிடை இருகாசிடை கொள்ள சகல குன்மமும், அட்ட பீலிகையும், ஆமசூலை அந்தரவாயு இவை தீரும்.

## மூலபலம்

மரட்சிக் கிழங்கு, புளிநடலைக் கிழங்கு, கொடிவேலி வேர்ப்பட்டை, காட்டுக் கருணைக் கிழங்கு, பிரண்டைக் கிழங்கு, சமனுலத்திச் சூரணம் பண்ணிக் காலையில் வெருகடி தேனிற் கொள்ளக் குன்மம், ஈளை மூலம் பவுந்திரமுந் தீரும்.

## யோக ராச குக்குலு

திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, விளங்கம், கோதும்பைப் பாடவரை வேர், அதிவிடையம், காயம், கடுகு, தண்டுபரங்கி, சீரகம், வசம்பு, அரிசித் திப்பிலி, ஓமம், வாளவேர், கடுகுரோகணி, திரிபலை சமன் சூரணம் பண்ணி, நிரை சுத்தி பண்ணின வெள்ளைக் குங்கிலியச் சூரணம் கூட்டிச் சாரித்து வைத்துக் கொண்டு பசு நெய்யிலோ, வெள்ளாட்டு நெய்யிலோ கூட்டி நன்றாய் மத்திச்சுக் கொட்டைப் பாக்களவு தேனில் குழப்பிக் கொள்ள 84 வகை குன்மமும், கிராணி சகலமும், பிரமியம் 20-ம், அரோசியம், மூலம், சுரம், சயம், காசசுவாசம், இவைக் குணமாம். பத்தியம் : துவரைப் பருப்பு, நீர்ப்பனை நெய், மோர், வெள்ளாட்டுப்பால், மோர் பசும்பால், மதுரமான கறி கூட்டவும்.

## குக்குலு தைலம்

வேப்பம் பட்டை, வேம்பாடம் பட்டை, சீந்தில்தண்டு, ஆடாதோடை, நொச்சி, சடைச்சி, சிறுவழுதலை, கண்டங்கத்திரி, நிலவேம்பு, அரிசி, செருப்படி, குத்துக்காரசம்மட்டி, நீர்முள்ளி, மேற்படி வகை பலம் 10 தரித்திடித்து 8 மரக்கால் நீரிலிட்டு குறுணியாய் வத்தக் காய்ச்சி வடித்ததிற் பசுநெய்விட்டு, குக்குலு பலம் 10, வேப்பம் பட்டைச் சாற்றிலூறப் போட்டு உலர்த்திப் பின்பு, பசும்பாலில் வேகவைத்துப் பாலிலரைத்துக் கசாயம் விட்டரைக்கவுமாம்.

கருஞ்சீரகம், வசம்பு, மதுரம், திப்பிலி, திப்பிலி மூலம், அத்தி திப்பிலி, சிறுதேக்கு, இந்துப்பு, காசிலவணம், இடியுப்பு, யவட்காரம், துவர் சிகை, ஓமம், கடுகு, ரோசினை, கடகசிங்கி, திரிபலை, செண்பகப்பூ வகைக்கு பலம்4 அதைத்துக் கலந்துக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ள மூலவியாதி, குடல் வாதம், பவுந்திரம், கிரந்தி, பலவுந் தீரும்.

**புட பத்திராதி சூரணம்:**

புட பத்திரி வேர், ஒருபிடி, சங்கம் வேர்ப்பட்டை ஒருபிடி புங்கம் வேர்ப்பட்டை, சித்திரமூல வேர்ப்பட்டை, தலை சுருளி வேர், சிவனார் வேம்பு, நிலவாகை, வெள்ளறுகு வகைக்கு ஒருபிடி இரசம் 1/2 பலம், சுரைக்காய், கந்தகம் வராகனெடை 2, பால்துத்தம் வராகனெடை 2, பொன்னரி தாரம் வராகனெடை 2, நேர்வாளக் கொட்டை 10, பரங்கிப்பட்டை பலம் 1, எட்டிக்கொட்டை 5, சேங்கொட்டை 3, கடுக்காய் 10, இவையெல்லாம் சுத்தி செய்துகொண்டு வெருகடிப் பிரமாணம் இளவெந்நீரில் கொள்ள மூலம், கருங்குட்டம், செங்குட்டம், வெண்குட்டம், தண்டுப்பிளவை, அரையாப்பு, கிரந்தி, சூலைக்கடுப்புண், இதுமுதலான பலவியாதியும் தீரும்.

**பத்தியம் :** முருங்கையிலை, கோழி, மாங்கிசம், துவரைப் பருப்புச் சாறு கூட்டவும். 15 நாளைக்கப் புளிப்பு, உப்பு, கைப்புக் கூட்டவும். ஒரு மண்டலம் கொள்ளவும்.

## தக்கோலச் சூரணம்

தக்கோலம், கோட்டம், அமுக்கரா வேர், நிலக்குமிழ், சீந்தில், நெருஞ்சி, கரும்பு நீர், முள்ளிவிதை, வாழைக் கிழங்கு, நீர்வள்ளி, ஓமம், பெரிய ஓமம், உளுந்து, பேராமுட்டி வேர், எள்ளு, கரிப்பான், தகரைவிதை, மல்லி, மதுரம், கத்தூரி மஞ்சள், நத்தைச்சூரி விதை, சித்திரமூலம், சாதிக்காய், கருஞ்சீரகம், நற்சீரகம், சணல்விதை, ஏலம், தொடைவேர், இலவங்கம், கராம்பூ, நாகேசுரம், இலவங்கப் பத்திரி, சாரடைவேர், கடுகுரோகணி, ஆனைத்திப்பிலி, முந்திரிகைப் பழம், கடலை, இலவம்பிசின், பூனைக்காலி விதை, சமன் கொடி செய்து, இன்னிரை கஞ்சாப் பொடி இவ்விரண்டிற்கும் சமன் கரிப்பான் பொடி கூட்டி, நேரத்துக்கு மூன்று வராகனெடை, தேன்,

---

*அத்தித்திப்பிலி – யானைத்திப்பிலி, துவர்சிகை – கடுக்காய்பிஞ்சு*

நெய்யிற் கொள்ள காசச் சுவாசம், அழகுகாமாலை, அதிசாரம், மந்தாக்கினி, செரியாமற் கழிகின்றக் கிராணி, 21 வகை பிரமியமும் தீரும். உசிதம் இளைத்த தேகம் பருக்கும்.

## நீர்ப்பஞ்சாங்கச் சூரணம்

வேம்பின் காய், பூ, கொழுந்து, இலை, வேர்ப்பட்டை இவ்வைந்துஞ் சமன் உலர்த்திப் பொடி 3 பங்கு சித்திர மூலம், வாய்விளங்கம், கொன்றைப்பட்டை, சிவதை சர்க்கரை, சேங்கொட்டை, கடுக்காய், சுக்கு, நெல்லி, நெரிஞ்சி வேர், இவை சமன் பொடி கூடக்கலந்து வைத்துக் கொண்டு நறு நெய்யிற் கொள்ள திட்டி ரோகம், சயம், பஞ்ச குன்மம், மூலம் மூன்று வகை, சுவாசகாசம், எண் வகைக் குன்மம், வாயு, மூத்திர கிரிச்சரம் முதலியன தீரும்.

## பயித்தியம், பிரமியத்துக்கு நெய்

நெய், திரிகடுகு, இலவங்கப் பிசின், கல்நார், கல்மதம், அரத்தை, பூலாலிருக்கம், கூகைநீர், நிலப்பனைக்கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு வகை வகைக்கு 1 பலம் நெய், பால், கலந்து காய்ச்சி வடித்து ஒரு கரண்டி நெய்யில் ஒருகாசிடை திப்பிலிப் பொடி போட்டுக் கொள்ளப் பயித்தியம் மருத்தீடு பிரமியந் தீரும்.

**எண்ணெய்:**

விளக்கெண்ணெய், பேய்க்கும்மட்டிக் காய்ச் சாறு, நீருள்ளிச் சாறு, இந்துப்பு .. கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து 6 காசிடை கொடுக்க வயிறு பேதிக்கும்.

பின் மிளகுச் சாறுஞ் சோறும் பத்தியமிதற்கு. ஊதுவாதம், ஊதுகரப்பான், மகோதரம் வீக்கமுந் தீரும்.

**பிராய் விதைத் தைலம்:**

பிராய் விதைப் பாலில் அரைத்துக் கலத்திலப்பி, வெயிலில் வைக்கத் தைலம் வரும். இந்த தைலம் கொப்புளிட சத்தி, தம்பனையாம். ஆயுதத்திற்றடவ வெற்றியாம். கண்ணிலிடக் குருடு தீரும். கோரோசனையுடன் கூட்டிக் காதில் வைக்க இராச வசியம்.

பூமித்துயிலம் இறக்கி, சரி வேடெண்ணைக் கலந்து சாறு உள்ளுநாங் கொண்டு மேலுமிட எல்லாக் குட்டமுந் தீரும்.

## குரட்டைவிதைத் தைலம்

குரட்டை விதை உலர்த்திப் பொடி செய்து, சிறு பாகலிலைச் சாறு வார்த்தரைத்து கலத்தில் அப்பி, வெயிலில் வைக்கத் தைலம் வரும். இத்தைலம் சாடியளவு கொள்ளப் பெருவயிறு போம்.

அவ்வளவு வெற்றிலைப் புறற்றிற் தடவிச் சுருட்டித் தின்ன நீரிழிவு மூத்திரப்பாலிந் தீரும். இதற்கிருபத்தோரு நாட் கொள்ளவும். அவ்வளவு பனைவட்டிற் கொள்ள மூலரோகம் அற்று விழும்.

## கற்றாழை நாற்றம் இதற்கு மருந்து

காயம் எலுமிச்சிலையுங்
காய்ந்த விளாவினிலையும்
நாணல் புளியிலையும்
நன்றாக மூன்றுமே
பொற்றார் முகிழ் முலையாய்
பூசித்திமிர்ந்து விடிற்
கற்றாழை நாற்றம் போங்காண்.

நாறிய கரந்தை வேரும்
நன்னாறி வேரும்
கூறிய முத்தக் காசுங்
குலவு கத்தூரி மஞ்சள்
தேறுடனரைத்துக் கூட்டி
தேகத்திற் றிமிர் விராகிற்
காறு கற்றாழை நாற்றங்
கடிது போங் கட்டம் விட்டு

உரை: பெருங்காயம், எலுமிச்சை, உலர்ந்த விளா இலை, நாணல், புளிய இலை, இப்பொடியைப் பூச கற்றாழை நாற்றம் தீரும்.

---

*பொற்தார் – இல்பொருள் உவமை, திமிர்தல் – பூசுதல், இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. முன்புமே என்றாதல் வேண்டும். முன்பு – பெருமை.*

நாறு கரந்தை வேர், நான்னாரி வேர், முத்தக்காசு, கத்தூரி மஞ்சள், பொடி செய்து பூசக் கற்றாழை நாற்றம் விரைவாக விலகும்.

### உண் மருந்து

முத்தக்காசு குளவிந்தம்
முதிர்ந்த நெல்லி கடுத்தான்றி
செந்து சொத்திப் பொடிசெய்து
தேனிற் குழைத்துத் தின்பீரேல்
மத்தக் களிற்றின் பலமுண்டாம்
வடிவு பொன்னின் நிறமாகும்
கத்து நாறு மேனி யெல்லாம்
கழுநீர் நாறுங் கண்டீரே.

உரை: முத்தக்காசு, மஞ்சள், நெல்லி, கடுக்காய், தான்றிக்காய், சம அளவுபொடி செய்து யிதேனில் உண்ண நாற்றம் தீரும்.

### யோனி நாற்றத்துக்கு

ஆடாதோடையிலை யிரண்டு பிடி இருநாழி நீரிலிட்டு நாழியாய்க் காய்ச்சி யோனி பொறுக்கவிட்டுக் கழுவவும். இப்படி மூன்று நாள் செய்ய நாற்றம் தீரும்.

### சிறீபுருடாள் கற்றாழை

கொட்டைப்பாக்குச் சீவி நல்ல வெள் வெற்றிலையிற் கூரிய சுண்ணாம்பு விட்டுத் தின்று உள்ளுகளிலே உமிழ்ந்து கையடியிலிட்டு மத்திக்கவும். இப்படி மூன்று நாள் அடிக்கடி மூன்று நாழிகை மட்டும் மத்திக்கவும். கற்றாழை நாற்றம் தீரும்.

### படர்தாரைக்கு

கொன்றைத் துளிர், புளியந்துளிர்
குளவிந்த மோடிந்து
மொன்றைக் கொள், கடுக்கா
யொடு நிலவாகையினிவேரும்

---

செந்து – சடாமாஞ்சில், குளவிந்தம் – மஞ்சள்.

நன்றிப்படிச் சொன்னோம்

நாளுங்கள்ளிச் சாற்றில்

இன்றைக்கிடு நாளைக்கிடு

படர்தாமரை யேகும்.

உரை : கொன்றை, புளி இவைகளின் துளிர், மஞ்சள், மோடி, இந்துப்பு 1 பங்கு, கடுக்காய், நிலவாகைவேர் பொடித்து கள்ளுச் சாற்றில் பூசவும்.

### இன்னம்

நிலவாகையிலை, தாமரையிலை, கருங்காலி வேர், மிளகு, பருத்திப்பூ இரசம், கந்தகம், அழிசம்விதை, இவற்றைத் தகரைச் சாற்றாற் கரிப்பான் சாற்றிலரைத்துப் பூசப் படர் தாமரை தீரும். பலசொறியும் தீரும்.

### இன்னம்

விசமூங்கில் கிழங்கு எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்துப் பூச படர் தாமரை தீரும்.

### இன்னம்

முள்ளுக் கள்ளி வாட்டிக் கிட்டி கட்டி நெடுகப் பிழிந்து சாறும் பிரண்டை வாட்டிப் பிழிந்து சாறும் விட்டு நிலவாகை வேரையரைத்து நெல்லிக்காய் அளவு புன்னைச் சரீரத்தில் பூசவும். புளிபுகையிலை தவிர்க்கவும்.

இப்படி நாலாறு நாள் பூசப் படர் தாமரை தீரும்.

### இன்னம்

மனோசிலை 3 பலம், மஞ்சள் 2 பலம், சுண்ணாம்பு 1 பலம், தண்ணீரிலரைத்துப் பூசவும்.

### இன்னம்

அழிஞ்சைவேர், மருங்காரைவேர், மருங்காரைவிதை, எலுமிச்சம்பழச்சம்பழச்சாறு,விட்டரைத்துச் சிறு கொட்டைப் பாக்களவு மூன்றுண்டை உள்ளுங் கொண்டு, படர்தாமரையிலும் பூசத் தீரும்.

### இன்னம்

எருக்கம் வேர்ப்பட்டை, அதன் கொம்பு, மாம்பட்டை, தகரை விதை, நாழிப்பாலிற் போட்டுக் காய்ச்சி ஆற்றி உரைக்குற்றி மறுநாள், காலையில் அந்தத் தயிரைக் குடித்து அதற்குள் மருந்தை மஞ்சள் கூட்டியரைத்துப் படர் தாமரையைச் சொறிந்து அதில் பூசவும்.

கருவங்குக்கு: நிலவாகை வேர், பிரண்டை வாட்டிப் பிழிந்து சாற்றை அரைத்திடவும். புழுங்கலரிசியும், காரெள்ளுஞ் சமனாக வெள்ளாட்டுப் பால் வார்த்தரைத்துப் பூசத் தீரும்.

யானைக் கொம்பைத் தேனில் உரைத்துப் பூசத் தீரும்.

**கருவங்குக்கு:** கொன்றைக் கொழுந்து எருக்கம் வேர், புண்ணாக்குப் பேய்ப்பீர்க்கிலை, திருகுகள்ளிச் சாறு, கந்தகம், மதுரம், மனோசிலை, இவையரைத் தெண்ணையிற் காய்ச்சியிடக் கருவங்கு படர்தாமரை தேமல், சிரங்கு தீரும்.

கொடிவேலி வேர்த்தோல் அரைத்து, எண்ணெயிற் கலந்து வெயிலில் வைத்திட வங்கு தேமல் தீரும்.

## நரம்புச் சிலந்திக்கு

சூல் ஈன கழுதை வயிற்றின் மயிர், சுக்கிர வாரம் வாங்கி வைத்து நாலு நரம்புச் சிலந்தி வந்தால் நைய நறுக்கிப் பொடி செய்து

வெய்யின் வழியாய் நெல்லிடைதான்
விரும்பிப் பாக்கிலுட னருந்திற்
காலும் வீங்கி வலியெடுத்ததுக்
கடுகி வாடும் நாள்மூன்றில்.

## படர்தாமரை உடம்பெலாம் இருந்தால்

கலைமான் கொம்பைச் சுட்டு, வேப்பம் பிசினுங் கூட்டிப் புளித்த வார்த்தரைத்துப் பூசி உதிர்க்க மூன்று நாளையிற் தீரும். செம்பருத்திப்பூ, தேசிப்பழச்சாறு விட்டரைத்து உண்டை செய்து தடவ மாறும்.

தாமரை உடம்பெலா மிகுந்தால் நிலவாகைவேரும் பிரண்டையு முலர்த்திப் பொடி செய்து வெருகடிப்பிரமாணம் பசுநெய்யில் உட்கொண்டு மேலும் பூசவும்.

### இன்னம்

தகரைவிதை, மருட்கிழங்கு, எருக்கம் வேர், மஞ்சளுள்ளி, மறட சாற்றரைத்திடவும்.

உள்ளுக்குக் காயம் பொன்மெழுகு, எருக்கம் வேர், தகரையிலை, வேருமரைத்து, மோரில் ஊறவைத்துக் கொடுக்கவும்.

## இராச பிளவை

ஆயுறு வேத முன்னோர்
அடைவுடன் பேசி வைத்த
நோயுறு பிளவை தன்னை
நோயதினிற்றிறக்கி வேண்டி
வாய்மையால் மருந்து காரமற்
றுள்ள பரிகாரங்கள்
தூய்மையாய் தெளிந்து கண்டு
சுகம்பட மருந்து செய்வாம்.
பெரியபிளவை முள்ளெலும்பிற்
பெருக்கப்பனைக்கும் நடுமுதுகில்
எ்ரிவை அதுவு மாறாது
தீராயுழலை யற எடுக்கின்
அரிய பொன்னாவரை யல்லி
யரைத்துப் புன்னைக் காயளவு
யுரிய பழமோர் தனிற் கொள்ள
வுழலை தவன மொடுங்கிடுமே.

உரை: பிளவை தீர, பொன்னாவரை அல்லியை அரைத்து, பழைய மோரில் குடிக்கவும். இதை ஆயுர்வேத மருத்துவர்கள் சொன்னார்கள்.

முதுகிடை மையத்தான்
முள்ளந் தண்டதிலே பற்றிப்
பதிவுறும் மாங்காய் போலப்
பாரித்துப் பனைத்துக் கண்ணாம்
மதியுறு மதிந்தினாலும்
மற்றுள கருவியாலும்
விதி தரு வழியைத் தப்பி
மீளவே மருந்து செய்வாம்.

பிளவை முதுகு, முள்ளந்தண்டு, மாங்காய் போலத் தோன்றும்.

வெப்புடன் குத்துமூச்சு
விடாத உள்ளுடிலை வாதை
முப்புர தகனம் போன்று
முரமையில் வியாதி தானும்
இப்படி குணங்களெல்லாம்
இருவகைப் பிளவைக்காமே.

வெப்பம், வலி, மூச்சுத் திணரல் ஆகிய இயல்புகள் இருவகைப் பிளவையில் இருக்கும்.

மார்பினி வீரறன்னில்
மறித்தெழு பிளவை தன்னில்
நேர்படத் தண்டுக் கோல்போ
நிற்பதே வாயு நெஞ்சிற்
கார் செறி குழலாய் கேண்மோ
கருவியாற் கீறிக் காரம்
பேர் பெறக்கட்டப் பக்கப்
பிளவை யும்கடிது போமே.

உரை: கருவியால் அறுத்து காரக மருந்தை கட்டப் பக்கப் பிளவைத் தீரும். மகடுஉ முன்னிலை.

முதுவிற் புறத்திலுறை போல்
மள்ளந் தண்டு தனைத்தப்பி
யிதுவே வருகில் மரணமில்லை
என்கிற் பலகன்னதிற் படுமென்
அதின் மேற் குளிருஞ் சுரதவனம்
அறலின் கழிச்சலுள் ளுழலை
யிதுதான் பக்கப் பிளவையிது
இனிதாங் காரங் கீறியிடே.

உரை: வெளி முதுகில் கட்டி தோன்றும். இதனால் இறப்பு வராது. கன்னம் பிளவையில் குளிர் சுரம், கழிச்சல், உழலை என்பன வரும். முள்ளந்தண்டில் பிளவை தோன்றாவிட்டால் மரணம் வராது.

காரந் துரிசு பாசாணங்
கதியாதளவிற் குறையாமல்
அச்சோ பொடித்து வெண்ணெயுடன்
திரும்பவரைத்துச் செவியதனில்

உரை: பக்கப்பிளவை தீர, அறுத்து, காரக மருந்தைக் கட்ட வேண்டும். துரிசை பொடி செய்து வெண்ணெயில் அரைத்து காதில் பூச வேண்டும்,

ஆறத்தடவி யுடைசீலை
ஆங்குட் தள்ளிப்புண்ணிலிட
பாரப்பிளவைக் கரைத்துருகிப்
பரிந்து காணும் பார்த்திடுமே.
பறிந்திடும் புண்ணிற் காரம்
பகைத்து நில்லாமல் மாறிப்
பரிந்திடத் தயிருஞ்சோறும்
பிசைந்து வை மூன்றாம் நாளில்
அறிந்து வைத்தம்மக் கட்டி
அவிழ்த்து வேம்பார்த்துப் பின்னர்
சிறந்திடும் எண்ணெய் செய்யத்
தெளிந்துநீ மருந்து செய்யே.

உரை: துணியில் தடவி புண்ணில் இடவும். பிளவை நீங்கும். 3 ஆம் நாள் புண்ணில் தயிர்சோறுடன் கார மருந்தைக் கலந்து கட்டவும். கட்டை அவிழ்த்து புண் பற்றி அறியவும். எண்ணெய் செய்முறைக் கூறுகின்றேன்.

## கட்டு மருந்து எண்ணெய்

செப்பின வெண்ணெய் வைக்கச்
சிறந்த வரைவேர்நாழி
யொப்புடன் றுடரி பூலா வேர்
றொன்று அதனிற் பாதி
இப்பெருஞ் சரக்கு நிற்க
விடை யிரண்டிருபதாதிக்

வேம்பாதல் என்றாதல் வேண்டும். விடை – மிகுதி, பசலை – குழந்தை.

கைப்பு வேம்பாடல் கூட்டிக்

காச்சி நல்லெண்ணெ வைய்யே. (9)

உரை: அவரை வேர், நாழியளவு துடரி, பூலாவேர் 1/2 நாழி, வேம்பு 22 பங்கு, நல்லெண்ணெயுடன் சேர்க்கவும்.

எண்ணெயுஞ் சீலை தானும்

இடைவிடாப் பசலைக் காகும்

நன்றுமா வரையிலைதான்

நயக்க வெச்சோடு கொண்டு

புண்ணின்மேல் வைத்துக் கட்டப்

பொருந்துமாம் பிளவைப்புண்ணே

என்றுண்ண, மயர் யுரைக்க முன்னோர்

உறுதியாய்க் கண்டதாமே. (10)

உரை: நல்ல மா, மூங்கில், வெற்றிலை, சரியாக இவைகள் சூட்டுடன் புண்ணில் கட்டவும். மருத்துவர்கள் அறிவுடன் சொன்னது.

கண்டதோர் கரிகாய் பரனெய்

கருத்தினி லூற்றதெல்லாம்

கொண்டிடக் குற்றமென்று

கூறினார் முனிவர் முன்னோர்

விண்டிடில் அவரைக்காய்

விளங்கிய முருங்கை யத்தி

பண்டுமுன் பழைய மோரும்

பத்தியந் தயிருமாமே. (11)

உணவு: மிளகு, பழங்கள், மரக்கரிகள், நெய், அவரைக்காய், முருங்கை, அத்தி, பழம் மோர், தயிர்.

உலைதவனம் பரிதாபம்

உன்முனச் சுரங்கனாவே வறட்சி

குழறி வெருவல் குரை நயனம்

கொன்னா மனந்தாதான் மிருதல

---

*வரை – மூங்கில், இலை – வெற்றிலை, நயம்–சரி, அதிகம், வெச்சம்–சூடு, மயர் – அறிவு, பரம்–மேலான, கரி–மிளகு, அனந்தம்–மயக்கம், நாம–பயம், குரை–பெருமை, தவனம்– நீர்வேட்கை, உலை– நடுக்கம், வெருவல் –அஞ்சுதல், கொன் –பயம்.*

மழலைவசனப் பசுங்கிளியே
மாறாவருத்த மிவை கண்டால்
அழலும் இயம வார்த்தை யென்றாம்
அவைதான் மீளவதறியோமே. (12)

உரை: நடுக்கம், நீர்வேட்கை, துன்பம், சுரம், வறட்சி, வாய் உளறுல், அஞ்சுதல், கண பயம், மயக்கம்.

மத்திய மலசலங்கள்
மாறுள விழிகள் நாசி
உத்தம் செவி கனாவும்
உறுதியிப்பரிசு பார்க்க
வித்தனைக் குணமும் மற்றும்
இளகுதலிறக வானால்
வித்தகர் தம்முன் சென்று
மீள்வதும் அரிது தானே! (13)

இது இரட்டிப்பு

நெல்லியுடனிலப் பனையில் கிழங்கு தானும்
நெற் பொறியுமா விதைதிணீண்ட வேரும்
செல்லவகுத்தரைத்தாவின் வெண்ணெய்
சேர்த்துத் திறமாக வீக்கமதின் மேலே பூசச்
சொல்லிய தோர் பிளவை தனிற் காய்ச்சல் குத்துத்
துணை விழி நீர்ப் பாய்ச்சல் வழு கண்ணாய்ப் பொங்கல்
மெல்லியர் தம் முலைப்பாலு மொக்கக்
கூட்ட வீக்கமுடன் அழல்வலியும் விரையப்போமே. (14)

ஆவரைஅல்லி நெல்லி முனி
யதுவு நீர்ப்பூலா வேரும்
கோவின் நல் வெண்ணெய் தனிற்
குழைத்துக் கொள்ளும் வீக்கமதிற்பூச
ஆவி மிகுந்த வன்வீக்கமதிகப் படாதே
யழல் தணியுந்
தாவில் குழைத்துப் பூசுகிலோ
தயிருங் கூட்டிக் கொளலாமே. (15)

வஞ்சிக் கொடியார் முலைப்பாலில்

வராகக் கிழங்கோடா வெண்ணெய்

செஞ்சொற்படியே யரைத் தொன்றிற்

திரும்ப வழித்தங்ககல் வைத்தே

யஞ்சிப்பிளவை முகந்தன்னில்

மாவழித்து வழித்தப்பக்

கெஞ்சிச் சுரமோடழல் வீக்கம்

கெட்டுப்பட்டுப் போமன்றே. (16)

மலை சுமந்த மென் கொடியும் வன்குறுவை மாவும்

மலர் சிறந்த ஆவாவரையின் நாறும்

தொலை நீரே பெருத்து வரினில்

என்றும் பிட்டதனைப் பூனரே

யெனக் கொள்ளும் போது. (17)

## இவை பிளவைக்குப் பரிகாரமாவது

செவிதை ஐம்ப தொக்கத்

தீயவே கருக்கித் தூள்செய்

தாவிதை வேர்த்தன்னை

அரைத் ததிற்சுவற மோர் கட்டி

ஏவி நீ பிளவைப் புண்ணிற்

இயன்ற நெய்பூசித் தூளைத்

தூவிட நீரும் வற்றிச்

சுருதியாய்ப் புலரும் புண்ணே. (18)

புண்ணைச் சுற்றி வேரரைத்தப் பொடியைத் தூவி வெந்நீரால் கழுவி ஆவாரையிலை கட்டவும். செவிதை என்றது ஆவாரை விதை யறியவும்.

## இன்னம்

## பூச்சு மருந்து

ஆனைப்பல்லும் வசம்புள்ளியுஞ் சமனரைத்துப் பூசப் பிளவைப் புண் வற்றும்.

முயல் புழுக்கையும், பிண்ணாக்கும், வெள்ளாட்டுப் புழுக்கையும், செம்மறியாட்டுப் புழுக்கையும், அயிரை மீன் சிரங்கையும், கோசலம் விட்டரைத்துப் புண்ணில்ப் பூசி வெற்றிலையைப் போட்டுக் கட்டவும்.

## சீழ்கட்ட மருந்து

பெருங் கொண்ட கிழங்கை உமிக் காந்தலிலே புதைத்து வைத்து வெந்தபின் எடுத்து மடல் மடலாக வாங்கி, அந்த வீக்கத்திலே வைத்துக் கட்டப் புண் மேல் கட்டி மூன்றுநாள் கழித்து மூன்றாம் நாள் அவிழ்க்கவும். பின்பு கார்த்திகைக் கிழங்கை நன்றாய் தட்டி வீக்கத்தின் மேலே வைத்துக் கட்ட உடையும். உடைந்த பின்பு புண் வாய் நிரம்ப வைத்துக் கட்டவும். ஆணி விழும். அதன் பின் கட்டப் புகை சாளம் பறியும். அதன் முன் புண் சிவப்பாம்.

அதன்பின் கொடுவேலி வேர், நல்லெண்ணெயில் வேக வைத்து அந்த எண்ணெயிட்டால் புண் உடையும். கசாளத்தைப் பறித்துப் போமே. அதன்பின்பு மஞ்சட்டிப் பொடி மிளகுப் பொடியும் நல்லெண்ணெயிற் காய்ச்சி கொதியெழும்பின் வெள்ளுள்ளி அரைத்துக் கூடப்போட்டுக் கோழி எலும்பினால் இறக்கிப் புண்ணிலே சீலை போட்டு எண்ணெயும் புண் மேலிடவும்.

## இன்னம்

## வேறு

## பிளவைக்குச் சீலைகட்ட மருந்து

அழிஞ்சில் வேரை அரைத்துப் புண்ணுக்குப் பூசப் பழுத்துடையும். அதன் பின் எருக்கம்பூ நறுக்கிப் புண் நிரம்பக் கட்டவும்.

அதன்பின் புண்மேலே நுணாயிலை நாலு மாறும், வைத்துக் கட்டவும். இதற்கு உச்ணம் பொறுக்க வொண்ணாது. இதற்கு இரண்டு பேர் காத்திருக்க வேணும். மறுநாள் அவிழ்த்துப் போட்டு அப்புண்ணுக்குக் காரம்போட மருந்து குன்றிப் பருப்பும் இலுப்பைப் புண்ணாக்கும் எருக்கம் கொழுந்தும் சமன் கொண்டரைத்து புண்ணுக்குள் வைத்து நுணாவிலை போடக் இதற் காணியுள்ளது விழுந்து போம். அதன்பின் சதுர்க் கள்ளிச்

சோற்றை விளக்கெண்ணெயிற் தோய்த்து வட்டத்துத்தி வேர், துவைத்துப் புளியும் நுணாவிலையும் போட்டுக் கட்டவும்.

இப்படி மூன்று நாள் கட்டினால் புழுவும் செத்துப் போம். புண்ணும் மாறும். அதற்கடையாளம் முலைப்பால் புண்ணிலிட்டால் புண் குளிர்ந்திருக்கும். சலங் குமிழ் பறியும். கள்ளப் புண்பட்டால் வெச்சென்றிருக்கும். சலம் குமிழியிற் படும். அதற்கும் மீண்டும் அந்த மருந்து போட்டுக் கட்டவும். புண்ணானதுக்கு அடையாளம் புண் வீங்கும். கசாளம் போம். அதன்பின் புண் சிவந்திருக்கும்.

வெள்ளா சிலங் கொம்பை மேற்றோல் சீவி நல்லெண்ணெயில் பொறித்துப் புண்ணின் மேல் நாலைந்து நாள் கட்டவும்.

அதன்பின் மிளகு, மஞ்சள், வெள்ளுள்ளி, சரியொக்க அரைத்துக் கொண்டு நல்லெண்ணெயிற் கொதிக்க வைத்துப் புண்ணிற் பூசி அத்திக் கொழுந் தெண்ணெயிற் தோய்த்துக் கட்டவும்.

இதற்குக் கள்ளப் புண் பட்டால் கசாளம் பறியாமலிருந்தால் தலை குரோட்டைக் கிழங்கரைத்துக் கத்தூரி மஞ்சள், மிளகு, நன்மஞ்சள், செண்பகப்பூ சரி கூட்டி நெய்யிற் கொதித்துச் சீலையிற் தோய்த்துப் புண்ணிற் கட்டக் கசாளம் வற்றிப் புண்ணும் மாறிப் போம்.

இதுவேறு

## பிளவைக்கு மருந்து

பேய்ச்சுரைக்காயை அறுத்து உலர்த்தி ஓட்டிலிட்டுக் கருக்கிப் பொடிசெய்து, கம்பளி சுட்டுப்பொடி செய்து இருகூறு முன்பொடி மூன்று கூறுங் கருப்புப் கட்டி ஒருகூறுங் கூட்டிப் புண்ணிற் நிரம்பப் போட்டுக் கட்டி ஒரு சாமம் பார்க்கப் புழு மேயும். மறுநாள் அவிழ்த்துப் பார்க்கப் புழு நெல்லால் போலே யிருக்கும். இப்படி மூன்று நாள்கட்டவும்.

**புண்ணாணி விழும் கட்டு:**

அதன்பின் பேய்ச் சுரைப் பொடியைப் போட்டுக் கறுக்காயறுத்து வைத்துக் கட்டப் புண்ணாறும் அளவுங் கட்டவும். புண்ணாகி விழும்.

கொடிவேலி வேரைக் கோழி முட்டை வெண்ணெய் வார்த்தரைத்துப் புண்ணில் விழுதாக வைக்க ஆணி விழும். அதன் பின்னால் அஞ்சறுகு

அவித்துக் கட்டவும். குரோட்டைக் கிழங்கரைத்துப் பூசவும். உடையியாங் கட்டச் சீழ்கொண்டால், நெய் கொட்டன் வேரரைத்துப்பூச உடையும். அதன்பின் வெட்பாலை இலைக் கட்டவும்.

**காரம்:** புகையுறையுஞ் சுண்ணாம்பும், மஞ்சளும் வேப்பங் கொழுந்தும், அரைத்துக் கள்ளிப் பாலில் துவைத்துக் கட்டவும். புண் தீரக் கருவேலிலை யரைத்துப் புண்தீரக் கருவேலியை அரைத்துப் புண்ணில் வைக்கவும். பிராய் மரப்பால் புண் குழுந்திடவும். புண்ணாறு மளவும் இடவும். முட்குருந்திலை கட்டவும்.

**உள்மருந்து:** ஆவாரை, அல்லி அரிசி அரைத்து புன்னைக்காய் அளவு காடியிலாதல், பழமோரில் குடிக்கவும்.

**வீக்கத்துக்கு:** புங்கிலைப்புளியிலை, ஆவாரை கொழுந்து, ஊமத்திலை சமனா இடித்துத் தரசாறாய் பிழிந்து பூசவும். பிளவை புறப்பட்ட உடனே முருங்கிலைச் சாறும் சிறுநீரும் கலந்து பூச மாறும். புளியிலை சிறுநீர் வார்த்து வறுத்துப் பொட்டணங் கட்டி ஒற்றிப் பின் கட்டவும்.

காண கரைந்தாணி விழச் சலங் கழிய இளக்கம். காரையிலை, முசுட்டையிலை, கோவையிலை மூன்றும் சமனறிநது கற்குழையைக் கண்டம் கண்டமாய் நறுக்கிப் பிளந்துச் சட்டிக்குள் வைத்து, அதன்மேல் அரிந்து தழையை வைத்துத் தழைமேலுங் கற்றாழை வைத்துச் சட்டி கொண்டு மூடித் திரங்க அவித்து இறக்கிக் கொண்டுக் கற்றாழையை எடுத்துப் போட்டுத் தழையைப் பிசைந்து வைத்துக் கட்ட இப்படி நாலாறு நாட் கட்டக் கரண் கரையும் சலங்கழியும், ஆணி விழும். வீக்கம் விதனமடங்கும்.

## புண்ணுக் கெண்ணெய்

வேம்பாடம் பட்டை, வெருமரச்சிராய், பூலாந்தோல், நீருள்ளி, கருஞ்சீரகம், இந்த ஐந்து மருந்தும் எண்ணெயில் போட்டு, இரண்டு வெற்றிலையும் எலுமிச்சங்காயளவு முருங்கை இலையும் கசக்கிச் சாறும் விட்டுப் பதத்திலிறக்கிச் சீலையிற் தோய்த்துப் புண்ணிற் போடப் புண் சொல்லாமல் ஆறும்.

## கட்டு மருந்து

முன்னடைத் தழையுடனே ஈரவெங்காயம் அரிந்திட்டு விளக்கெண்ணெய் தெறித்து வறுத்துக் கட்ட முன்சொன்ன புண் முதல் சர்வ புண்ணும் தீரும்.

## உள்ளங் கால் பிளவை குணம்

உள்ளங்காலில் உறும்பிளவைக் குணம்
வெள்ளங்காணும் விரிந்திடு மேற்றொலி
பள்ளங்காணும் பலகண் வெடித்திடும்
கள்ளங்காணுமவ குணம் காட்டுமே.

உள்ளங்கால் பிளவை முதலுச்சிப் பிளவை வரைக்கு முண்டாகிய முப்பத்துரெண்டு வகைப் பிளவைக் குணமும் அறியவும்.

## முதுகுச் சிலந்திக்குத் தழை மருந்து

குழிவிட்டான் துளசிநாய்த் துளசி
குருவிஞ்சி மயிர் மாணிக்கம்

மின்னிச் செடி சமூலமும், வட்டக் கிலுகிலுப்பை, வேலியணைஞ்சான், நாயுருவி, கீழ்காய்நெல்லி, சமூலமும், கிரந்தி நாயகனிலை, அக்கினி தூண்டி சமூலமும், பிளவைக் கொல்லி சமூலமும், கிரந்தி நாயகனிலை, அக்கினி தூண்டி சமூலமும், பிளவைக் கொல்லி சமூலமும், வேப்பங்கொழுந்து, கவிதும்பைக் கொழுந்தும் படர் செத்தியிலை, கச்சந் திராய், மிளகு தக்காளியிலை, வெருகடியிலை, கார்கோளியிலை, சீராகொளியிலை, விட்ணு கிரந்தி, ஓரிதட்டாமரை, கொட்டகச் சாறிலை, கூத்தன் குதம்மை, ஓடுவெடக்கி, வெள்ளுள்ளி, திப்பிலி, மிளகு, தவசிமுருங்கை, வேளிலை, குப்பைமேனி, எருக்கம்பூ மொட்டு, முன்சொன்னதும் தழைவகை புண்ணிற் புழு விருந்தால் நேர்வாளப் பருப்பை மண்வெட்டிக் காயம்போட்டதிற்கருக்கிப் பொடித்துப் புண் வாயிற் போடப் புழுச்சாம் மறுநாள் அதைக் கண்டால் தயிற் சோறு கட்டவும்.

## நரம்பு தின்னிக்கு

பீங்கானோடு பொடித்து ஆமணக் கெண்ணெயிற் காய்ச்சியிடவும். சோகி முப்பது புளியமாப் பொருக்குச் சிராய் கீழ்மேல் வைத்துச் சுட்டெலுமிச்சம்

பழச்சாறு விட்டு நாலு நாழிகை அரைக்கக் களிம்பாம். அதைச் சீலையிலூட்டிப் புண்ணிற் போடத் தகடு தகடா யெழும்பிப் புண்ணாறும். இப்படி நாலாறுநாள் போடவும். கைகாலில் கடிவிடவும். விடகரப்பன், சர்வப்புண்ணுக்குமாம்.

கத்திரி கடனுரை சந்துத்தும் துரிசு சமன் சேத்தரைத்து மெல்லிய சீலையில் விளக்கெண்ணெயிற் கூட்டித்திரியில் வைக்கவும். புழுவிழும். புண்ணளவில் செப்புத் தகடு ஈசலிறகு போற்றட்டி அதில் நூலச்சு போற் துவாரமிட்டுப் புண்ணில் மேல் வாழைப்பழம், நல்லவெல்லம், தயிர்க்கட்டியும் பிசைந்து மெதுவாய்ப் பூசி அதன் மேல் சமுத்திரா சோகியிலையாதல், ஊமத்திலையாதல், வெற்றிலையாதல் போட்டுக் கட்டி மறுநாட் காலமேப் பார்க்கப் புழு இறக்கும்.

எடுத்துப் போட்டு மேனியிலை துளசியிலையும், பிட்டவித்து மூன்று நாள் கட்டவும். புழு விழச் செய்து வெருதிரயரைத்து முரி நவிற்சியிற்றடவிக் கட்டப்புழு விழும்.

## ஆணிவிழ

தராய்வேர், மஞ்சள் அரைத்து ஆணியில் வைக்கக் கரையும். கவிழ் தும்பையை வறுத்துப் பொடியாக்கித் தூவவும்.

## முலைப்புண்ணுக்கு

மிளகு, சிற்றலைப் பாலை விதையும் அரைத்துப் பூசப் புண்ணாறும்.

முலை வீக்கத்துக்கு வீழியிலையை அரைத்துப் பூசவும்.

## முலை சுரக்க

தலைப்பிள்ளைப் பெற்றவளுக்கு முலை சுரக்க கற்கதலிக் கிழங்கு சாறு உரியில் 3 வராகன் எடை தேன் விட்டு அதிகாலையில் கொடுக்க முலை சுரக்கும். இலிங்கத்தில் இரத்தம் விழுகிறதும் தீரும்.

## மூலை பருக்க

அமுக்குரா வேரும், இலையும் பொடி செய்த வெந்நீரில் கொடுக்க பருக்கும்.

முள்ளிலவம் பட்டையுடன்,
முலைப்பால் வெண்ணெ சாரித்து
கொள்ளுந் திரட்சி யது தன்னிற்
குழைத்துப் பூச வல்லீரேல்
மெள்ளக் குவிக்கம் வீக்கத்தை
விரையத் துரத்திப் பின் பற்றித்
தள்ளிச் சீயைப் புறப்படுத்தித்
தறுகாதனலைக் கொளுத்திடுமே.

எண்ணெய்:

புங்கம் பால் – 3/8 பங்கு
கள்ளிப்பால் – 4 வராகன்
எருக்கம்பால் – 4 வராகனெடை

வேலிப்பருத்தியிலை, பருத்தியிலை, ஒவ்வொன்று எலுமிச்சங்காய் அளவு, உரிய நல்லெண்ணெயில் வேகவைத்துப் பதத்தில் வடித்துக் கொண்டு பூச வெட்டுக் குத்து அரையாப்பு ஓடுமாம்.

பெரு விப்புருதி இதற்கெல்லாம் வீட்டுறி யிடவும்.

## இன்னம்

சர்வ புண்ணுக்கு, உதியம் பட்டை, செங்கதாரப்பட்டை, நாவல்பட்டை, அரசம் பட்டை, வேம்பாடம் பட்டை, சதகுப்பை, கருஞ் சீரகம், கத்தூரிமஞ்சள், வாய்விளங்கம், வசம்பு ஈரவெங்காயம், காசுக்கட்டி, கடுக்காய், களிப்பாக்கு, இதில் காட்டு மருந்தரைத்துக் தேசிக்காயளவுக் கடை மருந்து முள்ளிக் காயளவு கூட்டி எண்ணெயிற் கலந்து காய்ச்சியிட சர்வ புண்ணுமாறும் கை கண்டது.

## ஆறாத புண்ணுக்கு எண்ணெய்

நல்லெண்ணெய் 1/2 இதில் காஞ்சிரங் காயரைத்துச் சிறுதேசிக் காயளவு கொடிவேலி, வேரரைத்து அனைத்தையும் போட்டுக் காய்ச்சிச் சீலையிலூட்டிப் புண்ணிற் போட ஆறாத புண்ணும் ஆறும்.

## களிம்பு

துத்தம் வராகனெடை 1, துருசு வராகனெடை 1, தாளிச பத்திரி 1/2 வராகனெடை, சாதிக்காய் 3 பலம், இடைபத்திரி 3 பலம், இடை வெள்ளை, குங்கலியம் 2 வராகனெடை, வெண் மெழுகு 2 வராகனெடை.

மெழுகு நீங்கலாய் மற்ற மருந்தை வெவ்வேறே பொடி செய்து வைத்துக் கொண்டு சட்டியில் ஒரு கரண்டி எண்ணெய் விட்டுக் காய்ந்து வரும்போது துத்தம் பொடி போட்டுக் கிண்டிப்பின் துருசுப் பொடி பின் தாளிச பத்திரி பொடி இப்படி எழுதின முறைப்படியே போட்டுக் கிண்டிக் காய்ச்சி கடைசியிலே மெழுகைப் போட்டுக் கிண்ட உருகிச் சாரிக்கும் நன்றாய்க் கிண்டி குழம்பு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு சீலையிலூட்டிப் புண்ணிற் போடச் சர்வ புண்ணும் மாறும். கைகண்டது.

இன்னம்

## களிம்பு

நெல்லிக்காய் கந்தகம் 1 பலம், வெள்ளைப் பாசாணம் 1 பலம், கொடிவேலி வேர் சுட்ட சாம்பற் கீரைத்தண்டுலர்த்திப் பொடி சமன் கொண்டு இவையெல்லாம் பொடி பண்ணி சிற்றாமணக் கெண்ணெயிற் குழப்பி வைத்துக் கொண்டு சீலையிலூட்டிப் புண்ணிற் போடவும். வீக்கமுண்டானானல், நாயுருவிக் கதிர் புறப்பட்டதிலே முறிந்து அந்த மருந்தைத் தடவி, வீக்கத்திற் போட்டு உலரவுலரத் தண்ணீர் குற்றிச் சாமஞ் சென்றால் குச்சியை எடுத்துப் போட உடையும்.

## உண் மருந்து

களிம்பு: சங்கு, துருசு இரெண்டையும் சுட்டு நீறாக்கிச் சங்கு துருசு, நாலொன்றாய்க் கூட்டி எருமை வெண்ணெயிற் கற்பூரஞ் செய்து கொண்டு,

வெற்றிலையிற் தடவிப் புண்ணிற் சுற்றிச் சீலை கொண்டு கட்டப் புண்ணாறிப் போகும்.

சங்கம் வேர்ப் பொடி - 3/8 பங்கு

சுக்கு, மிளகு, திப்பிலி வெதப்பிப் பொடி 3/8 கலந்து வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் உழக்கு சிறு நீரில் இருபது நாட் கொள்ளத் தண்டு முகப்புண் முதற் சர்வ புண்ணும் தீரும்.

காரம், கந்தகம் பொடி செய்து நல்லெண்ணெய் வார்த்தரைத்துச் சீலையிலூட்டி விளக்கேற்றினால் தைலம் விழும். ஒருகாசிடைத் தைலத்துக்கு அரைக் காசிடை ரசம் வெள்ளைக் குங்கிலியம் கருங்குங்கிலியம் இவை காசிடை கூட்டி நல்லெண்ணெயிலரைத்துத் தைலத்திற் குழப்பிச் சீலையிலூட்டிப் புண்ணிற் போடவும்.

ஒடுவுக்கும் புண்ணுக்கும்
புங்கு நலமுலர் தண்ணீர்
பங்கமிற் பெருமரப்பால்
பாவட்டைப்பாலே யாதல்
எங்கு முள்ளிசலை நல்ல
யிருப்பையின் பாலே யாதல்
மங்கைகேள் சீலையூட்டி
யெற்றப் புண் ணொடுவும் மாறும்.

**உள்ளங்கால் புண்ணுக்கு:**

வாழைப்பூ மடல் உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கி, இரு கூறு நீற்றாத சுண்ணாம்புக் கல் ஒரு கூறு ரசம் 1/2 வராகனெடை , துத்தம் 1/2 வராகனெடை, துருசு 1/2 வராகனெடை, இவையெல்லாம் தண்ணீர் விட்டரைத்து வைத்துக் கொண்டு புண்ணிற் பூச, உள்ளங்காற் புண் முதலா எந்தப் புண்ணும் மாறும்.

கண்கரைய: துருசு 10 சட்டியிற் புடமிட்டு எடுத்துப் பொடி செய்து சிற்றாமணக் கெண்ணெயிற் குழப்பிச் சூலைக் காண மற்றுமுண்டான கண்களிலே வைத்து ஊமத்திலை வாட்டிப் போட்டுக் கட்டவும்.

---

மங்கை - மகடூஉ முன்னிலை.

### புண் முதலானதுக்கு மருந்து

புண்ணுக்குப் பசுவின் சாணமும், சூரிய சுண்ணாம்புங் கலந்து, புண் வாயில் வைத்துக் கட்டப் புழுச் செத்துப் போம். புரையோடினதில் புழுத்தால் கருவாட்டுக் கண்டம் அவித்து வைத்துக் கட்டப் புண் வாயில் புழு வந்திருக்கும். பின்பு ஆலம்பால் விடப் புழுச்சாகும், தசை வளர்ந்தால் நாயுருவியிலை, கடுக்காய், இலுப்பைப் புண்ணாக்கு மூன்றும் அரைத்துக் கட்டவும்.

### அழுகணிக்கு

நாயுருவி இலையும் வேரும் ஓடுவடக்கி வேரும் இலையும், எண்ணெயிற் கலந்து காய்ச்சியிடப் புண்ணாறும்.

### தீராத புண்ணுக்கு

கள்ளிப் பாலில் புழுங்கலரிசியை ஒருநாள் முழுதும் நனைய வைத்து மற்ற நாள் நன்றாய் ஊறினதைப் பசுவின் பால் வார்த்தரைத்து நல்லெண்ணெயிற் கொதிக்க வைத்துப் புண்ணிலிட நாட்பட்ட புண்ணொடு தீரும்.

இன்னம்

*கருங்கோழி எச்சத்தை எண்ணெயிற் கொதிக்க வைத்துப் பூசவும்.

### உடையாவிக்கும் உடைய

சீனாக்காரம், வெள்ளைப் பாசாணம், சங்கு நீறாவது, சுண்ணாம்பாவது கூட்டியரைத்து, நெய்யிற் குழப்பி, வீக்கத்திற் போடவும்.

### புண்புரைக்குள்ளுக்கு மருந்து

மூக்குச் சாரடை வேரும், விலாமிச்சை வேரும், சமனாக அரைத்து வகைக்கு, அரை தேசிக்காய் அளவு, சேரை நல்லெண்ணெயிற் சாரித்துக் கொடுக்கவும். அஞ்சாறு நாளையில் புண் புரை ஆறிவிடும்.

நாறுந் தும்பை, நாயுருவி, நத்தைச்சூரி, தகரை விதை, கார் மஞ்சள் இவை கூட்டிக் காடி நீர்வார்த் தரைத்தெடுத்து வேறுமருந்து நினையாமல் விரும்பி

---

*சரியான மருந்தல்ல.

நித்தம் பூசுவீரே. ஆறும் புண்ணும் உடம்புரையும் மற்றெத்தையும் வளர்ந்திடுமே.

இன்னம்

## சர்வ புண்ணுக்கும் பூச்சும் மருந்தும்

பேய்க்கரும்பைச் சுட்டுப் பொடி செய்து ரசம் – 1 பலம்

பச்சைக் கற்பூரம் – 1 பலம்

துத்தம் – 1 பலம்

கத்தூரி விட்டுப் பசுவின் வெண்ணெய் கூட்டி அரைத்துச் சீலையில் ஊட்டிப் புண்ணிற் போட எந்த வகைப் புண்ணும் மாறும்.

ஓடுபாம்புக்கு : நிலக்குமிழ் வேர், வேம்பாடம் பட்டை, சிறுகீரை வேர் சரி கூட்டி, அரைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சி உள்ளுங் கொண்டு புண்ணிலும் பூசவும். மூன்று நாள் கட்டவும்.

**இன்னம்**

குப்பைமேனியிலையும், உப்பும் ஒருபிடி இடித்துக் கட்டவும்.

**இன்னம்**

முள்ளீச்சம் வேர், துவைத்து மூன்று நாள் கட்டவும். இதனிலை துவைத்து வறுத்துக் கட்டவும்.

**இன்னம்**

முத்துத் தடங்கண்ணியைப் பொகு பொகென அவித்துப் புண்ணாறுமளவும் கட்டவும். குழியானைப்புண்ணுக்க வெள்ளறுகு எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்துப் பூசவும். சூரிய காந்தக் கல்லைச் சாரணையில் உரைத்துக் கட்டியில் தடவவும். பசலைப் பால் தடவவும். தீரும்.

**இன்னம்**

சிறுபூளை வேர், மிளகு தக்காளி வேர், காசுக்கட்டி, இவற்றை கொடுவாப்பிடங்காலே தட்டி அரைத்துத் தட்டிற் பூசி ஒருசரித்துப் படுத்துக் கொண்டால் தண்ணீருள்ளுதும் விழுந்து புழுவும் சாகும்.

ஆலம் பாலில் உதட்டுப் புண்ணாறும்.

புழுவுக்கு: காசுக்கட்டி, மிளகு, தக்காளி வேர், இரண்டும் கொடுவாட் பிடங்கால் அரைத்துப் பூச உதட்டில் விசத் தண்ணீரும் விழுந்து புழுவும் சாகும்.

## தண்டு பிளவைக்கு

சங்கு, முடிதாரம், வெண்ணெயில் நன்றாயரைத்துப் போடவும். சங்கம் வேர் வடக்கு வேரை மண்வெட்டிக் காயப்போட்டு அரைத்துச் சீலையில் தடவிப் புண்ணிற் போடவும்.

## உவளியம்

கற்றாழை மடலுட் சோற்றைத் தோண்டிப் போட்டு அரைத்து அதற்குள் புளியங் கொழுந்து, வைத்த வித்து, உடனே உவளியம் அணைக்கவும். தண்டுப் பிளவை, நாகவல்லி உறை காம்போடு துத்தம், ஒன்றாகவே அரைத்து ஆமணக் கெண்ணெயில் வைத்துக் கட்ட முள்வேலியில் வரும் அம்பு, வெடியுண்டை, பட்டப் புண்ணுக்கு முன்பு போலெலுமிச்சஞ் சாறு யொற்றியிட்டு எண்ணெயிடவும்.

நிலக்குமிழ் வேர், ஒடுவை வேர், அதன்பட்டை, நிம்பப் பஞ்சாங்சாங்கம், சீதேவி, செங்கழுநீர் வேர், ஊமத்தம் வேர், அதனிலை, இலந்தைவேர், அதினிலை, தூதுவளை வேர், கம்பிப் பிசின், மதுரம், வேம்பாடம் பட்டை, வகைக்கு 3 பலம் அரைத்து நாழி எண்ணெயில் காய்ச்சிப் பதத்தில் வடித்து இட்டு வர அம்பு, வெடியுண்டைப் பட்ட புண்ணெல்லாந் தீரும்.

வெட்டுக்குத்து அம்பு வெடியுண்டைப் பட்டெடுத்து வரும்போது உடம்பு நோகாம லெடுத்து வாயும் எடுத்து வரச்சே நொந்தால் வேப்பம் பட்டை இடித்து நீரிலிட்டு அலறக் காய்ச்சி உடல் பொறுக்கப் பிடித்து விடத் தீரும்.

## தீர்த்திருந்தாற் செய்குணம்

உடல் வீங்கு முளையுங் குத்தித்
திமிருண்டாம் புண்ணிற்
சலம் விழும் தினவெடுக்கும்
மேலே சொறி உண்டாம்

இக்குன்மம் வந்தால் நெடு நாளா
றாது புண் வாய் வெளுத்து
முத்துநீர் போல விழுந்துடம்பு
வலிகுத்தெடுத்தாலும்
செங்கலங்கலாய் யிரத்தம்
விழுகினும் சீழ் விழுகினும்
செம்புண்ணாக அப்படியே இருந்தாலும்
கரப்பானாக வந்து முடியும்.

**இதற் கெண்ணெய்:**

செங்கொன்றையிலை, தூதுவளையிலை, நிலவேம்பு, நிலக்குமிழவேர், நெரிஞ்சி சமூலம், மிளகு, சிவனார் வேம்பு, மாகாளிக் கிழங்கு, சீந்தில், நாயுருவி, சூரை, நந்நாரி வேர், உள்ளி மஞ்சள், கொட்டம், மதுரம், வெம்பாடம்பட்டை, சென்னதாம்பழம், சாதிக்காய், திரிபலை, வகைக்கு 3 பலம் எண்ணெயிற் காய்ச்சி வடித்திடத் தீரும்.

வன்னியும், குறிஞ்சாயிலையும், கழற்சி இலை, கடராசிப்பட்டை, தென்னிலை, பரங்கிப்பட்டை, தான்றி, பெரும்பூளை, பருத்தி இலை, இவை வறுத்து ஒத்திட்டுக் கட்டத் தீரும். சட்டியை நெருப் பெழக் காய்ச்சி, நல்லெண்ணெய் விட்டுத் தேசிப்பழத் தெண்ணெயிற் தோய்த்து வெட்டு வாயில் சுடச் சுட நன்றாக ஒத்திடவும். பின்பு

## வெட்டுப்பட்டப் புண்ணுக்கு ஒற்றிட எண்ணெய்

இலந்தை, கடுக்காய், முட்பூலா, நிலக்குமிழ், ஆவாரை, சிறுகுறிஞ்சான், கருஞ்குறிஞ்சா,நாயுருவி, இவ்வேர்களும், கோட்டம், மதுரம், வேம்பாடம் பட்டை, செவ்வள்ளிக் கொடிக் கருங்குங்கிலியம், தூதுவளை, சதகுப்பை, சிறுவழுதலை, ஏலம், இலவங்கம், இவைகளை 1 பலம் கூட்டி இடித்துப் பொடி செய்து வடியிட்டு எண்ணெய் விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துப் புண்ணிலிடவும்.

**குத்துப் புண்ணுக்கு எண்ணெய்:**

உடனே குத்துவாயில் விரல் விட்டுக் குடைந்து ரத்தந் துடைத்துத் தசையிற் பட்டாலுள்ளே தள்ளி எண்ணெயில் தேசிப் பழங்காய்ச்சி ஒற்றிட்டு

எண்ணெயும் எலுமிச்சம் பழச்சாறும் சரி காய்ச்சிச் சுடச் சுடக் குத்துவாய்க்குள் விட்டு இப்படி மூன்று நாள் விட்டுப் பின்பு

இலந்தைவேர், ஆமணக்கம் வேர், நன்னாரிவேர், சிற்றேலம், இலவங்கம், தூதுவளை வேம்பாடம் பட்டை, மதுரம் இவைகளுடன் 3 பலம் கூட்டி அரைத்து 7 எண்ணெயிற் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் குத்து வாயிற் சீலையிற் தோய்த்து எண்ணெய்விட்டு மேலும் எண்ணெய் சீலையிற் போடத் தீரும்.

பூவரசம்பட்டை இலை, விளாங்காய் அளவு அரைத்துப் பாலில் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவும்.

**எண்ணெய்:**

விளக்கெண்ணெய் - 2, கொடிவேலி வேரரைத்து, எலுமிச்சம் காய் அளவு, ஓமம், கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, வகைக்கு பலம் 1 கூட்டிக் காய்ச்சிக் கொள்ள விப்புருதி, அரையாப்புக்கு சூலைக் கிரந்தி சூலை இவையெல்லாந் தீரும். கைகால் முறிந்ததுக்கு.

**முறிந்ததுக்கு:**

ஆவாரைப் பூ, அரிசி, புளியும், பிசைந்து நல்லெண்ணெயில் வேக வைத்து அந்த மருந்தைச் சீலையிற் தடவி முறிந்த இடத்திற் கட்டி அந்த எண்ணெயும் புண்ணுக் கிடவும்.

பரங்கிப்பட்டை பலம் 5, சீரகம் பலம் 2, சர்க்கரை நாழி, நெய்நாழி, உரி நெய்யன்று மற்றதிற் பசும்பால், வார்த்தரைத்து உரி பசும்பால் விட்டு நெய்கூட்டி லேகியமாக்கி வைத்துக் கொண்டு அன்றாட ஒரு தேசிக்காய் அளவு கொள்ளவும்.

**பத்தியம் :** பாவட்டை வேர், நீர்வள்ளி வேர், கொடி வேலிவேர், உள்ளோட்டி வேர், ஆடு தின்னாப் பாளை வேர், தூதுவளை வேர், நன்னாரி வேர், அழிஞ்சில் வேர், நீர்த்தாழி வேர், கீழாய் நெல்லி வேர், காட்டுக் குறிஞ்சி வேர், பொன்னாவரை வேர், முத்தெருக்கின் செவி வேர், கற்பூர வள்ளி வேர், வேலிப்பருத்தி வேர், இவையெல்லாம் சமன் கூட்டி இதனுடன் இலவங்கப்பட்டை, பீநாரிப் பட்டை, சந்தனம், புளியம் பிஞ்சு, சேங்கொட்டை,

மதுரம், கற்பூரம், இவை வகைக்கு 2 பலம் கூட்டி அரைத்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து உள்ளுங் கொண்டு புண்ணிலும் விட்டு தடவவும்.

### இதற்கு வசியம்

பாவட்டை இலை, சிறுகீரை, ஊமத்தை இலை, தட்டி இந்த எண்ணெயிற் தெறித்து வறுத்துக் கட்டவும்.

### பூச்சு மருந்து

பேய்ப் பீர்க்கம் கூட்டை விதையுடனே சுட்டுக் கருகுனவாறு இடத்துப் பொடி செய்து உத்தம தாழி வேரும் சுட்டுப் பொடியாக்கி ஆமணக் கெண்ணெயிற் குழைத்திடத் தீரும்.

**திரிவகை :** அத்திப்பால், பிராயம் பால், உத்தமதாளிப் பால், ஊனைப் பால், பேய்த்திப் பால், தாழைவிழுதுச்சாறு, அரளிப்பால், வேப்பம் பால், கள்ளிப் பால், எருக்கம்பால், இவை வகைக்கு கொரு துளி இந்துப்பு, வெடியுப்பு, இவையெல்லாம் பாலில் அரைத்துப் பஞ்சில் ஊட்டித் திரித்துத் திரி வைக்கிறதுக்குப் பிரமாணம் பச இடனைக் கொடி கொண்டு வந்து கொடித் தலையில் வெல்லந் தடவிப் புண்ணிலொற்றிப் புண்ணில் புழு வந்து வெல்லத்தைத் தின்னும். அதின் வழி திரியையங் கூட எறிப்பசனைக் கொடியைப் பிடுங்கி விடப் புழு சாகும்.

### புண்ணாற மருந்து

பச்சரியில் தேசிப்பழச் சாறு விட்டரைத்து உள்ளே விட்டுக் கட்டப் புண்ணாறும்.

### இன்னம்

விடத்தோலிலையைக் காடி வார்த்து வெந்து கட்டப் புண்ணாறும்.

கள்ளி மேலு புல்லுருவியிலையைக் காடி தெளித்து வேகவைத்துக் கட்டவும். கொடிவேலி வேர், சுண்ணாம்பு, இலுப்பைப் பிண்ணாக்கு இலையை அரைத்துப் பொட்டணங் கட்டிச் சட்டி காய வைத்து நல்லெண்ணெ தெறித்துக் காய்ச்சி ஒற்றிடவும். உப்பும் எருக்கம் பிஞ்சுந் தட்டி வறுத்துக் கட்டவும்.

## தீராப் பவுத்திரத்துக்கு மொடுப் பாயிறத்துக்கும்

புங்கம் பட்டை மேல் தோலை சீவிக் குறுவை நெல் மாவில் இடித்து நல்லெண்ணெய் வார்த்துப் பிசைந்து ஒட்டுபுறச் சுட்டுத் தின்னவும்.

## பக்கப் பவுந்திரத்துக்கு

இரசம் 1 1/2 பலம், வசம்புப் பொடி 1/8, கடுக்காய்ப் பொடி 1/8, ஒன்றித்து இடித்துப் பாக்களவு மருந்தெண்ணெயிற் தோய்த்துத் தின்னவும். இப்படி ஏழு நாள் ஒவ்வொரு நேரந் தின்னவும். உப்புப் புளித் தவிர்க்கவும் பதினேழாம் நாள் எண்ணெயிட்டு முழுகவும்.

நாற்பது நாள் உப்புப் புளி தவிர்க்கவும்.

இதற்குத் தீராப்புண் கிரந்திப் பக்கப் பவுத்திரம் இவை தீரும். எண்ணெய்: எண்ணெய் நாழி, அரிதாரம், 2 பலம், கந்தகம் 2 பலம், செங்கதாரி வேர்ப்பட்டை, எலுமிச்சங் காய் அளவு, அவுரி வேர்ப்பட்டை, இவை கூட்டிக் காய்ச்சி உள்ளுக்கும் கொடுத்துப் பூசப் பக்கப் பவுத்திரம் சீழ்ப்புண், சலம், மூலப் பவுத்திரம் இவை தீரும்.

### கட்டு மருந்து:

தடித்தப் பீர்க்கு உடனே கஞ்சாத் தழையைக் காடி வார்த்து வெதுப்பிக் கட்டவும். உடைந்தால் எருக்கம் பூவைச் சிறுநீர் வார்த்து வறுத்துக் கட்டப் புண்ணாறும்.

பொரிசம் பொடி, தேசிக்காய் அளவு, கோழி முட்டைத் தோடு ஒன்று, கடுக்காய் மூன்று, ஆனையறுகங் கிழங்கரைத்துத் தேசிக்காயளவு, மிளகரைத்து அவ்வளவு இவை எல்லாம் கோழித் தலை, குடல், கால்,இரை, ஈரல், பித்து நீக்கி அதன் வயிற்றில் வைத்துத் தைத்துத் தண்ணீரில் வேகவைத்து நன்றாய்த் தண்ணீர் சுவறின பின் எடுத்து ரேகித்து வைத்துக் கொண்டு ஆவரைங் கொம்பு கொண்டு வந்து ஒரு பானையிலிட்டுப் பூமித் தைலம் இறக்கி வைத்துக் கொண்டு முத்தின கோழி மருந்து இரண்டு

---

*பொரி – வெங்காரம், சம்–அழகு, சுகம்*

கொட்டைப் பாக்களவில் தைலம் விட்டு மத்தித்துக் கொள்ளவும். இரண்டு நேரமும் கொள்ளவும். புண்ணாறும். இந்தத் தைலம் புண்ணுக்கு இட்டு வரவும்.

இதற்கு மேற் புகை

எலுமிச்சையிலை, நாரத்தை இலை, செந்தொட்டி இலை, மூன்றுங் குறுக அரிந்து புளியஞ் சிராய்த் தழலில் போட்டு ஒரு சட்டியை நடுப் போதுக்க வீழ்த்தி அந்தத் துவாரத்திற் புண்ணை வைத்திருக்கப் புகை யேறும்.

இப்படி யேற்றப் புண்ணாறும். பத்தியம் - துவரைப் பருப்பு, முருங்கைக்காய், முருங்கையிலைக் கறியாம்.

இரத மருந்தும் புகையும் இப்படிச் செய்ய முப்பது நாளில் குணமாகும்.

**புகை:** கறுத்தப் பொதியம் பட்டை, அழிஞ்சில் பட்டை, பருத்திப் பிஞ்சு, எருமை மாட்டுக் கொழுப்பு, இவை யெல்லாம் கூட்டி நெருப்பிட்டுத் துருத்தி கொண்டு ஊதித் துளைச் சட்டிக் கவிழ்த்துப் புண் வாய்வழிப் புகை ஏற்றவும்.

**எண்ணெய்:** சேங்கொட்டை 20, ஓமம் உழக்கு, இது இரண்டையும் இடித்துப் பொடி செய்து எண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கொதி கிளம்பி வரும்போது பனை வெல்லந் தட்டிப் போட்டிறக்கி வைத்துக் கொண்டு சிறு கரண்டியில் ஒருகரண்டி அளவு கொண்டு வரப் பவுத்திர ரோகந் தீரும்.

தேன் 3/4, நல்லெண்ணெய் 3/4, மிளகு 15 மஞ்சள்தேறு - 1, ஓருள்ளிப்பூண்டு - 1, அரைத்துக் கலந்து அடிப்பற்றாமற் கிண்டிக் காய்ச்சிக் கம்பி போலே வந்தால் அது பதமா யிறக்கி வேறொன்றில் வைக்க அது மஞ்சி போலிருக்கும். இதிலு இறுகினால் சற்று அனலிற் காட்ட நெகிழும்.

அதைத் திரியாய்த் திரித்து ஒடுப்பாயிறப் புண்ணில் வைத்தால் எல்லா ஒடுவும் தீரும்.

---

*பொரி – வெஹ்காரம், சம் – அழகு, சுகம்.*

இத்திரியைப் புண்ணாக்கு ளேற்றினாற் கரைத்துப் பொடி உற்றுப் பார்த்துத் திரியை ஒடுவிலேற்றி வரவும். இருபோது மேற்றி வர ஓடு மாறும்.

## பவுந்திரத்துக்குப் புகை

சட்டியிற் தீயிட்டக் கள்ளிச் சிராய் அடுக்கிச் சட்டியைத் துளைத்து மூடித் துவாரமிட்டு மயிலிறகும் போட்டுத் தவிடு தூவிப் புகைக் காட்டவும்.

## கட்டு மருந்து

முருங்கிலை, சிறுக அரிந்திடித்து அடுப்பிற் கூட்டிக் காய் வைத்துக் காடி தெளித்து மருந்திட்டுச் சாறு வேகவிட்டு எடுத்துப் பவுந்திரத்திற் கட்ட புண்ணாறும்.

## உள் மருந்து

குப்பைமேனி சமூலமும், நிழலுலர்த்திச் சூரணம் பண்ணி வடிகொண்டு, வெருகடியளவு, சிறு விளாங்காய் அளவு, எருமை வெண்ணெயிற் குழப்பிக் கொள்ளவும். நெடுநாள் பட்டதுக்கு மண்டல நாள் கொள்ளவும். அணிந்தாணதுக்குப் பதினைந்து இருபது நாட் கொள்ளத் தீரும். கை கண்டது.

பால், நெய், யூண்தி, உப்பு, இதிலொன்றுமாகாது. பக்கப் பவுத்திரத்துக்கு திருகு கள்ளி சிறுகச் சிறுக நறுக்கி ஒரு பாண்டத்திலிட்டு வண்டுகட்டிக் குறுவை மாஉரி அதிலிட்டுப் பிட்டவித்துக் கொடுக்கவும்.

இப்படி நாலுநாள் கொடுக்கவும். மஞ்சணத்திப் பட்டை தவிடு பட இடித்து வறுத்து வைத்துக் கட்டவும்.

## பத்தியம்

முருங்கையிலை, காய், கீரை, கீரைத்தண்டு, கெளுத்திமீன், பசும் பால் இவை கூட்டவும்.

---

*தேறு – தூய்மையான, மஞ்சி– இலைக்கள்ளி, ஓடு – முதுபுண்.*

## கொடிய பவுத்திரத்துக்கு

நாயுருவி வேர், புங்கம் பட்டை, வாகைப் பட்டை, வகைக்கு ஒருபிடி நிழலுலர்த்திச் சூரணஞ் செய்த வெருகடிப் பிரமாணம் தேனிற் கொள்ளவும். இதற்கு கட்டு மருந்து ஆவரைக் கொழுந்து புட்டவியல் பண்ணிக் கட்ட புண்ணாறும்.

தண்டுப்பிளவை, தண்டுப் பவுத்திரம், பவுத்திரம் அதில் எருத்த சலத்துக்குத் தைலம்.

எட்டி விதை - உரி
மஞ்சள் கிழங்கு - 12
பேய்ப்பீர்க்கம் விதை உரி
நாய் நாக்கு - 1

புளிய மரப்பட்டை, மாதவி இவையெல்லாம் நறுக்கிக் கலசத்திலிட்டு வெள்ளாட்டு எருவில் தைலம் இறக்கி வைத்துக் கொண்டு முதல் மூன்று நாள் தேன் திரிதுவாரங்களிலிட்டு, பின்பு தைலத்திரி பத்து நாள் விடவும். சலம் விழுகிற கண் அடைபட்டுப் புண் வாயும் விளங்கும். அதன்பின் அந்தப் புண்ணாறும்.

**எண்ணெய் :** தலைச் சுருளி வேர், ஆடு தின்னாப்பாளை வேர், மஞ்சள், மிளகுள்ளி பொடி, நல்லெண்ணெயில் எரித்துப் புண்ணிலிடத் தீரும்.

## உள்ளுக்கு மருந்து

முத்துருக்கஞ் செவிவேர், கொட்டைப் பாக்களவு அரைத்து எருமை வெண்ணெயில் குழப்பி மூன்று நாள் கொள்ளவும்.

நாலாம் நாள் சித்திர மூலி வேர்ப்பட்டையைப் பாக்களவு அரைத்து வெண்ணெயிற் பொதிந்து கொள்ளத் தீரும்.

**பவுத்திரத்துக்குக் கட்டு மருந்து:**

வெந்தொன்றிக் கிழங்குச் சீவி நறுக்கி வைத்துக் கட்டவும். உரைத்துப் பூசவும். எரிந்தால் காட்டுப் பசலைக் கிழங்கரைத்துப் பூசவும்.

---

*நாய் – புளி, நாக்கு–குருகத்தி(மாதவி)*

எரிவாறு : முத்தெருக்கன் செவிவேரும், இலையும், வகைக்கு ஒருபிடி பருத்தியலை ஒருபிடி, உள்ளியுருத் தொரு சிரங்கை, வசம்பு ஒருதெறு இதெல்லாம் அரைத்து நாழி நெய்யிற் கலக்கிக் காய்ச்சிப் பத்தில் வடித்துக் கொள்ளச் சர்வ விப்புருதியும் தீரும்.

நெஞ்சு விப்புருதிக்கு நெஞ்சிற்றளம், காரெண்ணெய், கோழிக் கறுத்தயக்கு இவை நாலும் சமன் கூட்டி வெள்ளிய சீலையிலூட்டி, நெஞ்சில் தாளம் போடச் சலமெடுக்கும். பின்பு கொசுகந்தேன், தேசிப் பழச்சாறு, திரிகடுகு, கிராம்பூ, கூட்டிச் சேர்த்துத் தின்றுவர நெஞ்சின் புண்ணாறும்.

**சீழ் விப்புருதிக்கு:**

புன்றி நெய் - 3/8, தேசிப்பழம் - 3, சாயவில்லை அரைத்துத் தேசிக்காய் அளவு இவை கூட்டிச் சலித்து விலக்கமான மூன்று நாளும் கொடுக்கவும்.

கைப்புப் புளிப்பு ஏழு நாளைக்காகாது.

### பக்க விப்புருதிக்குக் கட்டு மருந்து

பிராயம் பட்டையை நன்றாய்த் தட்டிக் கட்ட வீக்கம் வற்றிப் போம்.

### சந்துவிப்புருதிக்கு

நத்தைச்சூரியை முக்கால் பிரதட்சணம் பண்ணி, வேர் அறாமற் பிடுங்கி அக்காலிற் பாம்பு விரலிற் கட்டச் சந்து விப்புருதி தீரும்.

### பவுந்திரம், பிளவைக்கு

எருக்கம் வேர், அமுக்கரா வேர், வேளையிலை, நீரிலரைத்துப் பூசவும்.

### வயிற்று விப்புருதிக்கு

மருக்காரை, சுண்டை, சித்திரமூலி, பிரண்டை, நிலவாகை, சிறுக்கீரை, முன்மூன்றும் வேர்ப்பட்டை, பின் மூன்றும் வேர் இவை வகைக்கு ஒருபிடி, உள்ளி பலம் 2, புளி விளாங்காய் அளவு இடித்து 4 பங்கு நீரில்

ஊறவைத்து அதிகாலையில் தினம் 3/4 நீர் கொடுக்கவும். கைப்பு, புளிப்பு விடவும்.

**விப்புருதிக்கு :** வாகை பருத்தி நீர், அட்டி புனல், புளி, மா, விலங்கு இலை, இடித்துச் சற்றே வறுத்துக் கட்டவும்.

**பூச்சு:** எருக்குகா கருஞ்சூரை வேர், உகாய வேர், மாவிலங்கு வேர் பட்டை, அரைத்து வாய்விட்டுச் சுற்றிப் பூசவும்.

**உள்ளுக்கு :** நறுமுன்னை வேர், பாலிற் கொள்ளவும்.

## தின எரிப்பு நோய் மருந்து

கருஞ்சூரை வேர், உகாய வேர், மாவிலிங்க வேர், நறுமுன்னை வேர், பாலிலரைத்துக் கொள்ளவும். சின்னி பொரியரிசி பீபா விளா வெட் மூலியிலை, விடத்தலை வடக்கே போன வேர், வேலாப்பட்டை வேர், பரட்டை வெங்காயம், வசம்பு, நல்லெண்ணெயிற் காய்ச்சிக் கொடுக்கவும். வட்ட வட்டமாக அங்கங்கே வெவ்வேறாய் நானா வண்ணங்களாக இருக்கும்.

## அசாத்திய வியாதி

சிலேத்துமம், பெருங்கால் கரட்டுக்கு மேலே இருவிரற் கிடைக்க கீழே நரம்பு தெரிந்தால் இரத்தம் வாங்கவும்.

## மருந்து

ஆமணக் கெண்ணெயும் கோசலமும் சரிகூட்டி ஒருமண்டலங் கொண்டு கோசலத்திற் சமைத்து அசனம் பண்ணவும். சிவதை வேரும், கடுக்காயும், கோசலத்தில் சிலநாள், பாலில் சிலநாள் கொள்ளவும்.

முட்காவேளை: வெள்ளைப் பூ மலர்ந்த சமூலமும், கோசலத்தரைத்துக் கலக்கிக் கொண்டு, கோசலத்தரைத்து மருந்தைப் பூசவும். திரிகடுகு, விளங்கம், தேவதாரம், கடுக்காய், வேலிச் சாற்றிரைத்து கொடிவேலி வேர்தனைப் பொடித்தே சூதங் கூட்டியே பொட்டணமாய்க் கட்டிப் பின்னரடவான சட்டி யொன்று காய்ச்சித் தேசிப் பழச் சாறு பிழிந்ததனிற் தோய்த்துச்

---

*அசனம் – உணவு.*

சுடு வேக மிகுதிப் படவொற்றிட்டால்
பைந்தொடியிலே யரை
யாப்பின் வீக்கந் தீருபாரு
தேனிற் புதுச் சுண்ணாம்பைப்
பூசி அதன்மேலே சேங்கோட்டை
யைக் கதிர் கொண்டு
பொறுத்து விளக்கில் வாட்டத்
தைலம்விழும்.

உரை– கடுமையான வெப்பம் அதிகம் சேர்ந்தால், அரையாம்பு வீக்கம் ஏற்படும். தேனில் புதுச்சுண்ணாம்பு தடவவும். பின் சேராங்கொட்டையை விளக்கில் காட்டிட தைலம் வெளிப்படும். அதனை வழித்துச் சுண்ணாம்பு போட்டு அதன் மேலே பூசவும். இப்படி மூன்று நாள் கரைந்து போம்.

### இன்னம்

கொடுவேலி வேர்ப்பட்டையை அரைத்துத் தேசிக்காய் அளவும் கோழிமுட்டையை அரைத்துத் தேசிக்காய் அளவு, கோழி முட்டை வெள்ளைக் கரு விட்டரைத்து அடை செய்த வீக்கத்தளவு வைத்து ஓடு போட்டுக் கட்டவும்.

### இன்னம்

பிராயப்பட்டை, இடித்தோடு போட்டுக் கட்டவும். முருங்கை வேர்ப்பட்டையை அப்படிக் கட்டவும்.

### *வெட்டு மருந்து

ஊமத்தஞ் செடியை உதிக்கு முன்னே வியாதியாளன் பேர் சொல்லி வரவெட்டி வரவெட்டி இரண்டாய்க் கிழித்துப் போட்டு வரக் கரைந்து போம். தோன்றின மூன்று நாளைக்குள் செய்யவும்.

---

* இம்முறை சரியானதல்ல.

ஓடு – பானை ஓடு, ஒற்றுதல் – சேர்தல், தீதம் – மா, சுடு– வெம்மை, கதிர் – வளிப்பாடு,கனல், வேகம் – தீவரம், கடுமை.

## கட்டு மருந்து

ஒரு வராகன் கந்தகம், பொடி செய்து சீலையில் பரத்திச் சுருட்டி நூல்கொண்டு சுற்றிக் கட்டி நல்லெண்ணெயில் தோய்த்து விளக்கும் கொளுத்தி தைலம் இறக்கி அதில் ஒரு வராகன் ரசம் விட்டு நன்றாய் மத்திச்சுப் புண்ணில் பூசி பருத்திவிதை இடித்து வறுத்து வைத்தோடு போட்டுக் கட்ட அரையாப்பு வீக்கமுதல் எந்த வீக்கமுங் கரைந்து விடும்.

## *பழி மருந்து

அரையாப்புத் தோன்றின நாள் முதல் எட்டு நாளைக்குள்ளாக அன்றிச் சலங்கொள்ளு முன்னே ஆகிலும் தேவேளைத் தழையை வாய் பேசாமல் பறித்துக் கசக்கிச் சீலையிற் பொட்டணங் கட்டி வலது புறத்தில் வந்தால் இடது காதிலும், இடது புறத்தில் வந்தால் வலது காதிலும் மாய்ப் பாகமாறி மூன்று துளிப் பிழிந்து செவி மேலாய்த் தலையணையில் ஒரு நாழி கை வைத்திருந்து மருந்து சுவறின பின் எழுந்திருக்கவும்.

இப்படி இரண்டு நேரமும் மூன்று நாளை நாள் ஆறுபொழுது பிழிந்து நாலாம் நாள் காலையில் வெந்நீர் வீக்கத்தில் இரட்டைச் சேலை போட்டுக் கொண்டு மூக்கால் இரண்டு நேரமும் மூன்று நாள் விட வீக்கங் கட்டுப் பட்டுப் போம். கை கண்டது.

## அரையாப்புக்கு எண்ணெய்

அரையாப்புக்குத் தோற்றின் முதற் நீருமளவுங் கை கொள்ள விராலிக் கொழுந்தை நல்லெண்ணையிற் சூரிய புடமாக வைத்தெடுத்து எண்ணெயில் மருந்தும் வெருகடிப் பிரமாணம் கொண்டு புண்ணிலும் பூசவும். இப்படி ஏழுநாள் கொண்டு பூசச் சதிரமிடாத படிக்கு தரப்புரட்டி பட்டாதி ஆறிப்போம்.

இன்ன மருந்து

தோற்றின உடனே கழற்சிக் கொழுந்தும் ஏழு மிளகும் ஒரு உள்ளிப்பூடும் அரைத்து அவ்வளவு பனை வட்டுங் கூட்டிக் கொள்ளவும். மூன்று நாள் கொள்ள வற்றிப் பட்டுப்போம்.

---

* பழி – குற்றம், இன்று இம்முறை பயன்படாது. பட்டது– தோன்றியது. பட்டாதி என்றாதல் வேண்டும்.
ஆதி – காரணம், முதல்

திரண்டுடைய ஊமத்திலை இடித்துச் சிறுநீர் வார்த்து வறுத்துக் கட்டவும்.

முற் கள்ளி மேல் புல்லுருவித் தழையை விளக் கெண்ணெயை வார்த்துக் கட்டவுடையும். உடைந்தால் நல்லெண்ணெயிற் கருங்குங்கிலியம் பரம்பு மெழுகும் போட்டுக் காய்ச்சி சீலையிலூட்டிப் புண்ணிற் போடச் சலம் பரிந்து கரைந்து புண்ணாறும்.

**எண்ணெய்:** மாவிலங்கப் பட்டை புங்கம் வேர்ப்பட்டை, ஆவாரை வேர்ப்பட்டை, வேம்பாடம் பட்டை, அரைத்து தேசிக்காய் அளவு, கருஞ்சீரகம் - நற்சீரகம், மஞ்சள் ஏலம் வகைக்கு வராகனெடை 1, ஈர வெங்காயம் பூடு ஏழு இவையெல்லாம் 1/2 படி நல்லெண்ணெயிற் கலந்து காய்ச்சிப் புண்ணிலிடப் புண்ணாறும்.

## அரையாப்பு புண்கிரந்திக்கு எண்ணெய்

கொடிவேலி வேர், செங்கதாரி வேர், நாயுருவி வேர், காரைவேர், மருக்காரை வேர், நிலக்குமிழ் வேர், நத்தைச் சூரி வேர், புங்கம் பட்டை, வாத மடக்கி வேர், நீர்ப்பூலா வேர், வரட்பூலா வேர், அவுரி வேர், குழலாதண்டை வேர், இவற்றுடன் எலுமிச்சங்காய் அளவுரைத் தரைப்படி நல்லெண்ணெயிற் கலந்து காய்ச்சி மணற் பதத்தில் வடித்துக் கொண்டு வர அரையாப்பு புண் வீக்கம், புண்கிரந்திப் புண்ணும் தீரும்

## பூச்சு மருந்து

அம்மைக் கிழங்கு, வெள்ளாட்டுப் பாலில் அரைத்து அம்மாவில் ஆறு நோக்குக் குடுக்கத் தெறிக்கும். அப்பால் வெந்நீர் விடவும் நத்தைச் சூரிவேர், நண்டு வளைமண் உப்பு முத்துருக்கள் செவியும் அரைத்துப் பூசவும். முலைக் குத்துக்கு இப்படிப் பூசவும்.

---

*அம்மை – முதியோர், கிழங்கு – மூலம், கூந்தல், பரம்பு – அகலம், பரம்பரை – வெள்ளி, பரம்பை என்றாதல் வேண்டும்.*

+முயலைக் கருத்திலைச் சிறு நீரில் குடிக்கவும். ஆணி விழும்.

### கண்டமாலைக்கு நெய்:

துத்தம் துரிசு, பாசாணம் சமன் பொடி பண்ணி நெய்யில் குழப்பிப் புண் மேற் போட்டு அதன் மேற் களிப்பாக்குப் பொடி பண்ணிப் போட்டு அதன் மேற் பஞ்சு போட்டு நெய்குற்ற ஆணி விழும்.

### நெய்: கண்ட மாலைக்கு நெய்:

கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்துப் பாக்களவு, எருக்கம் பால், சங்கப் பட்டை, கண்டங் கத்திரி வேர், செங்கதாரிப்பட்டை, சாரடை வேர் அரைத்துவகைக்கு 2 பாக்களவு சாதிக் காய் 2, பத்திரி 1/2 பலம் சோமனாதி (காயம்) 2 பலம், மதுரம் 8 பலம், கிராம்பு 4 பலம், திப்பிலி 6 பலம், உள்ளி பலம் 1/2, கடுகுரோகிணி பலம்1/4, வசம்பு பலம் 1/4, வெந்தயம் பலம் 1/2, மிளகு பலம் 1/4, வெவ்வேறாக அரைத்து நெய்யிற் கலந்து சற்றுச் சூரிய புடம் வைத்து பின்பு காய்ச்சி மெழுகு பதம் வடித்துக் கடுகு மூன்று கொண்டுப் பின் நெய் ஒவ்வொரு கரண்டி கொள்ள கண்டமாலை தீரும். உப்புப் புளித் தவிர்க்கவும்.

### இன்னம்

உதியம் பட்டையை இடித்து, மாவை அகங்கையில் ஒன்றும் புறங் கையில் ஒன்றும் கோதிப் போட்டுக் குறுவை மாவும் அப்படி போட்டு கூட்டிக் களிக் கிண்டித் தின்னத் தீரும்.

### + வில்வமரம்

வியாழத்திலாதல், திங்களிலாதல், காப்புகட்டி வடிபால் வேர் வெல்மேல் தோல் போக்கி அரைத்துப் பொண்ணுக்கானால் 2 பாக்களவு கிடாரி கன் ஈன்ற தலையீற்று பசும் பாலில் 3 நாள் ஆணுக்குச் செங்கண் நீன்ற பசும் பாலில் 3 நாள் கொடுக்கவும். தீரும்.

---

முயல்–முனி– அறுகு, இலை–வெற்றிலை, கரு–கறுப்பான.

இன்னம்

கொட்ட கரந்தை வேரை அச்சாற்றிலரைத்து, ஊமத்திலைச் சாற்றில் பிசைந்து கலத்திலிட்டு வெய்யிலில் வைக்கத் தைலம் மாம், அத்தயிலத்தை உலர்த்திப் பொடியாக்கி, வெருகடி தேனிற் கொள்ளவும். கைப்பு. புளிப்புத் தவிரவும்.

இன்னம்

கண்டமாலை, கவுசிக்கு, பச்சரிசித் தவிடு, வேப்பங் கொழுந்து வேப்பீர்க்கு ஒருபிடி சேர்த்திடித்து அடை செய்து தின்னவும்.

ரசம், கந்தகம், இந்துப்பு சரி கூட்டி, எருக்கம் பால் விட்டரைத்து நாள்பட்ட வீக்கத்துக்கு ஏழு நாள் பூசக் கரையும்.

**புதிதாய் வந்ததுக்கு:** பழங்கிட்டம் எருமை நீரிலரைத்து உள்ளும் கொண்டு மேலும் பூசத் தீரும்.

கழுத்தில் பலவிடங்களும் புண்களாய் இருந்தால் ; முற்றின கிளுவை மரத்தின் பட்டை சூரணம் பண்ணித் தூவச் சலம் வற்றி மாறும்.

இன்னம்

கொல்லன் கோவைக் கிழங்கரைத்துப் பசும் பாலில் குடிக்கக் கண்ட மாலை தீரும்.

**கண்டமாலை வீங்கினால்:** வெள்ளை கௌரிப் பாசாணம், துத்தம், துருசு, நாபிரசம் சமன் மற்றிலைச் சாறரைத்துப் பின் வெற்றிலைச் சாற்றரைத்துப் பின் வீக்கத்திற் பூசவும்.

இரண்டாம் நாள் விளக்கெண்ணெய்ச் சீலையில் தோய்த்ததில் தடவிப் போடவும். மறுபடி காற்றாடச் செய்விச்சுச் சொன்ன சாறுகளில் உரைத்துப் பூசவும்.

அந்த எண்ணெய்ச் சீலையிற் தோய்த்துப் போட்டால், ஆணிவிழும். விழுந்தால் பின் எண்ணெய் வைக்கும் படி வேப்பெண்ணெய்,

---

*வெள்ளை – வெள்ளைப் பாசாணம்.*

நல்லெண்ணெய் சமன் மருதம் பட்டை உதியம் பட்டை, செங்கதாரி, நெல்லி, நாவற்பட்டை, கருஞ்சீரகம், கார்போகரிசி, கஸ்தூரி மஞ்சள், வேம்பாடம் பட்டை, நாழி எண்ணெய்க்கு கூ 1/2 60 கூட்டி அரைத்தாகிலும், பொடித்தாகிலும் போட்டக் காய்ச்சிப் பதத்தில் வடித்து உள்ளும் புண்வாயிலும் போடவும்.

இன்னம்

குப்பைமேனி வேர், கருஞ்சூரை வேர்ப்பட்டை, குறள் வேர்ப்பட்டை, இருசீரகம், சுக்கு, உள்ளி, வெந்தயம், திப்பிலி, ஏலம், இந்துப்புச் சமன் சேர்த்தரைத்து வெள்ளாட்டுப் பாலில் அமாவாசை 3 நாளென்னக் குடிக்கவும். இப்படி இரண்டு அமாவாசை முறை குடிக்கக் கண்ட மாலை தீரும்.

**புண்ணுக்கு :** மெல்லிய சீலையில் தேனை யூட்டிப் புண்ணிற் போடப் புழுச் சேரப் புறப்பட்டுப் போம்.

சேங்கொட்டைத் தைலம் சீலையிலூட்டிப் புண்ணில் போட புண்ணாகும். இலுப்பைப் புண்ணாக்கு, முட்காவளை வேர் கொள்ளக் கண்டமாலை மாறும்.

**வேறு :** கழலைகரைய ஈயத் தகட்டில் எருக்கம் பால் தடவிக் கட்டக் கரையும்.

**உள் மருந்து :** எள்ளும், இலவங்கப் பட்டையும், சமன் சூரணம் பண்ணித் தேனில் கொள்ளவும்.

**முலை குத்துக்கு :** முலை வீங்கின உடனே அட்டைவிடவும். புண்ணானால் ஆல், அத்தி, அரசு, இச்சி இந்த நாலு வகைப் பட்டையும் இடித்துக் கசாயம் இட்டுக் கழுவிப் போடவும்.

## கால்புற்றுக்கு

குங்கிலியம், தேன், நெய் வார்த்தரைத்துப் பேயப்புடல், வேப்பிலை, மஞ்சள், இவையெல்லாம் தேனில் அரைத்துக் குழைத்துத் திரியில் நனைத்துத் திரியேற்றிச் சுற்றிலும் வீக்கத்தில் மருந்து பூசவும்.

கிரந்தி நாயகனை இடித்துச் சாறு கொண்டு உள்ளுக்குக் கொடுத்து அதன் வேரை அரைத்துப் பத்தஞ்சு நாள் பூச முலைக் குத்து தீரும்.

## கால்புற்றுக்கு (வேறு)

மண்வெட்டியைக் காயப் போட்டு நேர்வாளம் தோலிபோக்கி வறுத்துப் பொடி பண்ணி அந்தப் புண்ணிலிடப் புழு செத்துப் போம்.

மறுநாள் தயிருஞ் சோறும் கட்டவும்.

**பின்பு:** சித்திரமூலம், ஆயில்பட்டை, ஈர வெங்காயம், நல்லெண்ணெயில் காய்ச்சிப் புண்ணுக்குமிட்டுக் காசிடை உள்ளுங் கொள்ளவும்.

**பத்தியம் :** மோருஞ் சோறும் உண்ணவும்.

### இன்னும்

வெள்ளாட்டு எரு கொண்டு வந்து வெள்ளாட்டு நீரில் வறுத்து மூன்று நாள் கட்டவும்.

பெருமரப்பட்டைக் கோசலம் விட்டு வறுத்து மூன்று நாள் கட்டவும். குதிட்டிப் பட்டை கோசலம் விட்டுத் தட்டிப் பச்சையாய் மூன்று நாள் கட்டவும்.

### இன்னும்

வெள்ளைப் பாசாணம் கழஞ்சி, கௌரிப் பாசாணம் கழஞ்சு, ஊமத்தை இலைக் கழஞ்சு, நேர்வாளப் பருப்பு இரண்டு.

இது சேர அரைத்து ஆமணக் கெண்ணெயில் காய்ச்சி ஒரு களிப் பாக்களவு புண்ணிலிட ஆணி பரியும். பின் வெற்றாவரையிலை கட்டவும்.

**இரத்த புற்றுக்கு :** கருஞ்சூரை வேர், சுண்டை வேர், மருக்காரை வேர், நன்றாயரைத்துப் புளிக்கரைத்து உழக்குக் குழம்பில் மருந்தைக் குழப்பிக் கொடுக்கவும்.

**லிங்கப்புற்றுக்கு :** வங்காளப் பச்சை, வெண்ணெயில் அரைத்துப் போடப் புற்றுத் தீரும்.

---

+ *இக்காலத்துக்க ஏற்றதல்ல. இலிங்கம்–ஆண்குறி.*

இன்னும்

## இலிங்கப் புற்றுக்கு

வங்காளப் பச்சைப் பசு வெண்ணெயில் அரைத்துப் போடப் புண் தீரும்.

## அக்கி விடுவதற்கு மருந்து

நெல்லும் உப்பும் தண்ணீராவது, மோராவது விட்டரைத்துப் பூசவும். பின்னும் ஆற்றுக் குளிரியை அரைத்துப் பூசவும்.

இன்னும்

தொற்றின உடனே, பசு வெண்ணெயும் அஞ்செண்ணெயும் சாரித்துப் பூசவும். பழுத்தாற் குளிர் தானுமறையும், வெண்ணெயும் பூசவும்.

இன்னும்

பருத்தியிலை அரைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சியிடத் தீரும்.

இன்னும்

சந்தனம், ஏலம், பூலாத்தி வேர், கொடுப்பை வேர், தென்னங் குரும்பை, சமனாக அரைத்து நெய்யில் கலந்து காய்ச்சி உள்ளுநங் கொண்டு புண்ணிலும் தடவவும்.

## அக்கி விடுவதற்கு உள்ளுக்கும், புண்ணுக்கும்

முருங்கையிலையும், குப்பை மேனி இலையும், நீருள்ளியும் அரைத்துப் பூசப்பட்டுப் போம்.

இன்னும்

திப்பிலிப் பொடி காய் காய்த்திருக்கும். செடியின் இலையை குறு நீரிலிரைத்துப் பூச உடனே பட்டுத் தீர்ந்து போம்.

## பேய்வீக்கத்துக்கு மருந்து

வேப்பம்பிசின், முருங்கைப்பட்டை, பெருங்காயம், வாரப்படி, கொங்கை மின்னே வாலுள்ளி, நீர்க்குள் கரும்பெரு சமவெருகம் வேரரைத்துப் பூச வரும். பேய்வீக்கம் போமே. வாடி.

---

+ பாடல் சரிவர இல்லை.

## உள்ளுக்கு

தலைசூடி வள்ளிவேர் வெந்நீரிற் கொள்ள
நிலையான பேய்வீக்கம் நீங்கும்.
மலைதாங்கி வேரரைத்துக் கொள்ளப்
போம் வெந்நீரிலே போம்.
குரு செந்தூரரைத்துக் கொள்ளப்
போம் தோர்த்து நீலனெனும்
படுவன் முகத்தினில் பிறக்கும்
கருக்கும் நினையா மயக்கம்
கொடுக்குமன்றி வலிக்கும் தோல்
மிகுங்கும் அமுதநெனும்
படுவன் மற்றவிடத் தெறித் தெழும்பும்
வெளுத்திருக்கும் குளிர்ந்திருக்கும்
வலிக்குஞ் சால வருமாதித்த எனும் படுவன்
காலக்கடலிற் புறப்பட்டெரிப்பு மிகும் சற்று
வலி காணும் சலங் கண்ணாய் கபால
படுவன் சிரசுவீங்கும்
மயங்கும் கொடுந்துயரம் செய்யுமே.

எருக்கம்பூ, நல்லவெல்லம், வெள்ளுள்ளி சமனரைத்துக் கொள்ளவும். படுவனுக்குக் குளப்பாலை வேரும் இலையும், அரைத்துப் பாலில் குடிக்கவும். ஆமணக் கெண்ணெய் பாலெடுத்துக் குணமாம்.

## முகத்திற் பருவுக்கு மருந்து

பேய்க் கொட்டான் பருப்புப் போக்கிப் பழத்தைச் சுட்டு வெண்ணெயிற் குழப்பிப் பூசவும்.

### இன்னம்

பூளாத்தியிலை, வசம்பு, மஞ்சள், நெல் உப்பு, நன்றாய் அரைத்துப் பூச எப்படிக் கொத்தப் பருபடுவன் சிலந்தி எழுஞா யிறு எல்லாம் வற்றி விதனமடங்கிப் போம்.

## விசப் பருவுக்கு

செருப்படி சமூலமுந் துவைத்து உழக்குச் சாறுபிழிந்து, அதில் பாதி தலையிற் தோய்த்து மற்றப் பாதியிற் பாதி உள்ளே கொண்டும் மற்றதைப் பருவில் உலர, உலரத் தடவவும். இப்படி அஞ்சு நாள் எண்ணெய் கிரந்திப் பட்டங் கூட்டாமல்ச் செய்து முழுகக் குணமாம்.

இன்னம்

குன்றிமணி இலையரைத்து பசு வெண்ணெயிற் குழப்பிப் புண் வாயில் தடவப் புண்ணாறும்.

உண்டை பெருங்காயம், சங்கங் கொழுந்து, முலைப்பால் விட்டுச் சங்காலே யரைத்துண்டை செய்து பருவில் முலைப் பாலிலுரைத்திடவும்.

இன்னம்

தலைமயிரைச் சுட்டுக் கருக்கு செய்து கோவையிலை யாகிலும் அவுரிஇலை யாகிலும் கூட்டி அரைத்து வெண்ணெயிற் குழப்பிப் பூசவும். பருப் படுவன் தீரும்.

இன்னம்

## பருப்படுவனுக்கு

கொடுவேலி வேர்ப்பட்டை, குளப்பாலை வேர், அவுரி வேர், மூன்றும் சமன் அரைத்துக் கொதிபாலில் குடித்து அவை மூன்றும் சமனரைத்து 2 ..வெள்ளாட்டுக் பாலில் கரைத்ததில் அரசியிட்டுச் சமைத்தசனம் பண்ணவும். இப்படி மூன்று நாள் செய்யப் பருப்படுவன் தீரும்.

## புண்ணாற எண்ணெய்

இலுப்பை, மாவிலிங்க இலை, தேசிக்காய் அளவு அரைத்து, வெள்ளாட்டுப் பாலில் குடிக்கத் தீரும்.

உடம்பெல்லாந் தேமல் போற
புண்ணுற்றிடும் பரபரப்பாம்
விடம் புனை விழியாம் கைகால்
விரல் நகங் குறைந்து புண்ணாம்
திடங் கெடுங்கண் கடுக்கும்
சிரசினிற் சொறிவுண் டாகும்
கடும் பல குணமாங் காணாக்
கடிவண்டு கடியாய்க் காணே.

உறை: தேமல் போல உலில் வரும். கை, கால் விரல்களில் புண், நகம் குறைதல், புண்ணாதல், கண்களில் வலி, தலையில் அரிப்பு என்பன.

**எண்ணெய்:**

புங்கிலைப் பொடி அதின் வேர்ப்பொடி ஆடுதின்னாப்
பாளைப் பொடி சிறு
குறிஞ்சாவிலைப் பொடி வண்டு
கொல்லிப்பட்டை இதெல்லாஞ்
சமனாக புண் எண்ணெயில்
போட்டுச் சூரியபுடம் வைத்து
அன்றாடகன் உள்ளுங் கொண்டு மேலும்
வண்டுகடி மாறும்.

உறை: புங்கு இலை, வேரின் தூள், ஆடு தின்னாப்பாளை, சிறுகுறிஞ்சாவின் பொடி, வண்டுகொல்லி பட்டைப் பொடி, புன்எண்ணெயில் இடவும். சூரிய புடம் வைக்கவும். பின் உண்ண, பூச வண்டுகடி தீரும்.

இன்னம்

நாறுகரந்தைத் தழையும், கம்பரிசியும் இடித்து மாவாக்கி, அரையாப்புப் பொதக் கருப்பு கட்டி கடித்துக் கொண்டு தின்னவும்.

மேற்படிச் சாறு நேரத்துக்குச் சேரையாக அமாவாசை முதல் பவுர்ணமி முதல் மூன்று நாளாறு நாட்கொள்ள வண்டுகடி தீரும். உப்புப் புளிக்கைப்பு தவிர்க்கவும்.

**இன்னம் களிவிதம்**

விச்ணுகிரந்தி சமூலமும் ஒருபிடி குறுவையரிசி ஒருபடி இரண்டும் இடித்து நன்றாய் தள்ளி இடித்து அந்த மாவை மூன்று பிடி முன் தின்று மற்ற மாவைக் களிக்கிண்டிப் பனை விட்டுப் பசு நெய் கூட்டித் தின்னவும்.

**பத்தியம்:** சுடுசாதம், பசம்பால் நெய் கூட்டவும். இப்படிப் பத்தெட்டு நாள் கொள்ள வண்டு கடி, கிரந்தி எனப்பட்டதும் தீரும்.

## புண்விரிந்து வீங்கினால் பூச்சு மருந்து

எருக்கம் பழுப்பும், அரளிப் பழுப்பும், வதக்கிப் பிழிந்து, அந்தச் சாற்றில் புகையூறலைத் தெள்ளிக் குழம்பிப் புண்புரையிற் பூசப் புண் வீக்கம் தீரும். விரிவும் பொருந்தி ஆறிப் போம். உப்புப் புளிக் கைப்புத் தவிர்க்கவும்.

இன்னம்

கொல்லங் கோரைக் கிழங்குப் பாலில் அவித்து உலர்த்திக் கொண்டு அரிதாரம் சாதிலிங்கம், எலிப்பகை, அரத்தை, கோழிமுட்டை வெண்கரு, நெல்லிக்காய்க் கந்தகம், சுரைக்காய்க் கந்தகம், சங்குமுழி தாரம், மனோசிலைக் கூட்டிப் பொடி செய்து கிழங்குப் பொடியும் கூட்டி இரண்டு பணவிடை தேனில் கொள்ளவும். ஒரு மண்டலம் கொள்ளவும். கசப்பும் புளிப்பும் தவிர்க்கவும்.

பசும்பால், மோர், நெய், வெள்ளாட்டுப்பால், மேற்படி உப்புக் கண்டம் கூட்டவும். அவபத்தியமாகாது.

**தீரும் வியாதி:** வண்டுகடி, காணாக்கடி, செதாக்கடி, சர்வசில விசமும் தீரும்.

இன்னம்

அளிசம் பட்டை, வெள்வேலம் பட்டை, கருவேலம் பட்டை, வேப்பம் பட்டை, ஆவரம் பட்டை, இந்த அஞ்சுவகையும் சமனாய் நிறுத்து நிழலுலர்த்தி இடித்துத் தூளாக்கி, வெள்ளாட்டு நீர் வார்த்து நன்றாய் பிசைந்து ஊறவிட்டு காலையில் ஒரு பானையில் நாழி வெள்ளாட்டுப் பால் விட்டு வண்டுகட்டி, வண்டின் மேலே ஊறின மருந்தை வழித்து வைத்துக் கூட்டிக் கொண்டு ஒரு மரத்து விறகு கொண்டு எரியிட மருந்து வெந்து சாரமெல்லாம் பானை பாலுக்குள்ளே இறங்கும். அப்போது இறக்கிப் பார்த்தால் கல் போலே திரண்டு இருக்கும். அதை வழித்துப் புதுக் கலசத்திலிட்டு உள்ளே வைத்துக் கொண்டு நாளொன்றுக்குக் கழற்சிக் காய் அளவு கொள்ள, குழந்தைகளுக்கு வெள்ளாட்டுப் பாலிற் சுண்டைக் காய் அளவு கலக்கிப் புகட்டவும். இப்படிப் பதினைந்து நாள் கொள்ளவும்.

**பத்தியம்:** வெள்ளாட்டுப் பால், துவரைப் பருப்புக் கூட்டவும். உப்புப் புளி கைப்பு புகையிலைத் தவிர்க்கவும்.

பூச்சு மருந்து; பொன்னாவரை வேர், அரைத்து மூன்று நாட் பூசவும்.

பின்னாசம் பழுப்பு, அரளிப் பழுப்பு, நாயுருவி சமூலம், மூன்றும் சமனாகச் சுட்டு விளக்கெண்ணெயில் குழப்பிப் பூச வண்டுகடி கடிவிடந் தீரும்.

### இன்னம்

காரெள்ளு, கள்ளிப்பாலில் எட்டு நாள் ஊறப்போட்டு எடுத்துலர்த்திப் பின்னும் எருக்கம் பாலில் எட்டு நாள் ஊறவைத்துலர்த்தி வைத்துக் கொண்டு கடி விசத்துக்கு இரண்டு துட்டுக் காசிடை இளவறுப்பாய் வறுத்தரைத்துப் பூசவும். இப்படி மூன்று நாள் பூசத் தீரும்.

### இன்னம்

உலர்ந்த கழுதை லத்தியும் கள்ளிச் சிராயும் நேரொக்க அடுப்பிலிட்டுத் தீயெறியாமல் புகையச் செய்து கழிப்புள்ள கலத்திலே முக்காற் கலந் தண்ணிர் விட்டு, அடுப்பில் வைத்துச் சுற்றிலும், புகைப் போகாமல் மண் கொண்டடைத்துப் புகைத்தால் புகைக் கலத்தாறில் பற்றிக் களிம்பு போலே இருக்கும். முதல் நாள் தலைமுழுகிக் காலில் ஊணா இலையை வைத்துக் கட்டி வைத்து மறுநாட் காலையில் காடித் தண்ணீர்க் காய்ச்சிக் ,காடிவிட்டுக் காய்ச்சிப் புண்ணைக் கழுவிப் போட்டு ஈரம் துடைத்துக் கலத்திற் பற்றினக் களிம்பு ஓலை கொண்டு வழித்துச் சுடச் சுடத் தடவவும். இப்படி மூன்று நாட் பூசவும்.

அன்றாடம் களிம்பு கூட்டிச் சுடச் சுடப் பூசவும். காலையில் பூசக் கடி விடம் தீரும்.

உள்ளுக்கு: தேற்றாம் பட்டை வெட்டி உலர்த்தி ஒரு பலம் நிறுத்துப் பொடி செய்து வடி கொண்டு வைத்துக் கொண்டு இருபது சேங்கொட்டையும் உழக்கு எள்ளும் கூட்டி உரலிலிடித்துச் சேர்த்து அம்மியில் நன்றாய் நடத்தி வழித்து, அத்திக்காய் அளவு உண்டை பண்ணி முந்தின பொடியிலே வெருகடிப் பிரமாணமும் ஒருண்டையுங் கூட்டித் தேனிற் குழைத்துக் கொள்ளக் காணாக்கடி தீரும்.

### இன்னம்

கடி விடத்துக்கெல்லாம் வாலைத் தழைச் சாறாழாக்குக் கொள்ளவும். பதினொரு நாள் கொள்ளவும்.

### கடிவிசங், குட்டம், சிரங்குக்கு எண்ணெய்.

மேற்படி தழையும் வசம்பும், உள்ளியும் துவைத்துச் சாரம் எல்லாம் துவாலையிடவும், உப்புப் புளி கைப்பாகாது. பால் கூட்டவும்.

## எண்ணெய்

கார்போகம், துருசு, இரதவகையோரொன்று, கருதரிய வரிதாரம் வராகன் மூன்று

கார்போகம் துருசு இரதவகையோர் ஒன்று
கருதரிய அரிதாரம் வராகன் மூன்று
சீர் மேவும் புங்கெண்ணெயுழக் கலத்திற்
சிறுக விட்டு நாழிகை நாலரைத்துச் சேர்த்து
பார் மேவும் ஈருள்ளிப் பொன் முன் வைத்துப்
பதறாமல் எடுத்துணைப் பூச
வார் மேவுங் கொங்கை நல்லாய் சிரங்குக் குட்ட
மாறாத கடி விசமுமாறுந் தானே.

## கடிவிசம், குட்டம் படர் தாமரைக்கு

தான்றிவேர், எட்டி வேர், கொன்றை வேர், சமன் கொண்டு முறுக நறுக்கி மிடாவலடைத்துப் புடத்தயிலமிறக்கித் தடவ முன் சொன்ன தெல்லாந் தீரும்.

**கடிவிசத்துக்கு:** பன்றி விட்டையைப் புளியஞ் சிராயில் சுட்டு விளக்கெண்ணெயில் குழப்பிப் பூசவும். (இக்காலத்திற்கு ஏற்றதல்ல)

வன்னெற்றுவரும் மிளகும் காடியி லரைத்துப் பூசவும். வெண்காரம் பாக்களவு, புகையுறை சுண்ணாம்புக் கல் பாக்களவு. விளக்கெண்ணெயில் கரைத்துப் பூச வெண்குட்டம், கடிவிசம், சிலந்தித் தீரும்.

**வண்டு கடிக்கு:** கதரிவிதை திரித்து, ஒரு சட்டியில், இட்டு 2, உரி எருமைப்பாலில் விட்டு, ஆதளைச் சமூலம் நறுக்கிப் போட்டு அமாவாசைக்கு முதல் நாள் அந்தி நேரம், ஊறவைத்து அமாவாசைக் காலையில் தெளிந்த நீரொடு சிரங்கை யிறுத்து அதில் நல்ல வெல்லம் கலந்து கொடுக்கவும்.

பத்தியம் : கோழி, முருங்கைக் காய் கூட்டவும்.

### கடி வியாதிக்கு எண்ணெய்:

வெள்ளறுகுச் சாறு 2, எண்ணெய் 2 1/2, கோட்டம், விளாலரிசி, முருங்கை விதைப் பருப்பு, கடுகு,வெட்பாலை யரிசி, வகைக்கு பலம் 3, நீர்

முக்குறுணி, வசம்பு, கோட்டம், கொன்றைக் கொழுந்து, செவ்வியம், செஞ்சந்தனம், தகரை விதை, செங்கழுநீர்க் கிழங்கு, இந்துப்பு, விளாலரிசி, வெள்ளி லோத்திரம், வேப்பங் கொட்டை, கார்போக அரிசி, ... 1 1/2 பலம் அரைத்து நாழிக் கோசலம் விட்டுப் பதத்தில் வடித்துப் பூசக் கருஞ்சிரங்கு கடிவிசம், பாதப்பிளவை, சொரி சிரங்கு தீரும்.

**வண்டு கடிக்கு :** புங்கம் பாளை வேர், தின்று வரவும். சங்கம் வேர், வெந்நீர் அரைத்துக் குடிக்கவும். உப்புப் புளி தவிர்க்கவும்.
முருகிலை துவைத்துழக்குச் சாறு குடிக்கவும். மீண்டும் மீண்டும், குடிக்கவும். வளராது மருந்து விட்டால் வளரும். கை கண்டது.

***சரீர கிரிகையும் வியாதி நிதானமும், ஔஷத சுத்திகளும் அறியாமல் யாதொருத்தன் சிகிச்சை பண்ணுகிறான் அவனுக்குப் பாவம் சித்திக்கும். ஆகையினாலே சர்வப் பரயோத் தினாலும், வயித்தியனானவன் வாகட சாஸ்த்திரம் அறிந்து செய்ய வேணுமென்று பெரியோர்கள் சொன்னார்கள். அஃதறியவும்.***

## மருந்துகள் சுத்தி செய்வகை

பாதரசம் பலநூறதைம்பது
பகுத்த விருபத்தைந்திற் பாதி
கோதரு மாறுகுறைந்தது மூன்று
கொள்கையிலோர் பலங்குறைய ஒண்ணாது
தீதறு சோடச பூசையினாலும்
திறந்து அகோர மந்திரத்தாலும்
போதனை பூசனைசெய்து முடித்தே
புரிந்துடன் சுத்திகள் பண்ணுவன் பொன்னே.
செங்கல் பாலொட்டுறை சித்திரமூல மஞ்சள்
செய்யமர மஞ்சள் திரிபலை தேவதாரம்
வெங்கட் கரிப்பா னுமத்தைபாகயிலை
முருங்கைவேர் கோவை வெற்றிலை சாறடை மஞ்சணாத்தி
தங்கு நிலப்பனைவேர் பூங்கொன்றை வேர்ப்பட்டை தழைத்த
தனித்தனியே இச் சால்
பங்கயற் கட்டிருவேயொவ்வொன்றிலிரு கடிகை
அளவூறிச் சாரிக்க இரசஞ் சுத்தியாமே.

### இன்னம்

குப்பைமேனிச் சாற்றில் மூன்று நாளுறச் சுத்தி.

### இன்னம்

குழியம்மியில் ரசத்தை யிட்டழிசம் வேர்ப்பட்டைச் சாறு விட்டு ஒருக்கால் மத்திச்சுத் திரிபலைப் பொடி போட்டு ஒருக்கால் மத்திச்சு, கொன்றை வேர்ப் பட்டைச் சாறுவிட்டொரு கால் மத்திச்சு, கொடுவேலி வேர் அரைத்துப் போட்டு மத்திக்கச் சுத்தியாம்.

### இன்னம்

கந்தகந்தான் கரண்டி தனினெய் மேலிட்டுக்
கிளறாமல் உருக்கியே பாலிற் சாய்க்க
இந்த விதம் ஏழுதரம் சாய்க்கச் சுத்தி
ஈதல்லாற் பிட்டவியல் பாலிற் சுத்தி
யந்த மூள குழி வெட்டிச் சட்டி வைத்தே
ஆவின் பால்விட்டதின்மேல் வேடுகட்டிப்
பந்தமுள கந்தகத்தைப் பரப்பிமூடி
பருவரளியிட்டு எரிக்கப் பதமாய் சுத்தி.

### இன்னம்

கந்தகப் பொடி செய்து ஒரு சட்டியில் பசும்பால், குமரிச் சாறு, வாழைக் கிழங்கு தண்ணீராவது வாழைத் தண்டுச் சாறாவது விட்டு பீர்க்கிலைச் சாறும் விட்டுச் சட்டி வாயில் கம்பளியாவது சீலையாவது வண்டு கட்டி அதன்மேலே கந்தகத்தைச் சட்டி கொண்டு மூடி நிலத்திற் குழிகல்லிச் சட்டியை வைத்து கரைக்க சரிவர வண்டு கொண்டு மூடி மேல் சட்டித் தூர் தெரியவிட்டு அதன் மேல் ஒருவடிக்கு எரியவிட்டு கந்தம் உருகிப் பாலிலே விழும். ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும்.

அக் கந்தகம் தின்ன வேண்டினால் பாலில் மாத்திரம் சுத்தி செய்யவும்.

தாழைச்சாறு நீர்வள்ளிக் கிழங்கு, நீர்வாழைத் தண்டுச்சாறு, பொன்னாங்காணிச் சிறுகீரை, நீர்ப்பூலாச்சாறு, தாழியிலைச் சாறு, சிற்றாமுட்டிச் சாறு, இந்தவகைச் சாறெல்லாம் சுட்டிப் புடமிட்டுத் தின்னவும்.

**நேர்வாளம்:**

காடிதனில் நேர்வாளம் பத்துநாளுங்
கதிக்கவே யூறவைத்துச் சாணிப்பாலில்
வேடுபட வேகவைத்து நஞ்சு போக்கி
வியன் பாலும் அரைக்கீரை குமரிச் சாறும்
வாடுதலில் வெவ்வேறே வெந்துலர்த்தி
வரிசை பெறச் சுத்திதனைச் செய்வாய் நீயும்
மேடுலவும் பூங்குழலாயிந்தவண்ணம்
இவ்வுலகில் செய்வார்கள் இல்லை கண்டாய்.

வாளந் தோடு நடுவிதழ் எடுத்துப்
போட்டு நற்சீரகம் கற்றாழைச்
சோறு சீகைக்காயரைத்துச்
சாணாகத்திற் கலக்கி அதில்
வாளத்தைக் கலந்து
அவித்துலர்த்தச் சுத்தி.

அல்லது

எருமைச் சாணாகத்தில் வெந்து தோடு நஞ்சு போக்கிக் குப்பைக் கீரைச்சாறு, குமரிச்சாறு கடுக்காய்ச்சாறு, பசும்பால் கருப்பஞ்சாறு, இளநீர், இவை யிற்றில் ஒவ்வொருநாள் இரண்டு நாழிகை தோலாந்திர
மாக வேகச் சுத்தி. வாளம் தோடும் நஞ்சும் போக்கிப் பருப்பைக் கற்றாழை மடலுக்குள் மூன்றுநாள் வைத்தெடுக்க நல்ல சுத்தி.

## கௌரிப் பாசாணம், வெள்ளை

கவுரி வெள்ளைப் பாசாணம்
கெடவே நறுக்கிக் கிழி கெட்டி
பவுரியான நாலைந்து பசுவின்
பாலிலூற வைத்து
கவுரியான சிறுகீரை
கடிய சாற்றிலைந்து நாள்
தவறில்லாமல் நாலைந்து
தனிப்பாகல் சாறிட சுத்தி.

இன்னம்

கவுரிப் பாசாணம் வெள்ளைப் பாசாணம் இரண்டு வகையுஞ் சிறுகத் தட்டி சீலையில் நெகிளக் கட்டிப் பூசணிக்காய் தண்ணீரில் தோலாந்திரமாகக் கட்டி வைக்கவும். பின் உலர்த்திப் பாகல் காயில் இப்படி வேக வைக்கவும். பின்பு சுண்ணாம்புக் கல்லுக்கீழும் மேலும் வைத்து நடுவே பாசாணத்தை மூடி வேக வைக்கவும். வெந்தால் உலர்த்திக் கொள்ள சுத்தி

இன்னம்

## கவுரிப் பாஷணம்

அகத்தியிலைச் சாறில் ஏழுநாள் ஊறச் சுத்தி. வெள்ளைச் சுண்ணாம்பில் ஐந்து நாள் ஊறி ஆறாம் நாள் சுண்ணாம்பிலே ஒருநாழிகை வேகச் சுத்தி.

இன்னம்

கவுரி வெள்ளைப் பாசாணம், சுண்ணாம்புக் கல்லு நீற்றிப் பால் போலக் கரைத்துப் பாசாணத்தைப் பொடி செய்து சீலையில் கட்டி அச்சுண்ணாம்பில் ஒரு சாமம் தோலாயந்தரமாக வேகச் சுத்தி.

## தொட்டிப் பாசாணம்

கோசலத்திறோரொர் தொதிரமாக, லாந்
வட்டமாக மூன்றுநா ளெரித்துக்
கரிப்பான் சாறுதனில் அட்டபாக
மொருச்சாமமான குமரி சாறுதனில்
மட்டமாக வொருச்சாம மறுகால வேகச் சுத்தியாம்.

இன்னம்

நாய் மூத்திரம், காணச் சாறு, விட்டு அதுக்குள் அதுக்குளத்திரி வாதிட்டு பாசாணத்தைப் பொட்டணங் கட்டிப் போட்டு நெல்லுப்புழுக்கினாற் போல் புழுக்கப் பின்பு வாழைக் கிழங்குச் சாற்றில் தோலாந்திரமாக ஒருசாமம் வேகப் பின்பு நெய் சட்டியிற் போட்டு நெய்யுடன் சாய்க்கப் பின் ஆமணக் கெண்ணெயில் வேகச் சுத்தி.

பாசாணங்களைச் செருப்படிச் சாற்றிலும் சாரடை வேர் அரைத்து நீரிற் கரைத்ததிலும் தோலாயந் தரம் ஒவ்வொரு சாமம் வேக நல்ல சுத்தி.

## அரிதாரஞ் சுத்தி

அரிதாரஞ் சேலை கட்டி
யான தொளாந்திரமாக்
குறிதான கோசலத்திற்
குறுக வோர் நாளும் வெந்து
பரிதான பூசணிக்காய்
பாணியிலொருநாள் வேக
கரிதான வெலுமிச்சம்
பழங்காடி யோசாஞ் சுத்தி.

**இன்னம்:** அரிதாரத்தைச் சிறுகச் சிறுக இதழிதழாக நறுக்கி சிலையிற் கட்டிச் சுண்ணாம்புகற் கொண்டு கீழும் மேலும் பொதித்து தண்ணீர் வார்த்து மூடி வெந்தாற விட்டு எடுத்துச் சீலை மேலே தண்ணீர் வார்த்துக் கழுவிப் பின்பு பூசணிக்காய் தண்ணீரில் தொளாந்திரமாய் வெந்தால் பின் பாசிப் பயிற்றில் அந்தப்படி வேகப்பின்னவரைப் பயிற்றில் படிக் காணச் சாற்றிலப்படி, பாகல் காயிற் அப்படி, காராமணிப் பயிற்றந் தண்ணீரில் அப்படி பருத்தியிலைச் சாற்றில் பழ, தேசிப்பழச் சாற்றிலந்தப்படி வெந்தெடுக்கச் சுத்தி.

அல்லது

அரிதாரத்தைப் பொடி செய்து பொட்டணங் கட்டிப் பூசணிக்காயை இடித்துச் சாறு கொண்டு அந்தச் சாற்றைப் பானையில் விட்டுத் தோந்திரமாக நாலுநாழிகை வேகவைத்தெடுத்து உலர்த்தி சுத்தி.

மனோசிலைக்கும் இந்தப்படி சுத்தி செய்து எடுத்துக் கொள்ளவும். அல்லது பொடி செய்த பொட்டணங்கட்டி வெள்ளாட்டு நீரில்த் தோலாந்திரமாக மூன்று நாள் வேகச் சுத்தி.

## இன்னம்

நறுக்கிய மனோசிலையை
நற்சீலைமுடிந்து போட்டு
முறுக்கி நாய் மூத்திரத்தில்
ஓரேமு சாமம் வெந்து

வெருக கொள்ளிரண்டு சாமம்
வேகவை கோசலத்தில்
மருக்கிய சுத்தியாகும்
ஆனதோர் மனோசிலையே.

உரை: மனோசிலையை துணியில் முடியவும். 7 சாமம் நாயின் சிறுநீரில் கோசலத்தில் 1 சாமம் எரித்து எடுக்கவும். இது சுத்திமுறை.

தாரகம், தாரம், சிலை மூன்றும் சுக்குநீர், முள்ளி, ஆரை, தொட்டால் சுருங்கி, இம்மூன்றிலும் ஒவ்வொரு நாளூற நல்ல சுத்தி.

பொட்டணங்கட்டி, மனுசர் மூத்திரத்தில் ஏழுசாமம் வேக வைக்கப் பின்பு கோமூத்திரத்திலிரண்டு சாமம் வேகவைத்து மற்றப் பிரயோகத்துக்குக் கூட்டவும்.

இன்னம்

கற்பூரம் பொடி பண்ணி கரண்டியிற் போட்டுப் பசுவின் நெய் வார்த்து ஏழு பொங்கு வரக் காய்ச்சிக் கொள்ளச் சுத்தியாம்.

## சாதிலிங்கம்

முலைப் பாலிற் சாதிலிங்கம் ஒரு நாள் ஊற முகந்த எலுமிச்சம் பழச் சாற்றில் ஊற நிலையான சுத்தியாம்.

இடங்கணந்தான் நெருப்பிலே
பொரித்தெடுக்கச் சுத்தியாகும்
நலுப்பான நாவிதான் கோசலத்தில்
நலம் பெற நாள்மூன்றுறச் சுத்தியாகும்
கலைப்பான பெருங்காயம் வெற்றிலைச் சாற்றில்
கடுக வோர் சாமம் நனைத்துலர்த்தி சுத்தி.

காந்தம்: குகையிலிட்டு உலையில் சிவக்க வெந்துக் காணச் சாற்றில் போட்டு மறுபடி காணச் சாற்றில் ஏழு நாளூறவும். பின்பெடுத்துக் கழுவிப் போடவும்.

---

*ஆரம் – வெண்மை, வண்டு – தாமரை. நீர் – அடிப்பகுதி*

## இன்னம்

தேசிச்சாறுக் காடிமோர் ஒவ்வொன்றில் பத்து நாழிகை ஊற சுத்தி.

சாலவே வெருக கொள்ளுஞ் சத்திச் சாரம் கலி
காடி கோசலத்தில் மூன்று நாளுங்
கோலமாய் நனைத்துலர்த்தச் சுத்தியாகும்
கொடிய யவட் சாரந்தான் கழைநீர் காடி
வாலயமாய் நனைத்துலர்த்திச் சுத்தியாகும்
வனத்திலெட்டிக்கொட்டைகுப்பைப் கீரைச்சாற்றில்
ஏலவே யொரு சாமம் வேகச் சுத்தி இயல்பாக
யிப்படி நீ யேற்கச் செய்யே.
காந்தியுள்ள இந்துப்புக் காடிக்
கோசல நனைத்துலர்த்தி
வாய்ந்த வெண்மை வெடியுப்பும்
ஆவிநீரோ டெலுமிச்சம்
போந்த வளையிலுப்புத்தான்
புளிமோர் கோசலந்தான் நனைக்கச்
சாந்தும் புளியிலை யட்டுப்புச்
சட்டியில் வறுப்பாய் நல்லுப்பே.

உரை: இந்துப்பைக் காடி கோசலத்தில் இட்டு உலர்த்த சுத்தியாகும். எலுமிச்சை பழச்சாற்றில் வெடியுப்பு, புளிமோரில் கோசலத்தில் வளையலுப்பும் சுத்தியாகும். மஞ்சள், புளியிலைச் சாற்றிலும், அட்டுப்பு அடுப்பில் போட்டு வறுக்கவும். சுத்தியாகும்.

குக்கிலு சுத்தி: திரிபலை விதைத் தள்ளியிடித்துப் பானையிலிட்டுச் சலம் விட்டு வண்டு கட்டி அதன் மேற் குக்கில் வைத்து வேகவைத்தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

---

*இடங்கனம் – வெங்காரம், கோசலம்– பசுவின் சிறுநீர்.*

## ஏரண்டவிதை குங்கிலியம்

ஏரண்ட விதைதானல்ல விளநீரில்
வேகச் சுத்தி
திரண்ட குங்கிலியம் திரிபலைச்
சாற்றில் வேக
உரண்டும் ஊமத்தம் வித்துயர்
நிம்பம்பழச் சாற்றூற
காரண்டுகேசத் திப்பிலிக்
கடுநிம்பப் பழத்தில் சுத்தி
சீரகமிருவகையும் சிறுக
வறுக்கச் சுத்தியாம்
சுரக வோமந் தன்னைச் சுண்ணாம்பு
நீராற் சாமம்
மாரகமூரச் சுத்தி அழகிய
மிளகு மோரில்
ஊரக மூன்று நாளும் உவந்துட
னூறச் சுத்தி.
சுக்குச் சீவித் தோலி போக்கிச் சுண்ணம்
பூசி வெயிலுலர்த்தி
தியக்கச் சாமமொன்று சென்றால் அழகாய்
கழுவி யுலர்த்திச் சுத்தி?
கக்குந் திப்பிலி கொடுவேலிக் கசாயந்
தன்னில் ஒரு சாமம்
வொக்க வூறியுலர்த்தச் சுத்தி
வந்து காண்பாய் மடமாதே.

உரை: ஆமணக்கை இளநீரில் வேகவிடச் சுத்தி. குங்கிலியம், திரிபலைச் சாற்றில் சுத்தி. வேப்பம் பழச் சாற்றில் திப்பிலி சுத்தி. சீரகங்கள் சிறு தீயில் வறுக்கச் சுத்தி. ஒரு சாமம் ஓமத்தைச் சுண்ணாம்பு நீரில் ஊறவிட்டு எடுக்கச் சுத்தியாகும். 3 நாள் மிளகை மோரில் ஊறவிட்டு எடுக்கச் சுத்தி. சுக்கை மேல் தோல் நீக்கி சுண்ணாம்பை பூசி, சூரிய ஒளியில் சாமம் வைத்து கழுவி எடுக்கசுத்தி. கொடுவேலிக் குடிநீரில் 1 சாமம் திப்பிலியை ஊறவிட சுத்தி.

## சேங்கொட்டை

செங்கல்லைக் கீழே பரப்பி அதன்மேலே வரகு வைக்கோலைப்பரப்பி அதன்மேற் சேங்கொட்டையைப் பரப்பி அதன்மேல் மேற்படி வைக்கோலைப் பரப்பித் தீயிட்டெரித்துச் சீராய் வெந்தால் சுத்தி.

சங்கு, சோகி, பசுமோரில் ஏழு நாளூறச் சுத்தி.

சிலாசித்து, கடுநெல்லி, தான்றிக்கு கருப்பஞ் சாற்றில் போட்டு அதற்குள் சிலாசித்து போட்டுச் சூரியபுடமாய் ஒரு பகலூறச் சுத்தி.

கடுகு ரோகிணி - பசும்பாலில் வெல்லத்தைக் கரைத்துத் தோலாயந்திரமாக நாலு நாழிகை வெந்தெடுத்துலர்த்த சுத்தி.

**துத்தம்:** முலைப்பாலில் ஒரு இரவு ஊற சுத்தி.

செங்கழு நீர்க் கிழங்குச் சாற்றில் ஒரு சாமம் மத்திக்கச் சுத்தியாம்.

**சிலாசத்து:** தாமரை வளையச் சாற்றிலாவது, செங்கழுநீர்க் கிழங்கு சாற்றிலாவது, ஒருசாமம் மத்திக்கச் சுத்தியாம். காடி வார்த்துக் கழுவி உலர்த்தி நெருப்பிற் பொரித் தெடுத்துக் கொள்ளவும்.

**வெண்காரம் :** பசுவின் பாலில் மூன்று நாளூறச் சுத்தியாம். மருதம்பட்டைச் சாறு, நாவற்பட்டைச் சாறு, மாதுளம் பட்டைச் சாறு, அல்லது இலைச்சாறு இவையெல்லாம் சுவட்டி லோகத்தைச் சிவக்கக் காய்ச்சி குகைச் சாற்றில் போட்டெடுத்து ஏழுநாள் மறு கசாயம் விட்டூறவும்.

பின்பெடுத்துக் கழுவிப் போடவும்.

பொன், புற்றுமண், சுண்ணாம்பு காவிக்கல், செங்கல், ஓடு, இவை ஐந்தும் தேசிச் சாற்றிலாகுதல் காடித்தெளிவாதல் அரைத்துப் பொன்னிற் பூசி எருவடுக்கிக் காடைப் புடமாக ஒவ்வொன்றில் ஒருபுடமாய் ஐந்து புடம் போடவும்.

வெள்ளியைத் தகடு தட்டிக் கண்ட இடையில் நாலிலொன்று அரிதாரந் தேசிச் சாறு விட்டரைத்துத் தகட்டிற் பூசி ஒருபுடத்துக்கு முப்பது வராட்டியாக அடுக்கிப் புடம் வைக்கவும். இப்படிப் பதினான்கு புடம் வைக்க வெள்ளிச் சுத்தியாம்.

---

+ *முதலடிகள் இல்லை*

நாகம் : நொச்சியிலைப் பொடியில், எருக்கம்பால் வார்த்து அரைத்துப் பூசி ஏழுநாள் சூரிய புடம் வைக்கவும். அதன் பின் வட்டத்துத்தி வேர் பாலில் பிசைந்து அதில் நாகத்தை உருக்கிச் சாய்க்கவும். சுத்தியாம்.

தாமிரம்: அழிஞ்சில் வேர்ப்பட்டை இடித்துக் காடித் தெளிவில் பிசைந்து பிழிந்து அதில் தாமிரத்தைக் காய்ச்சிப் போட்டு இப்படி முக்காற் தோய்க்க கொடிவேலி வேரிலும் அப்படி, கொன்றைப் பட்டையிலுமப்படி அது கூட்டின பின் கொன்றை வேர்ப்பட்டை இடித்து அதில் படி மோர்விட்டு அதிலெட்டு நாள் ஊறி எடுத்து மீண்டும் அதைப் பட்டை இடித்து மோர் விட்டுப் பிசைந்து பிழிந்து அதில் பனிரெண்டுப் பிரகாரம் உருக்கிச் சாய்க்கச் சுத்தி.

நிர்விசம், இருவி, சிங்கி முதலான சரக்கெல்லாம் வர நாவிக்குள் சுத்தி பண்ணிக் கொள்ளவும்.

நல்லெண்ணெய் : மொகா காடி கோசலங் காணச் சாரு புளிநாளை சமூலமும் இடித்துச் சாறு, பருத்தியிலைச் சாறு, இவையெல்லாம் ஒன்றாய்க் கூட்டிப் பொன், வெள்ளி, தாமிரம், கந்தகம், லோகம், இவைகளைக் காய்ச்சி சாற்றில் போடவும்.

காரீயம், வெள்ளீயம், உருக்கி மேற்படிச் சாற்றில் ஏழு தரம் சாய்க்கவும். செம்பு, பித்தளை, களிம்பு, செம்பு பித்தளை தகடு தட்டி அட்டெலும்பும் உப்பும் அரைத்துப் பூசி அத்தகட்டைப் புடமிட்டெடுக்கக் களிம்பும் மற்ற நாற்றமுங் கறுப்பும் போம்.

இன்னம் : செம்புத் தகட்டைப் புளிய மரத்தில் 30 நாள் ஊற வைத்தெடுத்து அலம்பக் களிம்பு மாறும்.

### ✦ இரசத்தை வயிற்றில் நிறுத்த:

இரசம் நிறுத்த பிராயிலை, துத்தியிலை, மேனியிலை அரை, அரைப்பாக்களவு, வகை மூன்று ஒன்றாய் வேதித்து மூன்றாயுருட்டி முந்த விழுங்கிப் பின்பு மருந்தப்படி அரைத்து மூன்று உருண்டை கொள்ளவும்.

ரசம் நிற்கும். வெட்டறாது, பெண் சங்கமம் பண்ண நிற்கும். ரசம் விழ கத்தரிக்காய் உப்பிடாமல் அவித்துத் தின்ன ரசம் விழும். பின்பு அவித்த தண்ணீர் குடிக்கவும்.

வங்கதோச மென்றும், நாகதோசமென்றும், கிரிகண்ணி தோசமென்றும் சாஞ்சலத் தோசமென்றும், காகதோசமென்றும், இரச தோசமென்றும், மற்ற தோசமென்றும் பேர். இதில் வங்க தோசம் போகாதிருந்தால் தவனம் எடுக்கும். நாகதோசம் போகாதிருந்தால் உடம்பெல்லாம் சத்தியமாய் வியர்வை யெடுக்கும்.

கிரிகிண்ணி தோசம் போகாதிருந்தால் வயிற்றுக் கழிச்சல் எடுக்கும். இரத்தமும் விழும்.

சஞ்சல தோசம் போகாதிருந்தால் தலையிலே வலியெடுக்கும். பித்துக் பிரமை பேசும்.

காகதோசம் போகாதிருந்தால் உடம்பசதியாயுலர்ந்து போகும். இரச தோசம் போகாதிருந்தால் வாயிலேறிப் பல்லுவிழும். கால்கை விரிந்து வெண்குட்டமாம்.

தரித்த தோசம் போகாதெனில் வெயில்பட படத் துவசமெடுத்து அசனஞ் செல்லாதிருக்கும். இப்படி எட்டுத் தோசமுங் கண்டு இதில் வங்க தோசத்துக்குத் தண்ணீர் தாகத்துக்கு கருங்காலியிலைச் சாறு சீனி சீரகங் கூட்டிக் கொடுத்து அந்தச் சாறு துவாலையிடவும். கிரிகிண்ணி தோசத்துக்கு அத்திப்பட்டைச் சாறு, சீரகம், சீனி கூட்டிக் கொடுக்கவும்.

சஞ்சல தோசத்துக்கு - பூசணிக்காய்ச் சாறு, சீரகம் சீனி கூட்டிக் கொடுக்கவும்.

காக தோசத்துக்குப் பால் நெய் சிறுபயறும் வேகவைத்திறுத்ததில் சீரகம் கூட்டிக் கொடுக்கவும்.

இரத தோசத்துக்கு - ஈச்ச இலையிடித்துப் பானையிலிட்டு நீர்விட்டுக் காய்ச்சி வேதுகட்டிச் சிறுநீரைச் சட்டியிற் பிடித்தால் அதிலே ரசங்காணும். தரப்பூசி அதன் இலை விரித்திரக் கிடக்கவும்.

எட்டுத் தோசத்துக்கும் பரிகாரஞ் செய்யவும்.

நாபியை சிறுக்கீரைச் சாறு காடியில் அவிக்க நல்ல சுத்தி.

இன்னம்: நாவி எருக்கம் பாலில் 3 நாள் ஊறிப் பசும்பாலிற் கழுவி உலர்த்தச் சுத்தி.

அரிதாரம் பாலில் தோலாந்திரமாக வேகவிடவும். பின் பாலில் வேடுகட்டி வேகச் சுத்தி.

**பாசாணம் :** சீலையில் முடிந்து இறுகின சாணாகத்தில் வைத்துப் புடமிட்டுப் பின் சிறுகீரையில் வேக வைக்கவும். பாலில் வேடுகட்டி வேக வைக்கவும்.

ரசம் சங்கம் பாலிற் கலந்து சீலையில் மத்திக்கவும். தேசிப்பழச் சாற்றில் 3 புடமிடவும். கௌரி பாசாணமும் இப்படியே சுத்தி பண்ணவும். ஊமத்தங் காயிலும் புடமிடவும்.

**மூர்த்தி லிங்கம் :** தேசிபழத்து விதை எடுத்துப் போட்டதிற் செலுத்திச் சாணாகம் பொதிந்து எருவில் புடமிட நற் சுத்தி. பருத்தியிலைச் சாறு, தேசிப்பழச் சாறு பசும்பால் சமன் கூட்டிச் சீனி போட்டுக் கொள்ளவும்.

எந்த மருந்து மீறினாலும் தீரும்.

செந்தூரம் தின்று பாசாணமானால் நற்சீரகம் சீனிப் பசுந் தயிரில் கொள்ளவும்.

ரசம் பாசாண மீறினால் இரத்தமும் வீக்கமும் காணும். இதற்குப் புரசங் கொழுந்து தென்னிலை நீருள்ளி சமன் கொண்டு நாழி நீரிலிட்டுக் காய்ச்சிக் கொள்ளவும். இன்னம்பல செந்தூரத்துக்கு இரண்டு படி பருத்திக்காய் இடித்துத் தன்சாறு கொண்டு ஒரு சேரை பச்சை புளியில் கொட்டைத் தோடு பொடி செய்து போட்டுக் கலக்கிக் கொள்ளப் பல செந்தூரமும் மீறின் விசமுடனே தீரும். அத்திக்காய் இடித்து மோரில் பிசைந்து கொடுக்கவும்.

அவுசதச் சுத்திக் கிரிகை

தப்பிலா கிரியெடத்தால் மாற்று

அவரையிலை, பூசணியிலை, பாகலிலை, கத்தரிப் பழச்சாறு இவை தனித்தினிச் சாறு கொண்டு உள்ளுங் கொடுத்துப் பாதாதி கேசம் வளையும் துவாலையிட லாகிரி தீரும்.

**நேர்வாளமாற்று:**

முருங்கையீர்க் கொருபிடி, நாழி நீரிலிட்டு உழக்காய்க் காய்ச்சி, இறுத்ததில் காசுகட்டி, களிப்பாக்கு, பச்சை மரம் விதை, இவைகளுடன் 2 வராகனெடை அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். கழிச்சல் நிற்கும்.

இன்னம்

ஆவாரைப்பூ, இடித்துக் காடியில் கொடுக்கவும்.

**அரிதார மீறி ரத்தமெடுத்தால்:**

கிராம்பு, அரைத் தெருமைத் தயிரில் வடிகட்டி அதில் கொடுக்கவும்.

**வெண்பாசாணத்திற்கு:** மஞ்சள் கொடுக்கவும்.

**காவிக்கு:** கத்திரிக்காய் உப்பிலி அவித்து சாறில் கொடுக்கவும். காய்ச்சியும் கொடுக்கலாம்.

சர்வ விசபாண்டு ரசம் மருத்தீட்டுக்குப் பாகற்காய் வேகவைத்து நிறுத்துக் கொடுக்கவும்.

சேங்கொட்டைக்குப் புளியை அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும்.

தலையைப் பற்றி வலித்தால் சீந்தில் கொடி நறுக்கி எண்ணெயில் காய்ச்சிக் கொடுக்கவும்.

கார்த்திக் கிழங்குக்குக் கவலைக் கிழங்கு கொடுக்கவும். தேங்காய்ப் பால் கொடுக்கவும்.

தாளியிலை நீரில் கொடுக்கவும். அரளிக்குக் கத்திரிக்காய் தண்ணீர் கொடுக்கவும்.

குன்றியிலை அரைத்துத் தேங்காய்ப் பாலிற் கொடுக்கவும். பின் வயிறு ளிவு எடுத்தாலும் மருந்தைத் தள்ளினும் பூலாவிலை துவைத்துப் பிழிந்து கொடுக்கவும். செவியிலும் பிழியவும்.

சிவதை வேரும் சுண்ணாம்பும் தின்றால் எலுமிச்சம் வேரை அரைத்துக் கொடுக்கவும். அதிமதுரம் கொடுக்கவும். அவுரிச்சாறு கொடுக்கவும். சந்தனம் கொடுக்கவும். இவைப் பசும்பாலில் கொடுக்கவும்.

கற்றாழைக் கிழங்குக்குப் புளி மாற்று. அவினும், எண்ணெயும் குடித்தால் இஞ்சிச் சாறும் நெய்யும் கலந்து கொடுக்கவும்.

இவைகளுக்குத் தினையரிசி பாற் கஞ்சி கொடுக்கவும்.

நில்வேரெண்ணைக்கு மிளகு அரைத்துக் கொடுக்கவும்.

ரசமுடைந்து உடம்பிற் சிதறினால், கஞ்சாங்கோரை மூன்று பிடி, வெற்றிலை 30, கோவைத் தண்டு ஒரு முழம், பெரும் பூசணிக்காய்க் கீற்று மூன்று, நல்ல வெல்லம் தேசிக்காய் அளவு கூட்டியிடித்துச் சாறுள்ளளங்

கொண்டு, உடம்பிலும் துவாலையிடவும். இப்படி 5 நாள் செய்யவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். ரசம் சிறுநீரோடே விழும். நிறுத்துக் கொள்ளவும்.

உச்னமும் வாந்தி நஞ்சு உண்டையிற் கலந்த நஞ்சு ரசமுரிய சிறுகீரைச் சாறு.

சீரகங் காசிடை - அரைத்துச் சற்று நல்லவெல்லங் கூட்டிப் பசும்பாலிற் கலந்து கொடுக்கவும். ஒருநாள் கொடுக்கவும். உச்னமும் வாந்தி முதல் முன் சொன்னவை யெல்லாம் முறியும்.

இன்னம்

ரசக்கட்டு முறிக்க : பால், சிறுகீரை வேரொடு பிடி, அருகம் வேர் பிடி, தட்டியிட்டு உரியாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்கவும்.

ஏழுநாள் கொடுக்க சகலமும் முறியும்.

+ரசம், கந்தகம், சுத்திக் குறையால் ரோகம் வரும் வகை. இரசத்திலெட்டுத் தோசமுண்டது.

**செய்குணம்:** கந்தகத் தோசத்தினாலே சாட்டியமுண்டாம். வன்னித் தோசத்தினால் எரிவுண்டாம். காஞ்சலி தோசத்தினாலே வீரிய நட்டமாம். விச தோசத்தினாலே மரணமுண்டாம். இரத்த தோசத்தினாலே மூர்ச்சை உண்டாம்.

கிருமி தோசத்தினால் சிரங்குண்டாம். சுத்தியாய்த் தோசமில்லாதது. வியாதியையும் மரணத்தையும் தீர்க்கும். தோசத்துடனே கூடியிருக்கும் ரசம். விசமென்று சொல்லப்படும்.

எட்டுத் தோசமும் சுத்தி செய்யும் இரசம் ஒருமடங்கு, செங்கற் பொடி பதினாறு மடங்கு, மஞ்சட் பொடியுங் கூட்டிக் கற்றாழைச் சாறுவார்த்துக் குழியம்மில் இட்டரைத்துத் தேசிச் சாறுவிட்டரைத்து ஒருநாள் பின்பு காடியிற் கழுவி எடுக்க நாகதோசம் போம். அழற்சிப் பொடி கூட்டிக் கற்றாழைச் சாற்றில் அரைத்துக் காடியிற் கழுவ மலதோசம் போம். கொடுவேலிப் பொடியிட்டு கற்றாழைச் சாற்றிலரைத்துக் காடியிற் கழுவ அன்ன தோசம் போம். ஊமத்தம் வேர்ப் பொடி கூட்டி கற்றாழைச் சாற்றில் அரைத்து காடியிற் கழுவச் சாஞ்சலிய தோசம் போம்.

---

*குறிப்பு : பல்வேறுவகை தோசங்களும் மாற்றும் கூறப்பட்டுள்ளன.*

***தோசங்கள் :*** *வேறு சித்த மருத்துவ நூல்களில் இல்லை.*

திரிகடுகு பொடி கூட்டிக் கற்றாழைச் சாற்றில் அரைத்துக் காடியிற் கழுவ தோசம் போம். நெருஞ்சி வேர்ப் பொடி கூட்டிக் கற்றாழை இஞ்சிச் சாற்றில் அரைத்துக் காடியிற் கழுவ வன்னி தோசம் போம்.

பின்பு சீலையிலிட்டு வடி கொண்டு சொன்ன மருந்துகளிலே ஒவ்வொன்றில் ஏழுதரம் அரைக்கவும். இந்த மருந்துகள் ஒரு பானையிலிட்டு மூடு சீலைமண் செய்து உலை மூடியில் காடி வார்த்தடுப்பில் வைத்து ஒரு சாமம் எரித்த ஆற்றி உலை மூடியில் பற்றியிருந்த ரசம் சுத்தியானதில் மிகவும் சுத்தி எனச் சொல்லலாம்.

**அட்ட லோகமும் மாரணம் பண்ணும் விபரம்:**

| | |
|---|---|
| வெள்ளீயத்துக்கு | – அரிதாரம் |
| காரீயத்துக்கு | – மனோசிலை |
| உருக்குக்கு | – சாதிலிங்கம் |
| செம்புக்கு | – கந்தகம் |
| வெள்ளிக்கு | – மாசிகம் |
| பொன்னுக்கு | – பொன்னிமிளை |

இந்த லோகங்களைத் தகடு தட்டி அந்தந்த லோகங்களுக்குச் சொன்ன மருந்தை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து அந்தந்த தகட்டில் பூசி உலர்த்தி அந்தகட்டை ஒரு ஓட்டிற் வைத்து மேலோடு மூடிச் சந்து வாய்ச் சீறும். மண் செய்த கெச புடமாவது. முழுப்புடம் போட்டு எடுக்கவும்.

இப்படித் தனித்தனிப் புடமிட்டுக் நன்றாய் மாற்றமாகப் பற்பமாய் சகல பிரயோகங்கள், மாத்திரை வகைகள் சூரண பற்பங்களுக் கெல்லாம் கூட்ட நன்று.

வங்கம் செம்பொன்றுக் காமாட்சிகம் வெள்ளிக்காம் எங்கும் அரிதாரம், மனோசிலை, சாதிலிங்கம், வெண்காரம், நாவி, திரிகடுகு, இவை சமனாய்க் கூட்டி இஞ்சிச் சாற்றில் ஒரு நாள் குப்பைமேனிச் சாற்றில் ஒருநாள் சுத்தி செய்து ஒருநாள் மூன்று சாற்றிலும் மூன்று நாள் அரைத்து வழித்துக்

---

+ *இரசம் – இலியம்*

குன்றிமணிப் பிரமாணம் குளிகை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு நற்சீரகம் குடிநீர் வைத்து அதிலொரு குளிகையிட உச்ணம் தீரும்.

கண்டங்கத்திரி தூதுவளை, ஆடாதொடை, சங்கு, நொச்சி, முருக்குக் கரிப்பான், வாதமடக்கி, அட்ட கசாயமென்று பேர். இந்தக் கசாயம் வைத்து திப்பிலி உடன் தேன் கூட்டி இரண்டு குளிகையிட காசம், இருமல், இளைப்பு, உப்புசம், ஈளை இவையெல்லாம் தீரும். கைப்புப் புளிப்புத் தவிர்க்கவும். இது நன்று.

## ஈளை இருமல் குளிகை

எலுமிச்சம் பழத்தைப் பெட்டிமூடியுமாய் அறுத்து விதை எடுத்துப் போட்டு அதுக்குள்ளே கந்தகம் கொட்டைப் பாக்களவு வைத்து மூடிக் கொண்டு மூடி நூலில் கட்டி ஏழு சீலை மண் செய்து குக்குட புடமாக வைத்தெடுத்துத் தோடு கூட அரைத்துப் பருத்தி விதையளவு குளிகை செய்து சர்க்கரையிலிட ஈளை இருமல் தீரும்.

## இருமலுக்கு பற்பம்

| | |
|---|---|
| கருமுட்கம் வேர் | - 6 பலம் |
| செம்புப் பொடி | - 4 பலம் |
| கந்தகம் | - 4 பலம் |

கரிப்பான் சாறுவிட்டரைத்து சீலையில் கட்டி நன்றாய் சீலைமண் செய்து முக்குருணி எருமுட்டியதிற் புடமிட்டு ஆறியெடுத்து வைத்துக் கொண்டு பருத்தி விதையளவு தேனிற் கொள்ள இருமல் தீரும்.

## சுவாச காச இருமல் சுரக் குளிகை

சுக்கு திப்பிலி, வெண்காரம், அரிதாரம், இரதம் நாவி, நொச்சிலை, வாளம், சமன்கூட்டி, கரிப்பான் சாற்றில் சாமம். நொச்சியிலைச் சாற்றில் சாமம், அரைத்துப் பாவட்டைக் காய் அளவு குளிகை செய்த இஞ்சிச் சாறும் தேனும் சரி கூட்டி ஏழு உண்டை கொடுக்க சுவாச காசம், இருமல், சுரம் தீரும்.

## சகல வியாதிக்கும் ரோகனாதிக் குளிகை

ரசம், கந்தகம், நாவி, இருவி, அரிதாரம், சுக்கு, திப்பிலி, மிளகு, வெண்காரம், வாளம், தான்றிக்காய், கர்கம் கூட்டிக் கரிப்பான் சாற்றில் ஒவ்வொரு சாமம், ஏழு நாள் ஏழரைப்பு அரைத்து சிறு பாக்களவு உண்டை பண்ணி வைத்துக் கொண்டு வயிற்றுச் சீழ் மாரடைப்பு, சீழ், பெரும்பாடு, விப்புருதிக்கும் இளநீர் காச்சின தாதலால், இளவெந்நீரிலோ முன் கசாயத்தில் ஒரு குளிகை இடவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

மூலத்துக்குச் சாதிக்காயில் கொடுக்கவும். வாய்வுக்கு சீரகக் கசாயத்தில் கொடுக்கவும்.

**சூலை வலிக்கு :** முருங்கைப் பட்டைச் சாற்றில் கொடுக்கவும். பிரமியத்துக்கு மருதோன்றிச் சாற்றிலிடவும்.

**காய்ச்சலுக்கும் குளிருக்கும்:** நெல்லிக்காய் வெந்தய கசாயத்தில் இடவும்.

**கட்டுப்பட்ட மலத்துக்கு :** ஆமணக் கெண்ணெயில் இடவும்.

**எரிகுன்மத்துக்கு :** சீந்தில் தண்டு நீரிலிடவும்.

**காச நோய்க்கு :** வெள்ளாட்டுப் பாலில் இடவும்.

இன்னம் கடலாந்த மெண்பது

| | |
|---|---|
| மிளகு வராகனெடை | - 4 |
| கடலாமணக்கு | - 80 |
| வாளம் வராகனெடை | - 8 |
| வெண்காரம் வராகனெடை - 1 | |
| ரசம் வராகனெடை | - 1 |
| சுக்கு வராகனெடை | - 1 |

குளிர் நீர்விட்டு ஒரு சாமம் அரைத்து சுண்டைக்காய் அளவு உண்டை செய்து நிழல் பின்பு வெயிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு விரோசனத்துக்குக் குடி நீர் கொடுக்கவும். கழியும் இளைப்பானால் - வெந்நீரில் குளித்து மோரும் சோறும் உண்ணவும். நெஞ்சில் சீழ்

விழுகிறதுக்கு, சாதிக்காய், கிராம்பு, திப்பிலி, இவை யாவும் பொடி செய்து காசிடை பொடியில் ஒருண்டை தேன் கூட்டி இடவும்.

காற்றடச்சலுக்கு வாயுவுக்கும், சாரணை வேர், தும்பை வேர், குளஞ்சி வேரும் நறுக்கி, நாழி நீரில் விட்டு உழக்காய்க் காய்ச்சி அதில் மூன்று உண்டை இடவும்.

**கிராணிக்கு:** கருஞ்சீரகம், வெள்ளுள்ளி, ஓமம், அரைத்ததில் மூன்றுண்டையிடவும். இப்படி எட்டு நாளிடவும்.

காலுங் கையும் வீங்கின கிராணிக்கு நீர்முள்ளி வேரும், தண்டும், தறித்து கசாயம் வைத்ததில் மூன்றுண்டை யிடவும். இப்படி எட்டு நாளிடவும். சுக்கிலப் பிரமியத்துக்கு : காஞ்சொறி சமூலமும் இடத்துப் பசும்பாலில் பிசைந்து வடித்ததில் சீனிகொண்டு மூன்றுண்டையிடவும். இப்படி எட்டு நாள் இடவும்.

சுரத்துக்கு சம்பைக் கிழங்கு அரைத்துப் பாலில் கரைத்து வடித்ததில் ஒன்று இரண்டு உண்டை இடவும். சேத்துமத்துக்கு தேனில் கொடுக்கவும். படர் தாமரைக்கு கண்டங் கத்திரி வேர் கசாயத்தில் இடவும்.

வெதுப்புக்கு தண்ணீர் கொடுக்கவும். வயிற்றுக் கடுப்புக்கு எருமைத் தயிரில் கொடுக்கவும்.

+சேவைக்கு எருமைச் சாணம் பிழிந்து தண்ணீர் கொடுக்கவும்.

**காமாலைக்கு:** கீழ்க்காய்நெல்லிச் சாற்றில் கொடுக்கவும்.

**பாண்டுவுக்கு :** நாயுருவிப் பதம் பண்ணின நீரில் கொடுக்கவும்.

**வீங்கிய உடம்புக்கு:** சூரைத் தண்டு கசாயத்தில் கொடுக்கவும்.

**கர்ப்ப சூலைக்கு:** வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும்.

**மூலவியாதிக்கு:** பலாசம் பட்டைக் கசாயத்தில் கொடுக்கவும்.

இப்படி அனுபானம் அறிந்து கொடுக்கவும். சகல ரோகமும் தீரும்.

**இன்னம்**

வாளம் (எட்டு), சுக்கு மூன்று, கர்சம், கந்தகம், தீர சுத்த தண்ணீர் கொடுக்கவும். வாயு, மேகவாய்வு குணமாகும்.

ஈளை நோய், சேற்மை பித்தம், பாண்டு உருக்காமாலை, குன்மம், வாயு இவைக்கு இளவென்னீரில் கொடுக்கவும்.

**பத்தியம் :** மோர் சாதம் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

நச்சணாங்காரம் வீரம்
நல்லிந்துராதி வாளம்
கச்சணி சீதம் ஓமம்
கடுதிரி அப்பு ரோணி
நெச்சக கந்தமுங் கூட்டி
நேர்படக் கரிப்பான் சாற்றில்
*கச்சணி முலையாய் கேளார்படையாய்
அரைத்துண்டை குன்றியாக்கே.
இவ்வீச்சர பேதிதன்னை
இஞ்சிச்சாறதனிற் கொள்ள
வெவ்விய சரமும் வாதம்
மிகுந்திடுஞ் சன்னிசூலை
கவ்விய கிருமி குன்மம்
குடகிரி வாய்வு வேகும்
செவ்விதாய் மலசலங்கள்
சிக்கிடாப் பேதியாமே.

## மருந்து வகை விளக்கம்

நச்சின மென்றது நாவி
காரம் பொரிகாரம்
சூதம் ரசம் யிந்து - யிந்துப்பு சாதி
சாதிக்காய் வாளம் - நேர்வாளம்
சீதம் நற்சீரகம்
அப்புரோணி கடுகுரோணி
அறியவும்.

---

* இம்முறை இன்று வழக்கில் இல்லை.

### மலசல குளிகை

மிளகரைக் கடுக்கா யொன்று
மிகுந்த வாமணக்கு மூன்று
வளமுள்ள வாளம் யேழு
வருநீலச் சாற்றத் தேறாதே
உளமகிழ் பழத்திற் றேனில்
உகந்து நீர் கொள்வீறாகில்
சடமிகுங் கிருமி சீதம்
சடக் கெனத் தள்ளுந்தானே.

உரை: மிளகு 1/2 பங்கு, கடுக்காய் 1 பங்கு, ஆமணக்கு 3 பங்கு, நேர்வாளம் 7 பங்கு தேன், பழச்சாறு என்பனவற்றில் பருகக் கிருமி, சீதக் கழிச்சல் தீரும்.

### மலசல உண்டை

நோய் மிகுந்து தாதுதான்
நொந்து மெய் வருந்து தென்றால்
தூய நேர் வாளமிந்து
சுக்கடு மரிசி கூட்டிக்
காயதள்ளிச் சம்பிரத்தின்
கனி பிழிந்தரைத்த உண்டை
வாயுவைக் கலைக்கு மற்ற
மலசல முடைக்குந்தானே.

உரை: நோயால் வலிமை குறைந்து, உடல் துன்பம் அடையும். சுத்தி செய்த நேர்வாளம், சுக்கு, கடுக்காய், மிளகு சமஅளவு எலுமிச்சை சாற்றில் அரைத்து உண்டை செய்து உண்ணவும்.

### கோடாசூரி

இரத அரிதாரம் நீர்விசம்
வசநாபி இருவி
வெள்ளைப்பாசாணம் கந்தகம்
நேர்வாளம் ஒருநிறை
வெங்காரம் அந்நிறை சாதிக்காய்
சுக்கோமம் மிளகு

இவைவகைக்கு மூன்றி டுஇரு

பத்தொரு நாள் பொருவில்

கையாந்தகரைச் சாற்றிடை

விடாவரைத்துப் பொற்றோட்டப்

பாசிப்பயிறள உருட்டிஉலர்த்தி

மருவிய கோடாசேர அருளி

அனுபானவகையில் மலர்நிரை திரைவிடம்

போய் மகாஇனிக் காட்டும்

உரை: தாளகம், நீர் விசம், நாபி, கிருமி, வெள்ளை பாசாணம், கந்தகம், நேர்வாளம், வகைக்கு ஓர் அளவு வெங்காரம் 7 பங்கு சாதிக்காய், சுக்கு, ஓமம், மிளகு வகைக்கு 6 பங்கு 21 நாள் கையான் சாற்றில் அரைக்கவும். பயிறளவு மாத்திரையாக உருட்டவும். இது கோடாசூழியாகும்.

அடுத்து வருபவை அட்டகர்மம்

******

குருவேதுணை

**அட்ட கர்மம்**

**சரசுவதி துணை**

கணபதி காப்பு

**அட்ட கர்மம்:**

காணவே வசியமொடு மாரணமு மெட்டு
கலந்து நின்ற மூலிகையைத் தீர்க்கச் சொல்வோம்.

பூணவே ஒவ்வொன்று கட்டாயமூலி பேரை எல்லாம்
வெவ்வேறே பிரித்துக் கேளு
தோணவே சீதாதேவி செங்கழுநீர் வாங்க
சொல்லுகிறேன் மந்திரத்தை சொல்லுகிறேனே.

ஓம் ஸ்ரீடலக்ஷ்தேவி, மாறா
மாறா குரு குரு மாநில வாணியே
திறமாய்ச், சொல்லி ஆணிவேரைச்
சல்லிவேரை அறாமல்ப் பிடுங்கி
அதைத் தாமரை நூலில்
எந்திரமாய்த் திரியாக்கிக்
கரிகி கூட்டி
இயல்பாக கமலை நெய்யில்
மையைச் சேர்த்து
தந்திரமாய் திலதமிட
அட்சரமே மோக தாட்சியன்றி
வசீகர மாயீர்க்குந் தானே.
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
நந்தைச் சூரி
தாரணிக்குள் சாபமில்லாம்
பெரியோர் பெரியோர்கொள்வர்
சித்தியென்ற யெட்டு மிதுக்குள்
ளேயப்பா பார்

ஜெகமெல்லாம் இதன் பெருமை

திறமை காணார்

சுத்தியென்ற சூரி தனை

தினமும் கொண்டால்

சொல்லவொண்ணா ஆச்சரியம்

இருக்கும் தேகம்

சோதியென்று அறுக்களியே காப்பு கட்டி

சொல்லடா மந்திரத்தை

சூட்டு றேனே.

ஓம் வச்சிரரூபிமகா சுகமானி

வீரியே சுவாஹாயென்று

வாங்கி வந்து நன்றாகச்

சூரணம் செய்

சீனிநேரே ஊட்டு கிறேன்

கலந்து கொண்டு மண்டலம்

தான் உண்ணு ஒருநூற்றிரு

பதுவும் ஒருநாளாகும்

ஆட்டிறேன் பத்திரத்தை வாயிலிட்டு

அப்பனே மலைகளெல்லாம் நொறுக்கலாமே.

நொறுக்கலாம் விரைவெடுத்து

தினமும் கொண்டால்

நூறூழி காலம வரைஇருக்கலாகும்

நொறுக்கலாம் யெந்தெந்த

தொழில்களேனும்

நோகாதே மறுத்து மொரு

கற்பமென்றும்

நொறுக்கலாம் சத்துரு வியாதிதானும்

நுணுநுணுக்கம் உலகத்தோர்

காணாதப்பா

நொறுக்கலாம் யிம்மூலம் சிறசில் வைக்க
நோகாதே தேவதைகள்
போற்றும் பாரே.

### சொர்ண யட்சணி

நொறுக்கலாம் விரைவெடுத்துத்
தினமும் கொண்டால்
நூறாளி காலம் வரை இருக்கலரிகம்
நொறுக்கலாம் யெந்தெந்த
தொழில்களேனும்
நோகாதே மறுத்து மொரு
களபமென்றும்
நொறுக்கலாம் சத்துருவியாதி தானும்
நுணுநுணுக்கம் உலகத்தோர்
காணாறப்பா
நொறுக்கலாம் யிம்மூலம் சிறசில்
வைக்க நோகாத தேவதை
கள் போற்றுமப் பாரே.

### சொர்ண யட்சணி

சுளியான சுளிசுளித்து விகாரம் போலே
சுளிநடுவில் ஓங்காரம் சுத்திக் கட்டி
வளியான வளிவசமாய் ஆத்தாள் பாதம்
வாலை சொர்ண யக்ஷணியின் வசியம் மார்க்கம்
தெளிவான உருவதுதான் எழுது லட்சம்
தெரிந்துணர்ந்தால் யெக்ஷணி
பக்ஷணியே யாச்சு
ஒளிவான பிரணவத்தின் உண்மை கேளு
ஓம் ஹறீம், ரீயும் என்
றுகந்து ஓதே.

## சொர்ண யட்சணி சக்கரம்

பவுன் காசாவது ரூபாயாவது
வைத்து ஜெபம் பண்ணவும்.

## வாலை மோகினி மந்திரம்

ஹறி ஓம் ஐயும் க்ரீயும் சவ்வும்
சவ்வும் க்ரீயும் ஐயும்
மகாமந்திர ராஜ வாலை மோகினி
வா வா! வந்து என் வாக்கிலும்
மனதிலும் முகத்திலும் நிற்க
சுவாஹா
லெக்ஷம் உரு ஜெபிக்கவும்.

## மோகன மை

கிராம்பை திரியில் வைத்து திரித்து
நல்லெண்ணெயில் கொளுத்தி மை
யாக்கிக் கொண்டு திலதமிட்டு
ஓம் ஓம் என்று லக்ஷ முரு ஜெபிக்க
வசியம்.

## விசம் இறங்க மந்திரம்

அரிகருடா! அங்குச கருடா!
திரிபுரகருடா! சிவனொளி கருடா!
ஓங்கார கருடா! ஆங்கார கருடா!
ஶ்ரீநம கருடா! சிவாய கருடா!
ஓம் நமசிவய்ய யெறங்கு யெறங்கு
அகோரகாளியம்மை ஆணை
யெறங்கு யெறங்கு சுவாஹா!

## பாம்புகடியாமல் கட்ட மந்திரம்

உள்ளடி சிங்கம், பிறவடி கீரீ
உட்பெல்லாங் கருடக் கொடி

---

✦ *இம்முறை ஏற்றதல்ல.*

உச்சிக் கருடா! ஆதித்த பகவன்
ஆணை! அலகு திறவாதே சுவாஹா!

## தேள்கடி மீள்க மந்திரம்

கடித்தது சிவம், கடியானத சக்தி
சிவன் கடிக்க, சக்தி யெழுப்ப,
ஓம், ஆம், தீர்ந்தது விஷம்
தீர்ந்தது விஷம் - சுவாஹா.

## ராஜவசிய மந்திரம்

ஓம் வசி ஆம் வசி
அவ்வும் நவ்வும் வசிச்
சர்வ அரசரும் வசிவசி

## தன்கட்டு மந்திரம்

ஓம் சுளித்த ஓரெழுத்தில் நின்ற ஆதிமூல பராபரத்தின் ஆணை.
ஐயும் க்லீயும், சவ்வும் கட்டு
சவ்வுகம் க்லீயும் ஐயும் கட்டு
ஆதிபரப்ரமம், சிவலிங்க
சிவகவசாய கட்டு.

## இன்னமொரு தன்கட்டு

ஓம் அண்டப்பரம்மமா
அண்ட விஷக்கலியும்
அண்டம் எட்டு திக்கும்
பதினாறு கோணமும்
அந்தரப் பாதாள மத்தியமும்
யென்னுடலைக் கட்டி யீஸ்வரி
காக்கவே ஸ்வாஹா!
உறு ஜபித்து விபூதியைப்
பூசிக் கொள்ளவும்.

## பொருள் பெருக மந்திரம்

ஓம் புவனேஸ்வரி, அன்னபூரணி

ஆதிசிவனுக்கு அருள்புரிந்தாற் போலே
அடியேனுக்கு அருள் புரிந்து பொருள் பெறுகவே.
சுவாஹா!

## சத்துரு வசியம்

சிவ வசி இதை விபூதியை
உள்ளங்கையில் வைத்துக்
கொண்டு உ சுளித்துக்
கொண்டு வடகிழக்குப் பார்த்து
ஜபம் பண்ணவும்.

## கண்ரோகம் தொண்ணூறுக்கும் மை

சீனாக்காரம் வராகனெடை - 12
துத்தம் வராகனெடை - 6
இவைகளை சுத்தி செய்து கரிசலாங்கண்ணிச் சாறு படி 1/4
சிறுகீரைச் சாறு படி 1/4
பொன்னாங்காணிச் சாறு படி 1/4

ஒவ்வொரு சாறையும் தனித்தனியே இஞ்சி விட்டரைத்து கட்டியாய் சேர்த்துக் கொண்டு, அந்த எடைக்கு பசு வெண்ணெயை நிறுத்துப் போட்டு மறுபடி அரைத்து தாம்பிரச் செப்பில் வைத்துக் கொண்டு எள்ளுப் பிரமாணம் கண்ணில் போடவும். 2 நாள் ராத்திரி மறுபடி எட்டு நாள் கழித்து.

## பித்துக்குச் சூரணம்

முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், நன்னாரி வேர், கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், வால்மிளகு, அரத்தை, சுக்கு, சாதிக்காய், திப்பிலி, கூகைநீர், கிராம்பு, ஏலம், இவைகள் வகைக்க பலம் 1/4, சீரகம், நெல்லிவற்றல், நெல்பொறி, மிளகு, அதிமதுரம், இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூரணித்து வடிகட்டி சுத்தி செய்த சீனி சமன் கலந்து சாப்பிடவும்.

## சண்ட மாருதச் செந்தூரம்

பருதி மதி யுதித்த திருப்பாற்
கடல் சூழும் புவிதனிலே
பொருந்திய மானுடர்க்கு வந்து
புக்குள வியாதிபின் சற்றே உளணக்கு
குசத்தை அறிந்தே குறுமுனிவர் பின்தன்
புறவே மனதென் புறவே
பொருந்திய மானிடர்க்கு வந்து
புகுந்த வியாதியைத் தீர்ப்ப தற்கு
திருந்திய தோர்உள்தம், சண்ட
மிருதம் என்றோதும்
செந்தூரம் சொன்னார்
வெகு சுருக்கம்.

நயவுரை: அழகான வட்ட நிலாத்தோன்றி, சாகரத்தால் சுற்றப்பட்ட உலகில் உள்ளவர்கள் எனவும், திருமகள் திருப்பாற்கடலில் அவதரித்த புராண நிகழ்ச்சியும், நயமானவர்கள்

உரை: பாற்கடலில் தோன்றும் சூரியன், சந்திரன் உலகில் மனிதர்களுக்கு வரும் நோய்களுக்கு உள்ள மருந்து சண்டமாருதச் செந்தூரமாகும். இதை அகத்திய முனிவர் சொன்னார்.

பெருந்தொல்லைய தான
வெகு சரக்கை
முன்னாள் மூலிகைச் சாறுநல்ல
முத்திடும் பட்டை கசாயவகை
“தன்னால்” அறையாமல் ரவி
தாக்கிடும் வெயிலில் காயாமல்
கள்ளன் போக்குவிதம்
காலடி கண்டாப் போலே.
திடமாகும் செந்தூரம் வெகு
சீக்கிரம் செய்யுந் தொழில்
முறைகேள் பூரம் யிடயாம்
அதில் போட்டிருக்கும்

---

சூழ்–சுற்றிப்பட்ட, திரு– செல்வம், அழகு, திருமகள், இலட்சுமி, பால் – இடம், பரிதி, பலவன் திரு+பால்–வெண்மை,
பரிதி,பருதி–தேர் உருள், வட்டம், சூரியன், உமதி–அறிவு, யானை, நிலவு, மாதம், கடல்– சமுத்திரம்,தேம், பால், துலி.

லிங்கம் அதின் எடையாம்

யின்னம் வேண்டிய கந்தகம்

வராகனெடை செந்தூரம்

வராகனெடை சித்தி செய்த சாக்கை

சுத்தி செய்து

சந்தோசமாகவேதான் கலவந்

தன்னிலிரு ஜாமம் தானரைக்க

வர்ணப்பவள நிறமதில் வந்திடும்

வேகம் உந்தன் மனங்குளிரே

சொர்ண மிதுக்கீடோ வெகு

தாக்கிது தொக்கிது

சொல்லுகிறோம் திறமாய் குகைதனிலந்தச்

செந்தூரம் தன்னையும் குண்டலியை

வைத்தெடைந்து புரமாளும்

அம்மைபோற்றி

அறுகோணம் தன்னில் வைத்து

சாத்திரத்தின் படியே அன்னம்

தன்னுடன் வத்துவும்

சுத்திவைத்து சூஸ்திரம் செபித்து வெகு

தோத்திரம் செய்து

பணிந் தெடுத்து தாய் காரு

மென்று சொல்லி வெல்லம்

தன்னில் தாக்கிடும் பணவிடை

செந்தூரம் நடுவாக வைத்

துருட்டி நடுநாவினில் வைத்து

முழுங்கிடவே படுபாவி வியாதி

யெல்லாம் பின்பு பாராமல்

ஓடிடும் பேருரை கேள்.

சன்னி பதிமூன்றும்

அதில் தாக்கிய குணங்கள் யெட்டு வகை.

செய்முறை: பூரம் 10 பங்கு, இலிங்கம்-10, கந்தகம், வீராகன், தசாமம் கல்வத்தில் அரைக்கவும். பவழ நிறமடையும் தசம் 10 வெல்லத்தில் விடை கொள்ள சன்னி நோய் 13ம் தீரும்.

## பின்னும் ஒரு தோசம் சுரம்

பீலிகை யெட்டும் மகோதரமும் வாதங்கள்
எண்பதுவும் அதில் வந்திடும்
பட்ச வாதமுடன் ஓடும் விரை
வாதம் மிக்க ஒற்ற முடக்கு
நடக்கலோடும்.
அசதி கணுவாதம் புண்ணான
கிரந்தி வெடிசூலையுடன்
வசதி முகவாதம் வந்திடும்
சூலை பவுந்திரமும்
சயித்திய மானதுவும் பின்னும்
தாக்கிடும் கண்டத்தின் மாலையுடன்
வயித்தியம் செய்வோர்க்கு
வலுவான வியதிக்கனுப்பானம்
தெரியாமல் செய்திடுவோர் உன்னைத்
திட்டிடும் வியாதியினாலே
கூறிய வனுப்பானம் செய்யில்
கூறும் வியாதிகள் தீரும் முற்றே.

அகத்திய மகாமுனிவர் துணை.
அனுபான விபரம்
மிளகு தூளில் பணவிடை செந்தூரம் வைத்து
ஏழுநாள் கொடுக்கவும்.

கோழி, பிராந்தி, காட்டுப்புறா பொறியல் செய்து கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள் :** கைகால் சோர்வு, அசதி, சுரம் தீரும்.

## சூலை பதினெட்டுக்கும் மருந்து

பழைய பனை வெல்லத்திலாவது சுக்குத் தூளிலாவது. பணவிடை செந்தூரம் வைத்து பதினைந்து நாள் கொடுக்கவும்.

**பத்தியம்:** கத்திரிப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு, வறுத்து உப்புக் கூட்டிக் கொள்ளவும். புளி புகை ஆகாது. வியாதி யெல்லாம் தீரும்.

சன்னி பதின் மூன்றுக்கும் திருக் கடுகுத் தூள் அல்லது தேன், கோழி முட்டைத் தைலம்.

இதில் பணவிடை செந்தூரம் 5 நாள் கொடுக்கத் தீரும்.

**பத்தியம் :** பொரி, மிளகு நீர்ச் சாதம் கொடுக்கவும்.

புற வீச்சுக்கு – கோழி முட்டைத் தைலத்தில் ஏழு நாள் கொடுக்கத் தீரும். செந்தூரம் பணவிடை.

முருங்கைப் பிஞ்சு, கத்திரிப் பிஞ்சு கூட்டலாம்.

நாவறட்சி தோசத்துக்கு வெற்றிலைச்சாற்றில் பணவிடை செந்தூரம் மூன்று நாள் ஆறுவேளை கொடுக்க வேண்டியது. கடும் பத்தியம்.

மாவலிங்கப் பட்டை பலம் 5, 5 படி தண்ணீரில் போட்டுப் பாதியாகக் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு அந்தக் கசாயத்தில் கோதும்பை, நெய் கொஞ்சம் போட்டுக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். மேற்சொன்ன நாவறட்சி தோரிம் தீரும். வலிப்புக்குத் திரிகடுகுத் தூளில் பணவிடை செந்தூரம் வைத்துத் தேன் விட்டுக் குழைத்து 5 நாள் கொடுக்கவும். கடும் பத்தியம்.

பருத்திக் கொட்டை பால், பசுவின் பால், தேங்காய்ப் பால், இம்மூன்றும் சமனாய் சேர்த்து, பச்சையரிசி கொஞ்சம் போட்டு கஞ்சி காய்ச்சி கொடுக்கவும். தீரும்.

## வயிற்று வலிக்கு

சீரகத்தூளில் பணவிடை கந்தக செந்தூரம் வைத்து தேன்விட்டுக் குழைத்து 3 நாள் சாப்பிடவும்.

பத்தியம் :துவரைப் பருப்பு, கத்திரிப்பிஞ்சு, மிளகுநீர், உப்பு, புளி கூட்டவும்.

## இருமலுக்கு மருந்து

ஆடாதொடைச் சாற்றில் அல்லது சித்திரமூலம் கசாயத்தில் அல்லது அரத்தைக் கசாயத்தில் பணவிடை செந்தூரம் வைத்து 5 நாள் கொள்ளத் தீரும்.

**பத்தியம் :** தூதுவளை, மிளகு, நீர்ச் சாதம் சாப்பிடவும். புளி, புகை ஆகாது.

## மந்தாரக் காசத்துக்கு

சித்தரத்தை, பேரத்தை, வகைக்குப் பலம் கால், அமுரி விட்டிடித்து, ஒரு சட்டியில் போட்டு படி அமுரி விட்டுக் கசாயம் பண்ணி, அந்தக் கசாயத்தில் பணவிடை செந்தூரம் வைத்து மூன்று நாள் கொடுக்கவும்.

**பத்தியம் :** மோர் சாதம் சாப்பிடவும். மற்றொன்று ஆகாது.

## நெஞ்சுவலிக்கு

சுக்குத்தூள் அல்லது மிளகுதூளில் பணவிடை செந்தூரம் பன்னிரண்டு நாள் கொள்ளவும். தீரும்.

**பத்தியம் :** கத்திரிப்பிஞ்சு, பீர்க்கம்பிஞ்சு, துவரைப் பருப்பு, மிளகு, மிளகு நீர் சாதம் கூட்டவும்.

## பித்த மயக்கத்துக்கு

முந்திரிப்பழம், சோம்பு, இவை வகைக்குப் பலம் கால் சாடியில் போட்டு கசாயம் செய்து, அந்தக் கசாயத்தில் பணவிடை செந்தூரம் வைத்து மூன்று நாள் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

## வாந்திக்கு

ஏலம், நெல்பொறி, திப்பிலி, சர்க்கரை, பருத்திப்பால், இந்தக் கசாயத்தில் பணவிடை செந்தூரம் வைத்து மூன்று நாள் கொள்ளவும். இச்சாபத்தியம்.

## வெள்ளை ஒழுக்காளத்துக்கு

| | | |
|---|---|---|
| சீந்தில் சர்க்கரை வராகனெடை | | - 5 |
| சுக்கு | ,, | - 4 |
| ஏலம் | ,, | - 1 |
| இஞ்சி1, திப்பலி | ,, | - 2 |

இவையெல்லாம் சேர்த்து வறுத்து இடித்து சூரணித்து, அதில் பணவிடை செந்தூரம் வைத்து மூன்று நாள் கொள்ளவும். இச்சா பத்தியம்.

**வயிற்று வலிக்கு :** வெற்றிலைப் பாக்கு, சுண்ணாம்பு, இந்த மூன்றையும் இடித்து அதில் பணவிடை செந்தூரம் வைத்து, ஐந்து நாள் கொள்ளவும். காலையில் தலை மயக்கம் உண்டானால் நீர் வார்க்கவும்.

பின்னும் வியாதி அதிகரித்தால் பிராந்தி ஒரு கோப்பையில் விட்டுப் பணவிடை செந்தூரம் விட்டுக் கொடுக்கவும். மயக்கம் மிஞ்சினால் தண்ணீர் வார்க்கவும். மூன்று நாள் இந்த அனுபானம் வைத்துக் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

## எலிக்கடிக்கு

ஊமத்தும் இலையைக் கசக்கி சாறு பிழிந்து அந்தச் சாற்றில் பணவிடை செந்தூரம் வைத்து 3 நாள் கொள்ளவும்.
பத்தியம்: உப்புப் புளித் தவிர்க்கவும். கடும் பத்தியம்.

வெங்காயத்தை நெய்யில் பொறித்துக் கொடுக்கவும்.
சொறி குட்டம், தடிப்புக்கு சந்தனத்தூளில் பணவிடை செந்தூரம் வைத்து பனிரெண்டு நாள் கொள்ளவும். பத்தியம், பால் நெய், மாங்கிசம், கூட்டிக் கொள்ளவும். கருவாடு, புகை, கரப்பான் பண்டம் ஆகாது.

**மேல்தடிப்பு:** தேத்தான் கொட்டை தூளில் பணிவிடை செந்தூரம் வைத்த மூன்று நாள் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

**விசவாந்தி பேதிக்கு:** இஞ்சி ரசம், தேன், கோழி முட்டைத் தைலம், முலைப்பால் இந்த அனுப்பாணங்களில் கொடுக்கவும். இதில் எதிலாவது பணவிடை செந்தூரம் கொடுக்கவும். இச்சா பத்தியம். கடுத்த சாராயம், பிராந்தியிலாவது கொடுக்கலாம்.

தாகம் எடுத்தால்: வசம்பைச் சுட்டு நறுக்கிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். அரிசி வறுத்துக் கஞ்சி கொடுக்கவும்.

நீரடைப்புக்கு வெடியுப்பு பொரித்து அதனுடன் வெங்காரம் பொரித்துக் கூட்டி தேன் சேர்த்துக் பணவிடை செந்தூரம் வைத்துக் கொடுக்கத் தீரும்.

**குன்மம் எட்டுக்கும்:** நல்ல பழுத்த மிளகாய்ப் பழம் 4, 5 அரைத்துக் கழச்சிக்காய் அளவு செய்து அதில் பணவிடை செந்தூரம் வைத்து ஏழு நாள் கொள்ளத் தீரும்.

இச்சா பத்தியம். வாயுப் பண்டம், புளி, புகை ஆகாது.

எலுமிச்சம் பழச் சாற்றை ஒரு கரண்டியில் விட்டு பொங்கும் போது ஒரு பணவிடை செந்தூரம் போட்டு 5 நாள் அல்லது 7 நாள் கொள்ளத் தீரும். மேல்கண்டபடி பத்தியம் வைத்துக் கொள்ளவும்.

ரச கற்பூரம் வராகனெடை 4, சாதிலிங்கம் வராகனெடை 4, வீரம் வராகனெடை 2, கந்தகம் வராகனெடை 1, ரச செந்தூரம் வராகனெடை 1, இவைகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு 4 சாமம் அரைக்கவும்.

### கோடா சூழிக் குளிகை அனுபானம்:

விளக்கெண்ணெயில் 2 குளிகை கொடுக்க பேதியாகும்.

2 குளிகையை பசு வெண்ணெயில் கொடுக்க கிராணி தீரும்.

2 குளிகை பாம்பு கடிவாயில் அரைத்துக் பூச விஷம் தீரும்.

2 மாத்திரை இஞ்சிச் சாற்றில் அரைத்துத் தடவ தேள்கடி விஷம் தீரும்.

2 மாத்திரை நெய்யில் கொடுக்கப் பொருமல் தீரும்.

2 மாத்திரை கஞ்சாச் சாற்றில் கொடுக்க கைகாலசதி தீரும்.

2 மாத்திரை நொச்சியிலைச் சாற்றில் கொடுக்க 16 பிரமேகம் தீரும்.

2 மாத்திரை ஆட்டுப் பாலில் கொடுக்க ரத்தப் பிரமேகம் தீரும்.

2 மாத்திரை எலுமிச்சம் பழச் சாற்றில் உரைத்து உள்ளுக்குக் கொடுக்க மேலிலும் பூச விசம் தீரும்.

நெல்லிக்காய்ச் சாற்றிலிட தாகசுரம் தீரும்.

கரந்தையிலைச் சாற்றில் தீபன முண்டாம்.

புளியங் கொட்டை ஊறின தண்ணீரில் கொடுக்க உச்ணம் தீரும். 2

திரிபலைச் சாற்றில் கொடுக்க மேலெரிவு தீரும்.

பாக்கிலே சுத்தியில் கொடுக்க வசீகரமாம்.

தேனில் கொடுக்க வயிற்று உப்புசம் தீரும்.

கொட்டைப்பாசிச் சாற்றிலிட செம்பட்ட மயிர் கறுக்கும்.

முத்தக் காசுக் சாற்றிலிடக் கழிச்சல் தீரும்.

2 மாத்திரை முருங்கைப் பட்டைச் சாறும், நெய்யும் கூட்டிக் கொடுக்க சூலைக் கட்டுத் தீரும்.

கழு நீரிலிட மாந்தம் தீரும்.

சாதிக்காய் பொடியிலிட வாயு தீரும்.

பிரமியிலைச் சாற்றிலிட யோசனை உண்டாம்.

நொச்சியிலைச் சாற்றிலிட இருமல் தீரும்.

வெள்ளாட்டுப் பாலில் இட சயக் காசம் தீரும்.

நெல்லிக்காய்ச் சாற்றிலிட மேலெரிவு தீரும்.

நல்ல வெல்லத்திலிட மலக்கட்டு தீரும்.

ஊமத்தைச் சாற்றிலிட சன்னி தீரும்.

கோமயத்திலிட சகல விசகடியுந் தீரும்.

கழுநீரிலிட பயித்தியம் தீரும்.

முள்ளங்கிச் சாற்றிலிட மூலம் தீரும்.

இலவ வேரை அரைத்து அதிலிட பிள்ளையுண்டாம்.

சர்க்கரையிலிட பயித்தியம் தீரும்.

தண்ணீரிவிட்டான் கிழங்கு, நன்னாரி வேர், இந்தக் கசாயத்திலிட நீரழிவு தீரும்.

நொச்சி சாற்றில் இடி வாதசுரம் தீரும்.

சுக்கு கசாயத்தில் இட பித்த சுரம் தீரும்.

திரிகடுகு தூளிலும் இஞ்சிச் சாற்றிலும் இட சில்லறைப்பட்ட சுரங்கள் தீரும்.

அந்த மத்த பொடியிலிட நாலு நாள் காமாலை தீரும்.

## சித்தாரந்த கோடா சூழி

ரசம், நாவி, அரிதாரம், செவ்வாலங்கொட்டை, உள்ளி, திப்பிலி, திரிபலை, மிளகு, வகைக்கு 1 பலம்.

| | |
|---|---|
| செம்புப் பொடி | - பலம் 2 |
| அக்கிராகாரம் | - பலம் 1 |
| யவச்சாரம் | - பலம் 1 |
| நீர்வள்ளிவிதை | - பலம் 1 |
| நிலப்பனைக் கிழங்கு | - பலம் 1 |

கரிப்பான் சாறுவிட்டு ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு நாழிகையாக எட்டு நாள் அரைத்து உளுந்துப் பிரமாணம் குளிகை செய்து வியாதியாளன் சரீர பலனும், வியாதிப் பலனுங் கண்டு பலனுண்டாக எலுமிச்சம் பழச் சாற்றில் இரண்டையும் விடவும்.

செரியாக் குணத்துக்குப் பசு நெய்யிலிடவும்.

சீழ்கிராணிக்கு சுக்கு நீரில் இடவும்.

பலவிதக் கிராணிக்கு மோரில் இடவும்.

மூலவியாதிக்கு முள்ளங்கி நீரிலிடவும். விரோசணத்துக விளக் கொண்ணையில் இடவும்.

மலக்கட்டுக்கு வெல்லத்திலிடவும்.

விசத்துக்குத் தேசிப்பழச் சாற்றிலிடவும். உள்ளும் கொடுத்து மேலுக்குக் கடி வாயில் பூசவும்.

பொறுக்க வேண்டி நாலு நெல் முளைச்சாற்றிடவும்.

லேபனத்துக்குத் தேனிலிடவும்.

விருட்சி வெள்ளுடைப்பு, நீர்ப்பாடு குடற்படுவனுக்கு முத்தக் காசிலிடவும்.

அசீரணம், நித்திய கிராணி, சூலைகிராணி, சூலைக் கடுப்புக்கு முருங்கைப் பட்டைச் சாற்றிலிடவும். செரியாக் குணத்துக்கு தயிரிலிடவும். சன்னிக்கு ஊமத்திலைச் சாற்றில் இடவும். இதிலிடத் திமிர் வாதமுந் தீரும்.

பித்தத்துக்குக் கோசலத்திலிடவும். சகல வியாதிக்கும் கரிப்பான் சாற்றிலிடவும்.

**கண்புகைச்சலுக்கு:** எலுமிச்சம் பழச் சாற்றிலுரைத்திடவும்.

உடம்பெரிப்புக்கு: நெல்லிக்காய்ச் சாற்றிலிடவும். தண்ணீரில் பித்துங்களை நீரில் உச்ணம் தீரும்.

**வாய் நடுக்க வாதத்துக்கு:** சாதிக்காயில் இடவும்.

உடல் வீக்கத்துக்கு : அரசம் பொடியில் இடவும். மற்றும் அனுபானம் அறிந்திடச் சகல ரோகமுந்தீரும்.

## ஆனந்த கோடா சூழி

ரசம் நாவி அரிதாரம், நிர்விசம்
வெண்காரம் இருவியகாரம்
கரம் நொச்சிலை கந்தகமும் நிசமாகத்
திரிகடுகுத்திரிபலை வாலுள்ளி
நிரைகடு கொவ்வொருகழஞ்சி வாளமிரு பதுவாந்
தசமூல பே கழஞ்சி தாம்பிரபற்பம்
கையாந்தகரைச் சாற்றேழுநாள் ஏழு
சாமமரைத்துருட்டி
நிசையளவாயுருட்டி நிழலுத்தியெந்த
நோய்க்கு மிடுவதானந்த
கோடாசுழி யிதுவே.

உரை: இரசம், நாபிதாரம், இருவிநிர்விசம், வெங்காரம், தக்காளி, நொச்சியிலை, மனோசிலை, கந்தகம், திரிகடுகு, திரிமலை, பூண்டு, வாலுளுவை ஒரு கழஞ்சு வாளம் 2-, தசமூலம் தாமிரபற்பம் 7 நாள் 7 சாமம் அரைத்து, நிழலில் உலர்த்தவும்.

சுக்கு நீரிலாதல், சாதிக்காய்யிலாகுதல், மோரிலாகுதல், ஒருகுளிகையிடக் கிராணி தீரும்.

பசு வெண்ணை முருங்கைப்பட்டைச் சாறும் கூட்டி அதிலிட இளைப்புத் தீரும்.

கையாந்தகரைச் சாற்றில் கொடுக்க மூச்சுப் பின் வலந் தீரும்.

---

*கரம் – தக்காளி*

அவுரிச சாற்றில் கொடுக்க ஐந்துவகைக் குன்மமுந் தீரும். வசம்பிற் கொடுக்க வாய்வுப் பிடி நீங்கும். பித்தமெடுத்தால் கையாந்தகரைச் சாற்றில் கொடுக்கவும். அன்றிற் பசு நெய்யிற் கொடுக்கவும். பாக்கு வெற்றிலையிற் கொடுக்கவும். குளிர்ந்த நீரில் கோசலத்தில் சீனி, இதில் ஒன்றைக் கொடுக்கவும். தாதுவற்றினால் நொச்சிச் சாற்றில் கொடுக்கவும். சுக்குக் கும்மட்டிச் சாற்றில் கொடுக்கவும். அன்றிப் பாலிற் கொடுக்கவும்.

நீர் கடுப்புக்கு – நீர் வள்ளிக் கிழங்குச் சாற்றில் கொடுக்கவும். அன்றி வெற்றிலையிற் கொடுக்கவும். லேபனத்துக்குத் தேனிற் கொடுக்கவும்.

ஆண்கட்டுக்கு – பனை வெல்லம், பலாவிதையும் கூட்டிக் கொடுக்கவும்.

வெள்ளோக்காளத்துக்கு – சந்தனத்திற் கொடுக்கவும்.

கர்ப்பம் தரிக்க : பொன்னாவாரைச் சாற்றில் கொடுக்கவும்.

புத்திர சீவனம் அணிய – செண்பகப் பூவிற் கொடுக்கவும்.

இதிலிட உடம்பு நாற்றமும் போம்.

வயிற்று வியாதிக்குப் பசு வெண்ணெயிலாதல், தேசிப்பழச் சாற்றில் கொடுக்கவும்.

செரியாமையில் வந்த வியாதிக்கு – மாதுளம் பழச் சாற்றில் இடவும்.

வயிறு கழிய விளக்கெண்ணெயில் கொடுக்கவும்.

எல்லாப் பாம்புக்கும், கொத்தமல்லியும் பசு வெண்ணெயிற் கூட்டி அதிலிடவும்.

தேள் விசத்துக்கு, நொச்சிச் சாற்றில் கொடுக்கவும்.

தோசத்துக்கு சீனியிற் கொடுக்கவும்.

எல்லாச் சுரத்துக்கும் சீரகம் பொடியிற் கொடுக்கவும்.

தாபசுரத்திற்கு நொச்சிச் சாற்றில் கொடுக்கவும்.

சீத சுரத்துக்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்.

வாத பித்தங் கூடினால், கொத்தமல்லியும் சுக்கும் உரிய நீரில் ஆழாக்காய் காய்ச்சி வடித்ததில் ஒரு குளிகையிடவும்.

சேத்தும சுரத்துக்கு – கஞ்சாங் கோரைச் சாற்றிலிடவும்.

விசசுரத்துக்குக் கொத்தமல்லி சுக்கு அசமோதகங் கூட்டி நாலொன்றாய்ச் காய்ச்சி அதில் ஆறு குளிகையிடவும்.

இது காய்ச்சல் வரும் நேரம் கொடுக்கவும்.
கொடுஞ் சுரத்துக்கு மூன்று நாள் கொடுக்கவும். தாபசுரத்துக்கு நெல்லிக் கொடுக்கவும்.
உடம்புத் திமிருக்குக் கையாந்தகரைச் சாற்றில் அரைத்துப் பூசவும்.
அன்றி கோசலத்தில் அரைத்துப் பூசவும்.

+மூப்பட்ட கண்ணுக்கு நல்லெண்ணெயில் அரைத்துப் பூசவும். கண் தெரியாததிற்கு அவ்வாறு பூசவும். (இம்முறை இன்று ஏற்றதல்ல)
இருமலுக்கு - வெள்ளாட்டுப்பாலில் கொடுக்கவும்.
அன்றிச் சாறடைச் சாற்றிலாதல், திரிபலை, திப்பிலியாதல், ஒரு குளிகையிட ஈளை, இருமல், புகைச்சல், இளைப்புத் தீரும்.
அன்றி நெல்லிக்காய்ச் சாற்றிலுமிடலாம். ஆனைவாங்கிச் சாற்றிலொரு மண்டலம் கொள்ள நரை, திரை, மாறும்

வயிற்குக் கடுப்புக்கு: முத்தெருக்கஞ் செவிச் சாற்றில் கொடுக்கவும்.
சூலைக்கடுப்புக்கு - இலவங்கத் திரிகடுகும் பொடித்ததிலொரு குளிகை இடவும். சன்னிக்கு ஊமத்தம் இலைச் சாற்றில் கொடுக்கவும்.
சன்னி வாதத்திற்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்.
முக சன்னிக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் பல்லடியினுந் தேய்த்து உள்ளுக்குங் கொடுக்கவும்.
பிள்ளைப் பேற்றில் வந்த சன்னிக்கு நெய்யுங் கூட்டியொரு குளிகை கொடுக்கவும்.
மூலத்துக்கு முள்ளங்கிக் கிழங்குச் சாற்றில் கொடுக்கவும்.
அந்தியும் சாதிலிங்கத்திற் கொடுக்கவும்.
அன்றி எலுமிச்சம் பழச் சாற்றில் உரைத்துக் கொடுக்கவும்.
பவன வாயிலுந் தடவவும்
பாண்டு ரோகத்துக்கு: மாவிலவங்கைப் பொடியில் சாற்றில் கொடுக்கவும்.
அன்றி அரசம் பட்டைச் சாற்றில் கொடுக்கவும்.
**இடுப்பு நோவுக்கு : சுக்கு நீரில் கொடுக்கவும்.**
**பெரும்பாட்டுக்கு : சந்தனத்தில் கொடுக்கவும்.**

---

*மூப்பட்ட – முற்பட்ட – முந்துதல், எதிர்படுதல், ஆனைவாங்கி – நெருஞ்சில்*

முதுகு நோவுக்கு : அசமோதகமும் வசம்புங் கூட்டிக் கொடுக்கவும்.

வெப்புப் பாவைக்கு கருப்புக் கட்டியில் கொடுக்கவும்.

கடிவிசத்துக்குத் தேசிச் சாற்றில் கொடுக்கவும். அன்றி தூன்றி இலைச் சாற்றில் கொடுக்கவும்.

கிரந்திக்குக் கோசலத்தில் கொடுக்கவும். படர்தாமரைக்குப் பழந்தண்ணீரிலும், உரைத்துப் பூசவும்.

கண்ணோவுக்கு நல்லெண்ணெயில் உரைத்து நெற்றியில் இடவும்.

## கோடாசூழி

இரசம், கந்தகம், வெண்காரம், இசை
திரிகடுகு, நாவி திரிபலை
ஒவ்வொன்று வாளம்
திரளப்பதிங் கழஞ்சு கூட்டி புரசம் வேர்
சாற்றில் சாமம் அரைத்துப்
பொருந்துங் குன்றியிடை
தரமிது கோடாசூழி சகல நோய்
தணிக்குந் தானே.

உரை: இரசம், கந்தகம், வெங்காரம், யிததிரிகடுகு, நாபி, திரிபலை 1 பாங்கு, நேர்வாளம், அறுகம்புல்-கழஞ்சு. புரசுவேர் சாற்றின் சாமம் அரைத்து, குன்றுமணி அளவு உருட்டவும். அனைத்து வகை நோய்களையும் போக்கும்.

இதற்கு அனுபானம் விபர விபரம்.

இஞ்சிச் சாற்றில் சுரமூலரோகம் வயிற்றுள வியாதி இலமம்
சூலை பதினெட்டாகுவை
கெண்ட கவுசை அகுவை விப்பிருதி
மிஞ்சும் பாண்டு கரப்பான் மகா
கூதறம் சோகை சயம் வாய்நீறு
வீழ்தல் காச சுவாசம்
எலிகடி யின் இருமல் ஈளைப்

---

பதின் – பதம் – பதம் – அறுகன்புல், "பதன்" கழஞ்சு என்றாதல் வேண்டும்.

வஞ்சியுமி நீர் செம்மை புளி கசப்பு
நெய்நாறுதல் பயித்திய
மாறுங் கரிப்பா
நிஞ்சி நொச்சி முருங்கைவேர்ச்
சாதிவேர்வைய விழல்
எஞ்சாச் சருவ சன்னி குளிர்
சுரம் போம் வெந்நீர்
திரிகடுகுக் கசாய முள்ளித்
தயிலமிதில் லென்
குஞ்சந்து வாதமுமே.

யேகாச் செற்றுமைக்கட்டு விடர்ச்
சுரம் தேன்தனிலிடில் கலுமினிக்கு
மினிய சர்க்கரை நெய் விழுது
வாழைப்பழம் வெல்லம்
பாகாற் மொழி மினே யிவை களொன்றி
லொருமாத்திரை சேர்த்துப்பருகிற்
சுக விரோசனமாம் பகருஞ்சருவ
வியாதிக்கும்
வாகா யிதனை யனுபான வகை
தானறிந்து கொடுத்தாக்கால்
மாற்றுங் கோடாசூழியென
வழங்குமிதன் பேர்மணிச்சுடிகை
நாகாபரணத் தனி மூர்த்திநரை
சேரபடீறப் பொதிய மலைநாதன்
வணங்கிக் கேட்க வன்று நயந்து
மொளிந்ததிது வாமே.

**மகா கோடாசூரி குளிகை**

ரசங் கந்தகம் நாவி இருவி
அரிதாரம் வெள்ளைப் பாசாணம்
கவுரி பாசாணந் துத்தந் துரிசு
வெண்காரம் சாதிலிங்கம்திரி

கடுகு திரிபலை இருசீரகம் ஓமம்

அன்னபேதி பூர பூசுத்திசெய்த

நேர்வாளம் எருய

இவையெல்லாங் கூட்டிப்

பாகலிலைச் சாற்றில்த் தும்பை யிலைச் சாறு

துளசியிலைச் சாறு

நொச்சியிலைச்சாறு, வெற்றிலைச்சாறு

கரிப்பான்சாறு ஒவ்வொரு சாற்றிலும் ஒவ்வொரு நாள் அஞ்சு நாழிகையாய் அறுவகைச் சாற்றிலும் ஆறுநாள் அரைத்து இந்த ஆறுநாள் மருந்தம்மியியே யிருக்க அன்றாடகன் வெயிலிலே வைத்தெடுதுப் பின்பு.

உளுத்தம் பயிறுப் பிரமாணம் குளிகை செய்து நிழலுலர்த்திப் பின்பு வெயிலிலுலர்த்துவது அஞ்சு நாழிகை யுலத்திய பின்பு எருமைக் கொம்புச் சிமிழில் இட்டு வைத்துக் கொண்டு கொடுக்கவும்.

இதற்கனுபானம் விபரம்

சன்னிக்குத் துளசியிலை, பாகலிலை, தூதுவளையிலை, ஆடாதோடை யிலை, சீந்தியிலை, வேப்பிலை, கண்டங்கத்திரியிலை, வகைக்கொருபிடி கூட்டித் துவைத்துப் பிட்டவித்துச் சாறு பிழிந்து அச்சாற்றிலொரு குளிகையிடவும்.

அல்லது நல்ல பாம்புகண்டம் ஒன்று, குதிரைக் குளம்பு இரண்டு வெள்ளுள்ளி பலம் 1,

| | |
|---|---|
| சுக்கு பலம் | - 1/2 |
| வசம்பு பலம் | - 1/4 |
| கோட்டம் பலம் | - 1 |
| மிளகு பலம் | - 1 |
| குளிகை | - 15 |

இவையெல்லாம் பொடி செய்து

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | - உரி |
| நல்லெண்ணெய் | - உரி |
| புங்கெண்ணெய் | - உரி |

ஆமணக் கெண்ணெய் - உரி

இலுப்பெண்ணெய் - உரி

கூட்டிக் கறகமுங் கலந்து அடுப்பேற்றி எருக்கம் விறகால் எரியவிட்டு மாபுதமறிந்து வடித்து இடு தலங்கள் தோறு மிடவும். கரக மொற்றிடவும்.

## பயித்தியச் சன்னிக்கு

முசுற்று முட்டை சர்க்கரை பசுவின் பாலுங் கூட்டி இதிலிரண்டு குளிகையிடவும்.

**சேற்றும சன்னிக்கு :** ஆடாதோடை இலை பிட்டுக் கசாயத்தில் இரண்டு குளிகை யிடவும்.

பயித்திய சுரத்துக்கும் சன்னிக்கும் ஆடாதோடை கண்டங்கத்திரி யிலை, பிட்டுச் சாற்றில் 2 குளிகை யிடவும்.

**தாபசுரத்துக்கு :** நெல்லிக் காய்ச் சாற்றில் பனை வெல்லங் கூட்டி அதிலொரு குளிகை யிடவும்.

**பித்த சுரத்துக்கு:** நெல்லிக்காய் கசாயத்தில் 2 குளிகையிடவும் மூன்று நாளை நாலு நாளை மாறலுக்கு நாயுருவியிலைச் சாற்றிலிடவும். இரண்டு குளிகையிடவும். அல்லது நாலுநாளை மாறலுக்கு ஊமத்தியிலைச் சாற்றிலிடவும்.

அகத்து சாம்பலாகும் சுரத்துக்குத்
தயிரிலிரண்டு குளிகையிடவும்

பித்த பயித்தியம் அறிமியாலுக்குச் சீனியில் 3 குளிகையிடவும். பயித்தியத்துக்கு ஊமத்தியிலைச் சாற்றிலிடவும். அன்றி நரிப்பயிறுஞ் சாற்றில் கல்லாலிலைச் சாற்றில் 2 குளிகையிடவும்.

**இரத்தபித்தத்துக்கு :** திரிபலை வகைக்கு பலம் 2 , கஷாயமுட்டதில் 2 குளிகை யிடவும்.

**விசத்துக்கு :** மிளகு பொடி, பசு வெண்ணெயில் 3 குளிகையிடவும்.

**கண்ணுக்கு :** எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு குளிகையை உரைத்திடவும்.

**அஞ்சனம் :** வெற்றிலைச் சாற்றிலுரைத்திடவும். உள்ளியில் ஒரு குளிகையை நசியம் விடவும்.

**கவுதும்பையிலை எருக்கம் பாலில் அரைத்துள்ளுங் கொடுக்கவும். கடிவாயிலும் பூசவும்.**

எரிவிரியனுக்கு : தக்கோலப் புட்டியில் கள்ளிப் பால் வார்த்தரைத்து அதில் 3 குளிகை கூட்டிப் பூசவும். அன்றி மூவிலை மின்னிச் சாற்றில் 2 குளிகை உள்ளுக்குக் கொடுக்கவும்.

**பனசைக்கு :** ஊமத்திலைச் சாற்றில் 2 குளிகை யிடவும்.

பெருவிரியனுக்கு : செருப்படிச் சாற்றில் குளிகையிடவும்.

**மூக்கனுக்கு :** கரிப்பான் சாற்றில் 2 குளிகை யிடவும்.

வசம்பு கோசலம் விட்டு அரைத்ததில் அதில் ஒரு குளிகை அஞ்சனம் இடவும்.

வலிகுன்மம் எரி குன்மத்துக்கு: வசம்பு, காயம், திப்பிலி, சிவன், வேம்புவேர், இந்துப்பு வகைக்கு பலம் 1/2 பொடி செய்து தேங்காய்ப் பாலில் இட்டு 2 குளிகை சாப்பிடவும்.

**வலிகுன்மத்துக்கு:** முருங்கைப் பட்டைச் சாற்றில் 3 குளிகையிடவும். இதில்லாவிட்டால் உமிக்காந்தச் சாம்பற் சலம் விட்டுப் பிசைந்து தெளிந்து அது இறுத்து அந்நீரில் 2 குளிகை யிடவும்.

**எரி குன்மத்துக்கு:** கருஞ்சீரகம், வெதுப்பிப் பொடி செய்த சர்க்கரை கூட்டிக் குளிகையிடவும்.

**வாதகுன்மம் சத்தி குன்மத்துக்கு:** நல்லெண்ணெய் துளசிச் சாறு கூட்டி 2 குளிகையிடவும்.

வலிகுன்மத்துக்கு 2 குளிகை இஞ்சிச் சாற்றிலிடவும்.

ஈளையிருமலுக்கு ஆடாதோடையிட்டுக் கசாயத்திலிடவும். 1 குளிகை அன்றி நெல்லிப் பருப்பரைத்து இள வெந்நீரில் கரைத்தில் ஒரு குளிகையிடவும். அன்றி திப்பிலி வசம்பு பொடி செய்த தேன் கூட்டி 3 குளிகையிடவும்.

அன்றி ஓமம் பொடி செய்ததில் ஒரு குளிகை கூட்டி யரைத்ததில் வெந்நீரில் கொடுக்கவும்.

**பக்க சூலைக்கு :** கார்போக அரிசி பொடி செய்த இளவெந்நீரில் 2 குளிகையிடவும்.

**வரள் சூலைக்கு :** சமுத்திரா பழமும் ஓமமும் பொடி செய்த கரிப்பானிலைச் சாற்றில் 2 குளிகை யிடவும்.

**பயித்திய சூலைக்கு :** நொச்சிச் சாற்றில் 1 குளிகை யிடவும்.

**ஒட்டிய புண்ணுக்கு :** கோதுமை மாவில் ஒரு குளிகை கூட்டி ரொட்டி சுட்டுத் தின்னவும்.

செரியா குணத்துக்கு : ஓமம் வெதுப்புப் பொடி செய்த சமுத்திராப் பழமும் கூட்டி, இவை வெந்நீரில் அரைத்து ஒரு குளிகை யிடவும்.

**கிராணிக்கு :** பாகலிலைச் சாற்றில் குளிகை யிடவும். அன்றி எருமை வெண்ணெயில் குளிகை யிடவும். அன்றி திப்பிலி மிளகு வெதுப்பி, சாதிக்காயும் கூட்டிப் பொடி செய்ததில் ஒரு குளிகை யிடவும்.

நீர்ப்பாட்டுக்கும், அன்னம் செரிக்கவும். மாதக் கிராணிக்கும் – சீரகம் வெதுப்புப் பொடி செய்து எருமைத் தயிரில் ஒரு குளிகை இடவும்.

**சலக்கிராணிக்கு :** எருமைத் தயிரில் ஒரு குளிகையிடவும்.

**வாயுக்கிராணிக்கு :** பாவட்டைச் சாற்றில் ஒரு குளிகை இடவும்.

**வயிற்றுக் கடுப்புக்கு :** வில்வப் பிஞ்சு, மாதுளம் பிஞ்சும் அதைத்தயிரில் மோரில் வெந்ததில் இடவும். ஒரு குளிகை.

**ஆரைக் கடுப்புக்கு:**

அதிவிடையம் பலம் 1

அபினி பணவிடை, குளிகை 1, கூட்டி, கோழிமுட்டை வெள்ளைக் கருவில் பொறித்துக் கொடுக்கவும்.

வெள்ளுடைப்புக் கழிச்சலுக்கு திரிபலை வகைக்கு பலம் 1,

வில்வப் பிஞ்சு ஒன்று, எருமை மோரில் வெந்தரைத்ததைக் குளிகை இடவும்.

**வயிற்றுக் கழிச்சலுக்கு:**

அத்திப்பட்டைச் சாற்றில் ஒரு குளிகையிடவும்.

**கரப்பனுக்கு :** கற்பூர வல்லி சாற்றில் ஒரு குளிகையிடவும்.

**கரப்பான் சிலந்திக்கு :**

சங்கம் பழச்சாற்றில் ஒரு குளிகை இடவும். அன்றி எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு குளிகையிடவும்.

★**வாதகரப்பானுக்கு :** கழுதை லத்திச் சாற்றில் ஒரு குளிகையிடவும்.

**சேற்றும கரப்பானுக்கு :** பிரண்டைச் சாற்றில் 2 குளிகையிடவும்.

---

★ இம்முறை இன்று பயன்படாது.

சிலந்தி : என்பதுக் கெல்லாம் ஆடா தோடைச்சாற்றில் 2 குளிகை இடவும்.

**சிரங்குக்கு :**

வெள்ளாட்டு நீர் 3/4,

பொடுதலைச்சாறு - 3/4,

குமட்டிச் சாறு - 3/4,

அரளிப்பமுப்பு 1 பிடி

வசம்பு - 4 பலம், குளிகைக் கூட்டி நல்லெண்ணெய் 3/4 கூட்டிக் காய்ச்சி இடவும்.

**சிலந்திக்கு :** சாற்றில் பூசவும்.

**காமலைக்கு :** மஞ்சள் சாற்றில் 1 குளிகை இடவும்.

**பாண்டு சோபைக்கு :** புளியஞ் சிராயச் சுட்டுச் சாம்பல் சலம் விட்டுக் கரைத்துத் தெளிந்த பின் வடித்ததில் ஒரு குளிகை யிடவும். இப்படி மண்டலங் கொள்ளவும். காதுகுத்துக்கு முருங்கையிலைச் சாற்றில் ஒரு குளிகை யிடவும்.

மருந்தீட்டுக்கு வேலிப்பருத்தியிலைச் சாற்றில் ஒரு குளிகையிடவும்.

வாதத்துக்குச் சாரடை யிலைச் சாற்றில் ஒரு குளிகை இடவும்.

அன்றி தேசிப்பழச் சாற்றில் இஃது பலவகை வாதத்துக்கு சுக்குக் கசாயத்தில் இடவும்.

**குதிவாதத்துக்கு :** உவர்மண் மூன்று உழக்கு நீர்காய்ச்சி அதில் 1 குளிகை இடவும்.

**வாதத்துக்கு :** முடக்கொற்றான் சாற்றில் ஒரு குளிகை இடவும். அன்றி சிங்கைப்பட்டைச் சாற்றில் நெய் விட்டதில் ஒரு குளிகை யிடவும்.

**துனுக்கு வாதத்துக்கு :** துடரியிலைச் சாற்றில் குளிகை யிடவும்.

அன்றி நொச்சியிலைச் சாற்றிலிடவும். சந்து வாதத்துக்குச் சாறடையிலைச் சாற்றில் ஒரு குளிகை யிடவும்.

**ஊது வாதத்துக்கு :** காணப்பருப்பைக் கசாயம் வைத்து அந்நீரில் 2 குளிகை யிடவும்.

மருத்தீட்டுக்க காடி தன் தெளிவில் 5 குளிகை இடவும்

முட வாதத்துக்கு : கொன்றைப் பழத்தில் வெந்நீர் விட்டுப் பிசைந்து சாற்றில் ஒரு குளிகை யிடவும். இதில் ஆண் கட்டும் விடும்.

யோனிக் கட்டுக்கு : பிரண்டைச் சாற்றில் இரண்டு குளிகையிடவும்.

மாதத்துக்கு – அம்மான் பச்சரிசியில் ஒரு குளிகையிடவும்.

**இரத்தமா மேகத்துக்கு :**

பால் சோற்றிலிடவும். நில்லாவிட்டால் வெள்ளாட்டுப் பாலில் இடவும்.

**பிரமேகத்துக்கு :** பொன்முசுட்டைச் சாற்றில் 1 1/2 இடவும்.

கண்புழு மேய்ச்சலுக்கு – முருங்கையிலைச் சாற்றிலிடவும்.

**கண்சிவப்புக்கு :** எருமை நீரில் இடவும்.

**பூவுக்கு :** சமுத்திராப் பழமும் ஒருண்டை உரைத்து வெள்ளாட்டுப் பாலில் இடவும்.

கண்ணீரிப் பாய்சலுக்கு – சிறுநீரில் உரைத்திடவும்.

மாலைக்கண்ணுக்கு – நொச்சியிலைச் சாற்றில் இடவும்.

அன்னஞ்ச மிக்க : நீரிலுறைத்திடவும்.

இமையடி வாதத்துக்கு : முலைப்பாலிலுரைத்திடவும்.

முகவசீகரத்துக்கு : கோரோசனை கூட்டி திலதமிடவும்.

ஆண்கட்டுக்கு – கொட்டிக் கிழங்கு கூட்டிக் கொடுக்கவும். தேன்பால் கூட்டுக் கொடுக்கவும்.

**உச்ணத்துக்கு :** மிளகு, திப்பிலி, கசாயமிட்டதில் இடவும்.

**உடம்பெரிப்புக்கு:** தயிரிலிடவும்.

பிளவை, தண்டு பிளவைக்கும் – பொன்னாங்காணிச் சாற்றிலிடவும்.

**கைநாறு பிளவைக்கு :** ஊமத்தைப் பூச் சாற்றில் உரைத்திடவும். அன்றி ஆத்திச் சாற்றிலிடவும்.

**உச்சிப் பிளவைக்கு :** பசுவின் நெய்யிற் பூசவும். அன்றி குன்றிமணித் தக்காளி வேரில் பூசவும். அன்றி அடலியிலைச் சாற்றிலிடவும். செம்பருத்திச் சாற்றிலுமாம். அவுரிச் சாற்றிலும் பூசலாம்.

**நீர்க்கடுப்புக்கு :** பச்சரிசிக் கழுநீரில், சர்க்கரைக் கூட்டி, ஒரு குளிகை அதில் இடவும்.

தலை சொறிக்கு : நல்லெண்ணெய் குளிகை 15, அரைத்திட்டுக் காய்ச்சி தலையில் தேய்க்கவும்.

பித்த சிலேத்துமத்துக்கு : நீருள்ளிச் சாற்றிலிடவும்.

கால்வீங்கி வெடித்ததுக்கு : முயல் புழுக்கைக் கூட்டியறைத்துப் பூசவும்.

சர்வாங்க வீக்கத்துக்கு : நெல்லிப் பருப்பு வெந்நீர் வைத்தரைத்து அதிலிடவும்.

பிரநீர்க் கோருவைக்க : சிறுநீரில் இடவும்.

நீரழிவுக்கு : ஆவாரை வல்லி, மருதம் பட்டை, திரிபலை, திரிகடுகு, கற்கம் இவை அரைத்து குளிகைப் பொடித்து கூட்டி மோரிற் கொள்ளவும்.

அன்றி, ஆவாரைப் பூமித் தைலம் இறக்கி அதில் ஐந்து குளிகை கூட்டிக் கொள்ளவும்.

அன்றி நீர்வள்ளிக் கிழங்குச் சாற்றில் கொள்ளவும்.

சொரிக்குச் சீனக்காரம், சுக்கு இவை கரிப்பான் சாற்றில் அரைத்து ஒரு குளிகை கூட்டி யிடவும்.

தலைமயிர் புழு வெட்டுக்க அரளிப் பாலில் ஒரு குளிகைக் கூட்டி அரைத்துப் பூசவும்.

சிலந்தி அரையாப்புக்கு : எலுமிச்சம்பழச் சாற்றில் ஒருண்டை அரைத்துப் பூசவும்.

எருக்கம் பாலில் கருப்பு கட்டி கூட்டி தட்டிக் கூட்டவும்.

**வெள்ளை அக்கரத்துக்கு:**

சந்தனம் பலம் 1/2

நற்சீரகம் பலம் 1/2

மஞ்சள் - 1

மிளகொன்று குளிகையிரண்டும் கூட்டி பசும்பாலில் அரைத்துக் குழப்பிக் கொடுக்கவும்.

அயர்ந்த பிரகிருதிக்கு : பாலில் இடவும்.

உள்மூலம், புறமூலத்துக்கு : பசு நெய்யிலாதல், எருமைத்தயிரிலாதல் இடவும்.

2 மூலக் கிராணிக்கும், சாதிக்காய் பொடி செய்த அதிலிடவும்.

கர்ப்ப விப்புருதிக்கு : அதிமதுரம், திப்பிலி வகைக்கு பலம் 1, சித்தகத்தி வேர் அரைத்துப் பாக்களவு, கிராம்பு பலம் 1/4, கோட்டம் பலம் 1/2, இவை பொடி செய்துத் தேங்காய்ப் பாலிலிடவும்.

கர்ப்பசூலை, கற்பவிப்பிருதிக்கு கொடாச் சாற்றிடவும். கோசலங் கூட்டியிடவும்.

பழங்கஞ்சியிலிடவும். வாதவிப்புருதிக்கு – அளிசம் பட்டைச் சாற்றிலிடவும்.

கற்ப விப்புருதிக்கு : கொன்றைப் பழச் சாற்றிலிடவும். கோசலங் கூட்டியிடவும். பழங்கஞ்சியிலிடவும்.

கையாந்தகரைச் சாற்றிலிடவும்.

கடிவிசத்துக்கு – காட்டாமணக்குத் தைலத்தில் அரைத்துப் பூசவும். குட்டத்துக்க உத்தமதாணிச் சாற்றிலிடவும்.

செய்யான் கடிக்கு : அரசம் பட்டைச் சாற்றிலிடவும்.

மூஞ்சூறு கடிக்கு : பெருங்காயத்திலிடவும்.

ஆணெலிக் கடித்தால் : பேய்க் கும்மட்டிச் சாற்றிலிடவும்.

பெண்ணெலி கடித்தால் : குப்பை மேனிச் சாற்றிலிடவும்.

புலிக்கடிக்கு : புளியம் விரைத் தோடு பொடி செய்து சிறுநீரிலிடவும்.

காணாக்கடிக்கு : பசுவின் நெய்யிலிடவும்.

ஒருத்தலை வலிக்கு : நாரங்காய் சாற்றிலிடவும். ஒருகுளிகை அரைத்து கோழிக்கு கீற்று வட்டிக் காதிற்குப் போடவும்.

செவிநோய் செவிப்புழுவிற்கு : கீழ்காய் நெல்லிச்சாற்றில் அரைத்துக் காதில் விடவும். அன்றி செருப்படி சாறும் சங்கம் பழச் சாறும் கூட்டிக் காதில் வார்க்கவும்.

குமரகண்டம் வலிப்புக்கு : நெய் கொண்டான் பழச் சாற்றிலிடவும்.

முயலகண்டன் வலிப்புக்கு : கோளிக்காரஞ் சுட்டு சாம்பாராக்கி நீல ஊமத்தஞ் சாறிலிடவும். மண்டை வியாதிக்கு குப்பை மேனிச் சாற்றில் ஒரு உண்டை அரைத்து நெற்றியில் பூசவும். நாசி பீடத்துக்கு - ஒரு உண்டை வெள்ளாட்டு நெய்யிலரைத்து நாசிக்குள்ளே வைக்கவும்.

உண்ணாக்குக்கு : ஒருண்டை நெய்யிலரைத்து உண்ணாக்கில் வைக்கவும்.

விக்கலுக்கு 2 உண்டை இலவம் பட்டைச் சாற்றிலிடவும்.

பல்வலிக்கு : கரு வேலம்பட்டைச் சாற்றில் 2 உண்டை.

2 உண்டை அரைத்துப் பல்லடியில் வைக்கவும். பல்லில் தேய்க்கவும்.

பல்லுக்கும் வயித்து வலிக்கும் வெந்தயம் வெதுப்பிப் பொடியில் கூட்டி இள வெந்நீரில் இடவும்.

இடுப்பு நோவுக்கு வசம்பும் மதுரமும் வெதுப்பிப் பொடி செய்து பாச்சோற்றில் இலைச் சாற்றில் உளுந்தும் பயறுமாக கூட்டி அதிலிடவும்.

கொரை நோவுக்கு : சாரடை வேர் அரைத்து, இளவெந்நீரில் கலக்கி அதிலிடவும்.

அன்றியும் இண்டஞ் சாறும் நல்லெண்ணெயும் கூட்டியிடவும்.

கவுசைக்கு : நொச்சியிலைச் சாற்றிலிடவும்.

மேற்கவுசைக்கு: தகரை விதை வெதுப்பிப் பொடி செய்த அதில் இடவும்.

சர்க்கரையிலிடவும் கற்கண்டிலிடவும்.

கீழ்கவுசைக்கு : பச்சை மஞ்சள் சாற்றிலிடவும்.

வெப்புப் பாவைக்கு : கரிப்பான் சாற்றிலிடவும்.

வெகுமூத்திரத்துக்கு : தேனிலிடவும்.

வெண்குட்டத்துக்கு : செருப்படிச் சாற்றிலிடவும்.

சிறுபுழுகடிக்கு : தீரை, தக்கு புரோசம்பட்டை, விதைப் பொடி செய்து பால், தேன், சர்க்கரை கூட்டியிடவும். அன்றி தன் சிறு நீரிலிடவும்.

தொண்டைக் கட்டுக்கு : சிறிசிக் கழு நீரிலிடவும்.

**தொண்டை யடைப்புக்கு :** நொச்சிச் சாற்றிலிடவும்.

**கற்றாழை நாற்றத்துக்கு :** எண்ணெயிற் கூட்டி விழுங்கவும்.

**பசி தாகத்துக்கு :** ஓமம் வெதுப்பிப் பொடி செய்து அதிலிடவும்.

**மூன்று வகைப் பிரமேகத்துக்கு :** நற்சீரகம், சிற்றிலைப்பாலை, அன்று கடைந்தெடுத்த வெண்ணெய் கூட்டி அதிலிடவும். இப்படி மூன்று நாளிடவும்.

**கல்லடைப்பனுக்கு :** நெருஞ்சில் வேரரைத்து வெள்ளாட்டுப் பாலில் கரைத்ததிலொரு குளிகையிடவும்.

**பிள்ளையுண்டாக :** வெள்ளாட்டுப் பாலிற் கொடுக்கவும்.

பின்னுமனுபானம் அறிந்திடவும்.

## கிராணி கபாட குளிகை

சாதிலிங்கம் வெண்காரம், திரிகடுகு சாதிக்காய், இலவங்கப்பட்டை வெப்பாலையரிசி, நீர்முள்ளி விதை, அதிவிடையம், இலவம் பிசின், காட்டாத்திப்பூ, சமனாகக் கூட்டி அரைக்கக் கசாயம்.

வெப்பாலை யரிசி, அதன்பட்டை, முத்தக்காசு, உதிரிவாழைப்பூ, மாதளையிலை, பெருமரப்பட்டை, பொன்முசுட்டை வேர், வில்வவேர், அரசம் பட்டை இலை, இவை சமனாகக் கூட்டிக் கசாயமிட்டு யெட்டான்றாய்க் காச்சி, அந்தக் கசாயம் விட்டரைத்து மிளகளவு குளிகை செய்து ஒருகுளிகை தேனிலாவது இஞ்சிச் சாற்றிலாவது அத்திப்பட்டைக் கசாயத்திலாவது கொடுக்க சகல கிராணி கழிச்சலும் தீரும்.

## இன்னம் கிராணி கபாடம்

திரிகடுகு, சாதிக்காய், பத்திரி வாய்விளங்கம், திப்பிலி, தேசாவரம்பலம், திப்பிலி, கஞ்சாவிதை, லவங்கம், குரோசணி ஓமம், அபின், அபின் அதிவிடையம், அரத்தை கொத்தமல்லி, யொருநிறை,

கொண்டாசீலையிற் பொதிந்து கருகவே சுட்டரைக்க அஞ்சுதரம் இவை போற் காட்டியத்தி பூக்கசாயத்தில் அரைத்துருட்டி, ஒருகுளிகையிலந்தை விதையள

ஏருமைத் தயிரிலூட்டுக் கிராணி கபாடம் பேயரண்டோடியே.

## இன்னாங் கிராணிக் குளிகை

சுக்கு திப்பிலி, கடுக்காய் தான்றிக் காய் விளம்பிசின், இலவம்பிசின், அதிவிடையம், ஓமம், காசுகட்டி, வட்டத்திருப்பி வேர், முட்கா வளைவேர், செந்தடிவேர், முத்தக்காசு, பொன் முசுட்டை வேர், குத்துக் கால் சம்மட்டி வேர், குருந்தம் வேர், கருந்தம் பிசின், இது சமன் பொடி செய்து வாதளைங்காய் விதை போக்கி, அதிலிட்டுச் சாணாகம் பொதிந்து புடமிட்டுத் தயிர் வடி நீரில் அரைத்து, தேற்றா விதைப் பிரமாணம் உண்டை செய்து ஒரு உண்டை கட்டித் தயிரிலிடவும்.

பத்தியம்: சட்டிக் காயவிட்டு உப்பும் போட்டுப் பொடியிட்டதில் தயிரைக் கூட்டவும். அத்திப் பிஞ்சு, வாழைக்கச்சல், சுண்டை வத்தல் கூட்டவும்.

இதற்கு சங்கரகிராணி, மூலக் கிராணி. கிராணி இரத்த கிராணி இவை தீரும்.

# அகத்தியர் ஆயுர் வேதம்

## பொருள் பட்டியல்


| | |
|---|---|
| மஞ்சள் நாபி | ..1 |
| வெங்காரம் | .. 1, 14, 21, 22, 31, 73, 111, 119 |
| கந்தகம் | .. 1, 4, 5,7,9,10,13,17,18,21,31,143,168 |
| வாய்விளங்கம் | .. 1,366,445 |
| திரிகடுகு | .. 1,26,31,90,191,196,229,250,253,364 |
| நேர்வாளம் | .. 1,6,8,10,15,17,22,23,26,31, |
| வேப்பிலை | .. 1,138,143,171,341,457 |
| துத்தம் | .. 2,5,6,8,9,12,15,16,23,68,84,461 |
| துருசு | .. 5,6,7,8,9,12,15,16,23,68,84,461 |
| அரிதாரம் | .. 2,5,6,8,18,20,22,25,27,56,94,110, 139,461, |
| மனோசிலை | .. 2,15,109,110,115,142,269,476,482 |
| சீரகம் | .. 2,5,63,91,97,129,145,146,181, 220, 238, 245,296,325,327,364,366,381, |
| கற்பூரம் | .. 2 |
| சூடன் | .. 2 |
| கத்தூரி | .. 2 |
| இரசம் | .. 3,7,9,10,12,15,17,18,21,28,31 |
| ஊமத்தை | .. 5,11,12,14,19,21,208,402,515,523,556 |
| நாபி | .. 4,5,17,18,20,21,22,26,28,31 |
| கரிசாலை | .. 5,9,26,89,96,100,105,138,141,143,149 |
| இஞ்சி | .. 1,3,10,11,31,36,193,243,327,346,413 |
| சூதம் | .. 4,6,8,13. |
| திம்பப் பழம் | .. 4,45 |
| பாகல் | .. 5,14,17,31,85,205,311,313,333,452 |
| சாதிலிங்கம் | .. 6,8,9,10,13,18,19,28,29,211 |
| கௌரி | .. 6,8,9,17,25 |
| தாம்பிரம் | .. 6,8,18,69,113,138,143,525 |

| | |
|---|---|
| கொடிவேலி | .. 6,8,17,41,41,55,291,320,325,374,413, 417,418,436 |
| கார்த்திகைக்கிழங்கு | .. 8,375,438 |
| தொட்டிபாசணம் | ..9 |
| அப்பிரகம் | ..8 |
| திப்பிலி | .. 10,20,39,43,56,89,94,104,110 |
| சுக்கு | .. 10,11,13,20,22,31,32,39,66,87,89 |
| கடுக்காய் | .. 10,22,66,68,95,97,111,133,161 |
| பால் | .. 10,24,30,29,71,78,98,99,101,103,110,122 |
| இளநீர் | .. 10,145,147,366 |
| எலுமிச்சி | .. 11,28,65,66,73,84,100,108 |
| நொச்சி | .. 11,14,21,22,31,35,94,140 |
| மிளகு (மரிசி) | .. 11,12,22,37,41,43,75,78,212,230, 307,310,312,347,445 |
| எட்டி | .. 12,120,215,218,372,530 |
| வெள்ளைப்பாசாணம் | .. 12,14,17,19,22,23,24,29,543 |
| சீனாக்காரம் | .. 14,65,136,211,457,543 |
| ஏரண்டவிதை | .. 15 |
| கடுகுரோகணி | .. 15,31,28,147,364,367,374,375, 423,445 |
| நிம்பப்பழம் | .. 15 |
| சாத்திரபேதி | .. 15,22,23,93,186,376 |
| பாசாணம் | .. 15,18 |
| செம்பை | .. 16 |
| கோட்டம் | .. 18,150,364,366,367,372,379,410,445 |
| செங்கழுநீர் | .. 21,278,327,364,374,424,438 |
| சந்தனம் | .. 24,55,93,138,147,150,153,186 189,363,367,378,425 |
| முலைப்பால் | .. 24,25,65,67,68,71,73,74,89,110,113 |
| பசு வெண்ணெய் | .. 24,102,106,172,217,236,454 |
| திரிபலை | .. 26,186,191,196,299,300,319,320 |
| கற்றாழை | .. 26,96,150,169,181,364,378,386 398, 572 |

| | |
|---|---|
| ஆடாதோடை | .. 28,124,418,423 |
| எருக்கு | .. 30,31,34,35,42,44,54,123,208,260 323,348,402,482,487,526 |
| குப்பைமேனி(எலிப்பகை) | .. 214,270,323,520 |
| கொத்துமல்லி | .. 31,186,208,375,412,423 |
| கள்ளி | .. 31,32,34, 58,71,84,321,338,354 |
| துளசி | .. 31,35,57,90,96,299,374, 431,452 |
| வசம்பு | .. 31,32,34,35,43,89,192,201,204,230 239,246,253,256,271,294,301, 327,409 |
| நண்டு | .. 31, |
| நீர்முள்ளி | .. 32,34,42 |
| முருங்கை | .. 32,33,34,35,55,63,71,96,111,138,142 |
| பிரண்டை | .. 33,237 |
| நல்லெண்ணெய் | .. 33,39,41,43,44,4648,52 |
| இந்துப்பு | .. 33,35,43,55,58,68,101,105,111,112239, 273,275,291,327,364,410,423, 441,451,460 |
| கடுகு | .. 34 |
| ஆடுதின்னாப்பாளை | .. 35,518 |
| வெங்காயம் | .. 35,,518 |
| தேங்காய் | .. 35,45,54,223,254 |
| பூண்டு | .. 35,133,297,517 |
| கடல்நுரை | .. 35, 423 |
| குக்கில் | .. 35,423 |
| குன்றி(மணி) | .. 37,41,59,70,114,241,259,405,511 |
| ஆமணக்கு (எண்ணெய்) | .. 37,41,95,343,418,436,437,445, 482,536 |
| கொன்றை | .. 38,446, |
| புங்கு | .. 38,49,140,143,233,274,421,461 |
| மஞ்சள் | .. 39,138,364,379,423,482 |
| கோடகசாலை | .. 39 |
| அறுகன்வேர் | .. 40 |

| | |
|---|---|
| இலுப்பை | .. 41,331,360,363,424,439,482,538 |
| வேம்பு | .. 45,112,237,290,310,341,346445 |
| காதுவளை | .. 46,202,293,334,369,418 |
| மாவிலங்கம் | .. 47,55,312,436 |
| நாரத்தை | .. 48,172,307 |
| தைவேளை | .. 50,346 |
| தேவதாரம் | .. 53,363,367,369,376,402,409,413 |
| சிறுதேக்கு | .. 55,237,364,372,374,409,413 |
| நல்லெண்ணெய் | .. 53,55,57,59,72,86,98,106, 145,345,363 |
| கத்தரி | .. 54,237 |
| மஞ்சனத்தி | .. 55,516 |
| சதகுப்பை | .. 55,146,147,165,367,369,372, 376,409,410,441 |
| கச்சோலம் | .. 55,364,367,378,379,441 |
| சிவதை | .. 55,191,192,299,320,418,428,443 |
| இலவங்கம் | .. 55,56,147,150,186,190,196,301,310, 325,366,367,412,441,443 |
| வேப்பெண்ணெய் | .. 56,84,204,210,213, |
| பூண்டு(உள்ளி) | .. 56,91,133,162,193,204. |
| கருஞ்சீரகம் | .. 56,173,181,230,253,293,297,366 |
| உப்பு | .. 56,75,101,151,211,261,275,334,336, 436,441 |
| வேல் | .. 57,62,136,297,379,513 |
| கழற்சி | .. 59,304,457,559 |
| வில்வம் | .. 60,191,224,249,266,363,365,367 |
| பூலா | .. 62,93,164,245,271,365,366,375 |
| நெய் | .. 62,91,141,145,156,157,160,161,172, 195,237 |
| வெங்காயம் | .. 63,67,238,307,397,518 |
| கடல்நுரை | .. 69,96,238,307,397,518 |
| சங்கு | .. 69,72,94,111,139,140,143,168,543 |

கழுதை .. 69,188
கோழிமுட்டை .. 69,83,194
பசு .. 69
காக்கணம் .. 71,83,109,114,137,154,205,212,229,320
சாரணை .. 71,114,154,167,182,191,215,232,317,318, 320,402418,439
யானைக் கொம்பு .. 71,
சேவல் .. 71
ஓரிதழ்தாமரை .. 71,91,107,108,109,110,112,113,116, 139,367,450,520
ஆமை .. 71
நந்தியாவட்டை .. 71,91,94,112,139
நெல்லி .. 76,91,92,95,169,294,301,328, 364,425
மகிழம் .. 77
தும்பை .. 80,205,520
பேய்பீர்க்கு .. 81,143,145,402
சீந்தில் .. 82,117,150,169,188,189,215,298, 308,336,351
தேசிப்பழம் .. 83,99,101,102,105,106,109,110,114,128,
மிளகு ..86,89,94,162,204,211,212,215,231,273
முசுமுசுக்கை .. 87,187,189,378,424
கிராம்பு .. 88,105,190,191,364,375,376,409, 412,423
இப்பிதிசை .. 91,129
அதிமதுரம் .. 91,92,94,98,145,147,364,365,366, 367,372
ஏலம் .. 91,196,296,367,376,377
அத்தி .. 91,452,511
பனை .. 91,107,113,154,297,330
பருத்தி .. 91,176,179,181,187,268,272,452, 473,559
மாதுளை .. 91,186,386,424,442

அரிசி .. 92,254,304,315,320,460,480,513
வெள்ளிலோத்திரம் .. 92,111,186,367,441
காவி .. 93
மெழுகு .. 93,367,379
இளநீர் .. 93,115,364,424
சுக்கு .. 94,123,140,145,153,212,315,363,418
பீதரோகணி .. 94,139,141,153
துத்தம் .. 94,99,100,101,104,105,106,107,108, 109,110,111,113
துருசு .. 96,100,101,106,107,109,112,113,114,538
தான்றி .. 95,147,297,336,375,416,418,423, 424,559
புளி .. 96,101,105,119,138,141,159,186,202, 245,260,452,516
சிறுகீரை .. 98,106,108,109,110,115, 143,154,172,183, 210,214,256,376,386
பொன்னாங்காணி .. 98,106,108,109,110,139,147,176, 172,217,364,366,376
வேங்கை .. 102, 129,245,217,454,512,533
வெண்ணெய் .. 102,129,245,217,454,512,533
கோட்டம் .. 104,138,144,1104,104,138,144,145, 147,237,277,294,327,367,376
விளா .. 104,178,186,320,353,427, 428,435,438
குப்பைமேனி .. 104,134,205,214,421,457
கீழாநெல்லி .. 106,181,186,191,210,237,313,409, 426,520
பவளம் .. 109,139,154
சவர்க்காரம் .. 102,162,165,211,437,457
குளிர்தாமரை .. 103
பிச்சிப்பூ .. 110,139
சுண்ணாம்பு .. 110,231,261,264,336,476,513,536
தலையோடு .. 110,112,113,132,141,154

பலகறை .. 112
முலைப்பால் .. 114,120,141,144,171,212,273,274
மஞ்சள் .. 115,137,143,145,147,162,164,192, 229,273
மிளகு .. 115,121,133,137,138,139,140,143,145, 151,153,311
இந்துப்பு .. 115,127,143,165,192,239,291,300,301
காடி .. 115,171,177,266,275,305,306,326
இண்டு .. 115,
இம்பூரல் .. 118,305,328
புரசு .. 118,305,328
நல்லெண்ணெய் .. 121,154,162,198.203,219,303,304, 347,544
கோழியவரை .. 122
கருப்புக்கட்டி .. 123,141,198,349
பால் .. 124,145,164,186,187,188,199,202, 203,206,241,272,349,350
குமிழம் .. 125,186,214,365,416,428,435,
துத்தம் .. 125,127,138,139,154,155,427,536, 537,523,531
துருசு .. 125,127,138,139,154,155,191,409,427, 523,531,533,536,537,538
அஞ்சனக்கல் .. 125,143,186
பீதரோகணி .. 125,154
கற்பூரம் .. 125,138,144,150,196,452
வெங்காரம் .. 127,168,415,436
திப்பிலி .. 127,139,143,168,186,189,201,211,212, 237,246,292,297,300,301,335,418
பச்சைக்கற்பூரம் .. 127,144,150,154
கொள் .. 127,165
நெய் .. 127,166,172,186,187,189,190,192, 193,194,195,200,220
தேள்கொடுக்கிலை .. 128

| | |
|---|---|
| கோழி | .. 130, 154,158,161,166,186,192, 215,461,542 |
| கள்ளி | .. 130,350,418 |
| தேசிப்பழம் | .. 131, 135,136,141,154,179,181,200, 206,208 |
| நாயுருவி | .. 135, 182,229,234,428,436,520, 532,539 |
| முலைப்பால் | .. 136,137,138,163,170,229,249,296,525. |
| அபின் | .. 136,188 |
| குங்கிலியம் | .. 137,147,186,399,448,531 |
| கடுகு | .. 137,441,451,460 |
| கல்தாமரை | .. 138 |
| தாமரைவளையம் | .. 138,150,169,364,376,403,439 |
| நாகவண்டு | .. 138 |
| கடுக்காய் | .. 138,147,173,192,301,418,421, 436,445 |
| தங்கம் | .. 139,140 |
| வெள்ளி | .. 139,140,143 |
| முத்து | .. 139,140,154 |
| வைரம் | .. 139, 140 |
| மாணிக்கம் | .. 139,140 |
| நீலம் | .. 139, 140 |
| வயிடூரியம் | .. 139, 140 |
| புருசராகம் | .. 139,140 |
| கோமேதகம் | .. 139,140 |
| மரகதம் | .. 139,140 |
| இருவாட்சி | .. 139 |
| தாமரை | .. 139,364,372,376,448,473 |
| வெங்கலம் | .. 139 |
| எலுமிச்சம் | .. 139,142,366,381 |
| படிகம் | .. 140 |

ஈயம் .. 140 (வங்கம்) 331

செம்பு .. 140,443

பல் .. 140,143,153,154,157,508

கொம்பு .. 140,141

பலகறை .. 140

கோழிக்காரம் .. 141

சடமாஞ்சி .. 143,190,363,373,379,413

குங்குமப்பூ .. 143,366(மலர்), 375,379,425,443

அல்லி .. 143,148,150,367,375,276,377

ஏலம் .. 143,147,148,150,186,190,220,325,364, 364,365,367,369,377,379,402, 410,415

பச்சிலை .. 143,145,150,325,367,

செண்பகம் .. 143,147,150,347,364,365,367, 376,377,379

கோரோசனை .. 144,364,369,375

நெல்லி .. 145,147,148,149,153,162,169,181, 183,190,202,374,378,418,425, 428,448,455

கொடுப்பை .. 145,439,

பால் .. 145,164,186,187,190,195,196,214,302, 318,325

எண்ணெய் .. 145,148,150,171,196,216,263,265,279, 293,313,316,323,328,334,341, 358,363

வெட்டிவேர் .. 145,364,367,425

ஈர்க்கு .. 146,231

நாரத்தை .. 146,272

அரத்தை .. 146,192,301,363,365,367,373,375, 376,402,423,484

பால் .. 146,149,174,186,189,202,241,268,295, 300,315,332,342,357,363,457
மலைப்பச்சை .. 147
விலாமிச்சுவேர் .. 147,148,150,169,186,237,342,364,365
நன்னாரி .. 148,186,189,251,351,364,365,367,369, 372,376,378.
குறுந்தொட்டி .. 148,325,363,365
தகரம் .. 148 (அகில்?), 367,437,443
சாதிக்காய் .. 148,364,366,379,381,448
அதிமதுரம் .. 148,150,153,188,189,196,251,364,365, 366,367,373,374,375,376,377, 379,381,413,556
தண்ணீர்விட்டான் .. 150
இருவேலி .. 150,377,452
கடுக்காய் .. 150,161,169,173,230,277,290,294, 297,398,405,436,461
மஞ்சட்டி .. 150,169,427,438,445
துத்தி .. 7,189,191,218,317,367
சுக்கு .. 153,168,186,201,227,227,230,242, 255,292,319,332,445
புனுகு .. 154,156,369,379
கொட்டைபாசி .. 155
எலும்பு .. 157,163
கரிசாலை .. 157,208,303,364,390,405,429, 452,450
நாரை .. 158
மான்கொம்பு .. 160
தேங்காய் எண்ணெய் .. 161
வாதமடக்கி .. 162
எலுமிச்சை .. 162,173,225,244,256,267,352,364, 366,381,468
வெற்றிலை .. 162,228,317,321,334
ஆயில்பட்டை .. 165,369,402,436

அலரி .. 165
முருங்கை .. 168,193,202,209,244,315,436,450, 461,457,515,520
சதாவரி .. 169,190
செம்பருத்தி .. 171,302,486
வல்லாரை .. 172,201
வெள்ளரி .. 172
ஆல் .. 173
அத்தி .. 173,237,240,378,402,452
(களிப்)பாக்கு .. 173,258,529
முசுட்டை .. 175,227,424
கோவை .. 176,177,236,265,379
விடத்தலை .. 184
ஆவாரை .. 184,208,209,397,513
கருவேப்பிலை .. 184,208,209,397,513
உதியம்பட்டை .. 186
நிலப்பனைக்கிழங்கு .. 186,187,190,191,195,201,409,424,425, 430,448,463
நீர்வள்ளி .. 186,187,189,373,379,418,425,439, 443,453
புளியாரை .. 186,343
முடக்கொற்றான் .. 186,457
இலவம் .. 186,222,330,404
அதிவிடயம் .. 186,191,237,409,441,445,446
முத்தக்காசு .. 186,246,335,363,367,377,392,415, 455
கல்நார் .. 186,427,464
அமுக்குரா .. 186,194,210,291,363,367,372,373, 374,375,379,453
காட்டாத்திப்பூ .. 186
சிறுநாகப்பூ .. 186,364,367,375,412,415,448
ஓமம் .. 186,230,306,325,339,347,369,374, 410,413,445,415,441

சர்க்கரை .. 187,188,189,245,251,258,294,296,300
ஈச்சு .. 189452
செங்கழுநீர் .. 190,364,374,424,425,438
கல்மதம் .. 364
பற்பாடகம் .. 189,365,424
வாழை .. 190,255
சந்தனம் .. 190,196,220,365,366,364,372, 373,374,379
பூதக்கரப்பான்பட்டை .. 191,409
பூதவிருட்சம் .. 191,409
மலைதாங்கி .. 191,428,442
சிவதை .. 191,192,294,463
பெருங்காயம் .. 191,204,210,215,230,306,339,345, 347,353,415,418,428,457,
தாளிசபத்திரி .. 191,531
பிரமி .. 192,202,294,299,300,301,398
மிளகரணை .. 191,443
சீனி .. 192,238,301
பிரண்டை .. 195,316,345,402
நுணா .. 195,511
கஞ்சா .. 196,453
தென்னை .. 197
சங்கம் (வேர்) .. 197,222,230,416,418
வெந்தயம் .. 198,367,378,381,423,457
உத்தாமணி .. 199,205,360
ஆதளை .. 202
குறிஞ்சான்வேர் .. 203,436,559
வேலிப்பருத்தி (உத்தாமணி) .. 205,206,208,219
மணத்தக்காளி (மிளகு தக்காளி) .. 207,216,250,452,520
நீர்முள்ளி .. 210
காந்தம் .. 211,320,415,416,450

இரத்தசிங்கி .. 211
யவாட்சாரம் .. 211,445,460
ஓந்தி .. 213
வௌவால் .. 213
மூஞ்சூறு .. 213
குமட்டி .. 214,357,465
செம்போத்து .. 215
மீன்கொத்தி .. 215
நாய் .. 215
பசரி .. 216
மோர் .. 216,237,248,305,309,316,323,345,353,372,374,376
சிறுகீரை .. 218,245,364,394
பொன்னாங்காணி .. 222,245,364,366,378,426
நெருஞ்சில் .. 217,360,394,418,436,448,453,457,463,559
முன்னை .. 218,343,417,418,428,457
பூளை .. 218,559
கொற்றான் .. 218,457
நெய் .. 237,238,246,267,292,295,316,317,319,321,323
பருத்தி .. 221,528
அவுரி .. 222,374
அழிஞ்சில் .. 224,329,330,331,335
விடதேரி .. 224
அறுகு .. 225,267,310,461,512,549
தேசிக்காய் .. 225,247,485,530,544
பூண்டு (உள்ளி) .. 230,271,319,339,343,345,347
மிளகு .. 235,255,273,307,316,333,341,342,344,360,380,390,412,436,445,451
கேப்பை .. 235,237
களா .. 246

கூவிளம் .. 248
அறுகு .. 249
வெல்லம் .. 222,265,267,272,397,404
சிறுபுள்ளி ..252
பலா .. 255
புளி .. 256,265,334,345,397,451515
எள் .. 263,319,320,480
தாழை .. 261,264
பழம்பாசி .. 272,369
நொச்சி .. 278,310,374,402,418,431,452,
460,462
எருக்கு .. 279,360,511
கந்தகம் .. 290,422,423
வெடியுப்பு .. 292
முலைப்பால் .. 296,321,434
கரிசாலை .. 298,333,336,364,421,329
பூலா .. 298
திரிகடுகு .. 299,320,339,364,367,369,374,
378,413,421,425,442
வாலுளுவை .. 299,300,327,409,425,427,435
சர்க்கரை .. 389,412,413,463
கடுக்காய் .. 301,336,365,375,382,417,455,461,
463,529,539
சிவனார்வேம்பு .. 310,322,421,423,461
புளி .. 312,331,345,421,511,515
நத்தைசூரி .. 314,367
அயம் .. 319,320,409,418
கற்கடகசிங்கி .. 320,364,375,402,420,423,460
மஞ்சள் .. 321,336,344,373,374,375,379,441,
443,445
தேற்றான் .. 326
குறட்டாம் (பழம்) .. 329,468
மாகாளி (நன்னாரி) .. 330,365,369,373,375,388

சுக்கு .. 347,390,412,445,457,463
செருப்படி .. 333,345,460
பிராய் .. 335,364,466,467,513
அங்கோலம் .. 336
கழுவத்தழை .. 336
காரை .. 337
கண்டங்கத்தரி .. 229,365,369,413,417,418,428,431, 436,442,445,460,523
திப்பிலி .. 345,347,383,409,412,415,417,418, 427,437,445,462
சேராங்கொட்டை .. 345,437,461,463
பூண்டு .. 370,374,409,423,436,437,444, 457,510
பால் .. 351,364,379,407,410,436,480
தயிர் .. 369,437,520
தகரை .. 353,367,386,429,462,473,478, 487,545
சீந்தில் .. 354,363,365,367,378,379,423,425, 442,445
முள்ளி .. 355,442
சேவகன்கிழங்கு .. 356
புளிநரளை .. 358
வசம்பு .. 360,370,436
சடாமாஞ்சில் .. 363,365,372,413,417,425
அகில் .. 363,364,373,438,443
வெட்டிவேர் .. 364,375,379,386,425
சாதிபத்திரி .. 364,366,375,381,386,388,408, 409,413,441
வலம்புரிக்காய் .. 364,415
கோட்டம் .. 364,374,375,376,377,378,386,388, 415,427,438
கொத்தமல்லி .. 364,375,376,381,392,408,409, 413,415

திரிகடுகு .. 364,369,392,409,413,420,425, 427,444,460
நல்லெண்ணெய் .. 364,366,510,530,535,544,547
கோரைக்கிழங்கு .. 365,369,376,379,425,433
அமுக்ரா .. 365,367,369,372,373,375,376, 377,379,402
மஞ்சிட்டி .. 365,367,369,372,373,374,378, 408,427,432
வாய்விளங்கம் .. 366,374,375,388,402,409,415, 436,441
இலவங்க பத்திரி .. 366,375,386,448,449
சிற்றாமுட்டி .. 366,369,372,374,376,380,408, 416,425,428,438
பேராமுட்டி .. 366,369,372,402,438,462
முத்தெருக்கு .. 366
இளநீர் .. 378,382,425,426
பால் .. 366,378,388,408,429
உசிலை .. 366,367,529
அரக்கு .. 367,369,402,408
பச்சிலை .. 367,415,455
வேம்பு .. 367,379,427,442,445
வெட்பாலை .. 369,370,374,383,409,416,423, 436,443,445
தக்கோலம் .. 369,374,379,462
மஞ்சள் .. 369,370,373,374,375,378,399, 400,402
எண்ணெய் .. 372,373,374,376,377,378,379, 381,382
மரமஞ்சள் .. 373,374,376,378,402,415,438
விலாமிச்சவேர் .. 373,376,377,378,383,386,392,424, 452,443
வெருகன்கிழங்கு .. 374,402,407,421,452
காஞ்சோரி .. 374

கரந்தை .. 374,452
இலவங்கம் .. 374,376,377,378,379,388,412,413,
417,447,455
திப்பிலிமூலம் .. 373,374,402,415,417,423,436,441,
443,456,451
செவ்வியம் .. 374,376,421,423
வேங்கை .. 375
வில்வம் .. 375,383,409,415,416,417,419,425,
435,439
நன்னாரி .. 375,377,388,392,409,415,418,424,
432,438
கோரைக்கிழங்கு .. 375,377,378,379,433,439
நெல்லி .. 375,378,384,416,423,428,434,
438,439,448,463
அதிமதுரம் .. 375,376,377,380,381,382,386,
388,390,408,409
சீரகம் .. 375,378,381,382,389,390,397,413
சாதிக்காய் .. 375,379,381,388,408,409,423,441
பச்சை கற்பூரம் .. 375
குங்குமப்பூ .. 375,425,443
மோர் .. 377,454,484
சாத்திரபேதி .. 376
தாமரைவளையம் .. 376,378,403,439
குறுந்தொட்டி .. 377,415,457
பூலா .. 377,517
ஆவாரை .. 377,507
இலவங்கப்பட்டை ட .. 378,381,386,399412,452
கற்றாழை .. 378,398,404,516
வல்லாரை .. 378
முசுமுசுக்கை .. 378,426,442
அல்லி .. 378,513
கோட்டம் .. 378,379,402,408,413,415,425,
426,433

சமுத்திரா பச்சை .. 378,399,443

தாளசிபத்திரி .. 378,379,413,416,425,431,451,452

கல்மதம் .. 378,427,464

சிறுதேக்கு .. 378,409,413,453

மா .. 378

மருது .. 378

கடம்பு .. 378

அரசு .. 379,527

நாவல் .. 379,529

பூவரசு .. 379

புலிநகம் .. 379

குக்கில் .. 379,423,427,448,452,460,560

நெய்தல் .. 379,439

ஒடுவடக்கி .. 379,556

தலைசூடி .. 379

விளக்கெண்ணெய் .. 381,398,437,457,465,523,532,538

வெங்காயம் .. 381,386,388,397,518

ஓரிதழ்தாமரை .. 381,424,520

ஆமணக்கு .. 382,457,520

பால் .. 382,403,404,412,416,424,438, 445,447

ஏலம் .. 382,386,388,390,408,412,415,425, 436,438,445,447

சந்தனம் .. 383,386,409,424,426,433

நிலவேம்பு .. 384,436,460

திப்பிலி .. 383,489,409,414,415,424,427,437, 445,456,457,462

அதிவிடயம் .. 383,384,386,409,427,439,442,442

நெய் .. 383,386,388,390,397,405,413, 414,416

| | |
|---|---|
| கீரை | .. 386,532,547 |
| வாழை | .. 389,390,523,536 |
| சர்க்கரை | .. 389,420,429,440 |
| பூசணி | .. 390,434,439,441 |
| பரங்கிப்பட்டை | .. 390,421,423,461 |
| மிளகு | .. 390,409,414,419,423,425,428,431, 534,436,456 |
| சுக்கு | .. 390,409,417,419,423,425,428, 431,436 |
| சுரை | .. 397,512 |
| இருவேலி | .. 399,392,424,452 |
| கொடுப்பை | .. 394,434 |
| மஞ்சள் | .. 430,429,438,439,441,445,446 |
| எண்ணெய் | .. 400,415,437,528,530,538,540,544, 547 |
| பங்கு | .. 402,421,423,461,515,528 |
| காரை | .. 402,421,516 |
| சாரணை | .. 409,421,516 |
| காக்கணம் | .. |
| எருக்கு | .. 431,478,487,511,520,528 |
| லோகபற்பம் | .. 402,429 |
| அப்பிரகபற்பம் | .. 402 |
| காந்த பற்பம் | .. 402,409,416,443 |
| சீனி | .. 403,418,424,428,449 |
| வாழை | .. 404,424,453,462,523 |
| வெல்லம் | .. 404,415,416,441,523 |
| அரத்தை | .. 407,413,416,420,428,431,437,443 |
| தேவதாரம் | .. 407,408,427,428,436,437,438,445 |
| அமுக்கரா | .. 408,421,439,443,448,452,462,526 |
| சதகுப்பை | .. 409,415,429,437 |

அதிமதுரம் .. 409,410,413,414,415,416,426,434, 453

இந்துப்பு .. 410,418,426,428,435,444,453

கடுகுரோகணி .. 409,413,416,423,427,432,433,453

கருஞ்சீரகம் .. 400,410,414,421,423,425,428,431

துத்தி .. 409

சீரகம் .. 412,413,416,417,419,423,425,427, 431,437,444,445,448,449,453, 456,462

இஞ்சி .. 413,414,416,417,425

செவ்வியம் .. 413,417,419,420,421,427,428, 436,439

இலவங்கம் .. 413,419,425,426,432,433,435

இலவங்கப்பட்டை .. 413,415,431

ஏலம் .. 414,415,416,420,432,435,438

அதிமதுரம் .. 414,416,425,426,432,433,434, 439,441,448

சாதிக்காய் .. 415,416,423,425,427,428,531,558

சாதிபத்திரி .. 415,423,425,428,531

ஓமம் .. 415,421,427,428,429,431,435,440, 445,448,460

பச்சிலை .. 415,419,441,451,453

முத்தக்காசு .. 415,424,432,453

சடாமாஞ்சில் .. 415,416

பரங்கிப்பட்டை .. 415,559

தான்றிக்காய் .. 416,423,428,559

சித்திரமூலம் .. 417,436,453,456,457,460,462,463

கடுக்காய் .. 417,418,428,456,463,529,560

இலவங்கப்பத்திரி .. 417,425,448,452,462

கொடிவேலி .. 423,427,428,429,440,441,443,445, 449,457,530

| | |
|---|---|
| நெருஞ்சில் | .. 418,435,429,559 |
| அயப்பொடி | .. 418 |
| வெடியுப்பு | .. 418 |
| நாகப்பூ | .. 419,425,437,448,449,451,453 |
| சிறுகுறிஞ்சான் | .. 421,423,560 |
| வசம்பு | .. 421,436,437,445,508,529 |
| வாய்விளங்கம் | .. 421,323,425,431,436,453,463 |
| சங்கம்வேர் | .. 421,443,535 |
| கந்தகம் | .. 422,423,461,473,535 |
| சீந்தில் | .. 423,427,442,443,448,452,453 |
| முசுட்டை | .. 424,436,516 |
| இளநீர் | .. 424,426 |
| கரும்பு | .. 424,439,462 |
| இலுப்பை | .. 424,439,511 |
| கொத்தமல்லி | .. 525,440,441,462 |
| விலாமிச்சவேர் | .. 425,426,433,447 |
| நன்னாரி | .. 425,433,438,439,447,558 |
| கஸ்தூரி | .. 424 |
| தூதுவளை | .. 426,428,442 |
| ஆடாதோடை | ..427,431,439,441,442,445,447,460, 462,470 |
| ஆவாரை | .. 427,507,513,515 |
| நவச்சாரம் | .. 427 |
| கொன்றை | .. 428,440,446 |
| கிராம்பு | .. 428,440,462 |
| இந்துப்பு | .. 428,429,435,441,449,456,460 |
| சிறுதேக்கு | .. 428,453,460 |
| பெருங்காயம் | .. 429,437,441,487 |
| கரிசாலை | .. 431,450,462,473 |
| திரிகடுகு | .. 435,443,446,448 |
| திரிபலை | .. 431,435,440,443,446,451,558 |
| அதிமதுரம் | .. 431,443,448,449,452,558 |

| | |
|---|---|
| சந்தனம் | .. 432,439,443,447,448,452 |
| சீதேவிசெங்கழுநீர்ப்பூ | .. 432,433,556 |
| நீர்வள்ளிக்கிழங்கு | .. 433,439,443,448,462 |
| கோட்டம் | .. 435 |
| குமிழ் | .. 436,444 |
| நிலவேம்பு | .. 436,460,558 |
| கள்ளி | .. 436,437,446,475,482,511,513,528 |
| நேர்வாளம் | .. 437,520 |
| கோட்டம் | .. 437,438,439,441,443,448,462,558 |
| நெய் | .. 438,439,444,447,453,454,464 |
| பால் | .. 438,444,454,464,480 |
| மஞ்சட்டி | .. 438,439,440,442,452,510 |
| தகரம் | .. 438,443 |
| நிலப்பனைக்கிழங்கு | .. 439,448,464 |
| வெப்பாலை | .. 439 |
| திரிகோபம் | .. (கந்தகம்,சிவதை,குங்கிலியம், கொல்லான்கோவை) 441, |
| வெங்காரம் | .. 441,457 |
| சீந்தில் | .. 442,448,452,453,460,462 |
| குக்கில் | .. 442,448,460,535,560 |
| செவ்வியம் | .. 443,444,453 |
| கற்பூரம் | .. 443,546 |
| விளா | .. 443,446 |
| செம்பு | .. 443 |
| திப்பிலி | .. 443,445,453,456,457,460,520 |
| பூண்டு | .. 444,487,508,517,520,558 |
| வில்வம் | .. 444,452 |
| திரிகடுகு | .. 444,447,453,464,535 |
| திரிபலை | .. 447,451,452,453,558 |
| தேவதாரம் | .. 444,445 |
| கொடிவேலி | .. 446,447,453,456,458,462, 510,512,530 |

மஞ்சள் .. 446,453,462,476,478,482,487, 511,513
மரமஞ்சள் .. 446,453
கடுகுரோகணி .. 447,453,460,462
கீழாநெல்லி .. 447,520
அதிவிடையம் .. 447
வேம்பு .. 447,460,513,520,556
சண்பகம் .. 447,512
வெட்பாலை .. 447,512
இலவங்கம் .. 448,449,453,462,464
சர்க்கரை .. 448
நெல்லி .. 449,558
அதிமதுரம் .. 449,453,462,482,558,560
வெல்லம் .. 451,453
கிட்டம்' .. 450
செவ்வியம் .. 451,453,456
தாளிசபத்திரி .. 451,452,531
ஏலம் .. 451,453,455,462
அத்தி .. 452
ஈச்சு .. 452
வேம்பு .. 452,460,463,484,520
அகத்தி .. 452
சீந்தில் .. 452,460,462,558
துளசி .. 452,520,523
குமிழ் .. 452,457,462,556,558,560
பாகல் .. 452
திப்பிலிமூலம் .. 452,460
கடுகுரோகணி .. 453,462
சாரணை .. 453,457,462,544
தேங்காய் .. 454
மோர் .. 454

| | |
|---|---|
| காடி | .. 456,514 |
| பிரண்டை | .. 458,475,479,487 |
| நொச்சி | .. 460 |
| கண்டங்கத்தரி | .. 460,523 |
| கற்கடகசிங்கி | .. 460 |
| சங்கம் | .. 461,535 |
| இரசம் | .. 461,473,482,532 |
| கந்தகம் | .. 461,473,483,532 |
| பரங்கிப்பட்டை | .. 461,559 |
| எட்டி | .. 461 |
| வாழை | .. 462,523,536,537 |
| இலவு | .. 462 |
| கரும்பு | .. 462,546 |
| கஞ்சா | .. 462 |
| நெல்லி | .. 463,475 |
| பூண்டு | .. 465,487,517,520 |
| மிளகு | .. 465,510,511,524,558 |
| குமட்டி | .. 465 |
| நுணா (மஞ்சனத்தி) | .. 511 |
| கோரோசனை | .. 466 |
| வெற்றிலை | .. 468,509,517,523,555 |
| கற்றாழை | .. 469,554 |
| விசமூங்கில் | .. 474 |
| எலுமிச்சை | .. 474,477,517,522 |
| யானை | .. 481, |
| புளி | .. 482,511,422,554 |
| மான்கொம்பு | .. 484 |
| குறட்டை | .. 512 |
| புகையிலை | .. 513 |
| ஆவாரை | .. 514,560 |
| அல்லி | .. 514 |

| | |
|---|---|
| மோர் | .. 514 |
| மிளகு | .. 520,534 |
| சோழி | .. 422,523 |
| ஊமத்தை | .. 523,538 |
| குப்பைமேனி | .. 523 |
| வேலிப்பருத்தி | .. 528 |
| வெங்காயம் | .. 629 |
| சதகுப்பை | .. 529 |
| கொடிவேலி | .. 532 |
| துருசு | .. 538 |
| துத்தம் | .. 538,546,555 |
| நாயுருவி | .. 540,545,558,560 |
| தும்பை | .. 545 |
| மஞ்சள் | .. 545,558 |
| பச்சைக்கற்பூரம் | .. 546 |
| பசுவெண்ணெய் | .. 546 |
| குப்பைமேனி | .. 547 |
| எலுமிச்சை | .. 549,555,559 |
| சிறுபூளை | .. 550 |
| மிளகுதக்காளி | .. 550,552 |
| ஆல் | .. 551 |
| அரிதாரம் | .. 553 |
| சங்கவேர் | .. 553 |
| தூதுவளை | .. 556,558,560 |
| எண்ணெய் | .. 558,559 |
| இலந்தை | .. 560 |
| ஏலம் | .. 560 |
| இலவங்கம் | .. 560 |
| அமுக்கிரா | .. 595,590 |
| பிரண்டை | .. 596 |
| வெங்காயம் | .. 599,778 |

சிவதை .. 560
கழற்சி .. 566
துத்தம் .. 569,578,675,754
துருசு .. 569,578,627,674
பாக்கு .. 569
சாதிக்காய் .. 570,732,755
பெருங்காயம் .. 570,602,609
சாரணை .. 570
கண்டங்கத்திரி .. 570
திப்பலி .. 570,580,601,727,730,732,774,775
கடுகுரோகிணி .. 570,673
சாதிபத்திரி .. 570
வில்வம் .. 572
கரந்தை .. 573
வேம்பு .. 574
கிட்டம் .. 575
கிளுவை .. 576
வெள்ளைப் பாசாணம் .. 578,592,646,648,701
கௌரிபாசாணம் .. 578,592,646,647,648,693
வெற்றிலை .. 578
நாபி .. 578
எண்ணெய் .. 579,590,598,604,621,629,630
இலுப்பை .. 583
ஏலம் .. 580,599
எள் .. 585,622,624,650,662
இலவங்கப்பட்டை .. 585
ஆல் .. 586
குங்கிலியம் .. 587,666
ஆமணக்கு .. 561
நன்னாரி .. 561,565
ஏலம் .. 561,530,755,774

இலவங்கம் .. 561
தூதுவளை .. 561,565,727
அதிமதுரம் .. 561,565,570,710,755
எண்ணெய் .. 561,562,563,565,566,567,571, 574,579,
எலுமிச்சை .. 562,577,660,674,709,725,726,785
கொடுவேலி .. 562
ஓமம் .. 562,733
கருஞ்சீரகம் .. 562,579,580
ஆவாரை .. 563,565,576,585,592,619,620, 700,701
அரிசி .. 563,569
புளி .. 563,565,577,596,629,686,697,711
பரங்கிப்பட்டை .. 564
சீரகம் .. 564,580,688,695,715,726,732, 755,769
சர்க்கரை .. 564,774
நெய் .. 564,569,570,587,616,688,712,778
பால் .. 564,567,577,580,611,619,631,643, 673,675,677,690
தேசிக்காய் .. 564,561,569,576,591,592,612,653, 663,678
கொடுவேலி .. 565,562,571,588,596,570,590,611
கீழாநெல்லி .. 565
உத்தாமணி .. 565,567,568
இலவங்கப்பட்டை .. 565
சந்தனம் .. 565,599,632,710,755,779
சேங்கொட்டை .. 565,579,582,624,670,705
கற்பூரம் .. 565,659
கீரை .. 566,596,641,589,715,716,754
ஊமத்தை .. 566,562,573,592,693,721,777

அத்தி .. 568,697
கள்ளி .. 568,571,581,584,622,623
எருக்கு .. 568,574,575,595,598,570,604, 617,622
வேம்பு .. 568,587,602,619,632
இந்துப்பு .. 568,575,580,632,655
வெடியுப்பு .. 568,783
வெல்லம் .. 568,579,604,631,673,714,762,763
ளரிபசலை .. 568
காடி .. 570,571,575,582,623,663,676,678, 681,721
உப்பு .. 571,567,596,606,685,731
புங்கு .. 572,584,566,614
இரசம் .. 573,575,627,637,687,692,696, 704,714
கடுக்காய் .. 573,576,643
அரிதாரம் .. 574,618,627,653,654,657,690, 701,725,726,731
கந்தகம் .. 574,563,575,618,639,725,726, 729,786
அவுரி .. 574,566,610,611,710
பீர்க்கு .. 575
கஞ்சா .. 575,787
கோழி .. 576,591,762,764,765,781
அறுகு .. 576,632
மிளகு .. 576,580,587,566,570,630,713,755
ஓமம் .. 579
எண்ணெய் .. 580,587,591,599,560,563,565, 566,578
மஞ்சள் .. 580,587,579,587,606,718
பூண்டு .. 580,590,596,570,600,604,626

மயிலிறகு .. 581

முருங்கை .. 582,561,560,601,632,634,699,
700,732,787

குப்பைமேனி .. 583,580,600,636,643,687,726

வெண்ணெய் .. 583,580,600,636,643,687,726

வெண்ணெய் .. 583,588,595,597,605,608,754,787

நுணா .. 584,623

நாயுருவி .. 585,621,735

எட்டி .. 586,628

மஞ்சட்டி .. 586

திரிகடுகு .. 591

கிராம்பு .. 591,570,701,732

நெய் .. 591,592,568,632,787

நேர்வாளம் .. 589,592,644,699,730,731,732,737

மோர் .. 596,663,681,697,789

குன்றி .. 608

வெண்ணெய் .. 610

கோவை .. 610,714

இலுப்பை .. 612

சிறுகுறிஞ்சான் .. 614

கருப்பட்டி .. 615

கரந்தை .. 615,787

கம்பு .. 615

பனைவெட்டு .. 616

அரளி .. 617,621,707

இலிங்கம் .. 618,660,694,725,726,786

அரத்தை .. 618

அரத்தை .. 618

மனோசிலை .. 618,655,657,725,726

வேலம் .. 619

தேற்றான் .. 624

| | |
|---|---|
| தான்றி | .. 628,672 |
| வெங்காரம் | .. 630,677,726,730,731,732,783 |
| கடுகு | .. 632 |
| கோட்டம் | .. 632 |
| செவ்வியம் | .. 632 |
| செங்கழுநீர் | ..632,675 |
| திரிபலை | .. 637,666,787,789 |
| கொடுவேலி | .. 737,681,720 |
| வாழை | .. 639,641,650 |
| சிற்றாமுட்டி | .. 641 |
| குமரி | .. 643,644 |
| கரும்பு | .. 643 |
| இளநீர் | .. 643,731 |
| பூசணி | .. 646,653,654,688,698,714 |
| பாகல் | .. 646,653,698,704 |
| அகத்தி | .. 647 |
| காந்தம் | .. 662,683 |
| சங்கு | .. 671,727 |
| கோழி | .. 671 |
| சிலாசத்து | .. 672,676 |
| நெல்லி | .. 672,787,789 |
| தாமரை | .. 676 |
| பால் | .. 680,688,715 |
| பொன் | .. 678,683,725,726 |
| வெள்ளி | .. 679,683,725,726 |
| தேசிப்பழம் | .. 679,692,694,695,714,718 |
| நாகம் | .. 680 |
| நொச்சி | .. 680,727,730,787 |
| துத்தி | .. 680 |
| நொச்சி | .. 680,727,730,787 |
| அதிமதுரம் | .. 927,951 |

துத்தி .. 680
தாமிரம் .. 681,683,685,686,725,754,789
நிர்விசம் .. 682,790
இருவி .. 682
சிங்கி .. 682
எண்ணெய் .. 683,706,731,787,789
லோகம் .. 683
ஈயம் .. 684,725
பித்தளை .. 685
எலும்பு .. 685
சீனி .. 688,695,755
காடி .. 689
நாபி .. 689,726,730,789
லோகம் .. 683
ஈயம் .. 684,725
பித்தளை .. 685
எலும்பு .. 685
சீனி .. 688,695,755
காடி .. 689
நாபி .. 689,726,730,789
எருக்கு .. 689
பால் .. 695,710,715,716,631,735
புரசு .. 696
கழற்சி .. 696
கார்த்திகை கிழங்கு .. 706
தேங்காய் .. 706
அரளி .. 707
குன்றி .. 708
சிவதை .. 709
இஞ்சி .. 712,726,730,754,775,781,787,788
கற்றாழை .. 711,718,719,720,722,723

| | |
|---|---|
| வெற்றிலை | .. 714,766,776 |
| இரசம் | .. 715,716,717,718,730,731,732,789 |
| கந்தகம் | .. 717,731,737,767 |
| தேசிப்பழம் | .. |
| திரிகடுகு | .. 722,726,762,764,767,788 |
| காடி | .. 724 |
| உருக்கு | .. 725 |
| மாசிகம் | .. 725 |
| நிமிளை | .. 725 |
| கண்டங்கத்திரி | .. 727 |
| முருக்கு | .. 727 |
| கையான் | .. 727,729,731,754,789 |
| சுக்கு | .. 730,731,732,737,755,762,763,772,775,788 |
| அரிதாரம் | .. 730,789 |
| மிளகு | .. 732,762,764,769,770,772,789 |
| தும்பை | .. 733 |
| சீனாக்காரம் | .. 754 |
| பொன்னாங்காணி | .. 754 |
| அர்த்தை | .. 755,770,771 |
| சண்டமாருதம் | .. 756 |
| முருங்கை | .. 762,787 |
| பால் | .. 768,787 |
| கொடிவேலி | .. 770 |
| சோம்பு | .. 773 |
| ஏலம் | .. 775 |
| தேற்றான் | .. 780 |
| மிளகாய் | .. 784 |
| இரச கற்பூரம் | .. 786 |
| இரச செந்தூரம் | .. 786 |
| வீரம் | .. 786 |

| | |
|---|---|
| எலுமிச்சை | .. 787,789 |
| முள்ளங்கி | .. 787,789 |
| சுக்கு | .. 789,791 |
| பால் | .. 799 |
| நெய் | .. 789,797 |
| மோர் | .. 789 |
| தேசிப்பழம் | .. 789 |
| முருங்கை | .. 789,792 |
| தயிர் | .. 789 |
| ஊமத்தை | .. 789 |
| சாதிக்காய் | .. 791 |
| வெண்ணெய் | .. 792 |
| கரிசாலை | .. 793,796 |
| அவுரி | .. 794 |
| வசம்பு | .. 794 |
| சீனி | .. 798 |
| சுக்கு | .. 799 |
| வெற்றிலை | .. 800 |
| வெல்லம் | .. 802 |
| பலா | .. 802 |
| சந்தனம் | .. 803 |
| நொச்சி | .. 799 |
| ஆவாரை | .. 804 |
| செண்பகம் | .. 805 |
| தேசிப்பழம் | .. 806 |
| மாதுளை | .. 807,872,968 |
| எண்ணெய் | .. 808,812,833,833,839,859,881, 914,953 |
| கொத்தமல்லி | .. 809,815,817,969 |
| இஞ்சி | .. 814,823,835,968 |
| பால் | .. 959 |

கரிசாலை .. 816,837,931,857
திரிபலை .. 820,837,847,918
திப்பிலி .. 820,861,868,907,927,970
இலவங்கம் .. 822
எலுமிச்சை .. 824,826,833,848
இலிங்கம் .. 826
தான்றி .. 832,970
சீரகம் .. 837,858,869,924,964
பூண்டு .. 849
தும்பை .. 837,838,859
துளசி .. 837,838,859
பாகல் .. 837,838,868
வேம்பு .. 838
கண்டங்கத்தரி .. 838,842
எருக்கு .. 850,923
வில்வம் .. 872,874,968
கோழி .. 873
பிரண்டை .. 879,974,968
மஞ்சள் .. 883,956
புளி .. 884,938
வேலிப்பருத்தி .. 885,933
உத்தாமணி (எ)
முடக்கத்தான் .. 888,937
கொன்றை .. 892
முலைப்பால் .. 903
எலுமிச்சை .. 904,922,943
ஆத்தி .. 910
குன்றி .. 911
மணித்தக்காளி .. 911
நெல்லி ..
மிளகு ..

| | |
|---|---|
| கிராம்பு | ..927 |
| சங்கம் | ..942 |
| குப்பைமேனி | ..945 |
| நெய் | ..946,947 |
| தகரை | ..955 |
| எண்ணெய் | ..963 |
| பால் | ..965,966 |
| கஞ்சா | ..969 |
| அபின் | ..969 |
| அதிவிடையம் | ..969,970 |
| தயிர் | ..969,970 |
| உப்பு | ..970 |
| கடுக்காய் | ..970 |

## பொருட் பண்பு

### 1. அகத்தி - Sesbania Grand Flora (Linn)

இதன் இலை மருந்தீட்டை முறிக்கும். மருந்துகள் உண்ணும் போது, பயன்படுத்தக் கூடாது. இலையை அரைத்துக் காயங்களுக்குக் கட்டலாம் செவ்வகத்தியின் இலை, நவநீதபற்பம், செந்தூரம் செய்யவும். தாளகத்தை சுத்தி செய்யவும் பயன்படும். பூவால் வெப்பம் தணியும்.

### 2. அதிமதுரம் - Glycyrr Hiza Glabra, Linn

வறட்சி யகற்றி, உள்ளழலாற்றி, கோழையகற்றி, மலமிளக்கி, உரமாக்கி என்பன.

### 3. அத்தி - Ficus Race Mosa, Linn

பிஞ்சு, காய் சமையலில் உணவாகப் பயன்படும். மூலக்கிராணி, மூல இரத்தம், என்பன பிஞ்சால் நீங்கும். மேகம், வாதம், சூலை, வெப்பம், புண் என்பன காயால் தீரும். மலம் வெளியாகும். காயை உண்ண இரத்தத்தைப் பெருக்கும். மலத்தை இளக்கும் செயல்கள் பழத்துக்குண்டு. பால், பட்டை, வேரின்கள், என்பனவும் பயன்படும். பாலை சீனி அல்லது வெண்ணெயுடன் தர, இரத்த பேதி, பெரும்பாடு, வெள்ளை, தாதுக்குறைவு தீரும். பட்டையைக் குடிநீராக்கி அருந்த, மூலக்கடுப்பு நீங்கும். புண்களுக்குக் கழுவு நீராகவும் பயன்படும். வேர்க்கள், உட்சூடு, பித்தமயக்கம், நீர்வேட்கை என்பன குணமாகும்.

### அரிசி - Rice

பச்சையரிசியால் அனில மந்தம் என்ற செரியாமை நோய் ஏற்படும். பெரும் சுமையைத் தாங்கும் உடல் வலிமை உண்டாகும்.

புழுங்கல் அரிசி, குழந்தைகள் வாயு உடலினர், பத்திய உணவு உண்ண வேண்டியவர்கள், ஆகியோருக்கு ஏற்றது. ஆயின் இதனால் உடலுக்கு வலிமை ஏற்படாது.

### அபினி - Papaver So,niferum Linn

துயரடக்கி, இசிவகற்றி, தாபம் அகற்றி, வியர்வை பெருக்கி, சிறுநீர் பெருக்கி, கோழையகற்றி, உறக்கம், மூர்ச்சை உண்டாக்கி, வெப்பமுண்டாக்கி, தூதுவெப்பகற்றி.

அல்லி - Nymphaea Now Chali

வறட்சியகற்றி. கிழங்கு : மேகஅனல், நீர் வேட்கை வெப்பம் ஆகியவற்றுக்குத் தரலாம். பூவை, மணப்பாகு செய்து தரலாம். நீரிழிவு, வெப்பத்தால் ஏற்பட்ட கண்ணோய்கள், புண் என்பன தீரும்.

அரத்தை - Alpinia Galanga (Linn) Wild.

கோழையகற்றி, வெப்பமகற்றி, பசித்தீ தூண்டி, என்பனவாகும். வாதபித்தம், கரப்பான், வாயு, தலை நோய், கபம், குளிச்சி, சுரம், இருமல் என்பன போக்கும்.

அகில் - Aquilaria Agallo cha. Roxb

வெப்பமுண்டாக்கி, பித்தநீர் பெருக்கி, வீக்க முருக்கி செய்கைகள் உள்ளன. தளர்ந்த உடல் இறுகும். புகை மணத்தால், சிற்சில சுர வெப்பம் நீங்கும். தூள், ஆண்மை பெருக்கி மருந்துகளில் சேரும். புண்களில் புகைக்கலாம். தைலத்தை நீர்க்கோவை, மூக்கடைப்புக்கு உபயோகிக்கலாம்.

அதிவிடையம் - Aconitum Heterophyllum

பசித்தீத் தூண்ணடி, துவர்ப்பி, வெப்ப மகற்றி, ஆண்மை பெருக்கி, உரமாக்கி, முறைவெப்பமகற்றி என்பனவாம். பொதுவாகப் பொடியை, சுர நோய்க்கு வழங்குவார்கள்.

அமுக்கிரா - Withania Somnifera (Linn) Donal

கிழங்கை பொடி செய்துண்ண, உறுதி, நீண்ட ஆயுள் என்பன பெறலாம். ஆண்மையை பெருக்கும். நரம்புத் தளர்ச்சிகுத் தரலாம்.

அவுரி - Indigopera Tinctoria, Linn

நுட்புழுக்கொல்லி, முறை வெப்பகற்றி, வெப்பமுண்டாக்கி, இது நஞ்சுகளை நீக்கும். நரம்புச் சிலந்தி நோய்க்கு இது பயன்பட்டது.

அறுகு - Cynodon Dactylon (Linn) Pers.

வறட்சியகற்றி, துவர்ப்பி, சிறுநீர்பெருக்கி, குருதி போக்கடக்கி, என்பனவாகும். தோல் நோய்களுக்குப் பயன்படும். இதன் தைலம், இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

ஆடாதொடை - Justicia Beddomei (Clarke) Bennet

இசிவகற்றி, கோழையகற்றி, சிறுநீர் பெருக்கி, நுண்புழுக்கொல்லி, இலையைப் பொதுவாகப் பயன்படுத்துவர். இருமல், சுரம் என்பன தீரும். இதன் இலையைக் குடிநீராக்கி அருந்துவர்.

ஆமணக்கு - Ricinus Communis, Linn

இதன் விதையிலிருந்து விளக்கெண்ணெய் எடுக்கப்படும். இது கழிச்சலை உண்டாக்கும். பெண்களுக்கு பால் சுரக்க, இலையை அரைத்து மார்பில் கட்டுவார்கள்.

ஆல் - Ficus Benghalensis, Linn

துவர்ப்பி, உரமாக்கி, காமம் பெருக்கி ஆகியவைகள் இதற்குண்டு. இதன்பால், அசைகின்ற பல்லை இறுக்கும். அறுகன் பொடியுடன், ஆலம் பாலைச் சேர்த்துண்ண, வெண்குட்டம், சோகை நீங்கும். ஆலம்பழுப்புச் சாம்பலுடன் நல்லெண்ணெயைச் சேர்த்துக் குழப்பி, கரப்பனுக்குப் பூசவும். ஆலம் பட்டைக் குடி நீரைக் கொப்பளிக்க வாய்ப்புண், வாய்நாற்றம், நாவெடிப்பு, என்பன குணமாகும். விரணங்களையும் கழுவலாம்.

ஆவாரை - Cassia Auriculata Linn

பயன்படும் உறுப்பு இலை, பூ, பட்டை, விதை வேர்பிசின் என்பன. சிறுநீரக நோய்கள், மதுமேகம், வெட்டை என்பன விலகும். மணப்பாகு செய்து குடிக்கலாம்.

இஞ்சி - Zimgiber Officimate Rose

நறுமணத்திற்காகவும், காரச் சுவைக்காகவும், சேர்க்கப்படும். பசித்தூண்டி, உமிழ் நீர் பெருக்க வாயுவை அகற்றும். தேன் இஞ்சி ஊறல் கற்ப மருந்தாகும். இதை லேகியமாகவும் செய்து, உண்ணலாம்.

இலந்தை - Ziziphus Ma Uritiania Lann

இலை, பழம், பட்டை, வேர் என்பன பயன்படும். வெப்பநோய்கள் விலகும்.

இலவங்கம் - Syzygium Arumaticum (Linn) Merril Perry

இசிவகற்றி, அகட்டுவாயகற்றி, பசித்தீத் தூண்டி என்பன இதன் தன்மைகள். கிராம்பை அரைத்துப் பற்றுப் போட தலைப்பாரம், நீரேற்றம் நீங்கும். குடிநீர் தாய்மை அடைந்த பெண்ணின் வாந்தியைத் தடுக்கும். கழிச்சலை நிறுத்தி, பசித்தீயைத் தூண்டும். தைலம் பல்வலியைத் தடுத்து நிறுத்தும்.

இலவங்கப்பட்டை - Cinnamomum Uerum Presl

வெப்பமுண்டாக்கி, அகட்டுவாயகற்றி, காமம் பெருக்கி என்பன, இதன் தன்மைகள். உடலில் குளிர்ச்சியை உண்டாக்கும். பொடியை வாந்தி, வயிற்றுப் பொருமல், கழிச்சல் இவைகளுக்குத் தரலாம்.

இலவங்கப் பத்திரி - Cinnamomumtamala (Buch. Hum)

வெப்பமுண்டாக்கி, அகட்டுவாயகற்றி, பசித்தீத் தூண்டி, வியர்வை பெருக்கி ஆகியவை இதன் செயல்களாகும். லேகியம் போன்ற மருந்துகளில் சேரும்.

இலுப்பை - Madhuca, Longi Polia (Koening)

துவர்ப்பி, வெப்பமுண்டாக்கி, உரமாக்கி, பூக்குடிநீர், இருமல், சுரம், நீர் வேட்கையைப் போக்கும். எண்ணெய் கால் கடுவனைப் போக்கும். வளிநோய்களைத் தன்னிலைப் படுத்தும்.

உசிலை மரம் - Aibizia

துவர்ப்பு செய்கையுடையது. பட்டை மாந்தத்தையும், இலைத்தூள் எண்ணெய் பிசுக்கையம் பிசின், மேகநோயையும் நீக்கும்.

உத்தாமணி - Pergularia Daemia (Porssk) Chiou

கோழையகற்றி, புழுக்கொல்லி, வாந்தியுண்டாக்கி ஆகியவைகள், இதன் இலையைக் குடிநீர் செய்து குழந்தைகளுக்குத் தர, வயிற்றுப்

புழுக்கள் வெளியாகும். மாந்தம், செரியாமை தீரும். இரைப்பு, சூதகவாயு, கீழ்வாதம், வீக்கம் போன்ற நோய்களுக்கான மருந்துகளில் இது சேரும்.

ஊமத்தை - Datura metel, Linn

பயன்படும் உறுப்பு, இலை, பூ, காய், விதை, வாந்தியுண்டாக்கி, இசிவகற்றி, துயரடக்கி, மயக்கமுண்டாக்கி.

இலைப் பொடியால் இரைப்பு நீங்கும். 32 மி.கி முதல் 100 மி.கி அளவு உண்ணவேண்டும். கண் தாரையைப் பெரிதாக்கும். ஊமத்தைச் சாறு கொண்டு காய்ச்சப்படும் எண்ணெயால், புண், புரை, பிளவை, சதை வளர்தல் என்பன நீங்கும்.

எட்டி - Strychnus Nux - vumuca Linn

அழுகலகற்றி, அகட்டு வாயகற்றி, நீர்மலம் போக்கி, உரமாக்கி, வெப்பமுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, நரம்புகளை வலிமை உள்ளதாகச் செய்யும். விதை சிறுவிசமுட்டித் தைலம், இலகுலிச முட்டித் தைலம் ஆகியவற்றில் சேருகின்றது.

எருக்கு - Calotropis Gigantea (Linn) R.Br

இலை, பூ, பால், பட்டை, வேர் என்பன பயன்படும். புழுக்கொல்லி, உடல்தேற்றி, மலமிளக்கி, வெப்பமுண்டாக்கி, ஆகிய தன்மைகள் உண்டு. இலைகளை வாட்டிக் கட்டிகளுக்குக் கட்ட, உடையும். இலையை உலர்த்திப் பொடியாக்கி, புண்களுக்குத் தூவ, புண்கள் ஆறும். பூவை சுவாச குடோரி மாத்திரையில் சேரும். இது இரைப்பு நோய்க்கு வழங்கப்படும். பாலைப் பற்றுப் போடலாம். சுளுக்கு, கட்டி, வாயு என்பன தீரும்.

இலை, காய், பழம் என்பன குளிச்சி உண்டாக்கி செய்கையை உடையன. தடிப்புண்டாக்கி, அகட்டு வாயகற்றி என்பன தோலுக்குண்டு. பொதுவாக தீக்குற்ற நோய்கள் வெறி நோய் என்பன தீரும்.

"சதாபல, கனிக்காய் சமூலமும் உணவே

நிதானமாய் பயித்திய நிந்தையாய் அகலுமே பழம் மயக்கம், வாந்தி, வாய்க் குமட்டல், நீர்வேட்கை என்பனவற்றை அகற்றும்.

இலிங்கமுடன் சேர்த்துச் செய்யப்படும் "சாதி சம்பீரக் குழம்பு" வாய்க் குமட்டலுக்குப் பயன்படும் மருந்தாகும்.

எள் - Sesamom Indicum

பயன்படும் உறுப்பு: இலை, பூ, காய், விதை. இலைக்கு வறட்சியகற்றி, உள்ளழலாற்றி செய்கையும், காயின் சாம்பல், புண்களுக்குத் தூவு பொடியாகவும் பயன்படும். விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் தோல் நோய்களுக்குப் பயன்படும். உண்வாகவும் இது உள்ளது.

ஏலம் - Elettria Cardamomum

இதன் பயன்பாடு, தொன்மையானதாகும். மணமுள்ளது. வெப்பமுண்டாக்கி, அகட்டுவாயகற்றி, பசித்தீத் தூண்டி, தொண்டை, தாள், வாய், கீழ்வாய் நோய்களையும், இருமல், கழிச்சல், நீர்ச் சுருக்கு, கோழைக் கட்டு, என்பனவற்றை நீக்கும். அண்மையைப் பெருக்கும். இதிலிருந்து ஏலாதிச் சூரணம் செய்வார்கள். பதினென் கீழ் கணக்கு நூலான "ஏலாதி" இதன் பெயரால் அமைந்தாகும்.

ஒதியமரம் - Lannea Coromandelica

பயன்படும் உறுப்பு, இலை, பட்டை, பிசின், வேர் என்பன. துவர்ப்பி, உரமாக்கி, தொற்றுப்புழுவகற்றி, குருதிப் பெருக்கடக்கி என்பனவாகும். இலையை மிளகுடன் அரைத்தப் பற்றை வீக்கங்களுக்கிடலாம். பட்டைக் குடிநீர், வாயப்புண் நாக்குப்புண் ஆகியவைகளுக்கு கொப்பளிக்கப் பயன் தரும். உள்ளுக்கு 30 - 65 மி.லி அருந்த, வயிற்றுப் போக்கு, புண் என்பன தீரும்.

ஓமம் - Carum Ro2 Burghianum

பசித்தீத் தூண்டி, இசிவகற்றி, அகட்டு வாயகற்றி, அழுகல் அகற்றி, வெப்பமுண்டாக்கி, உரமாக்கி, உமிழ்நீர் பெருக்கி, ஐயசுரம், இருமல், செரியா மாந்தம், பொருமல், கழிச்சல், ஊழி, என்பன போகும். ஓமத்தீ நீர், ஓமத்தைலம் என்பன தரப்படுகின்றன.

கஞ்சா - Cannabis India Linn

இலை, பூ, சமூலம், நார் என்பன பயன்படும். வெப்பமுண்டாக்கி, துயரடக்கி, மூர்ச்சை உண்டாக்கி, உறக்கமெழுப்பி, காமம் பெருக்கி, இசிவகற்றி, சிறுநீர் பெருக்கி, பேறு வலியுடாக்கி என்பன இதன் செயல்களாம். மனக் களிப்பு, தூக்கம், பசி, கற்பனைத் தோற்றங்களையும் உண்டாக்கும்.

கடுகு - Brassic Juncea

வாந்தியுண்டாக்கி, வெப்பமுண்டாக்கி, கொப்புளம் எழுப்பி, செரிப்புண்டாக்கி, சிறுநீர் பெருக்கி என்பன. கடுகு சேர்த்த பச்சடியை உண்ண, முக்குற்றத் துன்பம் நீங்கும். வாந்தியை உண்டாக்கும். வெண்கடுகு "ஐயவி" எனப்படும். இதை தீயிலிட்டுப் புகைக்கும் மரபு, சங்க காலம் தொட்டே இருந்துள்ளது. "வேம்பு சினை ஒடிக்கவும், ஐயவி புகைக்கவும்" என்று வருகின்றது. கடுகு எண்ணெய் வடஇந்தியாவில் உணவாகப் பயன்படுகிறது. மேல்பூச்சாகவும் இதை உபயோகிக்கலாம்.

கடுகுரோகணி - Picrophiza Scrophularii Flora

முறைவெப்பகற்றி, பெருங்கழிச்சலுண்டாக்கி, பசித்தீத்தூண்டி, குடல் புழுவகற்றி என்பன இதன் செய்கைகளாகும். வேர்க் குடிநீரை 3 முதல் 4 நாள் அருந்த வீக்கம் நீங்கும். 8 கிராம் பொடியை நீரில் கலந்து, சர்க்கரையுடன் உண்ண மலம் வெளியாகும்.

கடுக்காய் - Terminallia Chebula

கொட்டையை நீக்கிய பின் பயன்படுத்த வேண்டும். உப்பு சுவை தவிர ஏனைய சுவைகளையுடையது. மலத்தை வெளியாக்கல், பசித்தீயைத் தூண்டுதல், கன்னம், கழுத்து, நாக்கு, ஆண்குறி ஆகிய உறுப்புகளில் வருவதான நோய்கள் என்பன தீரும். திரிபலாச் சூரணத்தில் இது சேரும். இதை இரசாயனமாகச் செய்து பயன்படுத்த பருவகாலத்தில் உண்டாகும் தீங்குகள் விலகும். துவையல் சுவையின்மையைப் போக்கும். குடிநீர் மிகுசிறுநீர், கண்ணோயைப் போக்கும். பொடி பல்தொடர்பான, இரத்தம் வடிதல், இரணம் என்பன நீக்கி, பல்லை இறுக்கும்.

கடுக்காய் நெய், லேகியம், வடகம், சத்து என்பன செய்யப்படுகின்றன. பொடி நிலக்கடலையளவு தண்ணீருடன் அருந்த காமாலை பெரு வயறு நீங்கும்.

கண்டங்கத்தரி - Solanum Surattense

கோழையகற்றி, சிறுநீர்ப் பெருக்கி, அகட்டு வாயகற்றி, பெருங்கழிச்சலுண்டாக்கி, எல்லா உறுப்புகளையும் உலர்த்திப் பொடி செய்யவும்.தேனுடன் 1/4 தேக்கரண்டி உண்ண, இரைப்பு சளி என்பன தீரும். கண்டங்கத்தரிப் பழத்தை தேனில் ஊறவைத்து ஊசியால் குத்தி ஓட்டையிட்டுத் 48 நாள் சென்றபின், எடுத்து தேனை மட்டும் அருந்தக் கக்குவான் இருமல் நீங்கும்.

கத்தூரி மஞ்சள் - Curcoma Aromatica

உரமுண்டாக்கி, வெப்பமுண்டாக்கி, அகட்டுவாய் அகற்றி என்பனவாகும். இதனால் பெரும்புண்கள், கரப்பன் நுண்புழுக்கள், பசியின்மை என்பன தீரும். கிழங்கை அரைத்துத் தேய்த்துக் குளிக்க, கரப்பன், பெரும்புண் நீங்கும். எண்ணெயிலிட்டுக் காய்ச்சி உடல் வலி, அடிபட்ட நோய்களுக்கும் மேலுக்குத் தேய்க்கலாம். மணமூட்டிப் பொருள்களோடும், தைலவகுப்புகளிலும் இதைச் சேர்ப்பார்கள்.

கரந்தை - Ocimum Basilicium

கொட்டை கரந்தை, சிவகரந்தை மருந்து செய்யச் சிறந்தது. உடல் தேற்றி, உள்ளழலாற்றி பசித்தீத் தூண்டி, புழுக்கொல்லி, தூய்மையாக்கி, குளிர்ச்சியுண்டாக்கி, உரமாக்கி என்பன வெட்டை மேகம், சொறி, சிரங்கு, கரப்பன்நீக்கி, மலத்தை வெளியாக்கும்.

கரிசாலை - Eclipta Prostrata

கசப்புச் சுவை, வெப்பத்தன்மையும் கொண்டது. ஈரலை உறுதியாக்கும் காமாலை வீக்கம் என்பன தீரும். கரிசாலையை உணவாகவும் பயன்படுத்தலாம். தூய்மை செய்த இலையை அரைத்து, மோரில் சேர்த்தருந்த, மஞ்சள் காமாலை தீரும். இதன் தைலம், குளிக்கப் பயன்படும். தலை முடி அடர்த்தியாக வளர, இலைகள் பயன்படும். இலையை பசையாக அரைத்து உலர்த்தி, நல்லெண்ணெயில் ஊறவிடவும். தலையில் தடவிவர கூந்தல் நன்கு வளரும்.

கல்யாணப் பூசணி - Benincase Hispida

சிறுநீர் பெருக்கி, குருதிப் பெருக்கி, உரமாக்கி, உடல் தேற்றி, உடலுரமாக்கி என்பன.

கல்யாணப் பூசணிக்காய் - Benincasa Hispida

காய், விதை என்பன பயன்படும். சிறுநீர் பெருக்கி. குருதியைப் பெருக்கி, உரமாக்கி, உடல் தேற்றி, உடலுரமாக்கி என்பன இதன் இயல்புகளாம். உள்காய்ச்சல் பித்தம், நீர்க்கட்டு, மருந்தீடு, வறட்சி, மேகம் என்பன நீங்கும். காயை உணவாகப் பயன்படுத்துவார்கள். பூசணிப் பழத்தை, புண்களுக்குப் பற்றாகக் கட்டலாம். அல்வா செய்து உண்பார்கள். இது "காசி அல்வா" ஆகும். பச்சைப் பயறு சேர்த்து, இக்காயுடன் சமைத்து உண்ண, இடு மருந்து இருந்தால், செரியாமல் கழியும். பூசணிக்காய் லேகியம், நெய் என்பன செய்து, இரச தாதுவைப் பற்றி வரும் நோய்களுக்கு வழங்கலாம்.

கழற்சிக் கொடி - Caesalpinia Bondue

இலை, கொட்டை, பட்டை, வேர் என்பன பயன்படும். முறை வெப்பகற்றி, இசிவகற்றி உரமாக்கி, புழுக்கொல்லி, வெப்பகற்றி, இதன் இலை அண்டவாயு, சூலைக்கட்டு, வெள்ளை, குன்மம் என்பன நீக்கும். பருப்பால், விரைவீக்கம், வீக்கங்கள் விலகும்.

"கழற்காய் விதைக்கு கன அண்ட வாதம்
தழல் பக்க சூலை, குன்மம், சாந்தி"

என்று அகத்தியர் குணவாகடம் கூறும். கழல் பருப்பு 3 பங்கு சுக்கு - 2 பங்கு, களிப்பாக்கு - 1 பங்கு சேர்த்து, முட்டை வெள்ளைக்கருவிட்டு அரைத்துக் கொள்ளவும். இக் கலவையை, யானைக்கால் நோயில் வரும், விரைவீக்கம், நீரண்ட விரைவீக்கத்துக்குப் பூசக் கரையும். பருப்புக் குடிநீர் குடல் வாதம், சூலை குன்மம் தீரப் பயன்படும்.

செங்கழுநீர் - Nymphaea Alba

கொடி வகுப்பைச் சார்ந்தது. பித்த மடக்கி, குளிச்சி உண்டாக்கி, வெள்ளைப் பாடாணத்தைக் கட்டும். பூக்குடிநீர், உடலுக்குக் குளிர்ச்சியைத்

தரும். நாச் சுவை அறியாமைக்கு, கிழங்கைப் பொடி செய்து, சீனியுடன் உண்ணவும். முடித்தைலம் பலவற்றிலும் இது சேரும்.

### கள்ளி - Euphorbio Ligudaria

நீர் பேதி உண்டாக்கி, வாந்தி உண்டாக்கி, தடிப்புண்டாக்கி, இதன் பாலால் வளி முடக்கம், கிரந்தி, தோல் நோய், ஐயநோய், குடல்புழு, கரப்பன், இவை போம்.

### கறிவேம்பு - Murraya Koenigii

பெருஞ்செடியினம். இலைக்கு ஓர்வித நறுமணம் உண்டு. தாளிசமாகவும் பயன்படுத்தவார்கள். இலை, ஈர்க்கு, பட்டை, வேர் என்பன பயன்படும். உரமாக்கி, பசித்தீத் தூண்டி என்பன இதன் செயல்கள். சுவையின்மை, சீதபேதியால் வரும் வயிற்றுளைவு, பழஞ்சுரம், பைத்தியம் என்பன தீரும். இவைகளுக்குக் குடிநீரிட்டு வழங்கலாம். கருவேப்பிலை, மிளகு, உப்பு, சீரகம், சுக்கு ஆகியவற்றுடன் சேர்த்து இடித்துப் பொடி செய்து, உணவில் சேர்த்துண்ண, மந்தம், மந்தபேதி, மலதோடம், மலக்கட்டு, கிரகணி, பிரமேகம் என்பன விலகும். துவையல் செய்துண்ண, அரோசகம், அதிசாரம், பித்தவாந்தி, பித்த சயம், செரியாமை, வயிற்றுளைச்சல் தீரும்.

### கற்றாழை - Aloe Barbadensis

இதில் பலவகைகள் உள்ளன. பெரும்பாலும் ஒரே தன்மையை உடையவை. பால் மடல் சோறு, சாறு, வேர் என்பன பயன்படும். உரமாக்கி உடல் தேற்றி, நீர்மலம் போக்கி, பூப்பு உண்டாக்கி, என்பன இதன் செயல்கள். "குமரியின் வற்றலும் கொளப் பிணியகலும்" என்பார் தேரன். இதனால் மேகம், தோல் நோய், மூலம், உன்மாதம், குன்மம் என்பன தீரும். கற்றாழைச் சோற்றைப் பலமுறை கழுவி, சீனாக்கல்கண்டு, அல்லது படிகாரம் சிறிது சேர்க்கவும். ஒரு துணியில் கட்டித் தொங்கவிட, நீர்வடியும். இதைக் கண்ணிலிட, கண்சிலம்பு, கண்நோய் தீரும். சாற்றை வீக்கங்களில் பூசத் தணியும். இதன் பால் இரும்பை பற்பமாக்கும்.

### காக்கணம் - BClitoria Ternatea. Linn

பயன்படும் உறுப்பு, இலை, விதை, வேர் பெருங்கழிச்சலுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, உள்ளழல் ஆற்றி என்பன. வெள்ளைக் காக்கரட்டான் பிரிவே சிறந்தது. வேரால், வெள்ளை விழுதல், தலை நோய் சுரம், கண்ணோய், மந்தம், இவை தீரும். கழிச்சல் உண்டாகும்.

### காராக்கருணை - AMorphophallus Paconiifolios

பயன்படும் உறுப்பு, கிழங்கு. உடல் தேற்றி, உரமாக்கி, என்பன இதன் பண்புகளாம். கிழங்கை உணவாக உண்ணலாம். இதனால் மூலநோய் தீரும். பசி உண்டாகும். இதன் இளகம், தோல் நோய்கள், மூலநோய் தீர்க்க உதவும்.

### சிறுகீரை - Amaranthus Tricolor. Linn

இதனால் கண்புகைச்சல், கண்காசம், படலம், இரசக் குற்றத்தால் உண்டான நஞ்சும் புண், நீர் எரிச்சல், வீக்கம், அழல் நோய், என்பன தீரும். உணவாக உட்கொள்ளத் தீரும்.

### கீழாய் நெல்லி - Phyilanthus Amarus

வீக்கமுருக்கி, சிறுநீர் பெருக்கி, துவர்ப்பி, குளிர்ச்சி உண்டாக்கி, ஈரல் தேற்றி, தீய இரத்தம், விழிநோய், நாவறட்சி, தாபம் நீக்கி, வாதத்தைப் பெருக்கும். இதிலிருந்து தைலம் எடுப்பார்கள். கைகால் எரிச்சல், கண் எரிச்சல், நடுக்கல், தலை சுற்றல், வாந்தி என்பன தீரும்.

### குங்கிலியம் - Shorea Robusta

இது, மரப்பிசின் ஆகும். வெப்பமுண்டாக்கி, கோழையகற்றி, சிறுநீர் பெருக்கிச் செயல்களை உடையது. பெரும்பாடு, வெள்ளை, புண், இவைகளுக்கு அகமருந்தாகப் பயன்படும். குங்கிலியக் களிம்பை புண்களில் பூசப் போகும். தீயிலிட்டுப் புகைக்க, கெட்ட நாற்றம் நீங்கும். இதிலிருந்து குங்கிலியலெண்ணெய், குங்கிலியக் குழித்தைலம், பற்பம் என்பன செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### குங்குமப்பூ - Crocus Satiuus

இந்தியாவில் காசுமீரத்தில் மட்டுமே விளையும். இதைப் பற்றி செய்தி 1000 ஆண்டுகளுக்கு முன் முதலாம் இராச இராச சோழனின் "ஆனைமங்கலம்" செப்பேட்டில் வருகிறது. வெப்பமுண்டாக்கி, பசித்தீத்தூண்டி, துயரடக்கி இசிவகற்றி, ருது உண்டாக்கி என்பன இதன் செயல்கள். விலை அதிகமுள்ளதால், கலப்படம் செய்யப்பட்டு, விற்கப்படுகிறது. பீனசம், தலைவலிக்கு முலைப்பாலிலிட்டுப் பற்றுப் போடலாம். மகப்பேறு விரைவில் நடைபெற, குங்குமப்பூவை சோம்புக் குடிநீரில் தர, மகப்பேறு உடன் நடக்கும்.

### குத்திரிக்கம் - Boswellia Serreta

மரப்பிசின் உறைவதால் உண்டாகும். நல்ல மணம் வீசும். பயன்படும் உறுப்பு, பிசின், எண்ணெய் பசித்தீயைத் தூண்டி, வியர்வையை உண்டாக்ம். துவர்ப்பி குளிர்ச்சியுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, பூப்புண்டாக்கி, கோழையகற்றி, எண்ணெயால், இருமல், இரைப்பு, மேகக்கட்டி, நச்சுக்கடி, படர் தாமரை, சிரங்கு, நாட்பட்ட புண்கள் தீரும்.

### குப்பைமேனி - Acalypha Indica

பயன்படும் உறுப்பு: இலை, வேர், சமூலம். இதை உணவாக உண்ணுவதைச் சங்கப் பாடல் கூறும். இதை ஏழைகள் இன்றும் உண்பர். காயத்திருமேனித் தைலம் செய்யப் பயன்படுகிறது. புழுக்கொல்லி, சிறுநீர்ப் பெறுக்கி, வாந்தியுண்டாக்கி என்பன. முதன்மையானவைகளாம். இலையை உப்புடன் சேர்த்தரைத்த பற்று, தோல் நோய்களுக்குப் பயனாகும்.

### குருவேர் - Vetiveria Zizanioides

பூண்டு வகையைச் சேர்ந்தது. நல்ல மணமுண்டு. தைலங்களில் மணத்திற்காக சேர்ப்பார்கள். பயன்படும் உறுப்பு வேர். விசிறியால் வெறிநாய், உடல் எரிச்சல், நாவறட்சி என்ப போம். தைலங்களிலும், தீக்குற்றங்களைப் போக்கும் பொடிகளிலும், இளகங்களிலும் சேரும்.

### சிறுகுறிஞ்சான் - Gymnemasylvestre

பயன்படும் உறுப்பு: இலை, வேர் என்பன. வாதம், சீதம், அத்தி சுரம், நீங்காத கடி விசம் என்பன நீக்கும். அக்கரம், மிகுசுரம், என்பனவும் தீரும். இலையை மென்று தின்ன, நாவின் சுவைத் திறன் குறையும். சர்க்கரையின் இனிப்புச் சுவை தெரியாது.

குன்றி - Abrus Precatorius

கண்நோய், பித்தம், நிறம் மாறுதல், காமாலை, வியர்வை என்பன விலகும். இதன் இலையை மென்று, சாற்றை விழுங்கக் குரல் கம்மல் போகும்.

கொடிவேலி - Plumbago Indica

கட்டி, புண், கழலை, கிரந்தி, அரையாப்பு, சூலை, இரத்தக்கட்டு, பெருவயிறு, என்பன போக்கும். இதைப் பயிரிட "வரி" முற்காலத்தில் விதிக்கப்பட்டது. அண்மைக்காலத்தில் கருவழிப்புக்காக பயன்பட்டது. தைலம், எண்ணெய் என்பன, கீழ்வாதம், பட்சவாதம் தீரப் பூசப்படுகிறது.

கொத்தமல்லி - Coriandrum Satiuum

பயன்படும் உறுப்பு: இலை, விதை. பசித்தீத் தூண்டி, அகட்டு வாயகற்றி, வெப்பமுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, தழையை மணத்திற்கு குழம்பு, இரசம் போன்றவைகளில் பயன்படுத்துவார்கள். உலர் விதை அன்றாட உணவில் இடம் பெறும், பொருளாகும்.

கொள் - Mcrotyloma Uniflorum

இதன் பயனாகும் உறுப்பு, விதை, சமூலம் என்பன. துவர்ப்பி, சிறுநீர்ப் பெருக்கி, உரமாக்கி, குடல்வாதம், குன்மம் உண்டாக்கும். உண்ணும் மருந்தின் செயலை முறிக்கும். பித்தம் அதிகமாகும். குளிர் சுரம் நீங்கும். கொள்ளுக் கஞ்சி வன்மையைத் தரும்.

கொன்றை - Cassia Fistula

மரவகுப்பைச் சேர்ந்தது. இதன் பயன்படும் உறுப்பு, இலை, பூ, விதை, பட்டை என்பன. சரக்கொன்றைப் புளி, மலத்தைத் தள்ளும். படர் தாமரையைப் போக்கும். பெருவயிறு நோய்க்கு வயிற்றில் பற்றுப் போட, நீர் வெளியாகும்.

கோட்டம் - Costus Speciosus

இது பசித்தீத் தூண்டி, கோழையகற்றி, உரமாக்கி, வெப்பமுண்டாக்கி; வியர்வை உண்டாக்கி தன்மைகளையுடையது. கண், தாடை, வயிறு, கழுத்து, தலை, நா, வாய், ஆகிய உறுப்புகளில் உண்டாகும். நோய்கள் நீங்கும். கோட்டத் தைலம் மூலநோய்க்குப் பயன்படும்.

கோவை - Coccinia Grandis

பயன்படும் உறுப்பு: இலை, காய், தண்டு, கிழங்கு ஆகியவை. கோழையகற்றி, இசிவகற்றி, வெப்பமுண்டாக்கி, வியர்வை பெருக்கி. இலையால் கண்ணுக்குக் குளிர்ச்சி ஏற்படும். காய், வற்றலுக்கு புண்கள் நீங்கும். சுவையின்மை, நீங்கா வெப்பம், கபம் சுரம் இலைகள் போகும்.

சண்பகம் - Michellia Champaca

பயன்படும் உறுப்பு : இலை, பூ, பட்டை, வேர் என்பன. பூவால் வாத பித்தம், என்பு சுரம் மேகம், தாது நட்டம், கண், அழற்சி என்பன தீரும். பூவைக் குடிநீரிட்டு 30 மி.லி. முதல் 60 மி.லி. வரை குடிக்கலாம்.

சதக்குப்பை - AnethumGraueolens

பூண்டு வகையைச் சேர்ந்தது. இலை, பூ, விதை என்பன பயன்படும் உறுப்புகளாகும். வளி நோய் குருதிப் போக்கு, தலைவலி, காது வலி, மூக்கு நீர்ப்பாய்தல், என்பன நீங்கும். பசியை உண்டாக்கும்.

சாரணை - Trianthema Decandra

கோழையகற்றி, மலமிளக்கி, சிறுநீர்ப் பெருக்கி செய்கைகளையுடையது. சாரணையைக் குடிநீரிட்டுத் தர கரப்பன், வீக்கம் என்பன நீங்கும். வங்கம் பற்பமாகும். இதன் சாறு வாதராட்சத மாத்திரையைச் செய்த, இன்றியமையாது என்று அகத்தியர் இரத்தினச் சுருக்கம் கூறும்.

சந்தனம் - Santalum Album

சங்ககால முதல் பயன்பாட்டிலுள்ள, தமிழர் அறிந்த மரம்.

இதிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. உடல் தேற்றி, சிறுநீர் பெருக்கி, வியர்வை பெருக்கி, வெப்பமுண்டாக்கி, துவர்ப்பி, அழுகல் நாற்றமகற்றி, குளிர்ச்சியுண்டாக்கி, கட்டையைப் பொடி செய்து, குடிநீராக்கித் தரலாம். வியர்வையை உண்டாக்கி, சுரத்தை நீக்கும். மணப்பாகால் மூலச்சூடு, பிரமேகம் சுரம் என்பன தீரும்.

சாதிக்காய் - Myristica Fragrans

பயன்படும் உறுப்பு: காய். வெப்பமுண்டாக்கி, அகட்டு வாயகற்றி, மண்மூட்டி, காமம் பெருக்கி, உரமாக்கி, தாதுநட்டம், பேதி, சுவாசகாசம், என்பன தீரும். வெற்றிலை பாக்குடன் சேர்த்துத் தருவது மரபு. சாதிக்காய்த் தைலம், கழிச்சல், நோயைப் போக்கும். இதை ஊறுகாயாகப் போட்டு உணவுக்குத் துணைகாகப் பயன்படுத்துவதுண்டு.

சாம்பிராணி - Styrax benzoin

பயன்படும் உறுப்பு: பிசின், வெப்பமுண்டாக்கி, கோழையகற்றி, தடிப்புண்டாக்கி, சிறுநீர் பெருக்கி என்பன. இதைப் புகையாகவே பயன்படுத்த, நுண்புழுக்கள், தீய நாற்றம் என்பன போகும். சாம்பிராணிக் களிம்பு மேல்ப்பூச்சாகப் பயன்படும். சாம்பிராணியப் பதங்கம் செய்முறை, தேரையர் கரிசல், அகத்தியர் பரிபூரணம் ஆகிய நூல்களில் உள்ளன. சாம்பிராணித் தைலம் தலைவலி, நீரேற்றத்திற்குப் பூசலாம்.

சிவதை - Operculina Turpethum

பூண்டு இனம். நீர் மலம் போக்கித் தன்மையுள்ளது. வேர் பயன்படும் பகுதியாகும். மூலம், வயிற்றுக் கேடுகள், வயிற்றுப்புழுக்கள், எலிக்கடி விசம் என்பன தீரும்.

சிவணார் வேம்பு - Indigofera Asphlathoides

பூண்டுவகை. வெப்பமுண்டாக்கி, உள்ளழல் ஆற்றி என்பன. இலை, பூ, தண்டு, வேர் என்பன பயன்படும் உறுப்புகள். தோல் நோய், சிரங்கு, இரைப்பு, உளமாந்தை என்பன தீரும். இலை, பூக்குடிநீர், தோல்

நோய்க்களுக்காகும். இதன் தைலத்தை உள்ளுக்கும், வெளிப்பூச்சாகவும் பயன்படுத்தலாம். தோல் நோய்கள் நீங்கும்.

சிறுநாகப்பூ - Mesua nagassauium

பயன்படும் உறுப்பு: இலை, மொக்கு, பூ, விதை, வேர், பட்டை என்பன. சிறுநாகப்பூவின் செய்கைகள், துவர்ப்பி, அகட்டு வாயகற்றி, மணமூட்டி என்பன. மேகம், இருமல், வாயு என்பன தீரும்.

சிற்றாமுட்டி - Pavonia Zeylanica

அனைத்து உறுப்பும் பயனாகும். வறட்சி யகற்றும். வேர்க்குடிநீர், அத்தி சுரம் நீக்கும். இதன் தைலம், கண் நோய்கள், வளிநோய்களைப் போக்கும்.

சீந்தில் - Timospora Cordifolia

கொடியினம். இலை, கொடி, வேர் என்பன பயன்படும். உடல் தேற்றி, காமம் பெருக்கி, உள்ளழலாற்றி, வெப்பமுண்டாக்கி, பசித்தீத் தூண்டி, உரமாக்கி என்பன. குடிநீரால், பித்தசுரம் விலகும். சீந்தில் சர்க்கரையால் மேக நோயின் தீ மாறும். மதுமேக நோயால் ஏற்பட்ட நீர்வேட்கையைத் தணிக்கும். இதிலிருந்து, "அமுத சர்க்கரை லேகியம்" செய்யப்படும்.

சீரகம் - Cominum Cyminum

செடி வகுப்பைச் சேர்ந்த மணமுள்ள தாவரம். அகட்டு வாயகற்றி, வெப்பமுண்டாக்கி, பசித்தீத் தூண்டி, துவர்ப்பிச் செயல்களை உடையது. உணவை நன்கு செரிப்பிக்கச் செய்வதால் "போசன குடாரி" எனப்படும். "போசன குடாரியைப் புசிக்கில் நோயெலாம் அறும்." பித்தத்தைக் குறைக்கும். மந்தநிலையை மாற்றும். செரிமானத்தை உண்டாக்கும். இதைத் தைலமாக்கிப் பயன்படுத்தலாம்.

கருஞ்சீரகம் - Nigella Sativa

இது எல்லா இடங்களிலும் பயிராகும். பயன்படும் உறுப்பு விதை. அகட்டு வாயகற்றி சிறுநீர் பெருக்கி, பால் பெருக்கி, புழுக்கொல்லி, பசித்தீத் தூண்டி, வறட்சியகற்றி, கரப்பன், புண், பீனிசம், காய்ச்சல், தலைவலி,

கண்வலியைப் போக்கும். அக மருந்தாகவும், புறமருந்தாகவும் பயனாகும். இதிலிருந்துத் தைலம் எடுக்கப்படுகிறது.

பெருஞ்சீரகம் - Pimpinella Amisum

பூண்டு வகை இனம். பயன்படும் உறுப்பு: பூ, விதை, வேர். அகட்டு வாயகற்றி, பசித்தீத் தூண்டி என்பன தன்மைகளாகும். யோனி நோய், குன்மம், மந்தம், பொருமல், இரைப்பு, வாதம் என்பன நீங்கும். சோம்புத் தீநீர் சோம்புத் தைலம் என்பன தயாரிக்கப்படுகின்றன.

சுக்கு - Zingiber Ohcinale

பயன்படும் உறுப்பு: வேர். வெப்பமுண்டாக்கி பசித்தீத் தூண்டி, அகட்டு வாயகற்றி என்பன. சூலை, மந்தம், நெஞ்செரிவு, ஏப்பம், மூலம், இரைப்பிருமல், பீனசம், அதிசாரம், என்பன போக்கும். இதிலிருந்து, சௌபாக்கிய சுண்டி, கண்டாத்திரி இளகம், நாகளாதிசூரணம், துபிர்ச் சுண்டிச் சூரணம், சுக்குத் தைலம் என்பன செய்யப்படுகின்றன.

சேராங்கொட்டை - Semecarpos Anacardium

பயன்படும் உறுப்பு: கொட்டை, பருப்பு என்பன. உடல் தேற்றி, புண்ணாக்கி செய்கை, சொறி, சிரங்கு, தோல்நோய்கள், சூலை முதலிய நோய்களைப் போக்கும். பால், தீங்கை உண்டுபண்ணும். புளியிலைக் குடிநீர் அருந்த மாறும். சேங்கொட்டை லேகியம் உண்ண, சேகண்டியைப் போல, குரல் ஒலி இருக்கும். குழந்தையின் முகமென அழகுண்டாம். இதைக் கொண்டு இளகம், சூரணம், நெய் செய்வார்கள்.

தகரை - Cassia Tora

பயன்படும் உறுப்பு : இலை, வேர், விதை. மலமிளக்கி, புழுக்கொல்லி, வெப்பகற்றி என்பன. படர்தாமரை, சொறி, மந்தம், என்புருக்கி, சுரம் இவைகளை நீக்கும்.

மணித்தக்காளி - Solanum Nigrum

பயன்படும் உறுப்பு: இலை, காய் என்பன. உடல் தேற்றி, சிறுநீர் பெருக்கி, வியர்வை பெருக்கி, கோழை அகற்றி. காயை கறி, வற்றல் என்பன செய்துண்பார்கள். வற்றல், நீர்க்கழிச்சலை உண்டாக்கும். வாந்தியைப் போக்கும்.

தண்ணீர்விட்டான் - Asparagus Racemosus

பயன்படும் உறுப்பு, இலை, கிழங்கு, உடல் உரமாக்கி, பால்பெருக்கி, காமம் பெருக்கி, இசிவகற்றி என்பன. கிழங்கு, நீரிழிவு, நாள்பட்ட சுரம், என்புருக்கி நோய், வெட்டை, உள்சூடு தீர்க்கும்.

தழுதாழை - Lerodendrum Phlomoodis

பயன்படும் உறுப்பு : இலை, வேர் என்பன. உடல் தேற்றி, துவர்ப்பி என்பன. வளிநோய்கள், சொறி, சிரங்கு என்பன தீரும். பித்தம் அதிகமாகும். தழுதாழைக்கு உடல் கடுப்பை நீக்குமாற்றல் உண்டு.

தாளிச பத்திரி - Abies Spectalitis

ஓர்வகையான செடி. பயன்படும் உறுப்பு: இலை. பசித்தீத் தூண்டி, அகட்டுவாயகற்றி, கோழையகற்றி, உரமாக்கி என்பன. மூக்கு நோய்கள், நீண்டகால காசம், சுவாசம், சுவையின்மை மேகமந்தம், என்பு சுரம் என்பன நீங்கி நன்மகப்பேறுண்டாம்.

தான்றி - Terminalia Bellirica

பயன்படும் உறுப்பு: இலை, பழம், விதை, துவர்ப்பி, கோழையகற்றி, மலமிளக்கி, உரமாக்கி என்பன. சிலந்திவிசம். ஆண்குறிப் புண், சீழ்மேகம் என்பன தீரும். அழகு, ஒளியைத் தரும். வெப்பம் தணியும்.

திப்பிலி - Piper Longum

கொடி வகையது. பயன்படும் உறுப்பு, காய், அரசி என்பன. வெப்பமுண்டாக்கி, அகட்டுவாயகற்றி என்பன. இருமல், குன்மம், இரைப்பு, கயம், ஈளை, பாண்டு, சுவையின்மை, வயிறு பொருமல், ஊதல், தலைநோய், மயக்கம், பெருகும் நீர்த்தோடம் என்பன தீரும்.

தும்பை - Lucas Aspera

பயன்படும் உறுப்பு, இலை, பூ, மலகாரி, கோழையகற்றி, வெப்பமுண்டாக்கி, பூப்புண்டாக்கி. இதை உணவாகவும் சமைத்துண்பது வழக்கம். ஐய நோய்கள் தீரும்.

துளசி - Ocimum Sanclum

மண் வாசனையுள்ள செடியாகும். வெப்பமுண்டாக்கி, கோழையகற்றி, வியர்வை பெருக்கி. பயன்படும் உறுப்பு, இலை, விதை, பேய்போல ஆடும் வெறி நோயைப் போக்கும் பீனிச நோய், வெப்பம் என்பன விலகும்.

தூதுவளை - Solamum Trilobatum

பயன்தரும் உறுப்பு, இலை, பூ, காய், வெப்பமுண்டாக்கி, கோழையகற்றி, உரமாக்கி. இதனால் கபப் பிணிகள் யாவும் நீங்கும். இலைக்குடிநீர் சளி, இருமல் தீரும்.

தேவதாரு - Cedrus Deodara

பயன்படும் உறுப்பு : பட்டை, கட்டை என்பன. துவர்ப்பி, வெப்பகற்றி, அகட்டுவாயகற்றி. வளர்ந்த பீனிசம், புராண சுரம், நீர்ப்பாய்ச்சல் என்பன தீரும். பட்டைக் குடிநீர், சுரம், கழிச்சல் என்பன போக்கும் கட்டையைப் பால்விட்டு அரைத்துக் கொதிக்கவிடவும். பின் தலையில் தேய்க்க, நல்ல தூக்கம் வரும்.

தேற்றான் - Sirychmos Potatorum

பயன்படும் உறுப்பு: பழம், விதை என்பன. பழம்: வாந்தியை உண்டாக்கி, பேதி போக்கி. விதை: உடல் தேற்றி, உரமாக்கி, பசித்தீத் தூண்டி, உள்ளழலாற்றி, சிறுகோழையகற்றி. இதை ஊறுகாய், துவையல், குடிநீர் ஆகியவைகளாகச் செய்து உண்ணவும். வல்லை, சூலைவலி, மேகவெப்பம், பாண்டு, பெருவயிறு, மூலம், பெரும்பாடு, சோகை என்பன தீரும். விதையிலிருந்து இளகம் செய்வார்கள். "தேற்றான் கொட்டையிட்டுத் தேற்றுமைந்தரை" என்பது பழமொழியாகும்.

தொட்டால் சிணுங்கி - Mimosa Pudica

பயன்படும் உறுப்பு: இலை, வேர் என்பன. உடல்தேற்றி, உரமாக்கி, காமம் பெருக்கி. நீரிழிவு நோயை, நாள்தோறும் ஒரு கரண்டியளவு பொடியை உண்ணக் கட்டுப்படுத்தும். 48 நாள் தொடர்ந்து செய்யவும். சாறு, வெட்டுக்காயத்தை குணமாக்கும். ஒவ்வாமை, தோல் தடிப்புகள் நீங்கத் தடவலாம்.

நத்தை சூரி - Spermacoce Hispida

பயன்படும் உறுப்பு: விதை, வேர் என்பன. உடல் தேற்றி. உரமாக்கி, குளிர்ச்சியுண்டாக்கி, உள்ளழலாற்றிச் செய்கைகள். விதையை இளகமாக்கி உண்ணாக் கழிச்சல் நோய் தீரும். நத்தை சூரியின் தைலம் காய்ச்சல் முப்பிணியைத் தீர்க்கும்.

நந்தியாவட்டம் - Talernaemontana Divaricata

பயன்படும் உறுப்பு: பால், பூ, வேர். புழுக்கொல்லி, தொற்றுயர் அடக்கி, தடிப்புண்டாக்கி. பூவால் கண்காசம், படலம், கரும்பாவை என்பன. தீரும். பாலை வெட்டுக்காயங்களுக்குத் தடவ. சீழ் உண்டாகாது. கண் எரிச்சலுக்கு, பூ ஒத்தடம் அல்லது பூச்சாற்றை 2 துளிகள் கண்ணில் விடவும்.

நன்னாரி - Hemidesmus Indicus

கொடி வகை. பயன்படும் உறுப்பு வேர். உடல் தேற்றி, உரமாக்கி, உள்ளாலாற்றி, சிறுநீர்ப் பெருக்கி, வியர்வை பெருக்கி. சலதோடம், பித்தம், மிகுநீர் வேட்கை, மேகம், புண், சுரம் என்பன தீரும். சூடான குடிநீர், ஆண்மையை அதிகரிக்கச் செய்யும்.

நாபி - Acomitum mapellus

செடிவகுப்பைச் சேர்ந்தது. வியர்வை பெருக்கி, சிறுநீர் பெருக்கி, துயரடக்கி, தாபமகற்றி, வெப்பமடக்கி, என்பன. வாதவலி, மந்தம், கபப்பணிகள், குன்மம், ஆகியவைகள் குணமாகும்.

நாயுருவி - Achvranthes Aspera

பூண்டு இனம். துவர்ப்பி, சிறுநீரைப் பெருக்கி, உடல்தேற்றி, முறை வெப்பகற்றி என்பன. வேர் வசியம் தரும். அரிசி, பசியை அடக்கும். இரத்த மூலம் குணமாக, நாயுருவி இலையை பசைபோலாக்கி

நல்லெண்ணெயுடன் கலந்துண்ணவும். சிரங்கு, கொப்புளம் குணமாக, இலை அல்லது வேர்ப்பசையைப் பூசவும். வேரால் பல் தேய்க்க பல் இறுகும்.

நாவல் -Syzygium Jambalone

இம்மரம் எல்லா இடங்களிலும் உள்ளது. பொதுவான துவர்ப்பு, பழம் பசித்தீத் தூண்டி, சிறுநீர் பெருக்கி, உடலுரமாக்கி, குருதி பெருக்கி என்பன. எல்லா உறுப்புகளும் பயன்படும். பாரத நாட்டுக்கே "சம்புத் தீவு" என்ற பெயருண்டு. வாதம், கரப்பன், விரணம், நீரிழிவு, இரத்த சீதக் கழிச்சல், கொடும் சுரம், மேகம் என்பன தீரும்.

நிலவேம்பு - Andrographic Paniculate

சிறு செடி இனம். பயன்படும் உறுப்பு இலை, தண்டு. பசித்தீத் தூண்டி, உரமாக்கி, உடல் தேற்றி, வெப்பமுண்டாக்கி. வளிசுரம், நீர்க்கோவை, மயக்கம் என்பன நீங்கி, அறிவு தெளிவடையும். குடிநீராகப் பயன்படுத்துவர்.

நிலவாரை - Cassia Angusti Folio

பயன்படும் உறுப்பு : இலை. நீர், மலம் போக்கி. மலமிளக்கி என்பன. மூலவாயு, வெப்பம், கிரந்தி, குன்மம், மலக்கட்டு என்பன தீரும். இலையை பொடி செய்து, இரவில் வெந்நீருடன் அருந்த, மலச் சிக்கல் தீரும்

நீர்ப்பிரமி - Bacopa Monnieri

நீர்த்தாவரமான செடியாகும். பயன்படும் உறுப்பு பூண்டு. நரம்புரமாக்கி, சிறுநீர்ப் பெருக்கி, மலமிளக்கிச் செய்கைகள். இலைச் சாற்றை நெய்யுடன் குடிக்க, இசிவு நோய், புளியேப்பம் தீரும். சாற்றுடன் மண்ணெயைக் கலந்து பூச, கீழ்வாயுக்குப் பூசலாம்.

நீர்முள்ளி - Hydrophila Auriculata

பயன்படும் உறுப்பு : செடி, பூ, விதை என்பன. ஆண்மை பெருக்கி, மேகநோய், அதிசாரம், வீக்கம், இளைப்பு நீக்கும். இதன் குடிநீர், பெரு வயிறுக்குப் பயன்படும்.

நெருஞ்சில் - Tribulus Terrestris

ஓர்வகை முள்செடி. செடி முழுதும் பயன்படும். குளிச்சியுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, உள்ளழலாற்றி, உரமாக்கி, ஆண்மை பெருக்கி, துவர்ப்பி. சொட்டுநீர் சுரவெதும்பல், கல்லடைப்பு, நீரடைப்பு, நீர்க்கட்டு என்பன தீரும். நீர்க்கடுப்பு நோய்க்குக் குடிநீர் பயன்படும். விதைகளைப் பாலில் அவித்து உலர்த்தவும். பின் பொடி செய்து, 1/2 தேக்கரண்டி பாலில் கலந்தருந்த ஆண்மை பெருகும்.

நெல்லி - Phyllanthus Emblica

மரவகுப்பு, பயன்படும் உறுப்பு, இலை, பூ, பட்டை, வேர், காய், விதை என்பன. இலை, பட்டை என்பன துவர்ப்புச் செய்கையையும், பூ - குளிச்சியுண்டாக்கி, மலமிளக்கிச் செய்கையையும், பழம் - குளிச்சியுண்டாக்கி, சிறுநீர்ப்பெருக்கி, மலம்மிளக்கி செய்கையையும் கொண்டது. பித்தம், அனல், ஐயம், வாய் நீர், வாந்தி, என்பன தீரும். நெல்லிக்காய் துவையல், பச்சடி லேகியம், தைலம் என்பன செய்யப்பட்டு வருகின்றன.

நேர்வாளம் - Croton Tigliumn

பயன்படும் உறுப்பு, விதை, நீர்மலம் போக்கி, தடிப்புண்டாக்கி, வளி, நோய், முப்பிணி, குடைச்சல், வயிற்றுநோயை நீக்கும்.

பற்பாடகம் - Mollugo Cerviana

பூண்டு வகை. பயன்படுவது: பூண்டு. மலமிளக்கி,பசித்தூண்டி, அழுகலகற்றி, வெப்பகற்றி, வியர்வை பெருக்கி. இதனால் சுரம், வெறிநோய், தாகம், பித்தம் தீரும். கண்களுக்குக் குளிச்சியைத் தரும்.

பன்னீர்ப்பூ - Rosa Centifolia

பயன்படும் உறுப்பு : பூ. துவர்ப்பி, அகட்டு வாயகற்றி, குளிச்சியுண்டாக்கி. புவிதழ்களால், பன்னீர், ஊறல்நீர், மணப்பாகு, குல்கந்து, அத்தர் என்பன செய்யலாம். பூ இதழ்களிலிருந்து செய்யப்படும் குடிநீர், வாய்ப்புண்ணைப் போக்கும் புண்கள் குணமாகக் குடிநீரால் கழுவலாம்.

பாகல் - Momordica charantia

கொடி வகுப்பைச் சேர்ந்தது. பயன்படும் உறுப்பு: இலை, பழம், விதை. பேதியாகும். குற்றங்கள் முறியும். கிருமிகள் வெளியாகும். காயைச் சமையல் செய்து உண்பார்கள்.

பிரண்டை - Cissus Quadrangularis

கொடியினம். பயன்படும் உறுப்பு: தண்டு, வேர் என்பன. உடல்தேற்றி, ருது வுண்டாக்கி. பசித்தீத் தூண்டி என்பன. மூலத்தினவு, மூலரத்தம், மாந்தம், வயிற்றுவலி, வாயு, அதிசாரம் ஆகியவைகள் நீங்கும். பிரண்டையை வதக்கி, புளி, காரம், உப்புடன் அரைத்து உண்ண, இரத்த மூலம் தீரும். இத்துவையலை இன்றும் செய்துண்பர். சுவையின்மை, வயிற்றுப் பொருமல் நீங்கி பசியுண்டாகும்.

புங்கு - Pongamia Pinnata

பயன்படும் உறுப்பு : இலை, பூ, வேர், எண்ணெய். துவர்ப்பி, உடல் தேற்றி, புழுவகற்றி, அழுகலகற்றி, வெப்பமுண்டாக்கி என்பன. விதையால், காலில் உண்டான கிரந்தி புண், கரப்பன், காது எழுச்சி, கண்ணோய் நீங்கும். பேதியை நிறுத்தும். புங்க எண்ணெய், கரப்பன், சொறி, சிரங்கு நீக்கும்.

புளி - Tamarindus Indica

மர வகுப்பு, பயன்படும் உறுப்பு, இலை ஈர்க்கு, பூ, காய், ஓடு, கொட்டை, பட்டை என்பன. இலை அழுகியபுண், சோகை, பாண்டு நீக்கும். காய், சோர்வு, அழல் அதிகமாவதையும் தடுக்கும். பழத்தால் உடல் பெருக்கும். வாதக் குற்றம் அதிகமாகும்.

பூனைக்காலி - Mucuna Pruriens

பயன்படும் உறுப்பு: விதை, வேர், சுணை. விதையின் செயல், துவர்ப்பி, காமம் பெருக்கி, நரம்புரமாக்கி, வேர் சிறுநீர் பெருக்கி. சுணை, புழுக்கொல்லி, தடிப்புண்டாக்கி.

பெருங்காயம் - Ferula Asafoetida

உணவாகவும், மருந்தாகவும் இது பயன்படும். வெள்ளைப்பூண்டின் மணம் வீசும். வெள்ளை நிறப்பெருங்காயம்,

சோமகாயம் எனப்படும். பயன்படும் உறுப்பு பிசின். வெப்பமுண்டாக்கி, அகட்டுவாய் அகற்றி, இசிவகற்றி, கோழையகற்றி, மலமிளக்கி, புழுக்கொல்லி, சிறுநீர் பெருக்கி. காமம் பெருக்கி, ருதுவுண்டாக்கி என்பன. இரத்தத்தைச் சூடாக்கி, நரம்புகளை வெப்பப்படுத்தும். தமரகத் துடிப்பை உண்டாக்கி பெண்களின் மீது விருப்பத்தை ஏற்படுத்தும். மகப்பேறு அழுக்கு வெளியாகப் பூண்டு, பனைவெல்லத்துடன், இதைப் பொரித்துச் சேர்த்துத் தரலாம். இதிலிருந்து பெருங்காய லேகியம் செய்வார்கள்.

பொன்னாங்காணி - Altermanthera Sessilis

ஓர்வகைப் பூண்டு. உடல்தேற்றி, குளிர்ச்சியுண்டாக்கி. கண்காசம், புகைச்சல், கருவிழிநோய், வாயு, அனல், ஈரல் நோய், என்பன தீரும். "சீதை" என்பது வேறு பெயர்.

"சீதையை நாள்தோறும், சீரண உண்டிட
காதை சேர் நோயெலாங் காதம் ஓடிடுமே"

(தே.கா)

மஞ்சள் - Curcuma Longa

பயன்படும் உறுப்பு: கிழங்கு. மணமூட்டி, அகட்டுவாயகற்றி, வெப்பமுண்டாக்கி, ஈரல் தேற்றி என்பன. உடலில் பூசிக் குளிக்க, புலால் நாற்றம் நீங்கும். மஞ்சள் பொடியைப் புண்களில் தூவ, அவை ஆறும். மஞ்சள் நீர், காமாலை போக்கும் மணம், நிறம் பெற, உணவில் சேர்ப்பார்கள்.

மாசிக்காய் - Querus Infectoria

மர இனம். பயன்படும் உறுப்பு, காய், துவர்ப்பி, குருதிப் போக்கடக்கி, உரமாக்கி. அக்கரம் என்ற வாய்ப்புண்ணை நீக்கும். உடலுக்கு வலிமை தரும்.

மிளகு - Piper Migrum

கொடி வகுப்பு. பயன்படும் உறுப்பு: விதை, கொடி, காரல் உண்டாக்கி, அகட்டுவாயகற்றி, முறைவெப்பகற்றி, தடிப்புண்டாக்கி, வெப்பமுண்டாக்கி, வீக்கம் கரைச்சி, வாதமடக்கி. மிளகுத்தூள் பசியைத் தூண்டும். குடல் வாயு

போக்கும். காய்ச்சலைத் தணிக்கும். குடிநீர், கோழை, இருமலைத் தீர்க்கும். உணவுப் பொரளாகப் பயன்படுகிறது. திரிகடுகு, அட்டச் சூரணம், பஞ்சதீபாக்கினிச் சூரணம் ஆகியவற்றிலும், மிளகுத் தைலத்திலும் இது உள்ளது.

முசுமுசுக்கை - Mukia Maderaspantana

சிறு கொடி வகுப்பு. பயன்படும் உறுப்பு, இலை, வேர் என்பன. கோழையகற்றி, துவர்ப்பிச் செய்கைகளை உடையது. இலை, இருமல், கோழை, இரைப்பு என்பன போக்கும்.

முடக்கற்றான் - Cardio sermum Halicacalum

பயன்படும் உறுப்பு : இலை, வேர் என்பன. சிறுநீர் பெருக்கி, மலமிளக்கி, பசித்தீத் தூண்டி, தடிப்புண்டாக்கி, வாதமடக்கி, உடலுரமாக்கி என்பன. சூலைப் பிடிப்பு, சொரி, சிரங்கு, கரப்பான், வாயு, மலக்கட்டு என்பன தீரும்.

வசம்பு - Acorus Calamus

ஓர்வகைப் பூண்டு. பயன்படும் உறுப்பு: வேர். வெப்பமுண்டாக்கி, பசித்தீ தூண்டி, முறை வெப்பகற்றி, அகட்டுவாயகற்றி, குமட்டலெழுப்பி, வாந்தியுண்டாக்கி, புழுக்கொல்லி என்பன. எல்லாவகை நஞ்சுகள், புண்கள், குன்மம், இரத்த பித்தம், சூலை, முப்பிணி, இருமல், ஈரல், நோய்கள், யானைக்கால், நாடாப்புழு போகும்.

வல்லாரை - Centella Asiatica

பூண்டு வகைத் தாவரம். பயன்படும் உறுப்பு பூண்டு. உடல் தேற்றி, உரமாக்கி, சிறுநீர் பெருக்கி, வெப்பமுண்டாக்கி, ருதுவுண்டாக்கி. இதை கற்பமுறைப்படி உண்ணலாம். வல்லாரை வெண்ணெய், நெய் என்பன செய்யப்படுகின்றன.

வாதநாராயணன் - Delonix

மரவகுப்பினம். பயன்படும் உறுப்பு இலை. செய்கை, வாதமடக்கி, இலையை ஆமணக்கு நெய்விட்டு, வதக்கி, வீக்கம், கட்டிகளுக்குக் கட்டலாம்.

இச்சாற்றுடன் கலந்து, வாத நோய் போக்கும் தைலங்கள் செய்யப்படுகின்றன. இலையை கொதிநீரில் போட்டுக் குளிக்க உடல்வலி தீரும்.

விராலி - EDodomala Viscosa

பயன்படும் உறுப்பு: இலை, பட்டை. துவர்ப்பி, உரமாக்கி, கோழையகற்றி, துருகை வெள்ளையாக, இலை மாற்றும். இலையை ஆமணக்கு நெய்விட்டு வதக்கி, வீக்கம், கட்டிகளுக்குக் கட்டலாம்.

வில்வம் - Aegle marmelos

மரவகுப்பு. பயன்படும் உறுப்பு: இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின், பட்டை, ஓடு, வேர்ப்பட்டை. வியர்வை பெருக்கி, காமம் பெருக்கி, வெப்பகற்றி என்பன இலையின் செய்யை. மேகம், மந்தம், குன்மம், விந்து நட்டம் என்பன தீரும். மணப்பாகு, குடிநீர் ஊறுகாய், தைலம் என்பன செய்யப்படுகின்றன. உடலுக்கு ஆண்மை, அழகு தரும். வில்வவேரால், வில்வாதி லேகியம் செய்யப்படுகிறது.

வெங்காயம் - Allium Cepa

பயன்படும் உறுப்பு: பூ, தாள், கிழங்கு, விதை என்பன. வெப்பமுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, கோழையகற்றி, சூதகமுண்டாக்கி, தடிப்புண்டாக்கி, உள்ளழலாற்றி, காமம் பெருக்கி, வெப்பம், மூலம், கிரந்தி, இரத்தபித்தம், நாக்குப்புண், விடாநீர் வேட்கை, என்பன தீரும். கிழங்கு தாளிசத்திற்குப் பயன்படும்.

வெந்தயம் - Trigonella Foemum graceum

பயன்படும் உறுப்பு, இலை, விரை என்பன. குளிச்சியுண்டாக்கி, மலமிளக்கி (இலை) விதைக்கு, சிறுநிர்பெருக்கி, உள்ளழலாற்றி, துவர்ப்பி,வரட்சியகற்றி, காமம்பெருக்கி, அகட்டுவாயகற்றி, உரமாக்கி என்பன. தோசையாகச் செய்துண்ண, உடல் பருக்கும். உடல்வலி நீங்கும். விதையை, கஞ்சியுடன் சேர்த்துக் குடிக்க, பால் சுரக்கும். வெந்தய லேகியம் செய்வார்கள்.

வெற்றிலை - Piper betle

பயன்படு உறுப்பு: இலை, வெப்பமுண்டாக்கி, அகட்டுவாயகற்றி, துவர்ப்பி, காமம் பெருக்கி, அழுகலகற்றி, வெப்பமகற்றி, பசித்தீத் தூண்டி, பால் பெருக்கி, உமிழ்நீர் பெருக்கி, சாறை அருந்த, ஐயம், சயித்தியம், காணாக்கடி, முப்பிணி தீரும்.

வேம்பு - Azadirachta Indca

மரவகுப்பு. பயன்படும் உறுப்பு: எல்லாம். வயிற்றுப் புழு, பெருநோய், மாந்தம், நச்சு சுரம். தோல் நோய்கள், என்பன. வேப்பிலை போக்கும். பூவை இரசம் வைத்துண்பார்கள். துவையல் செய்தும் உண்ணலாம். வேப்பங்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள்.

இரும்பு - (Ferrum)

குருதித் தன்மையை மேம்படுத்தும். மலக்கட்டு ஏற்படும். எனவே திரிபலையுடன் தருதலுண்டு. பாண்டு, வெள்ளை நிறத்தோல் நோய், ஊதல் நோய் மந்தம், காமாலை, குன்மம் என்பன தீரும். அய்பிருங்கராசபாணிதம், அயசம்பீரக் கற்பம், அயபிருங்கராச கற்பம் என்பன பாண்டு நோய் நீக்க உதவும்.

கருவங்கம் - Plumbum (Lead)

தாவர நஞ்சு, கண்ணோய், குன்மம், வாத நோய், சூலை, யானைத்தோல் நோய், மேகம், சுரம் என்பன போக்கும்.

கிகி காரீய பற்பத்தை 1 மாத காலம் அருந்தி, தினை, வரகு, அயினி, கொள், புளி, அகத்தி, பூசணி, பெணிச்சை, நீக்கவும். கவுதாரி பறப்பது போன்ற ஒலியும், துடிப்பும், தலையில் உண்டாகும். இதற்குப் பிரண்டைச் சாறுடன் உண்ணவும். ஈ பறப்பது போன்ற நடுக்கு வாதம், திமிர் வாதம், பசிமந்தத்தால் உண்டான வெப்பம், மயிர்க் கூச்சத்துடன் உள்ள குளிர் இவைகளுக்குத் துளசிச் சாறுடனும், விசவாயு, மார்சால வாயு, பாரிச வாயு என்பனவைகளுக்கு முலைப்பால், பருந்து வட்டமிடுவது போன்ற ஒலிக்குமாறு சிணுக்குவாதம், சாக்கைவலி, வாதக்கிராணி, பாரிசவாதக் கிராணிக் மூர்ச்சைக்கு கற்றாழைச் சோற்றின் சாறு, மயில் பறப்பது போன்று, அசீரணம், குன்மம், வாந்தி, புளித்தேப்பம், விக்கல், தினவு, படர்வாதம், என்பவைகளுக்கு வெந்நீரிலும் வண்டின் பறப்பது போன்று,

திணறு வாதம், சுரம், கணவாயு, ஆகியவைகளுக்குத் தேனிலும், தரவேண்டும். காரீயத்தால் கோல் செய்து, கண்ணுக்கு அஞ்சனம் தீட்டவும்.

காந்தம் - Magnetic Oxide

காந்தம் தொடர்பான பற்ப, செந்தூரத்தால் சோபை, குன்மம், காமாலை, மேகம், பாண்டு, முக்குற்ற நோய்கள், பிரமியம் என்பன தீரும்.

செம்பு - (Coprum) Copper

இரத்தபித்தம், சந்தி, ஈரல் நோய், வெள்ளை, சூதக நோய், புண், கிரந்தி, குற்றமுள்ள இரைப்பு, கிருமி, தாதுநட்டம் என்பன தீரும். ஏழு நாட்கள் மருந்துண்ணலாம். இது நல்லது.

நாகம் - (Zincum)

துவர்ப்பி, குருதிப் பெருக்கடக்கி, உடல் தேற்றி என்பன மேகம், பேதி, வெள்ளை, உள்சூடு, கிரகணி, முளைப்புண் பித்தம் என்பன தீர்க்கும்.

பொன் - Aurum gold

பொன்னால் தாவர நஞ்சுகள், உடலில் நிறம் மங்குதல், சன்னி, இளைப்பு நோய், காசம் உடல் வெப்பம், முதிர்ந்த கபக் குற்றம் தாது இழப்பு, கண்நோய் என்பன தீரும்.

மண்டூரம் - Ferrpso Ferric oxide

வாத சோபை, அத்தி சுரம், விசபாகம், இரைப்பு, பாண்டு, இருமல், ஈரல் கட்டி, பிரமியம், என்பன தீரும். சுத்த மூண்டூரம், மகா மண்டூரம், சித்த மண்டூரம், திரிகடுகாதி மண்டூரம், நாராயண மண்டூரம், இவைகள், பாண்டு, சோபை நோய்களை நீக்கும்.

வெங்கலம் - Bronze

கண்நோய், சோமநோய், மிகுநீர் பிரிதல், இரத்தபித்தம், சுவாசம், மேகம், வாதவலி, சூலை, பெருவயிறு போம். பித்தம், ஆண்மை என்பன பெருகும்.

வெள்வங்கம் - Tin

நீர்வேட்கை, கரப்பன், சலமேகம், பித்தகபம், மேகம், ஒளிமங்குதல், சுரம், கிரந்தி, மந்தாரம், சுவாசம், மந்தாக்கினி என்பன தீரும்.

வெள்ளி - Argenium

படுக்கையிலுள்ள வாறு செய்யும் சுரநோய், தாவர படுக்கையிலுள்ள, மேகக் கசிவு என்பன தீரும். இரத்தம், காசம், பித்தம், ஈளை, கண்ணோய், எண்வகை குன்மம், கிரந்தி, நீர்க்கோவை என்பனவற்றையும், வெள்ளி பற்பம், வெள்ளிச் செந்தூரம், சுண்ணம் என்பன நீக்கும். பூபதிமாத்திரை, பூர்ண சந்திரோதயம், தேரன்முறை, எமதண்டக் குளிகையிலும், வெள்ளி சேரும்.

இரசம் - Hydrargyrum

உடல் தேற்றி, உரமாக்கி, மலம் போக்கி, பித்தநீரகற்றி, வீக்கமுருக்கி, உமிழ்நீர்ப் பெருக்கி, சிறுநீர் பெருக்கி, மேகநாசனி, இரச குற்றத்தால் உண்டாகும் நோய்கள். கொப்புளம், குட்டம், கந்தி, தீ, எரிச்சல், கோதுநிறம், மலம், விந்து இழப்பு, இறத்தல், மந்தம், மயக்கம் என்பன என்று தேரன் கூறுகின்றார். அகத்தியர் கூறும் ஏழுவகையான நோய்கள், தீய நாற்றம், குட்டம், நீர் வேட்கை, தாது இழப்பு, உயிர் போதல், நஞ்சு, மோகம் என்பனவாம். இரசத்தின் பொதுத்தன்மை, கண்நோய், கிரந்தி, சூலை, புண் இலிங்கம், குன்மம் என்பன நீக்கும்.

இலிங்கம் - Cinnaliar

பேதி, சுரம், சன்னி, பெரியபுண்கள், மிகுசிறுநீர், காணாக்கடி, நஞ்சு, காசம், கரப்பன், நுணாக்காய் கிரந்தி, குட்டம், சூலை, வாதம், என்பன தீர்க்கும். இலிங்கத்தால் செய்யப்பட்ட மருந்துகளை உண்ண குறிஞ்சி, நெய்தல் நிலங்கள் ஆகும். மருதம், முல்லை, பாலை ஏற்றவையல்ல.

பூரம் - Hydragyrum Subchloride Calomel

64 வகையான பாசாணங்களில் கூறப்பட்டவில்லை. இதன் செயல்கள், இடுப்புவாதம், சூலைகுன்மம், தொடை வாழை, வாதசோணிதம் என்பன நீங்கும்.

வீரம் - Hydragyrum perchioride

குன்மம், குட்டம், அனிலம், தீயவளர்ச்சியுற்ற மாமிசம், வளர்ச்சி, சூலை நோய், ஆண்குறியிலுண்டான புண் என்பன தீரும்.

கந்தகம் - Sulphur

மலமிளக்கி, வியர்வை பெருக்கி, உடல் தேற்றி, கிருமி நாசினி என்பனவாகும். 18 வகைக் குட்டம், மந்தம், வல்லை, கவிசை, கன்மவாயு, கண் நோய்கள், நஞ்சுக்கடி, மேகநோய்கள், கிரகணி கபம் என்பன நீங்கும்.

கௌரி -

வெப்பகற்றி, முறை வெப்பகற்றி, வாதமகற்றி என்பன வாதநோய், அலசம், சுரங்கள் தீரும்.

தாளகம் - Orpiment, Yellow Arsanic, Trisulpuide

நாக்கு, கவுள், குட்டம், நீண்ட குளிர்காய்ச்சல், பரங்கிப் புண், அழுகண், மண்டை நோய் என்பன தீரும்.

மனோசிலை - Arsenic Realgar Red Orpiment

கொடிய குட்டம், சுரம், இரைப்பு, சிலந்தி, கழுத்தில் உண்டாகும் கொப்புளங்கள் தீரும்.

மிருதாசிங்கி - Galena Sulphie

துவர்ப்பி, குளிர்சியுண்டாக்கி, புழுக்கொல்ல என்பதான செயல்கள் உள்ளன. உடலெங்கும் பரவும் புடை, கரப்பான், கிரந்தி, மகாவிரணம் தீரும்.

வெள்ளைப்பாசாணம் - White arsenic

சிறிய அளவில் பசித்தீயைத் தூண்டும். உடல் தேற்றி நரம்புத் தளர்ச்சி நீக்கி, உரமாக்கி, சுரமகற்றி, இதயம், ஈரல், குடல், பிறப்புறுப்பு, இலைகளைத் தூண்டும் செயலும் உள்ளது. நஞ்சுக்கடி, சுரம், குற்றம், தீய சந்தி வாய், மூக்கில் வரும் புண்கள், கிரந்தி ஆகிய நோய்களை நீக்கும்.

இந்துப்பு - Sodium Chloride Impura

அகட்டு வாயகற்றி, சிறுநீர் பெருக்கி, பசித்தீத் தூண்டி, செயல்கள் உண்டு. எண்வகை குன்மம் மந்தம், சீத பித்தம் ஐயம், நாடிப்புண்,

மலக்கட்டு, தலை, விழி, நாக்கு, பல், கன்னம், தாது, காசம், நீர், வேட்கை, இரத்த மூலம் என்பன தீரும்.

உப்பு - Sodium Chloride

பசித்தீத் தூண்டி, மலம்போக்கி, வாந்தி உண்டாக்கி, புழுக்கொல்லி, முறைவெப்பகற்றி, பித்த வாதம், கபம், வல்லை, எண்வகை, குன்மம், என்பன தீரும். மந்தம், வயிற்றுப் பொருமல், வாயு, கபம் நீங்கும். பசி, சமாக்கினி அதிகமாகும்.

படிக்காரம் - Alumen Alum.

பல் அரணை, ஆனைக்கால், கண்ணோய், கெட்ட சதை வளர்ச்சி, வாயு, உள்ளழலை, குன்மம் என்பன தீரும். இரத்த பெருக்கு, அதிசாரம், சீதபேதி, கக்கிருமல், தொண்டைப்புண், ஈறு விரணம், வெள்ளை, பெரும்பாடு, என்பன தீர்க்கும்.

கற்பூரம் - Chinamomum Camphora

வெப்பமுண்டாக்கி, அகட்டுவாயகற்றி, சமனகாரி, வலியகற்றி, இசிவகற்றி, அழுகலகற்றி, தூக்கமுண்டாக்கி, கோழையகற்றி, தாது பெருக்கி என்பன. கிருமி, நீரேற்றம், இசிவு, சந்நிபாதம், வாத அலசம், தீச் சுட்ட புண், கொடிய சுரம், வாந்தி, பித்தம், கபவாதம், காது, முகம் பற்றிய பிணிகள் நீங்கும்.

நவச்சாரம் - Ammonil chloridum

குன்மம், குடல்சூலை, பெருவயிறு, கல்லடைப்பு, முத்தோடம், புலால் நாற்றம், கனவாயு என்பன தீர்க்கும். கோழையகற்றி, வியர்வை, சிறுநீர் பெருக்கி, இரணமுண்டாக்கி, பித்தமகற்றி செயல்கள் உடையது.

பச்சை கற்பூரம் -

எண்வகை குன்மம், சூலை கொடிய மேகம், வாதம், கபம் என்பன நீங்கும்.

வெங்காரம் - Borax

குற்றங்களை நீக்கும். உதரவாயுவை மாற்றும் இருமல், மாந்தம் போக்கும்.

வெடியுப்பு - Nitrate of Potash

குளிச்சியுண்டாக்கி, வியர்வை பெருக்கி, சிறுநீர் பெருக்கி என்பன உண்டு. எண்வகை குன்மம், கபம் கட்டி, சூதகவாயு, வாதம், வயிறிழிவு, கோழை, கபம், செயல்களாகும்.

அப்பிரகம் - Mica

துவர்ப்பி, உடல் உரமாக்கி, உடல்தேற்றி என்பன இதன் இயல்பாகும். அண்டம் வீங்குதல், பெருவயிறு, பிரமேகம், நீரிழிவு, மேகம், பித்தம், கண்ணோய்கள் வாதம் போகும். தாது அதிகரிக்கும்.

துருசு - Copper Sulphate

மயில் துத்தம் எனப்படும். நீல வண்ணமாக இருக்கும். உடல் உரமாக்கி, துவர்ப்பி, வாந்தி உண்டாக்கி, புண்ணுண்டாக்கி, அழுகலகற்றி, என்பன. இரணம் ஆண்குறிப் புண், கண்ணோய், திரிதோடம், சுரம் என்பன நீக்கும். வாந்தி பேதியை உண்டாக்கும்.

துத்தம் - Zinc Sulphate

உடல் உரமாக்கி, துவர்ப்பி, இசிவகற்றிச் செய்கையும் உண்டு. ஆண்குறிப்புண், மூலமுளை, புண், வாதம் படர்கின்ற கரப்பன், கண்காசம், பில்லம், கணம், கண்ணோய் என்பன விலகும்.

கத்தூரி - Musil

வெப்பமுண்டாக்கி, உடல் உரமாக்கி, இசிவகற்றி, செய்கைகள் உண்டு. பெண்களுக்கான சுரப்பு அதிகமாகும். தலைவலி நீங்கும். கபம் விலகும். வலிமையைத் தரும். என்பனவாகும்.

கோரோசனம் - Oxbile

மலமிளக்கி, இசிவகற்றி, குளிர்ச்சியுண்டாக்கி, பித்த சமனி, கோழையகற்றி, கண்மைதலத்தில் கோரோசனையைச் சேர்ப்பார்கள்.

சங்கு - Xanchu Spyrum

உடல் உரமாக்கி, துயரடக்கிச, அகட்டுவாயகற்றி, பசித்தீத் தூண்டி, துவர்ப்பி, வெப்பகற்றி, கோழையகற்றி என்பன உண்டு. இரத்தபித்தம், கண்நோய்கள், வாதம், முளை இரணம், என்பன தீரும்.

சோழி - Cypraea Moneta

இதற்கு பலகறை எனப் பெயர் உள்ளது. தாதுவெப்பகற்றி, கோழையகற்றி, வெப்பகற்றிச் செய்கையும் உண்டு. பசி மந்தம், கிரகணி, பெரும் நஞ்சுகள், சுரம், கண்ணோய், சூலை, காசம், என்பன தீரும்.

புனுகு - Civet

வெப்பமுண்டாக்கி, காமமுண்டாக்கி, இசிவகற்றி என்பன. அழகு ஏற்படும். அசீரணம், வாதம் போகும். பித்தம், கபம், நஞ்சுகள் புனுகுச் சுட்டத்தால் நீங்கும். சவ்வாதால், சுரம், தலைவலி, மூக்கடைப்பு, மார்பு நோய், வாயு என்பன விலகும்.

## மருந்துகளின் அட்டவணை


லேகியம் .. 564

பூச்சு .. 567, 598, 566

திரி .. 568,580

எண்ணெய் .. 574, 579, 562, 614,627

தைலம் .. 586, 628

பிழி மருந்து .. 564

நெய் .. 570,569

அடை .. 574

கசாயம் .. 586

துவாலை .. 626,698,714

பாண்டு .. 704

மாரணம் .. 725

குளிகை .. 726,730,731,787,789,790,837, 967,968,970

பற்பம் .. 727

மை .. 754

சூரணம் .. 754

## நோயின் [illegible]


1. கோடாகுறி
2. சித்தாந்த கோடாகுறி
3. அனந்த கோடாகுறி
4. மகா கோடாகூழி.. 837

| | |
|---|---|
| குளிகை | .. 967,968,969,970 |
| விப்புருதி | .. 562,590,592,593,594,597,731,927 |
| அரையாப்பு | .. 562,563,564,565,566,922 |
| சூலை | .. 562,616 |
| கிரந்தி | .. 562,616 |
| புண் | .. 565,569,573,578,566,574,579, 599,612,617 |
| பவுத்திரம் | .. 595 |
| வீக்கம் | .. 563,566,602 |
| ஆணி | .. 569,578 |
| கழலை | .. 584 |
| முலைக்குத்து | .. 586,588 |
| கால் புற்று | .. 587,589 |
| இரத்த புற்று | .. 593 |
| இலிங்கப்புற்று | .. 594 |
| அக்கி | .. 596 |
| பரு | .. 605,607,609 |
| சிலந்தி | .. 606,630 |
| எழுஞாயிறு | .. 606 |
| படுவன் | .. 611 |
| வண்டுகடி | .. 614,615,616,618,631,633 |
| புண் | .. 617,866 |
| காணாக்கடி | .. 618,624 |
| சர்வசிலவிசம் | .. 618 |
| கடிவிசம் | .. 623,625,626,623,629,630,632,832 |
| குட்டம் | .. 628,779,933 |
| படர்தாமரை | .. 628,736,833 |
| வெண்குட்டம் | .. 630 |
| சிரங்கு | .. 632,881 |
| சொறி | .. 632,779,914 |

பாதப்பிளவை .. 632
தோசம் .. 688,717,722,766
எட்டுதோசம் .. வங்கதோசம், 688
நாகதோசம், கிளிகண்ணி தோசம்,
சாஞ்சல தோசம், காகதோசம், இரச தோசம்,
தருத்த தோசம்
கந்தகதோசம் .. சாட்டிய முண்டாம் - 717
வன்னி தோசம் .. எரிவுண்டாம் - 717
காஞ்சலி தோசம் .. வீரிய நட்டம் - 717
விசதோசம் .. மரணம் - 717
இரத்த தோசம் .. மூர்ச்சை - 717
கிருமி தோசம் .. சிரங்கு - 717
நாகதோசம் .. 718
மலதோசம் .. 719
வன்னி தோசம் .. 720,723
சாஞ்சலிய தோசம் .. 721
காசம் .. 727,731,771,787
இருமல் .. 727,728,729,730,770,787,820
இளைப்பு . 727,820
உப்புசம் .. 727
ஈனரி .. 727,728,738,820
சுவாசகாசம் .. 730
சுரம் .. 730,736,762,788,812,813,814,816,
817,843,
மாரடைப்பு .. 731
பெரும்பாடு .. 731, 830
மூலம் .. 731,735,789,826,925
வாயு .. 731,733,738,787,795
சூலை .. 731,762,763,863,864,865
பிரமியம் .. 731
காய்ச்சல் .. 731,733
குளிர் .. 731
மலக்கட்டு .. 731,789
குன்மம் .. 731,789
கிராணி .. 733,734,787
பிரமியம் .. 735

| | |
|---|---|
| சோகை | .. 735,884 |
| காமாலை | .. 735,788,883 |
| பாண்டு | .. 735,736,827,884 |
| மேகம் | .. 737,787,896 |
| சோர்வு | .. 762 |
| வாந்தி | .. 774,775,803 |
| ஓக்காளம் | .. |
| வயிற்றுவலி | .. 776 |
| எலிக்கடி | .. 777 |
| தடிப்பு | .. 730 |
| வாந்திபேதி | .. 786 |
| நீரடைப்பு | .. 783 |
| குன்மம் | .. 784,794,586,857,858,859 |
| தேள்கடி | .. 787 |
| பொருமல் | .. 787 |
| அசதி | .. 787 |
| தாகசுரம் | .. 787 |
| விசம் | .. 787,789,847 |
| பசி | .. 787 |
| வெப்பம், எரிவு | .. 787 |
| உப்புசம் | .. 787 |
| கழிச்சல் | .. 787,874,875 |
| சன்னி | .. 787,789,824,825,838,840,841 |
| விசக்கடி | .. 787 |
| பைத்தியம் | .. 787 |
| நீரிழிவு | .. 788 |
| செரியாமை | .. 789,807,867,869 |
| கிராணி | .. 789,791,868,870,871,873,926,967 |
| படுவன் | .. 789 |
| வாதம் | .. 789 |
| கண்புகைச்சல் | .. 789 |
| வீக்கம் | .. 789 |
| இளைப்பு | .. 792 |
| தாது | .. 799 |
| நீர்க்கடுப்பு | .. 800 |
| ஆண்கட்டு | .. 802,906 |

கர்ப்பம் .. 804
புத்திரசீவனம் .. 805
வயிற்றுவியாதி .. 806
தேள்விசம் .. 810
வாதபித்தம் .. 815
கடுப்பு .. 821,822,872
சன்னிவாதம் .. 823
கிரந்தி .. 833
கண்வலி .. 834
சுரம் .. 844,845
இரத்தபித்தம் .. 847
எரிவிரியன் .. 851
பனசை .. 852
பெருவிரியன் .. 853
மூர்க்கன் .. 854
இளைப்பிருமல் .. 860
கரப்பன் .. 876,877,878,879
சிலநதி .. 877,880,992,922
மருந்தீடு .. 885,891
வாதம் .. 886,887,888,889,890,892
யோனிக் கட்டு .. 893
மாந்தம் .. 894
மேகம் .. 895,964
கண்புகைச்சல் .. 897
கண்சிவப்பு .. 898
பூ .. 899
கண்பாய்ச்சல் .. 900
மாலைக்கண் .. 901
இமையடி வாதம் .. 903
தாதுவிருத்தி .. 904
முகவசீகரம் .. 905
எரிவு .. 908
நீர்க்கடுப்பு .. 913
பித்தசிலேத்துமம் .. 914
வீக்கம் .. 915,916
நீரிழிவு .. 918
முவெட்டு .. 921

அக்கரம் .. 924
விப்புருதி .. 928,929,930
கடிவிசம் .. 932,934
மூஞ்சுறு .. 935
எலி .. 936,937
புலி .. 938
காணாக்கம் .. 939
தலைவலி .. 940
செவிநோய் .. 941
செவிப்புழு .. 941
குமரகண்ட வலி .. 943
முயலகண்ட வலி .. 944
மண்டைவியாதி .. 945
நாசிகாபீடம் .. 946
விக்கல் .. 948
பல் .. 949, 950
வயிற்றுவலி .. 950
இடுப்புநோவு .. 951
கவிசை .. 954,955,956
வெப்புப்பாவை .. 957
வெண்குட்டம் .. 958
புழுக்கடி .. 959
தொண்டைக்கட்டு .. 960
தொண்டை அடைப்பு .. 961
கற்றாழை நாற்றம் .. 962
பசி, தாகம் .. 963
கல்லடைப்பு .. 965
பிள்ளையுண்டாக .. 966
கிராணி .. 969, 970

................................................................................

தாது உயிரினப் பிரிவு. டாக்டர் ஆர். தியாகராசன், இந்திய மருத்துவம் & ஓமியோபதித்துறை, சென்னை. 3-ம் பதிப்பு, 1981.


தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
சரசுவதி மகால் நூலக அச்சகம்